உ

சிவமயம்.

விருத்தா சலத்தில் சமாதி யுற் றிலங்கும்

ர தேவ சுவாமிக ளவர்கள் திரு வாய் மலர்ந் தருளிய

# மகா ராஜத் துறவு மூலமும்,

கோவி லூர் மடம், திருக் களர்

சேகர ஞாந தேசிக சுவாமிக ளவர்கள் மாணாக்கரும்,

பய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும்,

பர சமய கோளரியாரும், மண்டலேசுவரரும்,

திருப் பூ வண மட ஸ்தாபகரும்,

ஷா பண்டித மணியும், (மும் மொழிப் புலமை ரத்நமும்)

த்திர கர்த்தரும், (நூறு நூல் இயற்றியவரும்), ஆகிய

**ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிக ளவர்கள்**

இயற்றிய

**ப் பிரசாதிநி என்னும் உரையும்.**

இவை

மதுரை, ராஜேசுவரி அச்சு யந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

**1951.**

## உரை யாசிரியர் நற் சிறப்புப் பாயிரம்.

அரியசற் குணங்க ளனைத்துமார் குருசீர்
அமலனும் வீரசே கரன்றன்,
பெரியபே றளிக்கும் பாததா மரையைப்
பேணியே மநத்தினி னிறுவி,
உரியமா ராசத் துறவினல் லுரையை
உஞற்றுவன் எளிதினி லெவரும்,
தருமநப் பிரசா திகியெனு மத்தாற்
றரணியி லுணர்ந்துய மாதோ.

---

## கோவி லூர் மடத்தில், பாடம் நடக்கும் 16 நூன் ..

### ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் இயற்றிய.

தாக்குறுநா நாஜீவ வ..தக்கட் டளைகீ
தாசாரத் தாலாட்டுச் சசிவங்க போதம்,
வாக்குமகா ராஜதுற வுபத்திசத கம்நல்
வைராக்ய தீபமிலக் கணுவிருத்தி யரிய,
வாக்கஞ்ஞ வதைப்பரணி வேதாந்த சூடா
மணிவிவே கசூடா மணிபஞ்ச தசியும்,
பாக்கமழ்கை வல்யநவ நீதமீ சுரகீதை
பகவற்கீ தைபிரம கீதைவா சிட்டமே.

உ

சிவமயம்.

# அணிந் துரை.

புண்ணிய பூமி யாகிய பரத கண்டத்திலே, மக்கள் யாக்கையை எடுத்தோர் பலரும் அடையத்தக்கது மோக்ஷம் ஒன்றே யாம். அந்த மோக்ஷமும், ஞாநம் ஒன்றானே பெற லாம். அந்த ஞாநம், ஏஷணாத் திரய நிவிர்த்தியாலும், ஏஷணாத் திரயங்களோடு கூடவே விசாரத்தாலும், தியாநத்தாலும், உண்டாகும் என்று நூல்கள், அநேக வேறு பாடுக ளாகக் கூறுகின்றன.

"ஆகாயத்தினைத் தோல் போல் சுருட்டக் கூடிய ஆற்ற லுடைய மநிதர்கள் தாம், சிவத்தினை அறியாது, அதாவது, சிவ ஞாநம் இன்றி, துக்க நிவிர்த்தியை யுடையவர்கள் ஆவர்" என்று, சுவேதாவசுவதர உபநிஷத்; துக்க நிவிர்த்திக்கு ஞாநம் வேண்டும் என்று, கூறுகின்றமையினால், ஆத்ம ஞாநத்தினை அடைவதற்கு, இல் லறத் திருந்து இடையூற்றோடு கூட விசார தியாநங்கள் செய் வதைப் பார்க்கிலும், துற வறத் திருந்து, இடையூ றின்றி விசார, தியாநங்கள் செய்வது மிக எளிமை யாம். அன்றியும், அண்மைக் காலத்திற் றானே, ஆத்ம ஞாநம் உண்டாய், அநர்த்த நிவிர்த்தி ஆநந்த அவாப்தி ஆகிய ஜீவந் முக்தியையும் அடைய லாம்.

இதனை உணர்ந்து, விருத்தாசலத்திற் சமாகித ராய், மூந் நூற் றைம்பது வருஷங்கட்கு முன் இருந்த, குமார தேவர் என்னும் பெரியார், முமுக்ஷுக்கட்கு உபகாரம் ஆகும் பொருட்டுக் கருணை கூர்ந்து, குமார தேவர் சாத்திரக் கோவை என்று பெயர் வைத்து, பதி னாறு நூல்கள் இயற்றினார்கள். அதன்கண், மஹா ராஜத் துறவு என்பதும், ஒன் றாம். இந் நூல், மஹா ராஜன், மண் பொன் பெண் ஆசைகளை விட்டு, மாந அபமாநங்களைக் கழற்றி, அஹங் கார - மமகாரத்தினை ஒழித்து, அவப் பொழு தின்றித், தவப் பொழுதுடனே, கன் னெஞ்ச னாகி, ஓடும் - பொன்னும், உறவும் - பகையும், கேடும் - செல்வமும், கீர்த்தியும் - நிந்தையும், வீடும் - காநமும், வேறு இன்றிப் பார்க்கும் பார்வையோடு விளங்கிக் கொண்டிருந்த தன்மையினைக் கூறுவ தாகும். அன்றியும், இந் நூல், யாவருக்கும் இருக்கும், மண் பொன் பெண் ஆசைகளை ஒருங்கே போக்கி, பசு மரத் தாணி போல் மநத்தை அசை வின்றி

யிருக்கும்படி செய்வதில், முதன்மை பெற்ற தாகும். இன்னும், தேகத்தின் அசுத்தம், துக்கம், அநித்தியத்தையும், பால குமார யௌவந வார்த்தைக்கியப் பருவங்களின் தன்மைகளையும், ஆத்மா வின் சுத்தம் சுகம் நித்தியத் தன்மையினையும், வாந்தாசநம் போல், விட்ட விஷயத்தில் மீண்டும் பிரவிர்த்தி உண்டாகாதிருத்தலையும், எளிதில் உணரு மாறு, எளிய மொழியில், விளக்கிக் கூறுகின்றது.

இந் நூலுக்கு ஓர் நல் உரை வேண்டும் என்று, பல அறிஞர் களும், பல சாதுக்களும், பல இல் லற விராகிகளும், கேட்டுக் கொண்டமையின், மநப் பிரசாதிநி எனப் பெயர் வைத்து, ஓர் உரை, 1910 வருஷம் கோவிலூர் மடத்தில் இருக்கும் காலத்து, அவதாரிகை இலக்கணக் குறிப்பு உடைய தாக இயற்றினம்.

இந் நூலுக்கு, முன், திரு வோத் தூர், பாநு கவியார் அவர்கள் ஓர் பொழிப் புரையும், சென்னை, கோமளேசுவரன் பேட் டை, கோ. வடிவேலு செட்டியா ரவர்கள் ஒரு வசநமும், செம்பை, ஆறுமுகனார், ஒரு பத வுரையும் இயற்றி, அச்சு வாஹநம் ஏறி வெளிவந் துலவுகின்றன. மும் மூர்த்திகட்குப் பின் துரிய பரசிவன் போன்று, நான் காவது மநப் பிரசாதிநி உரை யாம். உரைகளை ஒப்பிட்டு நோக்குவார்க்கு உரையின் அருமை வெளிப்பட்டுத் தெரியும்.

நாம் உரை யியற்றி (40) ஆண்டு (1910) நீண்ட நா ளாகியும், இது வரைப் பல இடையூறுகளால், அச்சு வாஹநம் ஏறாதிருந்து, திருக் களர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகளின் திரு வருட் பிரகாசத்தினால், தடை கழன்று, அச்சு வாஹநம் ஏறி வெளிவரு கின்றது. சிதம்பரம் — கோ. சித. மடம், ஸ்ரீ சித. — நீல கண்ட ஸ்வாமிகளவர்கள், இவ் வுரையினைச் சோதித்துக் குற்றம் களைந்து, குணம் மேலிடும்படி செய்தமையும், சிதம்பரம் — கோ. சித. — மடம், சித. — சங்கத்து நாராயண சுவாமிகள் பரிசீலனை செய்து, முகவுரை எழுதியமையும், என்றும் நினைவி லிருக்கும் தன்மைத் தாம்.

காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,
திருப் பூ வணம்.

# மஹா ராஜத் துறவு செய்யுள் 128.

## முதற் குறிப்பு அகராதி.


| | | | |
|---|---|---|---|
| அந்நெறி குருவால் | 50 | இருட்கலி வலியின் | 6 |
| அந்தமா தியுமிலா | 107 | இருந்த விடத்தில் | 134 |
| அமரர்கள் பரவும் | 3 | இருவகைச் சார்வாம் | 49 |
| அமை வுடை | 99 | இருவரி லரசன் | 43 |
| அரசர்க ளமைச்சர் | 51 | இலங்கிய வால் | 36 |
| அரசர் தம் | 20 | இல்லற மதனி | 142 |
| அரசர் வந்திடு | 19 | இவ் வரசியற்கை | 56 |
| அரந்தை யதனை | 114 | இழிவை யுணர்ந்தால் | 130 |
| அரச னந்த | 73 | உணர் வுடைய ஞானி | 165 |
| அரியது துறவறம் | 145 | உலகினை | 84 |
| அரிவையர்கள் | 66 | உறவாகு மென | 62 |
| அருச்சுநற்கும் | 169 | எங்கு மாய் | 90 |
| அருந்ததி கணவன் | 38 | என்று நல் வேந்தன் | 61 |
| அருளுரு வாயுயிர் | 8 | என்றுமற் றநேக | 58 |
| அலது நீ யேகின் | 55 | என்றங் கநேக | 170 |
| அவரவர் வினையின் | 59 | ஏகசக் கரம தாக | 86 |
| அவனியி னின | 96 | ஒருத்தனே ருருளனை | 137 |
| அறிவை நோக்கிடில் | 64 | கங்கையே முதலாம் | 23 |
| ஆகமத்தின் | 70 | கடி கமழ் | 11 |
| ஆடிய சகல | 146 | கடி நகர் தோறும் | 80 |
| ஆணவ மதனை | 158 | கதலியுங் கமுகு | 34 |
| ஆண்ட தோர் | 52 | கதிரவன் முன் | 161 |
| ஆதியி னினது | 54 | கந வதனில் | 159 |
| ஆலயஞ் சாலை | 24 | கரிரத மிவர்த லின்றி | 95 |
| இங்குறைந்த | 163 | கரு வயிற்றை | 167 |
| இத்தகை ஞாநம் | 92 | கருவி னின்றும் | 110 |
| இந்தமா ராஜன் | 174 | கவரியோ டாலவட் | 21 |
| இந்த விழிவை | 125 | குழைத்த தண் | 16 |
| இந்த வுணர்வு | 171 | குறைவிலா | 89 |
| இந்திர ஞலயம் | 21 | கேட்ட பேர்கண் மிக | 172 |

| | | | |
|---|---|---|---|
| கொடிநெ ருங்கும் | 30 | பாசந்தான் பகைய | 105 |
| கொடிமுதல் வாடும் | 156 | பால ஞான பருவம் | 109 |
| சகரர் தம் வலி | 13 | பூவனை யாகி | 93 |
| சிவன்றிரு வுருவாம் | 2 | பேத வாதி களைப் | 132 |
| சீவர்க ளிடத்தில் | 47 | பொய்யென் றிதனை | 126 |
| சீவன் முத்தர்கள் | 91 | பொய்யை மெய்யென் | 128 |
| செக்கர் போன் றொளிர் | 10 | பொருந்திவா ழிட | 76 |
| சோகமே யின்றி | 39 | பொருளுண் டாயிற் | 121 |
| ஞானமா னதுபொது | 68 | மஞ்சம ரிஞ்சிசூழ் | 17 |
| தந்தை தாய ரா | 119 | மடங்க லன்னப | 31 |
| தந்தைதா யிருவருந் | 63 | மாமிரு பொருளைப் | 101 |
| தருக்கிளர் நைமி | 15 | மனைதனி லாசை | 44 |
| தருநிழ லரசு வை | 18 | மனையினின் றூலும் | 138 |
| தவம் பல புரிந்து | 27 | மனைவியுந் தானும் | 40 |
| தனியிட மதனி வி | 41 | மாகர்க் கசுரர் | 122 |
| தன்னையே யன்றி | 82 | முத்தியே வடிவமான | 81 |
| திங்களார் சடையிற் | 7 | முனமனை வர்களும் | 143 |
| திங்களொண் கவிகைத் | 1 | முனமே யனைத்து | 135 |
| தீதுறு மனையின் | 140 | மூவுல கதனி லுள்ள | 35 |
| துன்பந் தோன்றி | 129 | ரத முதற் சேனை | 94 |
| தூம்புடைப் பிறை | 22 | வண்டுழா யலங்கல் | 12 |
| தென்றிசை நடப்போர் | 103 | வடி கொள் வெண் | 32 |
| தேவர் மநிதர் | 123 | வந்த பேர்க ளுடன் | 173 |
| தொய்யின் மூலைக் | 4 | விடயவின் பதனி | 150 |
| தோலி ரத்தமெ | 113 | விரிவாய ஞானமதை | 71 |
| தோன்றிடும் பொ | 79 | விருத்த பருவ | 117 |
| தோன்றிடு மூலக | 78 | வில்வி லங்குகை | 34 |
| தோன்று கின்ற | 108 | வினைகளோ ரிரண்டும் | 148 |
| நகர்தனி லேகிப் | 74 | வினையுள வளவுங் | 60 |
| நின்னுடைய | 67 | வேத நீதியிற் கூறி | 28 |
| பஞ்ச பூதம ழிந் | 112 | வேதவா கமசாத் | 45 |
| பதத்தினை வேண்டி | 98 | வேந்தனே யுனைவிடுத்தும் | 72 |
| பத மதை வேண்டி னி | 100 | | |
| பந்தம்வீ டென்று | 87 | | |
| பவமதை யினிமை | 155 | | |
| பற்றிலை யாயி | 152 | | |


ஆகக் கவி 128.

உ

சிவமயம்.

# விஷய அட்டவணை.


| விஷய எண். | | கவி எண். |
|---|---|---|
| 1 | கணபதி முதலிய பஞ்ச மூர்த்தி வணக்கம். | 1 |
| 2 | பஞ்சாக்ஷர மந்திரம், விபூதி ருத்திராக்ஷம், ஆசாரியர், அடியவர் ஜீவர்கள் வாழ்த்து. | 2 |
| 3 | பஞ்ச மூர்த்தி வணக்கம். | 1 |
| 4 | பாதாள விநாயகர் வணக்கம். | 2 |
| 5 | விருத்தாம்பிகை வணக்கம். | 3 |
| 6 | சிற் சபேசர் வணக்கம். | 4 |
| 7 | சிவ காம சௌந்தரி வணக்கம். | 5 |
| 8 | விநாயகர் வணக்கம். | 6 |
| 9 | சுப்பிர மணியர் வணக்கம் | 7 |
| 10 | பெரியார் வணக்கம். | 8 |
| 11 | அவை அடக்கம். | 9 |
| 12 | சூத புராணிகரை நைமிசாரண்ய வாசிகள் வினவல். | 1 |
| 13 | கருணாட தேசச் சிறப்பு. | 2 |
| 14 | மஹா ராஜன் இயல்பு. | 3—6 |
| 15 | கொலு மண்டபம், அரசாக்ஷி, புத்திரன் இன்மையால் உண்டாம் வியாகூலம் கூறல். | 7—9 |
| 16 | புத்திரப் பேற்றை விரும்பித் தர்மானுஷ்டானஞ் செய்தல். | 10-11 |
| 17 | புத்திரப் பேறு, நாமம் முதலியன செய்வித்தல். | 12 |
| 18 | புத்திரனுக்கு வித்தை கற்பித்தல், குரு தக்ஷிணை கொடுத்தல். | 13 |
| 19 | தேர் ஊர்தல், சிவிகை ஊர்தல், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் மண வினை முடிக்கக் கருதல். | 14 |

| | | |
|---|---|---|
| 20 | பல தேசத் தரசர்கட்கும், திரு மண வோலை அனுப்பிப், பல அரசர்களும் மா புரிப் பட்டணம் வருதல். | 15 |
| 21 | நகரை அலங்கரித்தல். | 16—17 |
| 22 | விவாக கன்னியைக் கூறல். | 18—19 |
| 23 | விவாகம் செய்வித்தல். | 20 |
| 24 | மகுடஞ் சூட்டிப் பூமியை மகனிடம் ஒப்புவித்தல். | 21 |
| 25 | மக னாகிய மகா ராஜன் தன்மையும், நைமிசாரண்ய வாசிகள் வினவலும் கூறல். | 22 |
| 26 | தம்பதி இருவரும், மாதா பிதா குரு விடம் சிரவணஞ் செய்தல். | 23 |
| 27 | தம்பதிக ளிருவரும் ஏகாந்தத்தி லிருந்து விசாரம் செய்தல். | 24 |
| 28 | மகாராஜன் விசாரத்தால் ஆசாரியரை அடைய நிச்சயித்தல். | 25 |
| 29 | அநாசாரியர் லக்ஷணம். | 26—27 |
| 30 | ஆசாரியரை அடைந்து ஞான உபதேசத்தினை விரும்புதல். | 28 |
| 31 | மகா வேத முனி உபதேசித்தல். | 29 |
| 32 | ஆசாரியர் உபதேசம் பெற்று ராஜ்ஜியத்தி லிருந்து சில காலம் சென்று வைராக்கியத்தினை அடைதல் கூறல். | 30 |
| 33 | மந்திரி முதலியோர் மகா ராஜனை வினவல், சமாதானங் கூறல். | 31—32—33 |
| 34 | ஜகத் சத்திய புத்தியை உடைய மந்திரி முதலியோர்கட்கு விவேகம் உண்டாகாது எனல். | 34 |
| 35 | அரசாக்ஷியால் வரும் துன்பம் கூறல். | 35 |
| 36 | கானகம் செல்லும் போது பட்டினத்தார் பின் தொடரல். | 36 |
| 37 | பட்டினத்தாருக்குச் சமாதானங் கூறல். | 37 |
| 38 | கர்மத்தால் வரும் சம்பந்தம் கூறல். | 38 |

39 சுற்றத்தார் தடுத்தல். 39

40 சுற்றத்தாருக்குச் சமாதானங் கூறல். 40

41 மாதா பிதாக்கள் தடை செய்தல். 41

42 மாதா பிதாக்களுக்குச் சமாதானங் கூறல். 42

43 மனைவி தடை செய்தல் - சமாதானங் கூறல். 43—44

44 புருஷனை நீங்கித் தனித் திருக்க, மனைவிக்கு விதி யில்லை எனல். 45

45 மனைவிக்கு மறு மொழி கூறி வநஞ் சேறல். 46

46 மனைவி, மகா ராஜனை நோக்கி வருந்தல். 47

47 மனைவி வருத்தம் உற்று மாமன் வீடு போய்ச் சேறல். 48

48 மகா ராஜன் நிலைமை. 49

49 கர தல பிக்ஷை மாக அபமாந மின்றி யிருத்தனன் எனக் கூறல். 50

50 ஓரிடம் பற்றி யிராமல், எங்கும் சமாதி யுடையவனாக இருத்தல். 51

51 பிரஹ்மத்தில் உலகம் அநிர்வசநீயமாகத் தோன்றலும், மகா ராஜன் உலகை பிரஹ்ம ரூப மாகப் பார்த்தலும் கூறல். 52

52 பிரஹ்மத்தின் சச்சிதாநந்தம் உலகப் பொருள்களில் அத்தியஸ்த மாகத் தோன்றுதலின், பிரபஞ்சம் அசத்து, பிரமம் சச்சிதாநந்தம், அதுவே மகா ராஜனது சொரூபம் எனல். 53

53 காடு, நாடு, பூமி முழுதும் சென்றும் மகா ராஜன் மநம் மாற வில்லை எனல். 54

54 அத்வைத சாம்ராஜ்ய மகா ராஜ னாய் கற்பித ஆவிர்ப்பாவ ஜீவ பாவத்தை நீக்கி பிரஹ்ம சொரூபமாக விளங்கல். 55

55 பொன்னைத் தவிரப் பூடணம் இல்லாதது போல், மின்னல் போன்ற பிரபஞ்சம் பிரஹ்மத்தைத் தவிர இல்லை எனல். 56

56 பிரபஞ்சம் பிரஹ்மாபின்ன மாய தனக்கு வேறாய்ச், சத்தாயிருப்ப தில்லை. தன் சொரூப மாகவே பிரபஞ்சந் தோன்றுகிறது. யாவும் மனோ சங்கற்பம். அதுவும் எனக் கன்னிய மாக இல்லை எனல். 57

57 ஆத்ம ஞான ராஜ்ய ஆட்சிக்கு, இந்திரனது செல்வமும் போகமும் துரும்புக்குச் சமானம் என, யூக புத்தியினாலும், ஆசாரியர் உபதேசத்தினாலும், கிடைத்த ஆனந்த ராஜ்ஜியத்தினை அடைந்து, மகா ராஜன் கிருதகிருத்தியன் ஆயினன் எனல். 58

58 பந்தமும் மோக்ஷமும் உண்மை யாக இல்லை, பரம் பொருள் ஒன்றே உளது. ஜீவர்கள் பிரஹ்மத்திற்கு வேறாகப் பந்தம் மோக்ஷம் சத்திய மாக உளது என மயக்கத்தினை அடைகின்றனர் எனல். 59

59 மஹா ராஜன் சென்ற இடம் எல்லாம் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப மாகப் பார்த்தான் எனல். 60

60 பெருங் காயம் இருந்த பாண்டம் போல, உருவ மனதைக் கெடுத்து அருவ மனதோடு விளங்கல். 61

61 அருவ மனம் ஜீவன் முத்தர்க ளிடத் திருப்பது, அருவ மனம் விதேக முத்தியில் நாச மாம், மகா ராஜன் கைவல்ய சொரூப மாக விளங்கல் கூறல். 62

62 மஹா ராஜன் சித்தியை, மந்திரி ஒருவன் கேட்டு, கானகம் சென்று, அரசனிடம் வினவல். 63

63 மந்திரி பார்க்கும் சமயம், பூமி படுக்கை, ஆகாயம் மேற்கட்டி, சூரிய சந்திரர் விளக்கு, வாயு சாமரம், பற்று

ஒழிதல் மனைவி, தனித் திருத்தல் இன்பம் எனக் கருதி விளங்கினன் மஹா ராஜன் எனல். 64

64 சதுரங்க சேனைகள் சூழ்ந்த சிம்மாசநம் இன்றி, விபூதி உத்தூளந, கௌபீந, ஜடாதாரியாய் விளங்கல். 65

65 சதுரங்க சேனைகள் இன்றிப் பாதசாரியாய் ஊர் முழுதும் பிக்ஷ ஏற்பவனாய், தவச் சிந்நம் உடைய மகா ராஜனைக் கண்டு மந்திரி வினவல் எனல். 66—67

66 இல் லறத் திருந்தே பத மோக்ஷம் அடைய லாம். இல் லறத் திருந்தே ஞாநத்தினால் பர முத்தியை அடைய லாம். அப்படி யிருக்கப் பரதேசி யானது எதற்காக என மந்திரி கேட்டல். 68

67 அரசன் மந்திரிக்குப் பதில் கூறல். 69

68 இல் லறத்தி லிருந்தால் ஞாநம் உண்டாகாது எனல். 70

69 மநம் ஒரே காலத்தில் இரு பொருளை பற்றமாட்டாது. அட்டாவதாநம் வெளி நோக்கம், மோக்ஷம் உள் நோக்கம், இல் லறம் வெளி நோக்கம், எனக் கூறல். 71

70 தெற்கு நோக்கிச் செல்வோர், வடக்கி லிருக்கும் கங்கையை யடையார் போல, இல் லறத்தார் ஞாந வாயி லாக மோக்ஷ மடையார். ராஜ்ஜிய வியவகாரத்துக்கே மந்திரிகளோடு தனித்து யூகம் செய்தல் என்பன. 72

71 ஞாநி, சொல் அளவில் ஞாநி, செயல் அளவில் ஞாநி, என இரு திறப்படுவர். சொல் அளவில் ஞாநிகள், பாசம் விரோதம் என்பர். பாசம் விடார், எல்லாம் பிரமம் எனப் புலம்புவர் என்பன. 73

72 ஞாநத் தால் மோக்ஷம் அடையலாம், துற வறம் வேண்டாம் என்று, மந்தனைக் குறித்துக் கூறிய தாம். தீவிர

| | | |
|---|---|---|
| | அதிகாரியைக் குறித்து மோக்ஷம் அடையத் துறவறம் வேண்டாம் என்று கூறுது என்பன. | 74 |
| 73 | பிரபஞ்சப் பொருள், பிரமப் பொருள் என்பவை, அசுத்தம் துக்கம் அநித்தியம், சுத்தம் சுகம் நித்தியம் என்பவை. | 75 |
| 74 | தேக அநித்தியத் தன்மை. | 76—77 |
| 75 | பஞ்ச பூதம், பாநு, திங்கள், நக்ஷத்திரங்கள், அசுரர், தேவர், அரக்கர், இந்திரன், பிரமா, மால் முதலியவர்களின் அநித்தியத் தன்மையைக் கூறல். | 78 |
| 76 | தேகத்தின் அசுத்தத் தன்மை, பிரமத்தின் சுத்தத் தன்மைகள். | 79 |
| 77 | உத்பத்தி நாச கால துன்பம். | 80 |
| 78 | திதி கால துன்பம். | 81—82—83 |
| 79 | ஸ்வர்க்க லோக துன்பம். | 84 |
| 80 | பூலோக ஸ்வர்க்க லோகங்களில் உள்ள எழு வகைத் தோற்றமும் துக்கமே, நாக லோக துன்பத்துக்கு அளவு இல்லே. மோக்ஷமே இன்பம் எனல். | 85 |
| 81 | மாயை அசத்து, பிரஹ்மம் சத்து எனல். | 86 |
| 82 | பிரபஞ்சம் மித்தை, பிரஹ்மம் சத்தியம் எனல். | 87 |
| 83 | அஞ்ஞாநிகள் பொய்யை மெய் என்றும், மெய்யைப் பொய் என்றும், கருதி ஞாநம் இன்மையால் சுழல்வர், ஞாநிகள் ஆசாரியர் கிருபையினுல் மெய்யை மெய் என்றும், பொய்யை பொய் என்றும், உணர்ந்து ஆநந்த ரூப மாக இருப்பர் எனல். | 88 |
| 84 | பிரபஞ்சம் சுக ஸ்வரூபம் என்று தோன்றினுல், அவர்கட்கு ஞாநம் உண்டாகாது எனல். | 89 |

85 பிரபஞ்சம் அசுத்தம். அதனை உணர அஞ்ஞானிகட்கு காலம் வாய்க்காது எனல். 90

86 துறவு, பேதத் துறவு, அபேதத் துறவு, என இரு வகைப் படும். இது அபேதத் துறவு. இந்த அபேதத் துறவால், சந்திரன் போல, மனம் சீதளம் ஆகி, பிறவி வெப்பம் நீங்கும் எனல். 91

87 பிரஹ்மத்தை இல் லறத்தி லிருந் தடைதல் முடியாது. நின் மல மனத்தினை உடைய தீர புருஷ னாயினும், இல் லறத்தைக் கடந்து ஏகாந்த ஸ்தானத்தைப் பொருந்தி ஜீவத்துவம் கெடுக்க வேண்டும் ஆயின், மலின மன முடைய அதைரிய புருஷனுக்கு, இல் லறத்தி லிருந்து பல இடையூறுகளோடு கூடிக் கொண்டு ஜீவத்துவத் தைக் கெடுக்க முடியாது எனல். 92

88 பிறந்தவுடன் ஆத்ம ஞானம், சாங்சித்தர்கள் போல் வந்து, இல் லறத் திருந்தும், அநுபூதி நழுவாது என்பது பொருந்தாது, யாழ்ப்பாணத்தின் கப்பல் ஓட்டம் போல, அக முக நாட்ட முடையோர், ஜக முக நாட்ட மடையார் எனல். 93

89 ஒரு கிராமாதிகாரி, ராஜ்யாதி காரி யாயின், கிராமாதி காரித் தன்மை நீங்குவது போல, பிரபஞ்சம் பொய் எனக் கண்ட மெய்ஞ் ஞானிகள், மீண்டு பிரபஞ்சத்தை மெய் எனக் கொண்டு உழலார் எனல். 94

90 இல் லறத்தி லிருக்கும் ஒருவருக்கு, உயிர்ச் சார்வு பொருட் சார்வுகளின் லாபத்தில் சந்தோஷம், நஷ்டத் தில் வருத்தம், விஷயானந்தத்தில் விருப்பம், அதன்கண் பிரவிருத்தி, என்னும் நான்கும் ஜந்மாந்தர பாக்கியத் தினால் இல்லாதிருக்கினும், பிரஹ்மாப்யாச காலத்தில் இல்லைத் துறந் திருத்தலே நலம் எனல். 95

91 சாதந காலத்தில் விஷயாநந்தத்தினை வெறுத்து, பிரஹ்மாப்யாசம் செய்து, சாத்திய மாகிய பிரஹ்மாநந்த அநுபவம் உண்டாயின், விஷயாநந்தம் ஒரு பொரு ளாகத் தோற்ற மாட்டாது, அதனால், துறவு இல்லாத ஞாநம் அஞ்ஞாநமே எனல். 96

92 இல் லறத்தார் ஞாநம், இரும்பில் பதித்த ரத்திநம் போல, ஒளி மழுங்கி விளங்கும். துற வறத்தார் ஞாநம், தங்கத்தில் பதித்த ரத்நம் போல, ஒளி மிகுந்து விளங்கும். ஆனதால், ஞாநிகட்கு இல் லறம் சிறப் புடைய தன்று எனல். 97

93 ஞாநி அஞ்ஞாநி யிருவரும், இல் லறத் திருப்பினும், இல் லற ஞாநியை, "ஏன் இன்னும் இல் லறத்தி லிருக்கிறீர்கள்" என்கிறார்கள் சிலர், அது போல, துற வற ஞாநியை, "ஏன் இன்னும் குடும்பியாகப் போக வில்லை" என்று எவரும் கூறுவ தில்லை என்னும் எதிர் மறை முகத்தால் துற வற உயர்வைக் கூறல் எனல். 98

94 அடைதற் கரியது துறவும் அதனை விடுதல், இரத்திநம் கொடுத்து பிண்ணாக்கு வாங்குவதற்கு சமாநம் என்று எதிர் மறை முகத்தால் உயர்வினைக் கூறல். 99

95 ஞாநி தன்மை, பாலன், மரு ளுடையோன், பேய் பிடித்தோன், கூலியாள், இவர்கள் தன்மை போன்றிருக்கும் எனல். 100

96 இரு வினைகளும் சமம் என்னும் அப்யாச காலத்தில், கான்ற சோறு போல, விஷயாநந்தத்தினை வெறுத்துத் தள்ளிய ஞாநி, சாத்ய மான பிரஹ்மாநந்தம் அடைந்த பின்னர், விஷயாநந்தத்தில் விருப்பம் வைப்பார் என்னும் சொல்லாவது உலகத்தில் வழங்காது என, உலகாநுபவ விரோதம் எனல். 101

97 விஷயாநந்தத்தில் இச்சை யுள்ளவருக்கும், பிரஹ்மாநந்தத்தின் அடைவின் கிரமத்தைக் காதாற் கேட்ட போதே, விஷயத்தினை விட்டுவிடும்படியாக விருப்பம் உண்டாகு மாயின், பிரஹ்மாநந்தத்தினை அடைந்த ஞாநி

கள், விஷயாநந்தத்தை விரும்புவார்கள் என்று கூறினால், "பார்த்தவர்கள் சிரிப்பார்கள்" என எதிர் மறை முகத்தால் விஷயாநந்தத் தாழ்வினைக் கூறல். 102

98 பிராரப்த கர்ம வசத்தால் ஞாநி இல் லறத்தி லிருப்பர் எனில், ஆசையை உண்டாக்கி யன்றோ, விஷயங்கள் அநுபவிக்கச் செய்யும். ஞாநி விஷயாநந்தத்தில் விருப்பம் வையார், பிரஹ்மாநந்தத்தில் மூழ்கி யிருப்பார். உத்தித ராயின், கானல் ஜலம் போல, விஷயத்தைக் கருதி, மீண்டும் பிரஹ்மாநந்த சமாதியில் இருப்பர் எனல். 103

99 சம்சாரம் சுகம் எனக் கருதி யிருந்தவர்களே, அது சுகம் அன்று எனக் கருதி, விஷய ஆசையை விட்டுப், பிரஹ்மாநந்தம் அடைந்திருப்பார்களாயின், அவர்கட்குச் சம்சாரம் சுகம் எனத் தோன்றாமையின் விஷய சுகத்தை விரும்பார் எனல். 104

100 காரணம் கெட்டபின் காரியம் இரா தெனல். 105

101 அஞ்ஞு னாய் குய்ய அரிப்பு உதர அக்நி அதற்சியைத் தணிப்பதையே ஆநந்தமாகக் கருதியவனுக்கே, பிரஹ்மாநந்தத்தில் விருப்பம் வர அஞ்ஞாநம் இல்லை. அது போல், ஞாநிக்கு விஷயாநந்த விருப்பம் வரின் ஞாநம் இல்லை எனல். 106

102 சாக்கிர அவஸ்தையில், சொப்பநமும், அப் பொருளும், பொய் என உணர்ந்தவருக்கு, சொப்பநத்திலும், சொப்பநப் பொருளிலும், ஆசை யில்லாதது போல, தன் சொரூபத்தை உணர்ந்து, பிரபஞ்சம் இந்திர ஜாலம் போல் பொய் என்று உணர்ந்தவருக்கு விஷய சுகத்தில் மோகம் நீங்கும் எனல். 107

103 சூரியன் முன் இருள், நல்ல கண் ணுடையவன் குழியில் விழல், சூரன் யுத்தத்திற்குப் பின் வாங்கல், ஷட் ரச போஜி, கூழை விரும்பல் என்பன இழுக்காம். அது போல், ஞாநி விஷயாநந்தத்தினை விரும்பினால் ஞாநத்திற்கு இழுக்காம் எனல். 108

104 பெருங்காயம் இருந்து நீங்கிய பாண்டம் போலும் என்பது, இன்றியமையாத தொழிலை செய்வதற் காம். அக்நி

ஸ்தம்பநம் பண்ணினவனுக்கு அக்நி சுடாது போல என்பது, ஆகாமிய கர்மத்திற்குக் காரண மான இச்சை யத்நங்கள் பொருந்தா என்பதே யாம். வேறு அன்று எனல். 109

105 ஞாநி எது செய்யினும் குற்ற மில்லை என்று சொல்பவன் மகா பாபியாவன், ஞாநத்திற்குத் தோஷம் வருகிறபடியால். ஞாந மிருந்தால் ஞாநி என்னும் பெயர் இருக்கலாம். ஞாநம் இல்லாவிட்டால் ஞாநி என்னும், பெயரும் இல்லை எனல். 110

106 கரு வுடையவள், கந வயிறு உடையவள் என்பதனை அவர்க ளுடைய அவயவங் கொண்டு அறிய லாம். அது போல, உண்மை ஞாநியையும், டம்ப ஞாநியையும் அவர்களுடைய சிறப்பு இயல்புகளால் அறிய லாம் எனல். 111

107 உலக பாலந அதிகாரம் உடையவர், அஃதின்றியவர் என இரு திறப்படுவர் மநிதர். இராமர், அர்ஜ்ஜுநர் உலக பாலந அதிகாரம் உடையவர், நம்மனோர் அஃதின்றியவர் ஆகலின், அநதிகிருத நாம் துறவடைந்தால் தான் ஞாநி யாக லாம். அதிகிருதர் துறத்த லின்றி ஞாநி யாவர் எனல். 112

108 மகா ராஜன் சமாதியில் இருந்ததனை, மந்திரி பார்த்து ஆச்சரியம் அடைந்தான் எனல். 113

109 மந்திரி மா புரிப் பட்டணம் போய், மஹா ராஜன் நிலைமையை, மகா ஜநங்கட்குக் கூறினன் எனல். 114

110 நகரத்தார் மஹா ராஜனைத் தெரிசித்தலையும், மஹா ராஜன் புன் னகையுடன் இருத்தலையும் கூறல். 115

111 நகரத்தார் பார்த்து விட்டு, மறு மொழி மலராததனைக் கருதி, மா புரிப் பட்டணத்திற்குத் திரும்பிச் சென்றனர் எனல். 116

112 நூற் பயனும், தேவி வணக்கம் கூறல். 117

விஷய அநுக்கிர மணிகை முற்றுப் பெற்றது.

சிவமயம்.

# மகா ராஜத் துறவு உதாரணக் கவி 62.

| பாட்டு எண். | பாட்டு. | உதாரண நூல். | பாட்டு. |
|---|---|---|---|
| | சிறப்புப் பாயிரம் | | |
| 2 | சிவன் றிரு | ராம-அருட்பா | பாடற் கினிய |
| 26 | மனை தனி | அஞ்ஞ வதைப் பரணி | மெய்வருந்தி |
| 27 | வேத வாக | மேற்படி | ஒளி தங்கிய |
| | ,, | வைராக்ய சதகம் | வாயினுற் பல |
| | ,, | நாரத பரிவிராஜக [உபநிஷத்-வாசிட்டம் | ஸ்வரூபாநு |
| 45 | ஞாநமானது | | பதி யொழிந்து |
| 50 | நகர்தனில் | வைராக்ய தீபம் | உச்சியம் போதின் |
| 51 | பொருந்திவாழ் | மேற்படி | பொருளறந் துறந்து |
| | ,, | வாசிட்டம் | வெறிதிருக்கினும் |
| 56 | தன்னையே | விவேக சூடாமணி | போதமர்த் |
| | ,, | ,, | ஏகமாந் |
| | ,, | ,, | ஓதிய கடங் |
| | ,, | ,, | யாதினு |
| | ,, | ,, | எதிலெது |
| | ,, | ,, | ஈஃதுபோல் |
| 57 | உலகினை | ,, | யாதிது |
| | ,, | ,, | கந முடைத் |
| | ,, | ,, | விரிவுறு |
| | ,, | ,, | சாற்றிய |
| | ,, | ,, | கந பாப் |
| | ,, | ,, | இதுவெனுஞ் |

| பாட்டு எண். | பாட்டு. | உதாரண நூல். | பாட்டு. |
|---|---|---|---|
| 59 | பந்தம் வீடெ | வாசிட்டம் | தங்கள் சங் |
| | ,, | ,, | அந்தமற் |
| 61 | எங்குமாய் | கைவல்ய நவநீதம் | மந நாசஞ் |
| 62 | சீவன்முத்தர்கள் | ,, | அரிய மெய்ஞ் |
| 72 | தென்றிசை | வைராக்ய தீபம் | எடுத்துள |
| 73 | பாசந்தான் | ,, | தத்துவ முணர |
| 79 | தோலி ரத்த | அஞ்ஞவதைப்பரணி | நரம் பெலும்பு |
| | ,, | விவேக சூடாமணி | மெத்திய தொக்கு |
| 80 | அரந்தை | மெய்ஞ் ஞாந விளக்கம் | வந்திடு மரணத் |
| | ,, | வைராக்ய தீபம் | உடலி துற்பவத் |
| | ,, | குறுந் திரட்டு | பாண மாகிய |
| | ,, | ஞாந சம்பந்தர் | புலனைந்தும் |
| | ,, | அஞ்ஞவதைப்பரணி | உடலை யொன்றிய |
| 81 | விருத்த பருவ | வைராக்ய தீபம் | உடலி துற் |
| | ,, | மெய்ஞ் ஞாந விளக்கம் | பிணியினல் வலியுங் |
| 82 | தந்தை தாயர் | அஞ்ஞவதைப்பரணி | வியிறு சாணும் |
| | ,, | ,, | கவலை யுற்ற |
| | ,, | மகா உபநிஷத் | சைசவத்தில் |
| | ,, | ,, | பால்யத்தில் |
| 83 | பொருளுண்டா | வைராக்ய தீபம் | இளமையிற் |
| 87 | பொய் யென் | விவேக சூடாமணி | சக மிது |
| | ,, | ,, | சாதுவே |

| பாட்டு எண். | பாட்டு. | உதாரண நூல். | பாட்டு. |
|---|---|---|---|
| 88 | பொய்யை | அஞ்ஞவதைப்பரணி | பொய்ம்மை |
| | ,, | வாசிட்டம் | தானலா |
| 91 | பேத வாதி | அஞ்ஞவதைப்பரணி | ஞானம் போலே |
| 93 | முனமே | அத்வைத ரசமஞ்சரி | திரிசியந்தான் |
| 95 | மனையினின் | வைராக்ய தீபம் | இந்திர சாலத் |
| | ,, | ,, | சொற்றிடின் |
| 96 | தீதுறுமனை | வைராக்ய தீபம் | சாதக தசை |
| 100 | ஆடிய | பிருகத் வார்த்திகம் | புத்த தத்தவம் |
| | ,, | குறுந் திரட்டு | பிள்ளையாம் |
| | ,, | நாரத பரிவிராஜக உபநிஷத் | பால உந்மத்த |
| 101 | வினைகளோ | வைராக்ய தீபம் | கான்ற சோற |
| 102 | விடயவின் | பஞ்ச தசி | ஞானம் பெறு |
| | ,, | தத்துவ ரத்நாகரம் | வாக்கொடு மநமு |
| 103 | பற்றிலையாயின் | வைராக்ய தீபம் | பெண்ணைவிட் |
| 107 | கநவதனில் | அத்வைத உண்மை | கநவைக் கநவென் |
| | ,, | கைவல்ய நவநீதம் | காண்ப வெல்லாம் |
| | ,, | ,, | மநத்தினெலெண் |
| 109 | இங்குறைந்த | வாசிட்டம் | சீவன் முத்திதனி |
| 111 | கருவயிற்றை | வைராக்ய தீபம் | கான்ற சோறதனில் |
| | ,, | பட்டினத்தார் | பொருளுடையோனை |

ஆக நூல் 18-க்கு உதாரணக் கவி 62.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 5 | கணபதி முதலிய ஐவர் வணக்கம் கூறுகின்றார் - 1 | அவ்தாரிகை யில்லை |
| 12 | 24 | போன்று | போன்ற |
| 14 | 12 | கள் | கள் இலஞ்சி தான் விளக்கவே தான் ஏ இரண்டும் அசை நிலைகள் |
| 15 | 3 | வினவல் | வினவலைக் கூறல் |
| 16 | 6 | புரைத்தல் | புரைத்தலைக் கூறல் |
| 17 | 11 | உரைத்தல் | உரைத்தலைக் கூறல் |
| 19 | 12 | முழங்கும் | முழங்கு |
| 20 | 11 | அப் பகைவர் | பகைவர் |
| ,, | ,, | பகைவர் | அப் பகைவர் |
| 23 | 14 | செய்தல் | செய்தலைக் கூறல் |
| 31 | 8 | அநுப்புதலும் | அநுப்புதலையும் |
| ,, | 9 | சேர்தலும் | சேர்தலையும் |
| ,, | 17 | தேசத்தா | தேசத்து |
| 38 | 4 | சூட்டுதலும் | சூட்டுதலையும் |
| ,, | 5 | ஒப்புவித்தலும் | ஒப்புவித்தலையும் |
| 39 | 6 | ஆளும் | ஆரும் |
| ,, | 10 | தன்மையினைக் கூறலும் | தன்மையினையும் |
| ,, | 11 | வினவுதலும் | வினவுதலையும் |
| 40 | 12 | வேலன் | வேலவன் |
| ,, | 16 | செய்தல் | செய்தலைக் |
| 44 | 5 | ரிலக்கணங்கூறல் | ரிலக்கணத்தைக் கூறல் |
| 47 | 5 | வேத | விதி ஈறாக நின்ற வேத |
| ,, | 20 | அடைதலும் | அடைதலையும் |
| ,, | 21 | விரும்புதலும் | விரும்புதலையும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 51 | 19 | வினவுதலும் | வினவுதலையும் |
| ,, | 20 | செய்தலும் | செய்தலையும் |
| 54 | 25 | இவ் வுலகில்)<br>வேறு - | இவ் வுலகில்) இச் செல்வம் அன்றி-<br>இந்த மேலான ராஜ்யச் செல்வம்<br>அல்லாமல் வேறு - |
| 56 | 27 | துன்பம் | துன்பத்தினைக் |
| 57 | 21 | இன்பம் எது | இன்ப எது |
| ,, | 25 | அறிகிலர் | அறிகிலிர் |
| 58 | 7 | பய னிலை,<br>[ஊக்கம், | பய னிலை. அதனை - செயப்படு<br>பொருள். ஈது - எழுவாய். தோன்<br>றும் - பய னிலை. ஊக்கம் |
| ,, | 9 | செல்லலும் | செல்லலையும் |
| ,, | 10 | புலம்பலும் | புலம்பலையும் |
| 59 | 14 | சமாதானங் கூறல் | சமாதானங் கூறலைக் கூறல் |
| 62 | 18 | அன்மை விளி | அண்மை விளி |
| 68 | 17 | பய னிலை<br>[நாயகன் | பய னிலை. நீ - தோன்று எழுவாய்.<br>கேளாய் - பய னிலை, நாயகன் |
| 76 | 4 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 78 | 8 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 79 | 12 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 80 | 10 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 81 | 8 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 82 | 10 | எனக் கூறல் | என்பதனைக் கூறல் |
| 84 | 5 | என்னும் | என்றும் |
| ,, | 9 | எழுவரய் | எழுவாய் |
| ,, | 14 | எனக் | என்பதனைக் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 86 | 12 | எனவும் | என்பதனையும் |
| ,, | 15 | எனவும் | என்பதனையும் |
| 87 | 20 | எனக் | என்பதனைக் |
| 89 | 8 | எனக் | என்பதனைக் |
| 90 | 6 | எனக் | என்பதனைக் |
| 91 | 13 | தெனவும் | தென்பதையும் |
| ,, | 14 | எனவும் | என்பதையும் |
| ,, | 15 | எனவும் | என்பதையும் |
| 93 | 22 | எனக் | என்பதனைக் |
| 94 | 23 | எனக் | என்பதனைக் |
| 95 | 21 | எனக் | என்பதனைக் |
| 96 | 16 | னுருபுகளும் | னுருபுகளும், உம்மைகளும், |
| 98 | 3 | எனக் | என்பதனைக் |
| 100 | 11 | எனவும் | என்பதனையும் |
| ,, | 13 | தெனவும் | தென்பதனையும் |
| 101, | 12 | எனவும் | என்பதனையும் |
| ,, | 13 | எனவும் | என்பதனையும் |
| ,, | 14 | எனவும் | என்பதனையும் |
| ,, | 15 | எனவும் | என்பதனையும் |
| ,, | 16 | எனவும் | என்பதனையும் |
| 103 | 9 | எனவும் | என்பதனையும் |
| ,, | 10 | எனவும் | என்பதனையும் |
| ,, | 12 | எனவும் | என்பதனையும் |
| 108 | 19 | எனக் | என்பதனைக் |
| 124 | 20 | இரு | இடு |
| ,, | 25 | நோய் | நோய் எழுவாய் |
| 149 | 8 | வெறுப் பற்று | வெறுப் புற்று |
| 152 | 4 | உளோர் தமக்கு | உளோர் தமக்கும் |
| 158 | 28 | இரு | இடு |
| 168 | 24 | யனி | யணி |

மநப் பிரசாதினி உரை — மஹா ராஜத் துறவு என்னும் எட்டிங்கை பக்கந் தோறும் மஹா ராஜத் துறவு — மநப் பிரசாதினி உரை என்று மாற்றிப் படித்துக் கொள்க.

சிவமயம்.

# முகவுரை.

தலைசிறந்து மிளிர்தரு மிம் மலர்தலை யுலகத்தில், அறிவுறு பொருள் அறிவறு பொருள் எனப் பொருள்கள் இருவகையாகக் காணப்படுகின்றன. இவ்விரு வகைப் பொருள்களுள் அறிவுறு பொருள், அறியும் விடய வேற்றுமையால் அறுவகையாகக் காணப்படுகின்றன. அவற்றுள், மக்களாய பொருள் சுவை யொளி யூறோசை நாற்றம் (சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம்) என்னும் விடயங்களை ஐம்பொறிகளா லுணரும் ஐயறிவையும், அதற்கு மேல் தக்க இன்ன, தகாதன இன்ன, என மநத்தால் பகுத்துணரும் ஆறுவது அறிவையு முடையதாதலின், பிற பொருள்களி னின்று மேம்பட்டதாகக் கருதப்படுகின்றது.

மக்களல்லாத பிற அறிவுடைப் பொருள்களும், உணவு முதலிய இம்மை விடயங்களில், இவை நன்மை தருவன, இவை தீமை தருவன, எனப் பிரித்துணரும் பகுத்துணர்வு முடையனவாகக் காணப்படினும், இவை மறுமைக்கண் நன்மை தருவன அன்றித் தீமை தருவன எனப் பகுத்துணரும் பகுத்துணர்ச்சியும், இம்மைக்கண்ணும் விடயங்கள் பலவற்றையும் இவை நல்லவை, இவை தீயவை, யெனக் காணு முணர்ச்சியும், அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் முதலியன என்றுந் தீமை பயப்பன, பொறுமை அவா வின்மை சினவாமை இனியன கூறல் முதலியன நன்மை பயப்பன எனப் பகுத்துணரு முணர்வும், இவ்வுலகத்தும் பிற வுலகத்தும் காணப்படுவனவும் கேட்கப்படுவனவு மாய பொருள்க ளனைத்தும் நிலையாதனவே துன்ப வடிவமே யாகும். என்றும் நின்று நிலைத்த பொருள் வேறுளது, அறிவாய், இன்பமாய், அகல விரிந்து மிளிர்வ தஃது எனப் பிரித்துக் காணும் காட்சியு மாய நல்லுணர்வை அவை பெறா. ஆதலால், பிற வுயிர்கள் பகுத்தறிவுடையன எனக் கருதப்படா என்க.

மக்க ளல்லாத பிற நாரை, யானே முதலியனவும், இப் பகுத்துணர் வுடையன வாய் நலம் பெற்றன வாக நூல்களா லறியப்படுகின்றனவே யெனின், ஒரோ வழி யங்ஙனங் காணப்படினும், சாப முதலியவற்றால் பிற வடிவங்களை யேற்ற சான்றோர் என அவை மதிக்கப்படுவன வன்றி, விலங் கென மதிக்கப்படா வாதலின், மக்களே எல்லாப் பகுத் துணர்வையும் பெறுதற் குரிய தகுதியுடையவ ராகக் கருதப்படுகின்றன ரென்க. இக் கருத் தெல்லாம் விளங்கிக் கிடக்கும்படி ஆசிரியர் தொல்காப்பியர்,

" புல்லு மானு மோரறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

" நந்து முரளு மீரறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

" சிதலு மெறும்பு மூவறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

" நண்டும் தும்பியு நான்கறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

" மாவு மாக்களு மையறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

என உயி ருடைப் பொருள்களை அறியும் விடய வேற்றுமை கொண்டு, ஓ ரறிவின ஈ ரறிவின என வகுக்குமிடத்து,

" மக்க டாமே யாறறி வினவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே "

எனக் கூறியிருத்தல் காண்க.

அங்ஙன மாகிய மக்கள், இம்மையி லின்பந் தருவன இவை, துன்பந் தருவன இவை, மறுமையில் இன்பந் தருவன இவை,

துன்பந் தருவன இவை, என்றும் துன்பஞ் சிறிது மின்றிய இன்பந் தருவன இவை, யெனப் பகுத் துணர்ந்து தகுதிக் கேற்ப அவ் வின்பங்களை யெய்துதற் குறு துணை யாக நிற்பன இறைவனும், அவ னருள் வழிப்பட்ட சான்றோர் பலருஞ் செய்த நன் னூல் களுமே யாகும். அந் நூல்க ளாவன, நான் மறைகள், ஆ றங்கங் கள், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி, புராணம் என்னும் பதி னான்கு மாம்.

இப் பதினான்கனுள் மீமாஞ்சை யென்பது பூருவ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை என இரு வகைப்படும். பூருவ மீமாஞ்சை யென்பது சைமினி முனிவ ரென்பவரால் பன் னிரண் டத்தியாயங் களாகச் சூத்திரிக்கப்பட் டுள்ளது. இது கருமத்தைப் பற்றியே பேசுவ தாகும். இச் சைமினி முனிவர் நூற்கு, சபர முனிவரால் ஓர் பே ருரை வகுக்கப்பட்டுள்ளது. அஃது சாபர பாடியம் என வழங்கப் படும். சபர முனிவர் கொள்கைக்கு வேறான கொள்கை புலப்படப் பட்டாச்சாரிய ரென்பவரால், பாட்ட மதம் என அச் சைமினி சூத்திரத்திற்கு வே றொரு பே ருரை வகுக்கப்பட்டுள்ளது. அப் பாட்ட மத மென்னு முரைக்குப் பட்டாச்சாரியரின் சீட ரான பிரபாகர ரென்பவரால், பட்டர் கொள்கையினின்றும் வேறு கொள் கை புலப்பட ஓ ருரை வகுக்கப்பட்டுள்ளது. அது பிரபாகரம் என வழங்கப்படும்.

உத்தர மீமாஞ்சை அருள் மிகுந்த வியாச பகவானால் எட் டத்தியாய வடிவ மாகச் சூத்திரிக்கப்பட்டுள்ளது. இது சகுண நிர்க்குணப் பிரமங்களைப் பற்றிப் பேசுவ தாகும். இவ் வெட் டத்தி யாயங்களுள், நான் கத்தியாயங்கள் சகுண மாகிய தேவதைகளைப் பற்றிப் பேசுவதனால், அவை தேவதா காண்ட மென வழங்கப்படும். அதற்குப் பலபத்திர ரென்பவரால் ஓ ருரை யியற்றப்பட் டுள்ளது. பின் னான்கத்தியாயங்கள் சீவன் சிவனே வே றில்லை எனப் பிரத்ய கபிந்ந பிரமத்தைப் பற்றிப் பேசுவதனால், அவை பிரம காண்ட

மென வழங்கப்படும். இதற்கு அத்வைத பரமாச்சாரிய ராகிய சங்கர பகவற் பாத ரென்னும் பே ரருட் குருபரால், ஈடு மெடுப்பு மில்லாத பே ருரை யொன்று இயற்றப்பட் டுள்ளது. இப் பேருரைக்கு விளக்க வுரை யாக விவரணச்சாரிய ரென்பவரால், விவரண மென ஓ ரரிய வுரை எழுதப்பட்டிருக்கின்றது. இனி யிவ் வுரைகளை விளக்கு முரைகளு, மவ் வுரைகளை விளக்கு முரைகளு மாக, வேறு பல வுரைகளு மெழுந் துள்ளன. இவைகளே யன்றி, ஆசாரிய ஸ்வாமிகளின் கொள்கையை நிலை நாட்ட வேண்டி கண்டந மண்டந வடிவ மாகப் பல நூல்களுந் தோன்றி யுள்ளன. பிரம காண்ட முத லாக மேற் கூறப்பட்டன யாவும் வேதாந்த நூல்க ளெனவே வழங்கப்படும்.

இவ் வேதாந்த நூல்களின் வழித் தோன்றல்களாயும், மொழி பெயர்ப்புகளாயும், விளங்கும் வட மொழி நூல்களும், பிற மொழி நூல்களும், வேதாந்த நூல்களே யா மென்பது எல்லாருக்கு மொப்ப முடிந்த தொன் றாகும்.

தமிழ் மொழி நூல்களிலே தலை சிறந்தன வாய் அத்வைத நெறியை விளக்குவனவும், அந் நெறிக் குறு துணை யாகிய துறவு பக்தி முதலியவற்றை விளக்குவனவும், துறவு முதலியவற்றை விளக் குதலோடு அத்வைத நெறியை விளக்குவனவு மாக, எங் கோயி லூர் மரபினராற் பயிலப்படு நூல்கள் பல வுள்ளன. அவற்றுள்ளும், மிகச் சிறந்தனவாகக் கொள்ளப்படுவன, நாநா சீவ வாதக் கட்டளை, கீதா சாரத் தாலாட்டு, சசி வன்ன போதம், மஹா ராஜத் துறவு, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், வேதாந்த சூடாமணி, (கெம்பீர) பஞ்ச தசி (வினு விடை வடிவா யுள்ளது), இலக்ஷண விருத்தி, அஞ்ஞ வதைப் பரணி, விவேக சூடாமணி, கைவல்ய நவநீதம், பகவத் கீதை, பிரம கீதை, ஈசுர கீதை, வாசிஷ்டம் (ஆறுயிரஞ் சுலோக மொழி பெயர்ப்புச் செய்யுள் நூல்) என்பன வாம்.

இப் பதி ஞறு நூல்களுள், நாநா சீவ வாதக் கட்டளை, இலக்ஷணவிருத்தி, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் என்பன ஆச்சார்யர் கொள்கையொடு சிறிது மாறுபட்டன வாயினும் அத் வைதத்தை நிலை நாட்டுவனவாயும், அத்வைத நெறியை யடை வதற் குறு துணை காட்டுவனவாயு மிருத்தலின், எடுத்துக்கொள்ளப் பட்டன. சசி வன்ன போதம், அஞ்ஞ வதைப் பரணி யென்பன அவஸ்தைகள் பன் னிரண் டெனக் கொள்ளும் வகையில் மாறு பட்டன வன்றி வேறு மாறுபா டவற்றிற் கின்மையி னவையுங் கொள்ளப்பட்டன.

மேற் கூறப்பட்ட பதி ஞறு நூல்களுள், மஹா ராஜத் துறவு என்பது வைராக்கிய சதக முதலிய நூல்களை யியற்றிய பிரம நிஷ்ட ராகிய பேரூர்ச் சாந்த லிங்க சுவாமிகளின் சிறந்த சீட ராகிய குமார தேவ முநிபுங்கவரால், விருத்தாசலத்தி லெழுந்தருளி யிருக்கின்ற பெரிய நாயகி யம்மையாரின் பெருந் திரு வருட் டுணை கொண்டு பாடப்பட்ட பதி ஞறு நூல்களுள் ஒன்ருகும். இந் நூல் ஓர் பே ரரதன் தன் மனைவி யுடன் தனியே இருந்து “இவ் வுலக வின்ப மெல்லாம் நிலையாதன வாகக் காணப்படுகின்றன. நிலைத்த வின்ப மெது, அதை யடைவ தெப்படி, தத்துவ ஞாநத்தை யடைந் தால் மாயையாற் ருேன்றும் பிறப் பிறப்பு நீங்கி நித்திய சுகத்தைப் பெறலாம்” என் றிப்படிப் பல வகையா யாராய்ந்து தெளிந்து, ஞாநி களை யடுத்துப் பூசனை புரிந்து, பல கேள்விகளைக் கேட்டு வருங் காலத்தில், அரசனுக்கு அறிவு ஓங்கியது. ஓங்கவே, தத்துவ ஞாநம் பெற்று, பந்த மற்று நித்திய சுக மாகிய மோக்ஷ மடைதற்குக் குரு பரன் திரு வருள், இன்றியமையாத தொன்றேயாகு மெனத் துணிந்து, வினை யறு கானகத்தை யடைந்து, நற் குருவைக் கண்டு வணங்கித் தேவர்கள் தேவே துன்பஞ் சிறிது மின்றிய மோக்ஷத்தை யடைந்து பிறப் பிறப்பு நீங்கி யின்ப வடிவமா யிருத்தற் குரிய நெறியை அடியேற் கருள வேண்டு மென, அவ ரருளக் கேட்டுச்

சிறிது நா ளரசு புரிந்து, பின் விராக முற்றவனாய், அரண் மனையின் அந்தப் புரத்தில் அரச கோல மகன்றவ னாயிருக்க, "இவ் வாறு நீ இருத்தல் அரசு இலக்கண மன் றெண" அமைச்சர் முதலாயினோர் கூற, அதற் கரசன் "யான் அரசியல்பினை வேண்டிலன் என்னை யறியவே விரும்பினேன்" என்று பல வாறாக எடுத் துரைத்து, "நீவிர் நில்லும்" எனச் சொல்லிப், பெருந் துறவு எய்தித், தன்னை யணுகிய நகரத்தார், தந்தை, தாய், மனைவி முதலியவர்கள் எவரை யும் விரும்பா தகற்றி, எதிலார் போல் விடுத்து, நாடு விட்டுக், கா டடைந்து அங்கு இரவு பக லக நிலையே நிலையாக இருக்கும் பெரியோர்களை யடைந்து, அவர்களாலுந் தன் குருபா னுரைத்த பொருளே அரிய பொரு ளெனத் தெளிந்து, ஒருவருங் கலக்க முடியாத ஆழ்ந்த ஞான முடையவனாய் மீண்டு நகரங்களை யடைந்து, பலரு மிகழ்ந் துரையாடும்படி வீடுக தோறும் சென்று கையினால் பிக்ஷாந்நத்தை யேற்று அவ் விடத்தே யருந்தி எங்கு எங்குச் செல்லினும் அங் கங் கெல்லாம் எக மாகிய ஆன்ம நாட்ட முடைய வனாய், யானை, தேர், குதிரை முதலிய வூர்திக ளின்றிக் கா னடை யுடைய னாய் நகரங்களிலும், காடுகளிலும், சுற்றித் திருதரு காலையில், ஒரு மதி யூகி யான அமைச்சன் தேடி வந்து கண்டு சில வினாக்களை வினவ, அவனுக்கு விடை கூறி அரசன் சமாதியி லிருந்தான். அதைக் கண்ட அமைச்சன் வியப் புற்றுத் தந் நக ரடைந்து அரச னியல் பனைத்தையும் நகரத்தாருக்குச் சொல்ல, கேட்ட நகரத்தார் அனைவரும் அரச னிருக்கு மிட மடைந்து வணங்க, அரசன் தன் ஆன்ம நாட்ட நீங்காமல் புன் னகை புரிந்து வார்த்தை யாடாம லிருந்தான். அங்ஙன மிருக்க, வந்த அனைவரும் "பந்த முடைய நமக்கு அவர் பேசினால் என்ன தெரியு மென்று" சொல்லிக் கொண்டு தங்கள் தங்க ளிடங்கட்குப் போய்ச் சேர்ந்தார்கள். பின் னரசன் சிறிது நாள் சமாதியி லமர்ந்தவ னாய் விதேக முத்தியை யடைந்தான் எனக் கூறு முகத்தான், நல்ல துற வியலையும், அத்து

வித நிலையையும், நிலை நாட்டுவ தாகும். இந் நன் னூல் காவிய மென்னுங் கனியினை நுகர்வாருக் கோர் காவிய மாகவும், துறவு நோக் குடையாருக் கருமந்த துறவு நூ லாகவும், அத்வைத நோக் குடை யாருக்கு அத்வைத நூ லாகவு மிளிர்கின்றது.

இவ் வருமந்த மகா ராஜத் துற வென்னும் நூற்கு பிறைசை அருணசல சுவாமிகள் (திருத் துருத்தி யிந்திர பீட வழியினர்) முதலி யோர் உரை யெழுதி யுள்ளார்கள். அவ் வுரைகளைக் கொண்டு இந் நூற் பொருளை நன் குணர லாகாமையின், இவ் வுரைக ளிருக்கவும் இடர்ப்பா டின்றி நூற் பொருள் நன்கு விளங்கிக் கிடக்கும்படி கோவி லூர் மரபிற் றோன்றியவரும், வட மொழி, தென் மொழிகளில் வல்லுநரும், பூருவ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை, நியாயம் முதலிய சாத்திரக் கூறும், பிற மத கண்டந அத்வைத ஸ்தாபந பராக்கிரம சாலியும், வட மொழியில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் போன்று, தென் மொழியில், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு மொழி பெயர்ப்பாசிரியரும், உரையாசிரியரும், நூ லாசிரியரு மாக விளங்குபவரு மாகிய, ஸ்ரீ வீர காசிகாநந்த ஞாநாச்சாரிய சுவாமி யவர்களால் ஓ ரினிய நல் லுரை செய்யப்பட்டிருக்கின்றது.

இவ் வுரை இசை யெச்சஞ் சொல் லெச்சமாய் நிற்கும் எல்லா விடங்களிலும் வேண்டுஞ் சொற் பெய்து, ஒரு மொழி தொடர் மொழிக ளாகிய பதங்கட்குப் பொருள் நன் கமைய விளங்கிக் கிடக்கும்படி யெழுதியும், பத வுரைகளாலும், விளங்கா தனவற்றை விசேட வுரை முகத்தான் விளக்கியும், இலக்கணக் குறிப்புக் காட்டி யும், இனி இதற்கு வே றெவரும் ஓ ருரை செய்யக் கருதாம லிது வே போது மென்னும் வகையில் நிகழ்கின்றது.

இது கோயி லூர் மரபிற் றோன்றிய சான்றோர்கள் வழி வழி யாகக் கூறி வரும் பொருளொடு பெரிது முரணாது மிளிர்வது போற்றத் தகுந்த தொன்றாகும்.

இங்ஙனம்,

கோயி லூர் மரபினன்,

சித. நாராயண சாமி,

அறு பத்து மூவர் மடம், திரு வை யாறு.

# பதி னாறு நூற்கட்கு பன் னிருவர் கர்த்த ராவர்.

1. நாநா ஜீவ வாதக் கட்டளை, சேஷாத்திரி சிவன்.
2. கீதா சாரத் தாலாட்டு, திரு வேங்கட நாதர்.
3. சசி வர்ந போதம், அஞ்ஞ வதைப் பரணி, ஈசுவர கீதை, பிரஹ்ம கீதை, (நான்கும்) தத்து வராய சுவாமிகள்.
4. மகா ராஜத் துறவு, குமார தேவர்.
5. வைராக்ய சதகம், வைராக்ய தீபம், சாந்த லிங்க சுவாமிகள்.
6. வேதாந்த சூடாமணி, சிவப் பிரகாச சுவாமிகள்.
7. விவேக சூடாமணி, உலக நாத சுவாமிகள்.
8. இலக்ஷணவிருத்தி, சிதம்பர சுவாமிகள்.
9. பஞ்ச தசி, நித்தியாநந்த சுவாமிகள்.
10. பகவற் கீதை, சேம நகர் பட்டர்.
11. வாசிட்டம், ஆளவந்தான்.
12. கைவல்ய நவநீதம், தாண்டவ ராய சுவாமிகள்.

எட்டு நூல் தமிழ். எட்டு நூல் மொழி பெயர்ப்பு.

## எட்டு நூல், சக்தி விசிஷ்டாத்வைதம்.

1. நாநா ஜீவ வாதக் கட்டளை. 2. சசி வர்ந போதம். 3. மகா ராஜத் துறவு. 4. பக்தி சதகம். 5. வைராக்ய தீபம். 6. அஞ்ஞ வதைப் பரணி. 7. இலக்ஷண விருத்தி. 8. ஈசுவர கீதை. இவ் வெட்டு மாம்.

## எட்டு நூல், சுத்தாத்வைதம். கேவலாத்வைதம்.

1. கீதா சாரத் தாலாட்டு. 2. வேதாந்த சூடாமணி. 3. விவேக சூடாமணி. 4. பஞ்ச தசி. 5. பகவற் கீதை. 6. கைவல்ய நவநீதம். 7. வாசிட்டம். (கீடா பிரமர வாதம்.) 8. பிரஹ்ம கீதை. இவ் வெட்டும் கேவலாத்வைத மாம்.

## உதாரண நூல் 18. கவி 62.

1. அருட்பா 1. 2. அஞ்ஞ வதைப் பரணி 8. 3. வைராக்ய சதகம் 1. 4. நாரத பரி விராஜக உபநிஷத் 2. 5. வைராக்ய தீபம் 12. 6. விவேக சூடாமணி 15. 7. வாசிட்டம் 6. 8. கைவல்ய நவநீதம் 4. 9. மெய்ஞ் ஞாந விளக்கம் 2. 10. குறுந் திரட்டு 2. 11. ஞாந சம்பந்தர் 1. 12. மஹா உப நிஷத் 2. 13. அத்வைத ரச மஞ்சரி 1. 14. பிருஹத் வார்த்திகம் 1. 15. பஞ்ச தசி 1. 16. தத்வ ரத்நாகரம் 1. 17. அத்வைத உண்மை 1. 18. பட்டினத்தார் 1. ஆகக் கவி 62.

சிவமயம்.

# மஹா ராஜத் துறவு மூலமும், உரையும்.

## சிறப்புப் பாயிரம்.

### கணபதி முதலிய ஐவர் வணக்கம் கூறுகின்றார்.

திங்களொண் கவிகைத் திகிரியந் திணிதோட் டிகழ்கடற் றானைமா ராஜ, னங்கண்மா நிலத்திற் றுறந்துவீ டடைந்தவரியவிக் காதையைத் தமிழா, லிங்குமா தவத்தோரிசையுமென் றிசைப்ப விசைத்தனன் வீடுறக் கேட்டோர், கொங்கவிழ் பொழில்சூழ் பழமலை யுறையுங் குமாரதேவென் னுமா முனியே. (1)

(இதன் பொருள்) திங்கள் - சந்திரன் (போன்று), ஒண்மை - பிரகாசம் (பொருந்திய), கவிகை - குடையினையும், திகிரி - (ஆஞ்ஞா) சக்கரத்தினையும், அம் - அழகிய, திணி - பராக்கிரமம் பொருந்திய, தோள் - புஜத்தினையும், கடல் - சமுத்திரம் (போல்), திகழ் - (விரிந்து) விளங்காநின்ற, தானை - (ரத, கஜ, துரக, பதாதி என்னும் சதுரங்க) சேனைகளையும் (உடைய), மா - பெரிய, ராஜன் - அரசன், அம் - அழகிய, கண் - இடம் அகன்ற, மா - பெருமை வாய்ந்த, நிலத்தில் - பூமியின்கண், துறந்து - (தார, புத்திர, தந ஏஷணைகளையும்) விட்டு நீங்கி, வீடு - மோக்ஷத்தினை, அடைந்த - பெற்ற, அரிய - அருமையான, இக் காதையை - இந்த இதிகாசத்தினை, தமிழால் - தென் மொழியினால், இசையும் - கூறியருளும், என்று - என, இசைப்ப - (குமாரதேவ முனியை நோக்கி) விண்ணப்பிக்க, இங்கு - இவ் வுலகத்துள்ள, மா - பெரிய, தவத்

தோர் - தவத்தினை யுடையோர், கொங்கு - வாசனை, அவிழ் - விரிகின்ற, பொழில் - சோலைகள், சூழ் - சுற்றி யுள்ள, பழமலை - விருத்தாசலத்தில், உறையும் - வஸிக்கின்ற, குமாரதே - குமார தேவன், என்னும் - என(க் கூறும்), மா - பெரிய, முநி - மநந சீலன், கேட்டோர் - சிரவணஞ் செய்தோர், வீடு - மோக்ஷத்தினை, உற - அடையும் பொருட்டு, இசைத்தனன் - கூறியருளினன் (என்ற வாறு).

முதல் வரியில் எண் ணும்மைகள் நான்கும் தொக்கன. திணி தோள் திகழ் கடல் - வினைத் தொகைகள், தவத்தோர் கேட்டோர் - வினையா லணையும் பெயர்கள், திங்க ளொண் கவிகை, கடற் றனை - உவமைத் தொகைகள், முநி - எழுவாய், இசைத் தனன் - பய னிலை, காதை - செயப்படு பொருள். (1)

பஞ்சாக்ஷர மந்திரம், விபூதி, ருத்திராக்ஷம், ஆசாரியர், அடியவர், ஜீவர்கள் என்னும் அறு வகை வாழ்த்துக் கூறுகின்றார்.

சிவன்றிரு வுருவா மைந்து சின்மய வெழுத்தும் வாழி
நவந்தரு நீறும் வாழி நயநநன் மணியும் வாழி
கவின்றருங் குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி
யவன்றிரு வடியார் தம்மோ டாருயி ரனைத்தும் வாழி. (2)

(இ-ள்) சிவன் - பரமேசுவரனது, உரு வாம் - வடிவாகிய, திரு - மேன்மை பொருந்திய, சின்மய - சித்து ரூப, ஐந்து - பஞ்ச, எழுத்தும் - அக்ஷரமும், வாழி - வாழ்க, நவம் - புதுமை யினை, தரு - தருகின்ற, நீறும் - விபூதியும், வாழி - வாழ்க, நல் - நன்மை பயக்கும், நயந மணியும் - உருத்திராக்ஷ மணியும், வாழி - வாழ்க, கவின் - அழகினை, தரும் - தருகின்ற, குமார

தேவன் - குமாரதேவ ஸ்வாமிகளின், இணை - துணையாகிய, கழல் - திருவடிகள், இரண்டும் - இரண்டும், வாழி - வாழ்க, அவன் - குமார தேவ ஸ்வாமிகளின், திரு - மேன்மை பொருந்திய, அடியார் தம்மோடு - அடியவரோடு, ஆர் - பொருந்திய, உயிர் - ஜீவர்கள், அனைத்தும் - யாவரும், வாழி - வாழ்க (எ-று).

உம்மை ஐந்தனுள் நீறும், மணியும் என்பவற் றுள்ள இரண்டும்மைகளும் இறந்தது தழீஇயன. ஏனையவை முற் றும்மைகள். நயந நன் மணி - ஏழ னுருபும் பயனும் உடன் றொக்க தொகை. அடியார் தம்மோடு - தம் - சாரியை, நீறு மணி இரண்டும் அனைத்தும் - எழுவாய்கள், வாழி - நான்கும் பய னிலைகள்.

### ராம லிங்க சுவாமிகள் திரு அருட்பா. கவி.

பாடற் கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்,
கூடற் கினிய வடியவர் தங் கூட்ட மளிக்குங் குணமளிக்கும்,
ஆடற் கினிய நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்,
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே.
என்று, பஞ்சாக்ஷரமும், திருநீறும், ஷட் (ஆறு) குணங்களையும் கொடுக்கும் என்று கூறியிருத்தலை இங் குணரல் வேண்டும். (2)

---

## பாயிரம்.

### பஞ்ச மூர்த்தி வணக்கம்.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி லாழத்துப் பிள்ளையைச் சிகரிக் குமரசற் குருவை யிமகிரி ராஜ குமாரியாம் பெரியநா யகியை, முமமுழு மொருங்கே யகற்றிடு முக்கண் முதல்வனைச் சாந்தநா யகனை, நமதெணப் படியே முடிந் திடத் திநமு நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவோம். (1)

(இ—ள்) அமரர்கள் - தேவர்கள், பரவும் - (எந் நாளும்) துதிக்கின்ற, திரு - அழகிய, முது குன்றில் - விருத்தாசலத்தில் (எழுந்தருளியிருக்கின்ற), ஆழத்துப் பிள்ளையை - பாதாள விநாயகரையும், சிகரி - கோபுரத்தின்கண் (எழுந்தருளி யிருக்கின்ற), குமர - சுப்பிரமணியராகிய, சத் குருவை - சதாசாரியரையும், இமகிரி ராஜ குமாரி ஆம் - இமோத்பர்வத ராஜன் புத்திரி யாகிய, பெரிய நாயகியை - விருத்தாம்பிகையையும், மூ மலமும் - (ஆணவ, கார்மீக, மாயீயம் என்னும் ஆவரண மல விக்ஷேபமாகிய) திரி தோஷத்தினையும், ஒருங்கு - (அன்பர்கட்கு) அத்தியந்தம், அகற்றிடும் - நாசஞ் செய்கின்ற, முக் கண் - (சிருஷ்டி, திதி, சம்ஹாரத்தின் பொருட்டுச் சோம சூரிய அக்கி என்னும்) திரி நேத்திரத்தினையுடைய, முதல்வனை - (விருத்த கிரி) ஈசுவரனையும், சாந்த நாயகனை - (திருப் பேரையூரில் எழுந்தருளி யிருக்கின்ற) சாந்த லிங்க ஆசாரியனையும், நமது - நம் முடைய, எணப்படி - கருத்தின்படி, முடிந்திட - (இந் நூல் விக்நம் இன்றி இனிது) சமாப்தியாதற்கு, தினமும் - நா டோறும், நாடி - தியானித்து, இறைஞ்சி நின்று - நமஸ்கரித்து நின்று, வாழ்த்திடுவாம் - (யாம்) ஸ்துதிப்பாம். (எ-று)

மூமலமும் தினமும் - உம் - முற் றும்மைகள், ஒருங்கே படியே - ஏ - அசை நிலைகள், வாழ்த்திடுவாம் - இடு பகுதிப் பொருள் விகுதி, இரண்ட னுருபுகளி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. யாம் - தோன்றா எழுவாய், வாழ்த்திடுவாம் - பயனிலை, மேற் கூறப்பட்ட பஞ்ச மூர்த்திகளும் செயப்படு பொருள். (1)

## பாதாள விநாயகர் வணக்கம்.

தொய்யின் முலைக்கோ டிரண்டுகவான் றுதிக்கை
மூன்று விழிதுரிசிற், றுய்ய சைவ முதன்மதமுந் துலங்க

வருமொண் பிடியுலகம், உய்ய வுதவு மொருகளிற்றை யுலவா விருத்த சைலத்தில், வையம் பரவு மாழத்து வாழைங் கரனை மகநினைவாம். (2)

(இ-ள்) தொய்யில் - சாந்தினு லிடப் பெற்ற கோலத்தினை யுடைய, முலை - தனங்க ளாகிற, இரண்டு - இரண்டு, கோடு - கொம்பினையும், கவான் - தொடை (யாகிற), துதிக்கை - நான்ற கையினையும், மூன்று விழி - திரி நேத்திரத்தினையும் (உடைய), ஒண்(மை) - பிரகாசம் (பொருந்திய), பிடி - (அம்பாளாகிற) பெண் யானை, வரு - (சுருதிக்கு முரணுக) வருகின்ற, துரிசு இல் - குற்றங்கள் அற்ற, துய்ய-பரிசுத்தமான, சைவ முதல் மதமும்-சைவம் முதலிய (ஷண்) மதங்களும், துலங்க - விளங்கவும், உலகம் - ஜீவர்கள், உய்ய - மோக்ஷத்தினை அடையவும், உதவும் - ஈன்றருளிய, ஒரு - ஒப் பற்ற, களிற்றை - யானைக் குட்டியும், வையம் - உயர்ந்தோர், பரவும் - தோத்தரிக்கின்ற, உலவா - கெடாத, விருத்த சைலத்தில் - பழ மலையில், ஆழத்து - பாதாளத்தில், வாழ் - வசிக்கின்ற, ஐங்கரனை - ஐந்து திருக் கரங்களை யுடையவரும் ஆகிய விநாயகப் பெருமானை, மகம் - மகதில், நினைவாம் - (யாம்) தியானிப்பாம் (எ-று).

அம்பாளைப் பெண் யானையாகவும், விநாயகரை யானைக் குட்டியாகவும், உருவகப்படுத்தலின், உருவக அலங்கார மாம்.

தொய்யின் முலை - இரண்ட னுருபும் பயனு முடன் றொக்க தொகை. முலைக் கோடு, கவான் துதிக்கை - பண்புத் தொகைகள். மதமும் - உம் - முற் றும்மை. "வரும்" என்பதைத் துரிசுக்கு அடையாக்கிக் கொள்க. உலகம், வையம் - ஆகு பெயர்கள். உதவு மொரு - உதவும் - கால வழு வமைதி. கோடு, துதிக்கை, விழி; துலங்க, துய்ய - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் றொக்

கன. மூலக் கோடு ஆகிய நான்கும் பண்புத் தொகை. மூலே, கவான், அம்பிகை, விநாயகர் என்னும் இவை முறையே, கோடு, துதிக்கை, பெட்டை யானை, களிறு என்பன வாக உருவகிக்கப் பட்டமை காண்க. யாம் - தோன்ரு எழுவாய். நினைவாம் - பய னிலே. ஐங் கரன் - செயப்படு பொருள். (2)

## விருத்தாம்பிகை வணக்கம்.

இருட்கலி வலியின் ஞாநநன் னெறிக ளிறந்துயிர் கொடுநெறி மேவி, மருட்கொடு கலங்கா வகைகலி யென் றும் வந்தணு காப்பதி தன்னிற், றெருட்சத்தி கருணை யுருவதாய் நின்று தெளிவிக்கு மிறைவியெங் குருவோர், அருட்கடல் பெரிய நாயகி யுலகுக் கனைமுதல் வியைப் பணிந் திடுவாம். (3)

(இ—ள்) இருள் - அந்தகார ரூபமான, கலி - கலி (புருஷ னது), வலியின் - சாமர்த்தியத்தினுல், நல் - உத்தமமான, ஞாந - ஞாந, நெறிகள் - மார்க்கங்கள் (யாவும்), இறந்து - நசித்தலால், உயிர்-ஜீவர்கள், மருள் கொடு-மயக்கத்தினை யடைந்து,கொடு(மை)- தீய, நெறி - மார்க்கங்களை, மேவி - பொருந்தி, கலங்கா வகை - தியங்கா திருக்கு மாறு, கலி - கலி (புருஷன்), என்றும் - எப் பொழுதும், வந்து அணுகா - வந்து பொருந்தாத, பதிதன்னில் - (ஸ்தல மாகிய) விருத்தாசலத்தில், தெருள் - ஞாந, சத்தி - சத்தி யும், கருணை - கிருபையே, உருவது ஆய் - ஸ்வரூபமாக, நின்று - இருந்து, தெளிவிக்கும் - (அவர்களைத்) தேற்றுவிக்கும், இறைவி - பரமேசுவரியும், எம் - எமக்கு, ஓர் - ஒப்பற்ற, குரு - ஆசாரியரும், அருள் - கிருபா, கடல் - சமுத்திரமும், உலகுக்கு - ஜகத்திற்கு, அனை - மாதாவும், முதல்வி - சர்வாதிபதியுமாகிய, பெரிய நாயகி ஐ - விருத்தாம்பிகையை, பணிந்திடுவாம் - (யாம்) நமஸ்கரிப்பாம் (எ-று).

இறக்க என்னும் வினையெச்சம் இறந்தெனத் திரிந்தது. அந்தர்பாவித நிச் செனினுமாம். மருட் கொடு - கொடு - கொண்டு என்பதன் இடைக் குறை. கலங்கா, அணுகா, என்பவை தகர வீறு குறைந்த பெயரெச்சம். உருவ தாய் - அது - பகுதிப் பொருள் விகுதி. அருட் கடல் - பண்புத் தொகை. பணிந்திடுவாம் - இடு - பகுதிப் பொருள் விகுதி. யாம் - தோன்றா எழுவாய். பணிந் திடுவாம் - பயனிலை. முதல்வி - செயப்படு பொருள், பதி தன் னில் - தன் - சாரியை. (3)

## சிற் சபேச வணக்கம்.

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை யுமையுளங் களிப்பப், பொங்கரா வொடுநற் புலிமுனி வர்கண்மால் போதய னமரர்கள் போற்றத், துங்கநான் மறைக டுதித்திட வைந்து தொழில்விரிந் திடப்பொது வதனிற், செங்கழ லதிர நடஞ்செயும் பொருளைத் திநம் பணிந் திடரொழித் திடுவாம். (4)

(இ—ள்) திங்கள் - (மூன்றாம்) பிறை, ஆர் - பொருந்தியிருக் கின்ற, சடையில் - சடாபாரத்தில் (உள்ள), கங்கை நீர் - கங்கா ஜலம், துளிப்ப - சிதறி விழவும், திருந்து - சிறந்த, இழை - ஆபர ணங்களை யுடைய, உமை - அம்பிகையின், உளம் - மநம், களிப்ப - சந்தோஷத்தினை யடையவும், பொங்கு - உற்சாக முடைய, அர வொடு - பதஞ்சலியோடு, நல் - உயர்வாய, புலி - வியாக்கிர பாதரும், முனிவர்கள் - (ஏனை) முனிவர்களும், மால் - மஹா விஷ்ணுவும், போது - (தாமரைப்) புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற, அயன் - பிரஹ்ம தேவனும், அமரர்கள் - தேவர்களும், போற்ற - துதிக்க வும், துங்கம் - பரிசுத்தமான, நால் - (இருக்கு, யஜுஸ், சாம, அதர்வணம் என்னும்) நான்கு, மறைகள் - வேதங்கள், துதித்திட -

துதிக்கவும், ஐந்து - (சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும்) பஞ்ச, தொழில் - கிருத்தியம், விரிந்திட - விகசிதமாகவும், பொதுவதனில் - (கநக) சபையில், செம் - சிறந்த, கழல் - (திரு அடிகளில் அணிந்திருக்கின்ற) வீர கண்டை, அதிர - சப்திக்கவும், நடம் - (ஆநந்தத்) தாண்டவம், செயும் - புரியும், பொருளை - நடராஜப் பெருமானை, தினம் - நாடோறும், பணிந்து - நமஸ்கரித்து, இடர் - (சம்சார மாகிய) அநர்த்தத்தினை, ஒழித்திடு வாம் - (யாம்) நிவிர்த்திப்பாம் (எ—று).

துளிப்ப என்பதாதி வினை யெச்சங்களி னீற்றில் எண் ணும் மைகள் தொக்கன. அரா, புலி என்பன ஆகு பெயர்கள். அரா வொடு - ஒடு - என்னும் எண் ணிடைச் சொல் பின் னுள்ள பெயர்க ளோடுஞ் சென் றியைதலின் முத னிலைத் தீவகம். துதித்திட, விரிந்திட, ஒழித்திடுவாம் - இடு - மூன்றும் பகுதிப் பொருள் விகுதி கள். பொதுவதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. யாம் - தோன்றா எழுவாய். ஒழித்திடுவாம் - பய னிலை. இடர் - செயப் படு பொருள். (4)

### சிவ காம சௌந்தரி வணக்கம்.

அருளுருவா யுயிர்கடமக் கன்னை யாகி யஞ்ஞாநந் தனையகற்றி யமல மாகி, மருளிலதாய் மெய்ஞ்ஞாந மாகு முத்தி வாய்த்திடவே காத்தருளி வானோ ரேத்த, இருள் கெடவே மிளிருமிருங் கழல்க ளார்ப்ப விறைபுரியுந் திருநடத்தாற் களித்து வாழுந், தெருண்மருவு மறைநான் கும்பரவுந் தில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தைசெய்வாம்.

(இ-ள்) அருள் - கிருபை, உருவு ஆய் - வடிவாயும், உயிர்கள் தமக்கு - ஜீவர்களுக்கு, அன்னை ஆகி - மாதாவாயும், அஞ்ஞாநந்தனை - அஞ்ஞாநத்தினை, அகற்றி - நீக்கி, அமலம் -

ஆகி - நின்மலமாயும், மருள் இலது ஆய் - மயக்கம் இல்லாததாயும், மெய் ஞானம் - உண்மை ஞானத்தினால், ஆகும் - சித்திப்பதாயுமுள்ள, முத்தி - மோக்ஷம், வாய்த்திட - கிடைக்கும்படி, காத்து அருளி - அநுக்ரகஞ் செய்து (அவர்களை) ரக்ஷிப்பவளாயும், வானோர் - தேவர்கள், ஏத்த - துதிக்கவும், இருள் - அந்தகாரம், கெட - நாசமாகும்படி, மிளிரும் - பிரகாசிக்கின்ற, இரும் - பெருமை பொருந்திய, கழல்கள் - பாதங்களில் அணிந்திருக்கும் வீர கண்டை, ஆர்ப்ப - (கலீர் கலீர் என்று) சப்திக்கவும், இறை - சபா நாதன், புரியும் - செய்கின்ற, திரு - அழகிய, நடத்தால் - நடநத்தால், களித்து - சந்தோஷித்து, தில்லை - சிதம்பரத்தில், வாழும் - வசிக்கின்றவளாயும், தெருள் - ஞானம், மருவும் - பொருந்தியிருக்கின்ற, மறை - வேதம், நான்கும் - நாலும், பரவும் - துதிக்கும்படியானவளாயும் உள்ள, சிவ காம சுந்தரியை - (ஈசன் விரும்பும் அழகினையுடையவள் என்னும்) சிவ காம சௌந்தரியை, சிந்தை செய்வாம் - (யாம்) தியானிப்பாம் (எ-று).

உயிர்கடமக்கு - தம் - சாரியை, அஞ்ஞானந் தனை - தன் - சாரியை, வாய்த்திடவே - இடு பகுதிப் பொருள் விகுதி, ஏ - அசை நிலை, கெடவே - ஏ அசை நிலை, ஆய், ஆகி முதலியவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. அகற்றி - என்னும் செய் தென் னெச்சம் காத்தருளி என்னும் வினை யெச்சங் கொண்டது. (அமலம்) ஆகி, (மருளிலது) ஆய் என்னும் வினை யெச்சங்கள் ஆகும் என்னும் பெய ரெச்சங் கொண்டன. மெஞ் ஞானம் ஆகும் என்புழி மூன்றனுருபு தொக்கது. ஏத்த, ஆர்ப்ப - என்னும் வினை யெச்சங்கள் புரியும் என்னும் பெய ரெச்சங் கொண்டன. நான்கும் - உம் முற்றும்மை. உரு வாய் - அன்னை யாகி - காத் தருளி-களித்து - தில்லை வாழும் சிவ காம சுந்தரி எனவும் கூட்டுக. யாம் - தோன்றா எழுவாய். சிந்தை செய்வாம் - பய னிலை. சிவ காம சுந்தரி - செயப்படு பொருள். (5)

## விநாயகர் வணக்கம்.

செக்கர் போன்ஒளிர் முக்கட்சி லம்பினை
மிக்க பேரருள் வேலையை யோர்கொம்பாற்
றக்க வன்பர்க்கு தவுந்த ருவினை
இக்க தைநிறை வேறவி றைஞ்சுவாம். (6)

(இ—ள்) செக்கர் - செவ் வாநம், போன்று - நிகர்த்து, ஒளிர் - பிரகாசிக்கின்ற, முக் கண் - மூன்று நேத்திரங்களை யுடைய, சிலம்பினை - பர்வத ரூபமாயும், மிக்க - சிறந்த, பேர் - பெரிய, அருள் - ஜீவ காருண்ய, வேலையை - சமுத்திர ரூபமாயும், ஓர் - ஒற்றை, கொம்பால் - தந்தத்தினல், தக்க - (மஹா பாரதத் தினை எழுதித்) தகுந்த, அன்பர்க்கு - பக்தர்களுக்கு, உதவும் - கொடுத்த, தருவினை - கல்பக விருக்ஷ ரூபமாயும் (உள்ள விநாய கனை), இக் கதை - இவ் விதிகாசம், நிறைவேற - (விக்நம் இன் றிப்) பூர்த்தி யாதற் பொருட்டு, இறைஞ்சுவாம் - (யாம்) நமஸ்கரிப் பாம் (எ-று).

முக் கட் சிலம்பு - இரண்ட னுருபும் பயனும் உடன் றொக்க தொகை. அருள் வேலை - பண்புத் தொகை. சிலம்பு, வேலை, தரு என்னும் பெயர்கள் ஒவ் வொன்றோடும் இயைந்து நின்ற இரண்ட னுருபை இறுதிப் பெயரோடு சேர்த்து, அப் பெயர்களின் இறுதி தோறும் எண் ணும்மைகள் தொக்கன எனக் கொள்க. விநாயகரின் அசல, காருண்ணிய, தாதுருத்துவங்களை, முறையே பருவதம், சமுத்திரம், கற்பக விருக்ஷம் என்பன வாக உருவகித் தனர். கொம் பென்பது சிலேடையாக மரக் கொம்பினையும், தந்தத்தினையு முணர்த்துகின்றது. யாம் - எழுவாய். இறைஞ்சு வாம் - பய னிலை. (மேற் கூறிய விசேஷணங்க ளுடைய) விநா யகர் செயப்படு பொருள். (6)

## சுப்பிரமணியர் வணக்கம்.

கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர்வாய்த் தெய்வப், பிடிதநக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய, படிபுகழ் புயமாங் குன்றிற் பாயவண் கழுநீர் நீப, மடலவிழ் செழுந்தார்ச் செவ்வேண் மலரடி வணக்கஞ் செய்வாம். (7)

(இ—ள்) வள்ளிப் பெண் - வள்ளி யம்மை யாகிய, கொடி - லதை, படரும் - படர்ந்திருக்கின்றதும், படி - பூமியில் உள்ள உயர்ந்தோர், புகழ் - துதிக்கின்றதும், செய்ய - சிறந்ததும் ஆன, புயம் ஆம் - தோ ளாகிய, குன்றில் - மலையில், கடி - வாசனை, கமழ் - பரிமளிக்கின்ற, கரிய - கருமையான, கூந்தல் - அளக பாரத்தினையும், கனி - இனிய, மொழி - வசநத்தினையும், துவர் - பவளம் (போல் சிவந்த அதரம் பொருந்திய), வாய் - வாயையும் (உடைய), தெய்வப் பிடி - தெய்வ யானை, தநம் - (தன்) முலையாகிய, கோட்டால் - கொம்பினால், பாய - குத்த, வண் - (அதனால்) வளமை யுடைய, கழு நீர் - செங் கழு நீர்ப் புஷ்பமும், நீபம் - கடப்பம் புஷ்பமும், மடல் - இதழ்கள், அவிழ் - விரிகின்ற, செழும் - செழிப்பான, தார் - மாலைகளை உடைய, செவ் வேள் - சுப்பிரமணியக் கடவுளின், மலர் - (தாமரை) மலர் (போன்ற), அடி - பாதங்களை, வணக்கம் செய்வாம் - (யாம்) தொழுவாம் (எ-று).

கூந்தல், மொழி, வாய் இவைகளி னிறுதியில் இரண்டனுரு பும், எண் ணும்மைகளும், தொக்கன. படரும், புகழ், செய்ய என்னும் பெய ரெச்சங்களி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. இப் பெய ரெச்சங்கள், புயம் என்னும் பெயர் கொண்டன. செங் கழு நீர் நீபம் - உம்மைத் தொகை. தார்ச் செவ் வேள் - இரண்டனுருபும், பயனும், உடன் தொக்க தொகை. வேண் மலர் - ஆறும்

வேற்றுமைத் தொகை. மல ரடி - உவமைத் தொகை. அடி வணக்கம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. படி - ஆகு பெயர். பெண் - கொடியாகவும், புயம் - குன்றாகவும், தெய்வ யானை - பிடியாகவும், தரம் - கோடாகவும் உருவகிக்கப்பட்டன. தெய்வப் பிடி என்ப தாதிய இந் நான்கும் பண்புத் தொகைகள். யாம் - தோன்றா எழுவாய். வணக்கஞ் செய்வாம் - பய னிலை. அடி - செயப்படு பொருள். (7)

## பெரியார் வணக்கம்.

வண்டுழா யலங்கன் மாயவன் மலர்மேல் வதிந்த நான் முகன்மறை யறியாத், தொண்டைவாய்க் கெண்டை விழிக்கழை மொழியொண் டுடியிடை யுமையையோ ரிடத்திற், கொண்டகோ னருளைப் பொருளெனக் கருதிக் குலவிய சாதகந் தரித்து, மண்டிய வடியார் யாவர்மற் றவர் தாண் மகத்தினுஞ் சிரத்தினும் வைப்பாம். (8)

(இ—ள்) வண்(மை) - (தேன் மணம் அழகு முதலிய) வளப்பம் (பொருந்திய), துழாய் - துளவ, அலங்கல் - மாலையினை (உடைய), மாயவன் - மஹா விஷ்ணுவும், மலர் - (தாமரைப்) புஷ்பத்தின், மேல் - மீது, வதிந்த - வீற்றிருக்கின்ற, நான் முகன் - பிரஹ்ம தேவனும், மறை - வேதங்களும், அறியா - உணர வொண்ணாத, தொண்டை - கொவ்வை (க் கனி போன்ற சிவப்பு வாய்ந்த அதரத்தினை யுடைய), வாய் - வாயினையும், கெண்டை - சேல் (போன்ற), விழி - நேத்திரத்தினையும், கழை - கரும்பு (ரசம் போன்ற), மொழி - வார்த்தையினையும், ஒண்(மை) - விளங்கா நின்ற, துடி - உடுக்கு (ப் போன்ற), இடை - இடையினையும் (உடைய), உமையை - அம்பிகையை, ஓர் - ஒப் பற்ற, இடத்தில் - வாம (பாக)த்தில், கொண்ட - வைத்திருக்கின்ற, கோன் - பரமேசு

வானது, அருளை - கிருபையினையே, பொருள் - புருஷார்த்தம், என - என்று, கருதி - உன்னி, குலவிய - விளங்காநின்ற, சாதநம் - (விபூதி ருத்திராக்ஷம் முதலிய) சாதநங்களை, தரித்து - அணிந்து, மண்டிய - நெருங்கிய, அடியார் - பெரியார், யாவர் - எவரோ, அவர் - அவர்களின், தாள் - பாதங்களை, மநத்தினும் - இருதயத்திலும், சிரத்தினும் - சிரசிலும், வைப்பாம் - (யாம்) தரிப்பாம் (எ-று).

மறை அறியாக் கோன் - கொண்டகோன் என முடிக்க. மாயவன், நான் முகன், மறை - இவற்றின் ஈற்றில் எண்ணும்மைகள் தொக்கன. வாய், விழி, மொழி, இடை, இவற்றின் ஈற்றில் இரண்ட னுருபும், எண் ணும்மைகளும், தொக்கன. தொண்டை - வாய், கெண்டை விழி, கழை மொழி, துடி யிடை - என்பன உவமைத் தொகைகள். அறியா - என்னும், பெய ரெச்சம் கோன் என்னும் பெயர் கொண்டது. மற்று - அசை நிலை. மனத்தினும், சிரத்தினும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. யாம் - தோன்றா எழுவாய். வைப்பாம்-பய னிலை. தாள் - செயப் படு பொருள். (8)

### அவை யடக்கம்.

சகரர்தம் வலியையுந் தடந்தி ரைக்கடல்
அகலமும் பின்புளோ ரகழி லஞ்சிதான்
புகழுற விளக்கலே போல விச்செய்யுள்
தகைதரு கலைஞர்தா றனைவி ளக்குமால். (9)

(இ—ள்) சகரர் - சகரர்களுடைய, வலியையும் - சாமர்த்தியத்தினையும், தடம் - விரிந்த, திரை - அலைகளையுடைய, கடல் - சமுத்திரத்தினது, அகலமும் - விஸ்தாரத்தினையும், பின்பு - பிற்காலத்து, உளோர் - உள்ளவர், அகழ் - தோண்டிய, இலஞ்சி -

ளரியானது, புகழ் - கீர்த்தி, உற - பொருந்தும்படி, விளக்கல் - பிரகாசிக்கச் செய்தல், போல - ஒப்ப, இச் செயுள் - இந்தச் செய்யுள் ரூபமான மஹா ராஜத் துறவு என்னும் நூல், தகை - பெருமையினை, தரு - கொடுக்கின்ற, கலைஞர் - வித்துவான்களின், நூல்தனை - சாஸ்திரத்தினை, விளக்கும் - பிரகாசிக்கச் செய்யும் (எ-று).

சகரர் தம் - தம் - சாரியை. வலிமையையும், அகலமும், உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. அகலமும் என்பதில் இரண்டனுருபு தொக்கு நின்றது. உளோர் - குறிப்பு வினையாலணையும் பெயர். அகழிலஞ்சி, தரு கலைஞர் - இரண்டும் வினைத் தொகைகள். செயுள் - செய்யுள் என்பதன் இடைக் குறை. கலைஞர் - குறிப்பு வினையாலணையும் பெயர். நூல் தனை - தன் சாரியை. விளக்குமால் - ஆல் - அசை நிலை. இதில் உவமையணி உளது. செயுள் - எழுவாய். விளக்கும் - பயனிலை. நூல் - செயப்படு பொருள். (9)

பாயிரம் முற்றிற்று.

## நூல்.

### சூத புராணிகரை நைமிசாரண்ய வாசிகள் வினவல்.

தருக்கிளர் நைமி சாரணி யத்திற் றங்கிய முனிவர்கள் சூதன், வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா வகுத் துரைத் தனைமகா ராஜன், றிருக்கதை யெங்கட் குரைத் திலை யதுநீ செப்பெனச் சுருதியிற் சொல்லுஞ், சுருக்க மில் காதை யிதுவெனத் தொகுத்துத் தோமறக் கேண்மி னென் றுரைக்கும். (1)

(இ-ள்) தரு - விருக்ஷங்கள், கிளர் - விளங்காநின்ற, நைமி சாரணியத்தில் - நைமிசாரணிய மென்னும் புநித வநத்தில், தங்கிய- இருந்த, முனிவர்கள் - (வைசம்பாயந ராதி) மநந சீலர்கள், சூதன் - சூத (புராணிக)ர், வர - (அங்கு) வர, பணிந்து - (அவரை எட்டு அங்கங்களாலும்) நமஸ்கரித்து, ஏத்தி - (வாயாரத்) துதித்து, நீ - நீவிர், எங்கட்கு - எமக்கு, கதைகள் - இதிகாசங்கள், பல்பல ஆக- நாநா விதமாக, வகுத்து - பிரித்து, உரைத்தனை - கூறியருளினீர், மகா ராஜன் - மகா ராஜனது, திரு - மேன்மை பொருந்திய, கதை - இதிகாசத்தை, உரைத்திலை - கூறினீரில்லை, அது - அவ் விதிகாசத்தினை, செப்பு - கூறியருள்க, என - என்று (கேட்க), சுருதியில் - வேதத்தில், சொல்லும் - பிரதிபாதிக்கின்ற, சுருக்கம் இல் - விரிந்த, காதை-இதி காசம், இது - (யான்) மேற் கூறுவதாம், என - என்றும், தோம் அற - குற்றம் இன்றி, கேண் மின் - கேட்பீர்களாக, என்று - என்றும் சொல்லி, தொகுத்து - (அதனை) சுருக்கி, உரைக்கும் - (சூத முனி) கூறுகின்றனர் (எ-று).

பலவா - ஆ - ஆக என்பதன் விகாரம். செப் பென - என - என்ன என்பதன் விகாரம். என என்னும் செய வென் னெச்சம்,

உரைக்கும் என்னும் பிற கர்த்தா வினை கொண்டது. இது வென - என - என்னும் வினை யெச்சம் உரைக்கும் என்னும் தன் கர்த்தா வினை கொண்டது. சூத முநி - தோன்றா எழுவாய். உரைக்கும் - பய னிலை. காதை - செயப்படு பொருள். (1)

சூத புராணிகர், கருணாட தேசச் சிறப் புரைத்தல்.

குழைத்ததண் சினைத்தே மாவினொண் கனித்தேன் குலவிய பலவினற் பலத்தேன், றழைத்திடு கதலிப் பழ முகுத் திடுதேன் ருன்றிரண் டிலஞ்சியிற் றதும்பி, விழுத் தரு வயலிற் பாய்தர விளையு மிருகரு ணாடதே சந்தான், இழைத்தநற் றவத்தா லுயிரெலாம் புரந்தங் கிருந்தர சாளுமோர் குரிசில். (2)

(இ-ள்) தண் (மை) - குளிர்ச்சி (பொருந்திய), குழைத்த - தளிர்களோடு கூடிய, சினை - கொம்புகளையுடைய, தேமாவின் - தித்திப்பு மா மரத்தின், கனி - பழங்களின், தேன் - ரசமும், ஒண் (மை) - பிரகாசத்தோடு, குலவிய - விளங்கிய, நல் - நல்ல, பலவின் - பலா மரத்தின், பல - பழங்களினது, தேன் - ரசமும், தழைத்திடு - விருத்தியாகின்ற, கதலி பழம் - வாழைப் பழங்கள், உகுத்திடு - கொட்டுகின்ற, தேன் - ரசமும், திரண்டு - (ஒன்று) சேர்ந்து, இலஞ்சியில் - ஏரியில், ததும்பி - நிறைந்து, விழு - உயர்வுடைய (பெரிய), தரு - தருந்த, வயலில் - கழநிகளில், பாய் தர - பாய, விளையும் - (அதனால் சாலி முதலியன) உற்பத்தி யாகின்ற, மிகு - (செழிப்பு) மிகுந்த, கருணாட தேசம் - கர்நாட தேசத்தார், இழைத்த - செய்த, நல் - நல்ல, தவத்தால் - தவத்தி னால், எல்லாம் - எல்லா, உயிர் - ஜீவர்களையும், புரந்து - ரக்ஷித்து, அங்கு - ஆண்டு, இருந்து - (சிஹ்மாசநத்) திருந்து, ஓர் - ஒரு, குரிசில் - அரசன், அரசு - அரசு, ஆளும் - ஆக்ஷி செய்தனன் (எ-று).

மாவின் பலவின் - இன் - இரண்டும் சாரியைகள். தேன் - என்னும் பதங்களின் ஈற்றில் எண் ணும்மைகள் தொக்கன. தழைத்திடு உகுத்திடு - இடு - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். தேன் றூன் தேசந் தான் - தான் - இரண்டும் அசை நிலைகள். பாய் தர - தர - துணை வினை. கருஉுட தேசம் - இட (ஸ்தாந) வாகு பெயர். ஆளும் - கால வழு வமைதி. இது இறந்த காலத்தில் நிகழ் காலம். "யான் பண்டு விளையாடுகின்ற திக்கா" - என்பது போல்வது. குரிசில் - எழுவாய். ஆளும் - பய னிலை. அரசு - செயப்படு பொருள். (2)

## மஹா ராஜன் இயல்பு உரைத்தல்.

மஞ்சம ரிஞ்சிசூழ் மாபு ரத்திருந்
தெஞ்சலி லெண்டிசை யிறைவர் தாடொழத்
தஞ்சமென் றடைந்தவர் தம்மைக் காத்திகல்
வஞ்சகர்க் காய்மஹா ராஜ மன்னனே. (3)

(இ-ள்) மஞ்சு - (அவன் எத் தகையன் எனின்?) மேகங்கள், அமர் - படிகின்ற, இஞ்சி - (கோட்டை) மதில், சூழ் - நெருங்கிய, மா புரத்து - மா புரி (என்னும் பட்டணத்தில்), இருந்து - (சிம்மாசநத்து) இருந்து, எஞ்சல் இல் - பாக்கி யின்றி, எண் திசை - அஷ்ட திக்குகளிலும், இறைவர் - (உள்ள) சிற் றரசர்கள், தாள் - (தன்) பாதங்களை, தொழ - (நிலத்தில் வீழ்ந்து) வணங்க, தஞ்சம் - அடைக்கலம், என்று - என, அடைந்தவர் தம்மை - (வந்து) அடைந்தவரை, காத்து - ரக்ஷித்து, இகல் - பகைத்த, வஞ்சகர் - வஞ்சகரை, காய் - கொல்லுகின்ற, மஹா ராஜ - மஹா ராஜன் (என்னும் நாம முடைய), மன்னன் - அரசன் (ஆவான்), (எ-று).

அம ரிஞ்சி - சூழ் மா புரம் - இரண்டும் வினைத் தொகைகள். புரத்து - அத்து - சாரியை. இல் எண் டிசை - இல் - இல்லாத

என்னும் குறிப்பு வினைப் பெய ரெச்சத்தின் விகாரம். அடைந்தவர் தம்மை - தம் - சாரியை. இகல் வஞ்சகர்க் காய் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. மன்னனே - ஏ - ஈற் றசை. அவன் - தோன்ற எழுவாய். அரசன் - பய னிலை. (3)

தருநிழ லரசு வைகுஞ் சதமகன் றிருவின் மிக்கான்
உருவினின் மதனின் மிக்கா னுலத்தினிற் பலத்த தோளான்
செருவினி லரியே யன்னான் றேனொடு ஞிமிறும் பாட
முருகுடைந்தொழுகுந் தாரான் மூவுல களிக்கும்வேலான். 4

(இ—ள்) தரு - (கற்பக) விருக்ஷத்தின், நிழல் - சாயையில், அரசு - (தேவர்க்கு) இராசா வாக, வைகும் - இருக்கும், சத மகன் - இந்திரனது, திருவின் - செல்வத்தினும், மிக்கான் - அதிகச் செல்வ முடையோனும், உருவினில் - அழகில், மதனின் - மன்மதனினும், மிக்கான் - மேம்பட்டவனும், உலத்தினில் - (உருண்டை) கல்லினும், பலத்த - பல முடைய, தோளான் - புஜமுடையோனும், செருவினில் - யுத்தத்தில் (பகைவரை வெல்வதில்), ஏறு அரி - ஆண் சிஹ்மம், அன்னான் - போன்றவனும், தேன் - பெண் வண்டுகளும், ஞிமிறும் - ஆண் வண்டுகளும், பாட - கானஞ் செய்ய (அதனால் பூ மொட்டு), உடைந்து - விரிந்து, முருகு - தேன், ஒழுகும் - வடிகின்ற, தாரான் - மாலையை அணிந்திருப்போனும், மூ - மூன்று, உலகு - லோகங்களையும், அளிக்கும் - ரக்ஷிக்கின்ற, வேலான் - வேலை யுடையோனும் (ஆவன்), (எ-று). உலம் = உருண்டைக் கல்.

நிழ லரசு - ஏழாம் வேற்றுமைத் தொகை. திருவின் - உலத்தினில் - இன் - இல் - இரண்டும் எல்லைப் பொருளில் வந்த ஐந்தனுருபுகள். உருவினில் - இல் - ஏதுப் பொருளில் வந்த ஐந்தனுருபு. செருவினில் - இல் - ஏழ னுருபு. உருவினில் - உலத்தினில் - செருவினில் இன் - மூன்றும் சாரியைகள். அவன்

- தோன்று எழுவாய். மிக்கான் - மிக்கான் - தோளான் - அன்னுன் - தாரான் - வேலான் - பய னிலைகள். அரி யே றன்னுன் - உவமை யணி. (4)

அரசர்வந் திடுதிறை யளக்கு முன்றிலான்
முரசுக ளநுதிந முழங்கு மன்றலான்
கரைபொரு திரையெறி கடலந் தானையான்
அருவரை மார்பினுன் யாளி மொய்ம்பினுன். (5)

(இ-ள்) அரசர் - சிற்றரசர், வந்து - (முறையே) வந்து, இடு - கொடுக்கின்ற, திறை - கப்பங்களை, அளக்கும் - அளக்கின்ற, முன்றிலான் - முற்றத்தினை யுடையவனும், முரசுகள் - வாத்தியங்கள், அநுதினம் - நாடோறும், முழங்கும் - சப்திக்கின்ற, மன்றலான் - (ராஜ) வீதியினை யுடையவனும், கரை - தீரத்தில், பொரு - மோதும்படியான, திரை - அலைகளை, எறி - வீசுகின்ற, கடல் - சமுத்திரம் (போன்று விரிந்த), அம் - அழகிய, தானையான் - (சதுரங்க) சேனைகளை யுடையவனும், அரு - அரிய, வரை - பர்வதம் (போலும்), மார்பினுன் - (உயர்ந்து விரிந்த) மார்பினை யுடையவனும், யாளி - சிங்கம் (போலும்), மொய்ம்பினுன் - பல முடையனும் (ஆவன்), (எ-று).

இடு திறை - பொரு திரை - எறி கடல் - இவை வினைத் தொகைகள். திறை யளக்கும் - திரை யெறி - இவை இரண்டாம் வேற்றுமைத் தொகைகள். கடலந் தானை - வரை மார்பு - யாளி மொய்ம்பு - இவை உவமைத் தொகைகள். மார்பினுன் - மொய்ம்பினுன். இன் - இரண்டும் சாரியைகள். அவன் - தோன்று எழுவாய். முன்றிலான் - மன்றலான் - தானையான் - மார்பினுன் - மொய்ம்பினுன் - இவை பய னிலைகள். (5)

அரசர்தம் முடியுழு தவிருந் தாளினன்
எரிதவழ் திகிரியை யேந்துந் தோளினன்
மருவலர் வலியினை மாற்றும் வாளினன்
றருநிதிக் கொடையினன் றருக்கு நாளினே. (6)

(இ—ள்) அரசர் தம் - (வந்து வணங்கும்) சிற் றரசர்களுடைய, முடி - கிரீடங்கள், உழுது - கீறுதலினால், அவிரும் - ரேகைகள் சிவந்து விளங்கும், தாளினன் - பாதத்தினை யுடையவனும், எரி - பிரகாசம், தவழ் - பொருந்திய, திகிரியை - சக்கரத்தினை, ஏந்தும் - தாங்குகின்ற, தோளினன் - புஜத்தினை யுடையவனும், மருவலர் - (அப் பகைவர்), தருக்கும் - (பகைவர்) கெர்வ மடையும், நாளின் - காலத்தில், வலியினை - (அவர்களின்) சாமர்த்தியத்தினை, மாற்றும் - கெடுக்கும், வாளினன் - கட்கத்தினை யுடையவனும், தரு - கற்பகதருவும், நிதி - சங்க நிதி பதும நிதிகளும் (போன்ற), கொடையினன் - தாதுருத்வ முடையவனும் (அவன்), (எ-று).

அரசர் தம் - தம் சாரியை. உழுது - உழ என்னும் செயவென் னெச்சம் காரணப் பொருளில் செய்து எனத் திரிந்து நின்றது. தவழ் திகிரி - வினைத் தொகை. தரு நிதி - உம்மைத் தொகை. நிதிக் கொடை - வினை யுவமைத் தொகை. தாளினன் - தோளினன் - வலியினை - வாளினன் - கொடையினன் - நாளினே - இன் ஆறும் சாரியைகள். நாளினே - ஏ - ஈற்றசை. மருவலர் தருக்கு நாளின் என அந்வயிக்க. அவன் - தோன்றா எழுவாய். தாளினன் - தோளினன் - வாளினன் - பய னிலைகள். (6)

இது முதல் 3 செய்யுளாலும், கோலு மண்டபத்தின் அரசாக்ஷி முதலியவற்றைக் கூறுதலோடு, புத்திரப் பேறின்மையா லுண்டாம் வியாகூலத்தினைக் கூறல்.

கவரியோ டால வட்டங் காரிகை யார்கள் வீசப்
பவளவா யரம்பை யன்னார் பாகடை யுதவ முத்தத்
தவளவா ணகையார் கீதந் தனிநடஞ் செய்ய நின்று
குவலய மன்னர் போற்றக் குரைகடற் றானை சூழ. (7)

(இ—ள்) கவரியோடு - சாமரத்தோடு, ஆல வட்டம் - (சிற்) றால வட்டத்தினை, காரிகையார்கள் - (சிறு) பெண்கள், வீச - விசிற, பவள - பவளம் (போன்ற), வாய் - அதரத்தினை யுடைய, அரம்பை - ரம்பா ஸ்திரிகட்கு, அன்னார் - சமான மானவர்கள், பாகு - பாக்கு, அடை - வெற்றிலை, உதவ - கொடுக்க, முத்தம் - முத்து(ப்போன்ற), தவள - வெண்மை யான, வாள் - பிரகாசம் பொருந்திய, நகையார் - பற்களை யுடைய பெண்கள், கீதம் - சங்கீதத்தினையும், தனி - ஒப் பற்ற, நடம் - நடனத்தினையும், செய்ய - இயற்ற, குவலய - பூலோகத்தி லுள்ள, மன்னர் - சிற் றரசர்கள், நின்று - (முன்) நின்று, போற்ற (வா யாரத்) துதிக்க, குரை - சப்திக்கின்ற, கடல் - சமுத்திரம் (போன்று விரிந்த), தானை - (சது ரங்க) சேனைகள், சூழ - நெருங்க, (எ-று).

காரிகையார்கள் - ஆர்கள் - விகுதி மேல் விகுதி. அன்னார் - நகையார் - குறிப்பு வினையா லணையும் பெயர்கள். பவள வாய் - முத்தத் தவளம் - கடற் றானை - உவமைத் தொகைகள். பா கடை - உம்மைத் தொகை. கீதம் - தனி நடம் - இவற்றின் ஈற்றில் - இரண்ட னுருபோடு - எண் ணும்மைகள் தொக்கன. இப் பாட்டுக் குளகம். (7)

இந்திர ஞால யம்போ விலங்கிய மண்ட பத்திற்
சுந்தர மிருக ராசன் சுமந்தபூ வணையின் மீது
வந்திருந் தவனி தன்னை மநுநெறி முறையிற் காத்தே
அந்தமில் போகந் துய்த்தங் கிருந்திடு மரசர் கோமான். (8)

(இ—ள்) இந்திரன் - தேவேந்திரனது, ஆலயம் - (சுதன்மம் என்னும் வசந்த) ஆலயம், போல் - போல, இலங்கிய - விளங்கிய, மண்டபத்தில் - (இராச) சபையில், சுந்தரம் - அழகு பொருந்திய, மிருக ராசன் - சிம்மம், சுமந்த - தாங்கிய, பூ - (மிருதுவான) மலர்களா லாக்கப் பெற்ற, அணையின் - ஆசநத்தின், மீது - மேல், வந்திருந்து - வீற்றிருந்து, அவனி தன்னை - பூமியை, மநு - மநு (பகவானது), நெறி - (தர்ம சாஸ்திரத்தில் கூறி யிருக்கின்ற) நீதியின், முறையில் - கிரமப்படி, காத்து - ரக்ஷித்து, அந்தம் இல் - முடி வில்லாத, போகம் - போகங்களை, துய்த்து - அநுபவித்து, இருந்திடும் - இருக்கும்படியான, அரசர் கோமான் - ராச சிரேஷ்டன் (ஆவன்), (எ-று).

அணையின் மீது - இன் - சாரியை. அவனி தன்னை - தன் - சாரியை. காத்தே - ஏ அசை நிலை. அங்கு - அசை நிலை. இருந்திடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. இப் பாட்டுக் குளகம். (8)

தூம்புடைப் பிறையெ யிற்றுத் துத்தியீ ராயி ரந்தோட்
பாம்பினுற் பரிக்க லுற்ற பாரினைப் பரிக்கப் பின்னர்
மேம்படு புதல்வர் நந்தம் வீறுடை வயிற்றில் லென்று
தேம்படு தெரியன் மார்பன் சிந்தையா குலங்க ளுற்றான்.(9)

(இ-ள்) தூம்பு - (மேற் கூறிவந்த இயல்புகளோடு கூடியதும்) துவாரத்தினை, உடை - உடைய, பிறை - (இளஞ்) சந்திரன் (போன்று வளைந்திருக்கின்ற), எயிற்று - பல்லினை யுடையதும், துத்தி - படப் பொறியும், ஈர் ஆயிரம் - இரண் டாயிரம், தோள் - புஜமும் (உடையது) மாகிய, பாம்பினுல் - (ஆதி சேஷன் என்னும்) சர்ப்பத்தால், பரிக்கல் - தாங்குதலை, உற்ற - பெற்ற, பாரினை - பூமியினை, பின்னர் - (நமக்குப்) பின், பரிக்க - (மநு நீதி முறைப்படி) ரக்ஷிக்க, நம் - நம் முடைய, வீறு - பலம், உண்ட

பொருந்திய, வயிற்று - உதரத்தின்கண், மேம்படு - உயர்வு பொருந்திய, புதல்வர் - புத்திரர்கள், இல் - (உண்டாக) இல்லையே, என்று - என (க் கருதி), தேம்படு - தேன் தோய்ந்த, தெரியல் - மாலையை (யணிந்திருக்கின்ற), மார்பன் - மார்பினை யுடையவனு மாகிய அவ் அரசன், சிந்தை - மநதில், ஆகுலங்கள் - கவலைகளை, உற்றான் - அடைந்தனன், (எ-று).

தூம் புடை - வீ றுடை - உடை - உடைய என்னும் பெயரெச்சத்தின் விகாரம். பாம்பினால் - பாரினை - இன் - இரண்டும் சாரியைகள். பரிக்கல் - அல் விகுதி பெற்ற தொழிற் பெயர். வயிற் றில் லென்று - இல் - இல்லை என்பதன் விகாரம். நம் தம்- தம் - சாரியை. தெரியல் மார்பன் - எழுவாய். உற்றான் - பயனிலை. ஆகுலங்கள் - செயப்படு பொருள். (9)

## புத்திரப் பேற்றினை விரும்பித் தர்மாநுஷ்டாநஞ் செய்தல்.

கங்கையே முதலா மிக்க கடவுண்மா நதியிற் றோய்ந்தும்
பங்கயா சநன்மா றிங்கட் பவளவார் சடையான் றன்னை
அங்கையாற் பூசை செய்து மதிதிகட் களித்துந் தீயிற்
பொங்குமா குதிக ளீந்தும் பூவலம் வந்துந் தேவர். (10)

(இ—ள்) மிக்க - சிரேஷ்ட மான, கடவுள் - தெய்வத் தன்மை பொருந்திய, கங்கை - பாகீரதி, முதலாம் - முதலிய, மா - பெரிய, நதியில் - நதிகளில், தோய்ந்தும் - ஸ்நாநஞ் செய்தும், பங்கயம் - பத்மத்தை, ஆசநன் - ஆசநமாகக் கொண்ட பிரஹ்ம தேவனையும், மால் - மஹா விஷ்ணுவையும், திங்கள் - (மூன்றாம்) பிறையை யுடையதும், பவள - பவளம் (போற் சிவந்ததும்), வார்- நீண்டது மான, சடையான் தன்னை - சடையினை யுடைய பரமேசுவரனையும், அம் - அழகிய, கையால் - அஸ்தத்தினால், பூசை

செய்தும் - பூசித்தும், அதிதிகட்கு - ஏழைகளுக்கு, அளித்தும் - (அந்நம்) கொடுத்தும், தீயில் - அக்நியில், பொங்கும் - மிகுந்த, ஆகுதிகள் - ஆகுதிகளை, ஈந்தும் - கொடுத்தும், பூ - பூமியினை, வலம் - பிரதக்ஷிணம், வந்தும் - செய்தும், தேவர் - தேவர்களின், (எ-று).

கங்கையே - ஏ - அசை நிலை. உம் - ஐந்தும் எண்ணுப் பொருளன. பங்கயாசநன் - மால் - சடையான் - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. சடையான்றன்னை - தன் - சாரியை. இப் பாட்டுக் குளகம். (10)

ஆலயஞ் சாலை யக்கி ராரநந் தநவ நங்கள்
கோலமா ரிலஞ்சி கூபங் குளம்பல செய்து மீரெட்
டேலுமா தாநத் தோடே யிரணிய முதலீ ரைந்து
சாலநற் றாந மீந்துந் தருமமெண் ணான்கு செய்தும். (11)

(இ-ள்) ஆலயம் - ஆலயங்களும், சாலை - நடை பாதைகளும், அக்கிர ஆரம் - பிராஹ்மணக் கிரஹங்களும், நந்தந வநங்கள் - புஷ்பத் தோட்டங்களும், கோலம் - அழகு, ஆர் - பொருந்திய, இலஞ்சி - ஏரியும், கூபம் - கிணறும், குளம் - தடாகமும், பல - (பிற) அநேக தருமங்களையும், செய்தும் - இயற்றியும், ஏலும் - (தகுதி) வாய்ந்த, மா - பெரிய, ஈர் எட்டு - ஷோடச, தாநத் தோடு - தாநத்தினோடு, சால - உயர்ந்த, நல் - நல்ல, இரணியம் - ஸ்வர்ணம், முதல் - முதலாக, ஈர் ஐந்து - தச, தாநம் - தாநம், ஈந்தும் - (தகுதி வாய்ந்தவர்களிடம்) கொடுத்தும், எண் நான்கு - முப் பத் திரண்டு, தருமம் - தருமங்களை, செய்தும் - (நன்கு) நடாத்தியும், (எ-று).

சப்த மஹா நதி ஸ்நாநம், திரி மூர்த்தி பூசை, அதிதி பிக்ஷை, ஆகுதி, பூ பிரதக்ஷிணம், தேவாலயம், வீதி, அக்கிர ஹாரம், நந்தந

வநம், கூபம், தடாகம் செய்தல், தச தாநம், ஷோடச தாநம், துவா திரிம்சத் தாநம், (முப் பத் திரண் டறஞ் செய்தல்) முதலி யன சாஸ்திரங்களிற் கூறப் பெறுவன.

கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, எனும் ஏழும் மஹா நதிக ளாம்.

லவணம் (உப்பு), திலம் (எள்), ஆஜ்யம் (நெய்), தாந்யம் (நெல்), கோ (பசு), பூ (பூமி), இரணியம் (பொன்), வஸ்திரம் (வேட்டி), குளம் (வெல்லம்), ரௌப்யம் (வெள்ளி), என்பன பத்துத் தாந மாம்.

சோடச தாநம் ஆவன:—

1. சையா (படுக்கை) தாநம், 2. சத்திர தாநம், 3. கஜ (யானை) தாநம், 4. அசுவ (குதிரை) தாநம், 5. கந்யா (பெண்) தாநம், 6. உபநயந (பூணூல்) தாநம், 7. கால புருஷ (யம புருஷ) தாநம், 8. சயந (படுக்கு மிடம்) தாநம், 9. கிருக (வீடு) தாநம், 10. புஸ்தக தாநம், 11. பாத்திர தாநம், 12. சாளக் கிராம தாநம், 13. பாதுகா (பாத குறடு) தாநம், 14. அந்ந தாநம். 15. வித்யா தாநம், 16. கிருஷ்ண அஜிந (கரு மான் றோல்) தாநம் என்பன வாம்.

வேறு வகை சோடச (பதி னாறு) தாநம்:— 1. கோ (பசு) தாநம், 2. கஜ (யானை) தாநம், 3. ஹய (குதிரை) தாநம், 4. சாகை தாநம், 5. மஹிஷி (எருமை) தாநம், 6. ரத (தேர்) தாநம், 7. கிருக (வீடு) தாநம், 8. சையா (படுக்கை) தாநம், 9. பூ (பூமி) தாநம், 10. வித்யா தாநம், 11. கந்யா (பெண்) தாநம், 12. தாசி (வேலைக்காரி) தாநம், 13. சுவர்ண (பொன்) தாநம், 14. ரத்ந தாநம், 15. தில (எள்) தாநம், 16. அக்கிர ஹார (முதல் வீடு) தாநம் என்பன வாம்.

சோடச (பதினாறு) மஹா தானம்:— 1. துலா புருஷ (தராசுப் புருஷ) தானம், 2. ஹிரண்ய கர்ப்ப தானம், 3. பிரஹ்ம தண்ட தானம், 4. ஸ்வர்ண (பொன்) தானம், 5. பஞ்ச லாங்கல (ஐந்து கலப்பை) தானம், 6. ஸ்வர்ண தேநு (பொற் பசு) தானம், 7. பூ கோள தானம், 8. கநக பர்வத (பொன் மலை) தானம், 9. காம தேநு தானம், 10. கர்ப்பக விருக்ஷ தானம், 11. ரஜத பர்வத (வெள்ளி மலை) தானம், 12. சகஸ்ர தேநு (ஆயிரம் பசு) தானம், 13. சாலங்கிருத ஹேம விருஷப (அலங்காரத்தோடு கூடிய பொற் காளை மாடு) தானம், 14. சாலங்கிருதி லக்ஷ்மி பிரதிமா (அலங்காரத்தோடு கூடிய லக்ஷ்மி உருவ) தானம், 15. சாலங்கிருதி சப்த அசல (அலங்காரத்தோடு கூடிய ஏழு மலை) தானம், 16. சப்த சமுத்திர (எழு கடல்) தானம் என்பன வாம்.

முப்பத் திரண் டறங்கள்:— 1. ஆதுலர்க்கு (தரித்திரர்க்கு) சாலை, 2. ஓதுவார்க்கு உணவு, 3. அறு சமயத்தார்க்கு உண்டி, 4. பசுவுக்கு வா யுறை, 5. சிறைச் சோறு, 6. ஐயம், 7. தின் பண்டம் நல்கல். 8. அறவைச் சோறு. 9. மகப் பெறு வித்தல், 10. மகவு வளர்த்தல், 11. மகப் பால் வார்த்தல், 12. அறவைப் பிணஞ் சுடுதல், 13. அறவைத் தூரியம் (வாத்தியம்) 14. சுண்ணம் (சுண்ணாம்பு), 15. நோய் மருந்து, 16. வண்ணார், 17. நாவிதர், 18. கண்ணாடி, 19. காது ஓலை, 20. கண் மருந்து, 21. தலைக்கு எண் ணெய், 22. பெண் போகம், 23. பிறர் துயர் காத்தல், 24. தண் ணீர்ப் பந்தல், 25. மடம், 26. தடம், 27. சோலை, 28. ஆ வுறிஞ்சு தறி, 29. விலங்கிற்கு உணவு, 30. ஏறு விடுத்தல், 31. விலை கொடுத்து உயிர் காத்தல், 32. கன்னிகா (பெண்) தானம் என்பன வாம்.

திரி மூர்த்தி பூஜை — பிரஹ்மா, விஷ்ணு ருத்திரரைக் காயிக வாசிக மாநசிக மாகப் பூசித்தல், மும் மூர்த்தி பூஜை யாம்.

திதி — நாள், அதிதி - நாளின்றி, நிர் நிமித்தமாகப் போசந வேளையில் வருபவர் அனைவரும் அதிதிகளே ஆவர். அவர்கட்கு பிட்சை செய்வித்தல் அதிதி பிட்சை யாம்.

ஆகுதி — புத்திரகாமேஷ்டி முதலியன அக்நியில் நெய் விடு தல் முதலியன செய்தல்.

பூ பிரதக்ஷிணம் — பூமியை வலம் வருதல்.

தேவாலயம் — விஷ்ணு, சிவன், கணேசர், சுப்பிரமணியர், தேவி சாஸ்தா முதலிய தேவர்கட்கு கோவில் எடுப்பித்தல்.

சாலை — நடை பாதை இயற்றுவித்தல்.

அக்ர ஹாரம் — முதல் வரிசையில் (பிராமணர்களுக்கு) வீடு கட்டிக் கொடுத்தல்.

நந்தந வநம் — (மநதை) களிப்பிக்கும்படியான புஷ்பத் தோட்டம் வைத்தல்.

கூபம் — கிணறு - அவை, நடவாக் கேணி - நடை கேணி என இரு வகை யாகும். அவை இயற்றல்.

தடாகம் — ஊருணி செய்வித்தல்.,

ஆலயம் - முதலிய பெயர்களி னிறுதியில் எண் ணும்மைகள் எழும் தொக்கன. செய்தும் - ஈந்தும் - செய்தும் - உம் - மூன் றும் எண்ணுப் பொருளன. தானத் தோடே - ஏ - அசை நிலை. இப் பாட்டுக் குளகம். (11)

புத்திரப் பே றடைந்ததனையும், புத்திரனுக்கு நாம முதலி யன செய்வித்ததனையும், கூறல்.

தவம்பல புரிந்து வேந்தன் றனையனைப் பூத்த பின்னர்ப் [ன்
பவந்தனைத் துடைத்தேன் மேலாம் பரமநற் பதமு முண்டெ
றுவந்துசா தககன் மத்தோ டொழிவறு கரும மெல்லாம்
நவந்தரச் செய்து நாம நன்மகா ராச னென்றே. (12)

(இ—ள்) பல - (இன்னும்) அநேக, தவம் - தவங்களை, புரிந்து - செய்தும், வேந்தன் - (அம்) மஹா ராஜன், தனயனை - புத்திரனை, பூத்த - பெற்ற, பின்னர் - பின்பு, பவந்தனை - சமு சாரத்தினை, துடைத்தேன் - கெடுத்தேன், மேல் ஆம் - உயர் வாகிய, நல் - நல்ல, பரம பதமும் - மோக்ஷமும், உண்டு - (பரம் பரையாகக்) கிடைக்கும், என்று - எனக் கருதி, உவந்து - சந்தோ ஷத்தினை அடைந்து, சாதக கன்மத்தோடு - பிறந்த காலத்திற் செய்யுங் கன்மத்தினோடு கூட அவ் வக் காலத்துச் செய்யவேண் டிய, ஒழிவு அறு - குறை வற்ற, எல்லாம் கருமம் - எல்லாக் கரு மங்களையும், நவம் - ஆச்சரியத்தினை, தர - தரு மாறு, செய்து - இயற்றி, மகா ராசன் - மகா ராஜன், என்று - என, நல் - நல்ல, நாமம் - பெயரும், (எ-று).

புத்திரனுக்கும், பிதாவிற்கும், மஹா ராஜன் என்று ஒரே நாம மாம். இந் நூல் புத்திரனாகிய மஹா ராஜனது சந்நியாசத் தினைக் கூறுவது.

புரிந்து - என்பத னீற்றில் எண் ணும்மை தொக்கது. பவந் தனை - தன் - சாரியை. பதமும் - உம் - இறந்தது தழீஇயது; பவந் துடைத்த லாதியவற்றைத் தழுவலின். என்று - என்னும் வினை யெச்சம் பிற் செய்யுளி லுள்ள கூறி என்னும் வினை யெச் சங் கொண்டது. என்றே - ஏ - ஈற் றசை. இப் பாட்டுக் குளகம். (12)

பிதா, புத்திரனுக்கு வித்தை கற்பித்தலையும், குரு தக்ஷி ணையினையும் கூறல்.

வேத நீதியிற் கூறிவி யன்றரு
ஓத வெண்ணெண்க லையுமு ணர்த்துவித்
தேத மற்றகு ரவற்கி ரணியம்
போது மென்னப்பொ ழிந்தனன் கொண்டல்போல். (13)

(இ—ள்) வேத நீதியின் - வேத விதிப்படி, கூறி - (யாவரும் அறியும்படி) வழங்கி, எண் எண் கலையும் - அறு பத்து நாலு கலைகளையும், வியன் - பெருமை, தர - தரு மாறு (விரிவாக), ஓத - அப்பியாசிக்கும்படியாக, உணர்த்துவித்து - படிப்பித்து, ஏதம் - (நன்கு உபதேசித்தமையால்) குற்றம், அற்ற - இன்றிய, குரவற்கு - ஆசாரியனுக்கு, இரணியம் - ஸ்வர்ணத்தினை, போதும் - போதும், என்ன - என்று கூறு மாறு, கொண்டல் - மேகம், போல் - போல, பொழிந்தனன் - வருஷித்தனன், (எ-று).

கலை அறுபத்து நான்கு ஆவன:— 1. அக்ஷர லக்ஷணம், 2. லிகிதம், 3. கணிதம், 4. வேதம், 5. புராணம், 6. வியாகரணம், 7. நீதி சாஸ்திரம், 8. ஜோதிஷ சாஸ்திரம், 9. தர்ம சாஸ்திரம், 10. யோக சாஸ்திரம், 11. மந்த்ர சாஸ்திரம், 12. சகுந சாஸ்திரம், 13. சில்ப சாஸ்திரம், 14. வைத்ய சாஸ்திரம், 15. ரூப சாஸ்திரம், 16. இதிகாசம், 17. காவியம், 18. அலங்காரம், 19. மதுர பாடகம், 20. நாடகம், 21. நிருத்தம், 22. சப்தப் பிரஹ்மம், 23. வீணை, 24. வேணு, 25. மிருதங்கம், 26. தாளம், 27. அஸ்த்ர பரீக்ஷை, 28. கநக (பொன்) பரீக்ஷை, 29. ரத பரீக்ஷை, 30. கஜ பரீக்ஷை, 31. அசுவ பரீக்ஷை, 32. ரத்ந பரீக்ஷை, 33. பூமி பரீக்ஷை, 34. சங்கிராம (போரின்) லக்ஷணம், 35. மல்ல யுத்தம், 36. ஆகர்ஷணம், 37. உச்சாடநம், 38. வித்வேஷணம், 39. மதந சாஸ்திரம், 40. மோகநம், 41. வசீகரணம், 42. ரச வாதம், 43. காந்தருவ வாதம், 44. பைபீல வாதம், 45. கௌஸ்துப வாதம், 46. தாது வாதம், 47. காருடம், 48. நஷ்டம், 49. முஷ்டி, 50. ஆகாயப் பிரவேசம், 51. ஆகாய கமநம், 52. பர காயப் பிரவேசம், 53. அதிருசயம், 54. இந்திர ஜாலம், 55. மஹேந்திர ஜாலம், 56. அக்நி ஸ்தம்பம், 57. ஜல ஸ்தம்பம், 58. வாயு ஸ்தம்பம், 59. திருஷ்டி ஸ்தம்பம்,

60. வாக் ஸ்தம்பம், 61. சுக்ல ஸ்தம்பம், 62. கரந ஸ்தம்பம், 63. கட்க ஸ்தம்பம், 64. அவஸ்தா பிரயோகம் என்பன வாம்.

எண் ணெண் கலையும் - உம் - முற் றும்மை. கூறி - என்னும் வினை யெச்சம், உணர்த்து வித்து என்னும் வினை யெச்சத்தையும், உணர்த்துவித்து என்பது, பொழிந்தனன் என்னும் வினை முற்றையுங் கொண்டு முடிந்தன. வேந்தன் (முற் செய்யுளிலுள்ளது) - எழுவாய். பொழிந்தனன் - பய னிலை. இரணியம் - செயப்படு பொருள். (13)

**தந்தை, மகற்கு தேர் ஊர்தல், சிவிகை ஊர்தல், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் செய்வித்து, மண வினை முடிக்கக் கருதுதலைக் கூறல்.**

கொடிநெ ருங்குங்கொ டிஞ்சியந் தேர்பரி
கடம லிந்தக யமொண்சி விகையிப்
படியி லூரப்ப யிற்றுவித் தாசிலா
வடிவி லங்கும கற்கும ணஞ்செய்வான். (14)

(இ—ள்) கொடி - டக்கியங்கள் (தேர்க் கொடி), நெருங்கும் - அடர்ந்திருக்கின்ற, கொடிஞ்சி - தலை யலங்காரத்தினை யுடைய, அம் தேர் - அழகிய ரதமும், பரி - அசுவமும், கடம் - மதம், மலிந்த - நிறைந்த, கயம் - கஜமும், ஒண்(மை) - பிரகாசம் பொருந்திய, சிவிகை - பல்லக்கும் (ஆகிய இவற்றை), இப்படியில் - இந்தப் பூமியில், ஊர - (ஏறிச்)செலுத்தும்படி, பயிற்றுவித்து - பயில்வித்து, [விவாகத்தினைக் கூறல்] ஆசு இலா - குற்றமற்ற, வடிவு - அழகு, இலங்கும் - (மிகுந்து) விளங்குகின்ற, மகற்கு - புத்திரனுக்கு, மணம் - விவாகம், செய்வான் - செய்தற் பொருட்டு, (எ-று).

தேர், பரி, கயம், சிவிகை - இவற்றி னீற்றில் எண் ணும்மை கள் தொக்கன. சிவிகை இப் படியில் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. இலா - இல்லா என்பதன் இடைக் குறை. செய்வான் - என்னும் வினை யெச்சம், அடுத்த செய்யுளி லுள்ள போக்கினன் என்னும் வினை முற்றுக் கொண்டது. இப் பாட்டுக் குளகம். (14)

**ஐம் பத் தாறு தேசத் தரசர்களுக்கும் திரு மண வோலை அனுப்புதலும், பல தேசத் தரசர்கள் மா புரிப் பட்டணம் வந்து சேர்தலும் கூறல்.**

*மடங்க லன்னப லமுள்ள மாமன்னன்*
*இடங்கொ ளெண்ணெழு தேசத்தி றைவர்க்கும்*
*முடங்கல் போக்கினன் கண்டுமு டிமன்னர்*
*தடங்கொள் சேனைகள் சூழ்வரச் சார்ந்தனர்.* (15)

(இ—ள்) மடங்கல் - சிம்மம், அன்ன - போன்ற, பலம் - பெலம், உள்ள - (பொருந்தி) இருக்கின்ற, மா மன்னன் - மஹா ராஜன், இடங் கொள் - விரிந்திருக்கின்ற, எண் எழு - ஐம் பத் தாறு, தேசத்தா - தேசத்து, இறைவர்க்கும் - அரசர் களுக்கும், முடங்கல் - (விவாக) ஓலையை, போக்கினன் - அனுப் பினன், முடி மன்னர் - அக் கிரீட மணிந்த சிற் றரசர்கள், கண்டு - (அவ் விவாகத் திரு முகத்தினைத்) தரிசித்து, தடம் கொள் - விரிந்த, சேனைகள் - (சதுரங்க) சேனைகளும், சூழ் வர - (தம்மைச்) சூழ்ந்து வர, சார்ந்தனர் - (மா புரிப் பட்டணம் வந்து) சேர்ந்தார்கள், (எ-று).

ஐம் பத் தாறு தேசம் ஆவன:— 1. அருணம், 2. அங்கம், 3. அவந்தி, 4. ஆந்திரம், 5. இலாடம், 6. யவநம், 7. ஒட்டியம், 8. கருசம், 9. கலிங்கம், 10. கன்னடம், 11. கன்னடம்,

12. காசம், 13. காச்மீரம், 14. காந்தாரம், 15. காம்போசம், 16. கிராடம், 17. குருகு, 18. குடகம், 19. குந்தளம், 20. குரு, 21. குலிந்தம், 22. கூர்ச்சரம் (குஜராத்), 23. கேகயம், 24. கேரளம், 25. கொங்கணம், 26. கொல்லம், 27. கோசலம், 28. சகம், 29. சவ்வீரம், 30. சாலவம், 31. சிங்களம், 32. சிந்து, 33. சீனம், 34. சூர சேநம், 35. சோழம், 36. சோனகம், 37. திராவிடம், 38. துளுவம், 39. தெங்கணம், 40. நிடதம், 41. நேபாளம், 42. பாஞ்சாலம், 43. பப்பரம், 44. பல்லவம், 45. பாண்டியம், 46. புலிந்தம், 47. போடம், 48. மகதம், 49. மச்சம், 50. மராடம், 51. மலையாளம், 52. மாளவம், 53. யுகந்தரம், 54. வங்கம், 55. வங்காளம், 56. விதர்ப்பம் என்பன வாம்.

எழு - என்பது, எழு என்பதன் விகாரம். தேசத்து - அத்து - சாரியை. இறைவர்க்கும் - உம் - முற்றும்மை. மா மன்னன் - எழுவாய். போக்கினன் - பய னிலை. முடங்கல் - செயப்படு பொருள். முடி மன்னர் - எழுவாய். சார்ந்தனர் - பய னிலை. மா புரி - செயப்படு பொருள். (அவாய் நிலையாற் பெற்றது.) (15)

நகர் அலங்கரித்தலைக் கூறல்.

வடிகொள்வெண் சுதையாற் பித்திகை தீற்றி
வானுற மணிக்கொடி நிரைத்துக்,
கடிநறுஞ் சாந்தங் குங்குமந் தன்னாற்
கமழ்தர மறுகெலாம் மெழுகிப்,
பொடிகொள்சிந் தூரத்தாற் கோலமே புனைந்து
பூமலர் பொரிநனி சிதறிக்,
கொடிகொண்மு தெயின்மேன் மாடமொண் சிகரி
கோதறப் புதுக்கியே குலவ. (16)

(இ—ள்) வடி கொள் - வடித்தலைப் பொருந்திய, வெண் (மை) - வெண்மை யான, சுதையால் - சுண்ணத்தினால், பித்திகை - சுவர்களை, தீற்றி - மெழுகியும், வான் - ஆகாயத்தினை, உற - பொருந்தும்படி, மணி - ரத்நத்தினால் (செய்யப்பட்ட) அல்லது அழகிய, கொடி - (மங்கலக்) கொடிகளை, நிரைத்து - வரிசையாகக் கட்டியும், கடி - வாசனை யுடைய, நறும் - நல்ல, சாந்தம் - சந்தநம், குங்குமம் தன்னால் - குங்குமங்களினால், மறுகு எலாம் - ராஜ வீதிக ளனைத்தையும், கமழ் தர - வாசனை உண்டாகும்படி, மெழுகி - தீற்றியும் (சுத்தஞ் செய்தும்), பொடி கொள் சிந்தூரத்தால் - சிந்தூரப் பொடி கொண்டு, கோலம் - அலங்கரித்தலை, புனைந்து - வனப் புறச் செய்தும், பூ - அழகினை யுடைய, மலர் - புஷ்பங்களையும், பொரி - பொரிகளையும், நனி - மிகவும், சிதறி - இறைத்தும், கொடி கொள் - கொடிகளை யுடைய, மூது - பழமை யான, எயின் - மதில்களையும், மேல் - மீது (உள்ள), மாடம் - மாடங்களையும், ஒண் - ஒள்ளிய, சிகரி - கோபுரங்களையும், கோது அற - குற்றம் இன்றி, குலவ - விளங்கும்படியாக, புதுக்கி - புதுப்பித்தும், (எ-று).

வடி - முத னிலைத் தொழிற் பெயர். வடி கொள் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. கொள் வெண் சுதை - வினைத் தொகை. குங்குமந் தன்னால் - தன் - சாரியை. எலாம் - எல்லாம் என்பதன் விகாரம். இத னீற்றில் முற் றும்மை தொக்கது. கமழ் தர - தர - துணை வினை. கோலமே - ஏ - அசை நிலை. மலர், பொரி, மாடம், சிகரி - இவற்றி னீற்றில் இரண்டனுருபும், எண் ணும்மைகளும் தொக்கன. புதுக்கியே - ஏ - அசை நிலை. தீற்றி, நிரைத்து, மெழுகி, புனைந்து, சிதறி புதுக்கி - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. இப் பாட்டுக் குளகம். (16)

கதலியுங் கமுகு நட்டுக் காவண மலங்க ரித்துப்
புதியதோ ரணங்கள் கட்டிப் பொற்குடஞ் செறித்துத் தீப
இதமுற வெங்கும் வைத்தே யிந்திர னகரம் போல [ம்
மதுமலர்த் தாம நாற்றி மாபுரி யலங்க ரித்தான். (17)

(இ—ள்) கதலியும் - வாழை மரத்தினையும், கமுகும் - பாக்கு மரத்தினையும், நட்டு - ஊன்றியும், காவணம் - பந்தலை, அலங்கரித்து - அலங்காரம் செய்தும், புதிய - நூதன மான, தோரணங்கள் - தோரணங்களை, கட்டி - தொடுத்தும், பொன் குடம் - ஸ்வர்ண கும்பங்களை, செறித்து - நெருங்க வைத்தும், தீபம் - விளக்கை, எங்கும் - எவ்விடத்தும், இதம் உற வைத்து - நன்றாகப் பொருத்தியும், மது - தேன் (ஒழுகுகின்ற), மலர் - புஷ்ப, தாமம் - மாலைகளை, நாற்றி - தொங்கவிட்டும், இந்திரன் - தேவேந்திரனது, நகரம் - பட்டணம், போல - போன்று, மா புரி - மா புரி (என்னும் பட்டணத்தை), அலங்கரித்தான் - அலங்காரஞ் செய்தான், (எ-று).

கதலியும், கமுகும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. நட்டு, அலங்கரித்து, கட்டி, செறித்து, வைத்து, நாற்றி - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. எங்கும் - உம் - முற் றும்மை. வைத்தே - ஏ - அசை நிலை. அலங்காரத்தில், இந்திர நகரை மா புரிக்கு உவமை யாக்கினர். மா மன்னன் - (பாட்டு-15) எழுவாய். அலங்கரித்தான் - பய னிலை. மா புரி - செயப்படு பொருள். (17)

### விவாக கன்னியைக் கூறல்.

வில்லி லங்குகை வேந்தர்ம ரபினில்
நல்ல சாமுத் திரிகநூ னன்கதாச்
சொல்லி லக்கணத் தோடுது ரிசிலா
முல்லை மாலைமு ருகுவி ரியவே. (18)

(இ—ள்) வில் - தநு, இலங்கு - விளங்குகின்ற, கை - அஸ்தத்தினை யுடைய, வேந்தர் - அரசர்களினது, மரபினில் - வம்சத்தில், நல்ல - சிரேஷ்ட மான, சாமுத்திரிக நூல் - சாமுத்திரிகா சாஸ்திரமானது, நன்கது ஆ (க) - நல்ல தாக, சொல் - கூறுகின்ற, இலக்கணத்தோடு - லக்ஷண மனைத்தினுேடுங்கூடி, துரிசு இலா - குற்ற மற்ற, முல்லை - (கற்பின் அறிகுறியாகத் தாய் தன்றலையி லணிந் துள்ள) முல்லைப் புஷ்பத்தினுற் செய்யப்பட்ட, மாலை - தாமத்தினது, முருகு - வாசனை, விரிய - பரவ, (எ-று).

முல்லை = கற்பு. " முல்லை சான்ற முல்லையும் " (சிறுபாணுற்றுப் படை) என வருதல் காண்க. மாலை = தன்மை. முல்லை மாலை முருகு விரிய = கற்புத் தன்மை பரிமளிக்க. கற்புத் தன்மை விளங்க என்பதாம்.

நன் கதா - அது பகுதிப் பொருள் விகுதி. ஆக - என்பது, ஆ என ஈறு குறைந்து நின்றது. இலக்கணத்தோடு - அத்து - சாரியை. இலா - இல்லாத என்னும் பெய ரெச்சத்தின் விகாரம். விரிய - என்னும் பெய ரெச்சம், அடுத்த பாட்டில் அவதரித்து என்னும் வினை யெச்சம் கொண்டது. இப் பாட்டுக் குளகம். (18)

மூவுல கதனி லுள்ள முகிழ்முலைக் கருங்கட் செவ்வாய்ப்
பாவைய ரெழிலிற் போதன் பகுத்தெடுத் துயிரோ டேய
ஓவியந் தீட்டி னுனென் றுலகினி லுரைக்கச் செய்ய
பூவுறை திருவி ரும்பும் பொற்புட னவத ரித்தே. (19)

(இ—ள்) உலகதனில் - லோகத்தில், உள்ள - இருக்கின்ற, முகிழ் - குவிந்த, முலை - தநங்களையும், கரு (மை) - கரிய, கண் - கண்களையும், செம்(மை) - சிவந்த, வாய் - வாயினையும் (உடைய), மூ - மூன்று, பாவையர் - ஸ்திரீகளின், எழிலில் -

அழகுக ளுள்ளும், பகுத்து - (சிறந்தனவற்றைப்) பிரித்து, எடுத்து - எடுத்து, உயிரோடு - ஜீவனோடு, கய - பொருந்தும்படி, போதன் - பிரஹ்ம தேவன், ஓவியம் - (ஒரு) பதுமையை, தீட்டினுன் - செய்தான், என்று - என, உலகினில் - லோகத்தில், உரைக்க - (யாவரும்) கூற, செய்ய - சிவந்த, பூ - (தாமரைப்) பூவில், உறை - வீற்றிருக்கின்ற, திரு - லக்ஷ்மியும், விரும்பும் - விரும்புகின்ற, பொற்புடன் - அழகோடு, அவதரித்து - பிறந்து, (எ-று).

மூவுலகதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. முலை, கண், வாய் - இவற்றி னிறுதியில் இரண்டனுருபும் எண் ணும்மைகளும் தொக்கன, உலகினில் - இன் - சாரியை. எழிலில் - என்பத னீற்றில் முற் றும்மை தொக்கது. திரு விரும்பும் - என்புழி, நிலை மொழி யீற்றினில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. அவதரித்தே - ஏ - ஈற் றசை. அவதரித்து - என்னும் வினை யெச்சம், அடுத்த பாட்டில் குழைத்து - என்னும் வினை யெச்சங் கொண்டது. இப் பாட்டுக் குளகம். (19)

## விவாகம் செய்வித்தலைக் கூறல்.

இலங்கிய வாலொண் டளிர்குழைத் தினிய
　　　விருதநக் கோங்கிணை யரும்பி,
கலங்கிள ராம்பல் குமிழிரு குவளை
　　　நண் ணுசெஞ் சரோருகம் பூத்துத்,
துலங்கிய புயலைச் சுமந்திரு தாளாற்
　　　றூமிலா மின்னென நடங்கிப்,
பலந்தரப் படருங் கொடியினை வேதப்
　　　பண்பினின் மன்றல்செய் வித்தே. (20)

(இ—ள்) இலங்கிய - விளங்கி யுள்ள, ஆல் - ஆல மரத்தினது, ஒண்(மை) - பிரகாசத்தோடு, தளிர் - (வயி றாகிய) இலையை, குழைத்து - தளிர்த்து, இனிய - விரும்பத் தகுந்த, இரு - இரண்டு, தாள - மூலை யாகிற, இணை - ஒத்த, கோங்கு - கோங்கு (அரும்பினை), அரும்பி - முகிழ்த்து, நலம் - அழகு, கிளர் - விளங்குகின்ற, ஆம்பல் - (வா யாகிற செவ்) வாம்பல் புஷ்பமும், குமிழ் - (நாசி யாகிற) குமிழம் புஷ்பமும், இரு - இரண்டு, குவளை - (நேத்திர மாகிற) நீலோத்பலப் புஷ்பமும், நண்ணு - பொருந்திய, செம் - சிவந்த, சரோருகம் - (முக மாகிற) தாமரைப் பூவினை, பூத்து - புஷ்பித்து, துலங்கிய - விளங்கிய, புயலை - (கூந்த லாகிய) மேகத்தை, இரு - இரண்டு, தாளால் - பாதங்களால், சுமந்து - தாங்கி, தோம் இலா - குற்றம் அற்ற, மின் - மின்னல், என - போல, நடங்கி - துவண்டு, பலம் - (விஷய சுக மாகிற) பழத்தை, தர - (அரசனுக்கு) கொடுக்க, படரும் - விருத்தியாகின்ற, கொடியினை - (பெண் ணாகிய) வனிதயினை, [விவாகத் தினைக் கூறல்] வேதப் பண்பினின் - வேத விதிப்படி, மன்றல் - விவாகம், செய்வித்து - புரிவித்து, (எ-று).

ஆலொண் டளிர் குழைத்து - என்புழி, வயி றாகிய உவமேயத்தினை, அதன் சொல்லினாற் சொல்லாமல், ஆலின் தளிர் என்னும் உவமானத்தின் சொல்லினாற் சொல்லுதலால், அது உருவக உயர்வு நவிற்சி யணி. ஆம்பல், குமிழ், குவளை, சரோருகம், புயல் என்பவையும் அது. தனக் கோங் கிணை - பண்புத் தொகை. இது உருவக வணி. ஆம்பல், குமிழ், குவளை என்பவற்றி னிறு தியில் எண் ணும்மைகள் தொக்கன. இலா - இல்லாத என்னும் குறிப்பு வினை யெச்சத்தின் விகாரம். மின் என - என - உவம உருபு. பண்பினில் - இல் - ஏதுப் பொருளில் வந்த ஐந்த னுருபு. இன் - சாரியை. ஏ - ஈற் றசை. செய்

வித்து - என்னும் வினை யெச்சம், அடுத்த பாட்டில், ஆட்டி என்னும் வினை யெச்சங் கொண்டது. இப் பாட்டுக் குளகம். (20)

**மகா ராஜன், மகனுக்கு மகுடஞ் சூட்டுதலும், மகா ராஜனாகிய புத்திர னிடத்துப் பூமியை ஒப்புவித்தலும் கூறல்.**

அருந்ததி கணவன் முதன்முனி வரர்க ளருமறைக் கிழவர்க டம்மால், பொருந்திய கங்கைப் பூம்புன லாட்டிப் பொன்னவ மணிகளாற் குயின்ற, விருந்திடு மடங்கன் மென்றவி சேற்றி மிளிர்நவ மணிமுடி கவித்துப், பருந் தடர் வேலான் பௌவமார் புவியைப் பரியெனத் தோன் றல்பா லளித்தான். (21)

(இ—ள்) அருந்ததி கணவன் - வசிட்டர், முதல் - முதலிய, முனிவரர்கள் - முனி சிரேட்டர்கள், அரும் - அரிய, மறைக் கிழவர்கள் தம்மால் - பிராஹ்மணர்கள் முதலியோர்களால், பொருந்திய - (தெய்வத் தன்மை) பொருந்திய, கங்கை - கங்கா நதியின், பூம், புனல் - (வாசனை) மலர்கள் (பெய்யப் பெற்ற), நீர் கொண்டு, ஆட்டி - (புத்திரனுக்கு வேத மந்திர உச்சாரணத் தோடு) அபிஷேகஞ் செய்வித்து, பொன் - ஸ்வர்ணத்தாலும், நவ மணிகளால் - நவ ரத்திநங்களாலும், குயின்ற - செய்யப் பெற்றதும், மென் - மிருது வானதும், விருந்து - புதுமையினை, இடும் - கொடுக்கின்றதுமா யுள்ள, மடங்கல் - சிம்ம, தவிசு - ஆசநத்தில், ஏற்றி - வீற்றிருக்கச் செய்து, மிளிர் - பிரகாசிக்கின்ற, நவ மணி - நவ ரத்திநங்களாற் (செய்யப் பெற்ற), முடி - கிரீடத்தினை, கவித்து - (சிரசில்) சூட்டி, பருந்து - (யுத்தஞ் செய்து அநேகரைக் கொன்றதனால் ஒட்டியிருக்கும் மாமிசங்களைப் புசிப்பதற்காகப்) பருந்துகள், அடர் - நெருங்கியிருக்கின்ற, வேலான் - வேலினை யுடைய மஹா ராஜன், பௌவம் - சமுத்திரம், ஆர் - (சூழ்ந்து) பொருந்தி

யிருக்கின்ற, புவியை - பூமியை, பரி - இரக்ஷிப்பாயாக, என - என்று கூறி, தோன்றல்பால் - புத்திரனாகிய மஹா ராஜனிடத்தில், அளித்தான் - கொடுத்தான், (எ-று).

முனிவரர் - கிழவர் - வேலான் - இவை வினையாலணையும் பெயர்கள். அருந்ததி கணவன் - ஆறும் வேற்றுமைத் தொகை. கிழவர் கடம்மால் - தம் - சாரியை. குயின்ற என்னும் பெயரெச்சம், தவிசு - என்னும் பெயர் கொண்டது. வேலான் - எழுவாய். அளித்தான் - பயனிலை. புவி - செயப்படு பொருள். (21)

புத்திரனாகிய மஹாராஜனது தன்மையினைக் கூறலும், நைமிசாரண்ய வாசிகளாகிய முநிவர்கள் வினவுதலும் கூறல்.

சோகமே யின்றி யிருந்தனன் வேந்தன் றோன்றலும் பார்பொது நீக்கி, ஏகமாய்ச் செங்கோ லெங்கணுஞ் செல்ல வெண்டிசை விசயமுஞ் செய்தே, மாகநா டென்னப் போகமே துய்த்து மடந்தையோ டிருந்தன னென்றுன், வாகைவேலவன்பி னென்செய்தா னென்ன மறையவர்க் குயர்முநி வகுக்கும். (22)

(இ—ள்) வேந்தன் - மஹா ராஜன் (புத்திரனிடத்து ராச்சியத்தினை யொப்புவித்த பின்னர்), சோகமே - துக்கமே, இன்றி - இல்லாமல், இருந்தனன் - இருந்தான், தோன்றலும் - புத்திரனும், பார் - பூமியில் உள்ள, பொது - ஏனை அரசர்களின் சம்பந்தங்களை, நீக்கி - கடிந்து, ஏகம் ஆய் - ஒன்றாக, செங்கோல் - சிறந்த ஆணை அல்லது அரச நீதி, எங்கணும் - எவ் விடத்தும், செல்ல - செல்லும்படி, எண் திசை - அஷ்ட திக்குகளிலும், விசயமும் - விஜயத்தினையும், செய்து - செய்து, மாகம் - தேவேந்திரனது, நாடு - பட்டணத்தார், என்ன - போல, போகம் - (அளவிறந்த) போகங்களை, துய்த்து - அநுபவித்து, மடந்தை

யோடு - மனைவியோடு, இருந்தனன் - இருந்தான், என்றான் - எனச் சூத முநிவர் கூறினர், [நைமிசாரணிய வாசிகள் வினவல்] வாகை - வெற்றி, வேலவன் - வேலினை யுடைய மஹா ராஜன், பின் - பின்னர், என் - என்னை, செய்தான் - செய்தனன், என்ன - என்று கேட்க, மறையவர்க்கு - (நைமிசாரணிய வாசிக ளாகிய) ரிஷிகளுக்கு, உயர் - (தவத்தால்) சிரேஷ்டம் பொருந் திய, முநி - (சூத) முநிவர், வகுக்கும் - கூறுவா ராயினர், (எ-று.)

சோகமே - ஏ - தேற்றம். இருந்தனன் - அன் - சாரியை. தோன்றலும் - உம் - இறந்தது தழீஇய எச்ச வும்மை. எங்கணும் - விசயமும் - உம் - இரண்டும் முற் றும்மைகள். செய்தே - போக மே - ஏ - இரண்டும் அசை நிலைகள். மாக நாடு - ஆகு பெயர். மாக நா டென்ன - என்ன - உவம உருபு. வேலன் - குறிப்பு வினையா லணையும் பெயர். முனி - எழுவாய். வகுக்கும் - பய னிலை. (பின் கூறப்படுபவை) செயப்படு பொருள். (22)

தம்பதி இருவரும், மாதா பிதா குருக்களிடம் சிர வணஞ் செய்தல் கூறல்.

மனைவியுந் தானு மோர்நினை வாகி மாறுபா டின்றி
யோர் காலும், தனையுணர் யோகி தந்தைதாய் கடவு டங்
களை யநுதிந மிறைஞ்சி, அனையவ ருரைத்த நெறிதனி
னடந்து மருத்தங்கண் மநதினிற் றரித்தும், வினையம
துடனே நூன்முறை யவரை வினவியுஞ் சிலபகல்
போக்கி. (23)

(இ—ள்) மனைவியும் - பட்ட மகிஷியும், தானும் - அரசனும், ஓர் - ஒரே, நினைவு ஆகி - மந முடையவர்க ளாகி, ஓர் காலும் - ஒரு காலத்தும், மாறுபாடு - மாறுபடுதல், இன்றி - இல்லாதவர்க ளாகி, தனை - ஆத்மாவினை, உணர் - அறிந்திருக்கின்ற, யோகி -

மஹான்களையும், தந்தை - பிதாவினையும், தாய் - மாதாவினையும், கடவுள் தங்களை - கடவுளையும், அநு தினம் - சதா காலமும், இறைஞ்சி - நமஸ்கரித்து, அனையவர் - அவர்கள், உரைத்த - உபதேசித்த, நெறிதனில் - (சன்)மார்க்கத்தில், நடந்தும் - ஒழுகியும், அருத்தங்கள் - (அவர்கள் உபதேசித்த சாஸ்திர) அர்த்தங்களை, மநதினில் - அந்தக் கரணத்தில், தரித்தும் - தாரணை செய்தும், அவரை - அவர்களிடத்தில், நூல் முறை - சாஸ்திரக் கிரமமாக, விநயமதுடன் - விநயத்தோடு (பணிவோடு), வினவியும் - (சந்தேகங்களை ஆராய்ந்து) கேட்டும், சில பகல் - சில நாளை, போக்கி - கழித்து, (எ-று.)

மனைவியும் தானும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. ஓர் காலும் - உம் - முற்றும்மை. யோகி, தந்தை, தாய், கடவுள் - இவற்றி னீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. கடவுடங்களை - தம் - சாரியை. அநுதினம் - என்பத னீற்றில் முற்றும்மை தொக்கது. இறைஞ்சி - என்பத னீற்றில் எண்ணும்மை தொக்கது. நெறிதனில் - தன் - சாரியை. நடந்தும், தரித்தும், வினவியும் - உம் - மூன்றும் எண்ணுப் பொருளன. மநதினில் - இன் - சாரியை. வினயமதுடனே - அது - பகுதிப் பொருள் விகுதி. ஏ - அசை நிலை. இப் பாட்டுக் குளகம். போக்கி - என்னும் வினை யெச்சம், அடுத்த பாட்டில் இருந்து என்னும் வினை யெச்சங் கொண்டது. (23)

தம்பதிக ளிருவரும் ஏகாந்தத் தாநத்தி லிருந்து விசாரம் செய்தலைக் கூறல்.

தனியிட மதனி லிருந்திரு வர்களுந் தங்களிற் றமுமுணார்ந் துசாவித், துனிசெய்மா மாயைப் பிறப்பது நீங்கிச் சுகமதை யடைந்தநு திநமும், இனிமைய தாக விருக்கலா ஞாநத் தென்றெனி ஞாநிகட் சார்ந்து, நனியவர் பாத பூசனை புரிந்து நாடொறும் வினவினர் நன்றாய். (24)

(இ—ள்) இருவர்களும் - (தம்பதிக) ளிருவரும், தனியிட மதனில் - ஏகாந்த ஸ்தாநத்தில், இருந்து - வைகி, தங்க ளில் - தங்கட்குள், உசாவி - (மோக்ஷ உபாயத்தை) விசாரித்து, உணர்ந்து - அறிந்து, ஞாநத்து - (ஆத்ம) ஞாநத்தினால், துனி செய் - துன்பத்தினைச் செய்கின்ற, மா மாயை - பெரிய மாயை யினால் (உண்டாம்), பிறப்பது - ஜந்மத்தினின்றும், நீங்கி - விலகி, சுகமதை - சுகத்தினை, அடைந்து - பெற்று, அநு தினமும் - சதா காலமும், இனிமையது ஆக - ஆநந்த மாக, இருக்கலாம் - இருத்தல் கூடும், என்று - என, எணி - கருதி, ஞானிகள் - ஞானிகளை, சார்ந்து - அடைந்து, அவர் - அவர்களது, பாத - திரு வடிகளுக்கு, நனி - மிகவும், பூசனை - பூசையினை, புரிந்து - செய்து, நாள் தொறும் - ஒவ்வொரு தினமும், நன்றாய் - நன்றாக, வினவினர் - (பிரஹ்ம ஞாந சாதந சாஸ்திரப் பொருளைக்) கேட் டனர், (எ-று).

இடமதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. இருவர்களும் - உம் - முற்றும்மை. தங்களிற் றும் - தாம் - அசை நிலை. பிறப்பது - சுகமதை - இனிமையதாக - அது - மூன்றும் பகுதிப் பொருள் விகுதிகள். அநுதினமும் - உம் - முற்றும்மை. ஞாநத்து - அத்து - சாரியை. அவர் பாதம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. நா டொறும் - தொறும் - காலப் பன்மை குறித்து வந்த இடைச் சொல். இருவர்களும் - எழுவாய். வினவினர் - பயனிலை. ஞாநத்தால் இனிமைய தாக இருக்கும் (உபாயம்) - செயப்படு பொருள். (24)

**விசாரத்தால் மஹா ராஜன் ஆசாரியரை அடைய நிச்ச யித்தலைக் கூறல்.**

இருவரி லசரன் றனக்கறி வோங்க விருவகைச் சார் வையு மகற்றிக், கருவுடற் காவ றனையுங்கை விடுத்துக் கருத்தசை யாதுமெய் யுணர்வை, மருவிடி லகப்பற் றற்று மேல்வீடு வாய்த்திடு மதற்குமெய்ஞ் ஞானக், குருவரு ளின்றி விளங்கிடா தெனவே கொண்டனன் மநத்தினிற் றுணிவே. (25)

(இ—ள்) இருவரில் - (தம்பதிகள்) இருவரில், அரசன் - மஹா ராஜன், தனக்கு - தன்பால், அறிவு - விவேகம், ஓங்க - அதிகரித்ததனால், இரு வகைச் சார்வையும் - (பொருட் சார்பு உயிர்ச் சார்புகள்) இரண்டினையும், அகற்றி - நீக்கி, கரு - ஜந்ம ஏது வான, உடல் - சரீரத்தின், காவல்தனையும் - சம்ரக்ஷணையினை யும், கை விடுத்து - நன்கு தியாகஞ் செய்து, கருத்து - மநம், அசையாது - சலியாது, மெய் உணர்வை - உண்மை ஞானத்தினை, மருவிடில் - அடைந்தால், அகம் - உள், பற்று - ஆசை, அற்று - நீங்கி, மேல் - மேன்மை யான, வீடு - மோக்ஷமும், வாய்த்திடும் - கிடைக்கும், அதற்கு - அப்படி மோக்ஷம் அடைதற்கு (உரிய உபாயம்), மெய் ஞாந - உண்மை ஞாநத்தினை யுடைய, குரு - ஆசாரியரது, அருள் - கிருபை, இன்றி - இல்லாவிட்டால், விளங்கிடாது - விளங்கமாட்டாது, என - என்று, மநத்தினில் - மநதில், துணிவு - நிச்சயம், கொண்டனன் - கொண்டான், (துணிந்தான்,) (எ-று).

தனக் கறி வோங்க - என்புழித், தனக்கு என்பது ஏழாம் வேற்றுமையின் இடப் பொருள், "வீட்டிற்கு வருவன்" என்றாற் போல, நான்க னுருபோடு வரப் பெற்றது. காவல்தனையும் - தன் - சாரியை. உம் - இறந்தது தழீஇய வெச்சம். இரு வகைச் சார்வை யும் - உம் - முற் றும்மை. மருவிடில் - வாய்த்திடும் - விளங்கி டாது - இவை - மூன்றும் பகுதிப் பொருள் விகுதிகள்.

எனவே - ஏ - அசை நிலை. கொண்டனன் - அன் - சாரியை. துணிவே - ஏ - ஈற் றசை. அரசன் - எழுவாய். கொண்டனன் - பய னிலை. துணிவு - செயப்படு பொருள். (25)

அநாசாரியா ரிலக்கணம் கூறல்.

மனைதனி லாசை பொருந்தியே நின்று மகிமையின் ஞாநியா மெனவே, தனைமிக மதிப்போன் றன்னைவந் தொருவன் றந்திடு ஞாநமென் றிரந்து, வினவன்மட் டையினைப் பருகுவோன் றன்னை வேண்டித்தென் னம்பழந் தனையே, இனம்பணித் திரிவோன் புத்திபோன் மெனவே யியம்புவர் முற்றுணர் பெரியோர். (26)

(இ—ள்) மனைதனில் - இல் லறத்தில், ஆசை - இச்சை யினை, பொருந்திநின்று - பொருந்தியிருந்து, மகிமையின் - பெரு மையினை யுடைய, ஞாநி - (தத்துவ) ஞாநி, யாம் - நாம், என - என்று, தனை - தன்னை, மிக - அதிக மாக, மதிப்போன் தன்னை - கருதுகின்றவனை, ஒருவன் - ஒரு மாணாக்கன், வந்து - வந்து (சரணாகதி யாகி), ஞாநம் - (ஆத்ம) ஞாநத்தினை, தந்திடும் - கொடும், என்று - என, இரந்து - யாசித்து, வினவல் - கேட்கு தல் [எது போலாம் எனில்], மட்டையினை - (தேங்காய்க்) கோம் பையினை, பருகுவோன் தன்னை - காண்டி (சுரண்டி) நுகரும் ஒரு புருஷனை (அடைந்து), தென்னம் பழம் தனை - தேங்காயினை, வேண்டி - விரும்பி, இனம் - (அதனை அடைதற்கு) அநுகூல மான உறவினை, பணி - செய்து, திரிவோன் - (அவன் பின்) திரி கின்றவனது, புத்தி - மதி, போன்ம் - போலும் (ஆம்), என - என்று, முற்று உணர் - சர்வக்ஞத் தன்மையினை யுடைய, பெரியோர் - மஹான்கள், இயம்புவர் - கூறுவார்கள் (ஆகையினால்), (எ-று).

அஞ்ஞ வதைப் பரணி 4 பேய்.

"மெய்வருந்திக் குரவனருள் விரும்பா தென்றும் விட்டிடமுந் தொட்டிடமு மறியா தேகின், றவ்வருகப் பட்டனவாய் மிகவுந் தம்மை யகமதித்துத் திரியும்பே யநந்தங் கோடி." என்று தத்துவராய சுவாமிகள் பேய் கூற்றாக வைத்து, அநாசாரியரைக் கூறியிருப்பது உணரல்பாற்று.

மனைதனில் - மதிப்போன்றன்னை - பருகுவோன்றன்னை - பழந்தனையே - தன் - நான்கும் சாரியைகள். பொருந்தியே - எனவே - தனையே - போன் மெனவே - ஏ - நான்கும் அசை நிலைகள். மகிமையின் - மட்டையினை - இன் - இரண்டும் சாரியைகள். தந்திடு - இடு - பகுதிப் பொருள் விகுதி. தென்னம் பழம் - அம் - சாரியை. போன்ம் - போலும் என்பதன் விகாரம். பெரியோர் - எழுவாய். இயம்புவர் - பய னிலை. வினவல் - செயப்படு பொருள். இது உவமை யணி கொண்டது. (26)

வேதவா கமசாத் திரபுரா ணங்கள் விளங்கவே கற்றுணர்ந் தவற்றைத், தீதற வெவர்க்குந் தெளிவுற வோதிச் செப்பிய வந்நெறி யதனிற், சாதக மிலாத குருவினை யொருவன் றனடைந் தாநந்தம் வினவல், ஏதமாங் கழுதை தன்னைக்குங் குமத்தி னியல்புகேட் டிடுதல்போன் மென்றே. (27)

(இ—ள்) வேத - (நான்கு) வேதங்களையும், ஆகம - (இருபத் தெட்டு) ஆகமங்களையும், சாத்திர - (ஆறு) சாஸ்திரங்களையும், புராணங்கள் - (பதி னெண்) புராணங்களையும், விளங்க - நன்றாக, தெளி வுற, கற்று உணர்ந்து - (ஓதி) அறிந்து, அவற்றை - அந்தச் சாஸ்திரங்களை, தீது அற - குற்றம் இன்றி, எவர்க்கும் - யாவருக்கும், தெளிவு உற - தெளிவு பொருந்தும்படி யாக, ஓதி -

உபதேசித்து, செப்பிய - (தான்) உபதேசித்த, அந் நெறிய தனில் - அந்த மார்க்கத்தில், சாதகம் - அப்பியாசம், இலாத - இல்லாத, குருவினை - ஆசாரியனை, ஒருவன் - ஒரு மாணாக்கன், அடைந்து - (சரணாகதி) அடைந்து, ஆநந்தம் - பிரஹ்மாநந்தத்தினை, வினவல் - (அநுக்கிரகிக்கும்படி) கேட்குதல், ஏதம் ஆம் - குற்றத்த தாகிய, கழுதைதன்னை - கர்த்தபத்தினை (யணுகி), குங்குமத்தின் - குங்குமத்தினது, இயல்பு - தன்மையினை, கேட்டிடுதல் - வினவுதலை, போன்ம் - ஒக்கும், என்று - எனக் கருதி, (எ-று).

அஞ்ஞ வதைப் பரணி 30 கூழ் வார்ப்பு 7.

"ஒளிதங் கியமா மறையோதி யுள்ள பொருளை யுணராதே, பளிதஞ் சுமந்த கழுதையாம் பனவப் பேய்க்கும் வாரீரே." என்று அஞ்ஞ வதைப் பரணியில் கூறுவதால், "குங்குமம் சுமந்த கழுதை" என்பது போலக், "கற்பூரஞ் சுமந்த கழுதை" என்று கூறுவதும், உலக வழக்கில் உண்டு என உணரற்பாற்று.

வைராக்கிய (பக்தி) சதகம் 13 கவி.

"வாயி னூற்பல நூல்படித் துணர்ந்துநல் வழிபிறர்க் குரை செய்து, நீயு லோகவா சாரமோ ரணுத்துணை யானுநீங் கிலை நெஞ்சே, தூய தாமிவண் பிறர்கொளக் குங்குமஞ் சுமந்துசெல் கரமுன்னிற், காய மாநுடத் தின்றதற் கன்றியுட் களவுமின் மையினாலே." என்று கூறுவதும் இதற்கு மேற் கோ ளாம்.

நாரத பிரிவிராஜக உபநிஷத்:

"स्वरूपानुसन्धानव्यतिरिक्तान्यशास्त्राभ्यासै रुष्ट्र कुङ्कमभारवद्व्यर्थः ॥ ५—१ "

"ஸ்வரூப அநுசந்தாந வியதிரிக்த அந்ய சாஸ்திர அப்யாசங்களால், உஷ்ட்ர (ஒட்டை) குங்கும பாரம் போன்று வியர்த்தமாம்"

5. 1; என்று, நாரத பரிவிராஜக உபநிஷத், ஐந்தாவது உபதேசம், முதல் மந்திரம் கூறுவதால், குங்குமம் சுமந்த ஒட்டை என்று கூறும் வியவகாரமும் உளது என அறிக.

வேத, ஆகம, சாத்திர, புராணங்கள் என்பவற்றின் ஈற்றில் இரண்டனுருபும் எண்ணும்மைகளும் தொக்கன. விளங்கவே - ஏ - அசை நிலை. அவற்றை - அற்று - சாரியை. எவர்க்கும் - உம் - முற்று. நெறியதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. இலாத - இல்லாத என்பதன் இடைக் குறை. குருவினை - இன் - சாரியை. ஒருவன் றான் - தான் - அசை நிலை. கழுதை தன்னை - தன் - சாரியை. குங்குமத்தின் - அத்து இன் - இரண்டும் சாரியைகள். கேட்டிடுதல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. போன்ம் - போலும் என்பதன் விகாரம். என்று என்னும் வினை யெச்சம், அவாய் நிலையால் பெற்ற, "(மகான்கள்) கூறுவார்கள்" என்னும் வினை முற்றுக் கொண்டது. என்றே - ஏ - ஈற் றசை. இப் பாட்டுக் குளகம். என்று (கருதி) என்னும் வினை யெச்சம், அடுத்த பாட்டில் அடைந்து என்னும் வினை யெச்சங் கொண்டது. இதில் உவமை யணி யுளது. (27)

மஹா ராஜன் ஆசாரியரை அடைதலும், ஞான உபதேசத்தினை விரும்புதலும் கூறல்.

சீவர்க ளிடத்தி லருள்சிவ பத்தி திருந்திய துறவு
மெய்ஞ் ஞானம், ஆவதோர் வடிவாம் வேதமா முனியை
யமலவா ரணியத்தி லடைந்தே, தேவர்க டேவே துன்ப
மோர் காலுஞ் சென்றிடா முத்திதா னெய்திச், சாவதும்
பிறப்பு நீங்குமோர் நெறியைச் சாற்றெனத் தாழ்ந்திட
முனிவன். (28)

(இ—ள்) சீவர்கள் இடத்தில் - சீவரிடத்து, அருள் - கருணையும், சிவ - பரமேசுவரனிடத்து, பத்தி - பக்தியும், திருந்திய - குற்ற மற்ற, துறவு - (பாச) வைராக்கியமும், மெய் - (சத்ரூபப் பிரஹ்ம) தத்துவ, ஞானம் - ஞானமும் (ஆகிய நான்கும்), ஆவது - (சேர்ந்து) உண்டானதாகிய, ஓர் - ஒரு, வடிவு ஆம் - சொரூப மாக (எழுந்தருளி யுள்ள), மா - மஹா, வேத - வேத முனி (என்னும்), முனியை - ஆசாரியனை, அமல - நிர்மல மான, ஆரணியத்தில் - வநத்தில், அடைந்து - (சரணாகதி) அடைந்து, தேவர்கள் - தேவர்களுக்கும், தேவே - தேவரே !, துன்பம் - துக்கம், ஓர் காலும் - ஒரு போதும், சென்றிடா - போய்ப் பொருந்தாத, முத்தி - மோக்ஷத்தினை, எய்தி - அடைந்து, (அதனால்), பிறப்பும் - ஜநிப்பதும், சாவதும் - மரிப்பதும், நீங்கும் - நிவிர்த்தியாம்படி யான, ஓர் - ஒரு, நெறியை - மார்க்கத்தினை, சாற்று - உபதேசம் செய்தருளும், என - என்று (விண்ணப்பித்து), தாழ்ந்திட - (அவருடைய பாத பத்மங்களில் வீழ்ந்து சாஷ்டாங்க மாக) நமஸ்கரிக்க, முனிவன் - (அம் மஹா வேத முனி என்னும்) ஆசாரியர், (எ-று).

அருள், பக்தி, துறவு, ஞானம் - என்பவற்றி னீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. ஆவது - இறந்த காலத்திற்கு நிகழ் காலம் வந்தமை கால வழு வமைதி. ஆரணியத்தில் - அத்து - சாரியை. அடைந்தே - ஏ அசை நிலை. தேவே - ஏ விளி யுருபு. ஓர் காலும் - உம் - முற் றும்மை. சென்றிடா - தாழ்ந்திட - இடு - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். சென்றிடா - ஈறு குறைந்த எதிர் மறைப் பெய ரெச்சம். முத்தி தான் - தான் - அசை நிலை. சாவதும் பிறப்பும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. இப் பாட்டுக் குளகம். முனிவன் - என்னும் எழுவாய், அடுத்த பாட்டில் உரைத்தான் என்னும் வினை முற்றுக் கொண்டது. (28)

## மஹா வேத முநி உபதேசித்ததைக் கூறல்.

இருவகைச் சார்வாம் புறப்பற்றை நீக்கி யிச்சையின் நீட்டதி னினைவும், ஒருவியே யுடற்கா வலையுங்கை விடுத்தே யுட்கர ணங்கள்வா தனையும், குருவரு ணெறியே யொடுக்கிடின் வீடுங் கூடுந்தா னாகவே பவத்தின், கருவழிந் திடுமிந் நெறியைநீ விரைவிற் கைக்கொண்டு செல்லெனவுரைத்தான். (29)

(இ—ள்) இரு வகைச் சார்வு ஆம் - (பொருட் சார்பு உயிர்ச் சார்புகள் என்னும்) இரு வித மாகிய, புற - வெளி, பற்றை - சார்பை, அல்லது, தொட்பை, நீக்கி - நிவிர்த்தித்து, மீட்டு - மறுபடியும், இச்சையின் - முன் னுள்ள ஆசையின் சமஸ்காரத்தால், அதின் - அச் சார்பின், நினைவும் - (உண்டாம்) ஸ்மரணத்தினையும், ஒருவி - விட்டு, உடல் - (தூல) சரீரத்தின், காவலையும் - பாதுகாப்பினையும், கை விடுத்து - நன்கு துறந்து, உள் கரணங்கள் - அந்தக் கரண (அநாத்மாகார) விருத்திகளையும், வாதனையும் - (அவற்றா லாம்) சமஸ்காரத்தினையும், குரு - ஆசாரியர், அருள் - உபதேசித்தருளிய, நெறியே - (ஞாந) மார்க்க மாகவே, ஒடுக்கிடின் - நாசஞ் செய்யின், வீடும் - மோக்ஷமும், தா னாகவே - ஸ்வய மாகவே, கூடும் - சித்திக்கும், பவத்தின் - சம்சாரத்தின், கரு - பீஜம், அழிந்திடும் - நாச மாகும், இந் நெறியை - (ஆன தால்) இந்த (ஞாந) மார்க்கத்தினை, கைக் கொண்டு - (நீ) பேணிக் கொண்டு, விரைவில் - சீக்கிரத்தில், செல் (உன் னூர்) ஏகுக, என - என்று, உரைத்தான் - (மஹா வேத முநி) உபதேசித்தனர், (எ-று).

இச்சையின் - இன் - சாரியை. இச்சையின் சமஸ்காரம், இச்சை என உபசரித்துக் கூறப்பட்டது. நினைவும் - காவலையும் -

வாதனையும் - வீடும் - உம் - நான்கும் இறந்தது தழீயன. ஒருவியே - கை விடுத்தே - ஏ இரண்டும் அசை நிலைகள். கை விடுத்து - கைக் கொண்டு - கை - உபசர்க்கம் போன்று, சில சொற்களின் முன் சேர்த்துக் கூறப்படும் ஒரு வகை உரிச் சொல். நெறியே - ஏ - பிரி நிலை. ஒடுக்கிடின் - அழிந்திடும் - இடு - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். உரைத்தான் - என்னும் வினை முற்று, முந்திய பாட்டில் முனிவன் என்னும் எழுவாய் கொண்டது. (29)

மஹா ராஜன் ஆசாரியார் உபதேசித்ததனைத் தாரணை செய்து கொண்டு, மா புரி வந்து ராஜ்யத்தி லிருந்து, பின் வைராக்கியத்தினை யடைதலைக் கூறல்.

அந்நெறி குருவா லையமுந் திரிவு மகன்றிடத் துணிவதாக் கேட்டு, முன்னெறி யான வரசியற் கைபினின் முயன்றனன் சிறிதுநா ளொருநாட், பின்னெறி யதனை நினைந்தனை வரையும் பெயர்ந்திட விடைகொடுத் தாசன், மன்னெறிக் கோல மகன்றந்தப் புரத்தில் வதிந்தன னொருவனுய்த் தனித்தே. (30)

(இ—ள்) குருவால் - (மஹா வேத முனி யாகிய) ஆசிரியரால் (உபதேசிக்கப்பட்ட), அந் நெறி - அந்த மார்க்கத்தினை, ஐயமும் - சந்தேகமும், திரிவும் - விபரீதமும், அகன்றிட - நீங்கும்படி யாக, துணிவது ஆ(க) - நிச்சய மாக, கேட்டு - சிரவணம் செய்து தெளிந்துகொண்டு (மா புரிக்குச் சென்று), முன் - பூர்வ, நெறி ஆன - மார்க்க மான, அரசியற்கையினில் - ராஜ்ய விவகாரத்தில், சிறிது நாள் - சில காலம், முயன்றனன் - முயற்சியோடிருந் தனன், பின் - பின்னர், ஒரு நாள் - ஒரு தினம், நெறியதனை - (மகா வேத முனி உபதேசித்த) மார்க்கத்தினை, நினைந்து -

ஸ்மரித்து, அனைவரையும் - (ராஜ மண்டபத் திருக்கும் மந்திரி முதலிய) யாவரையும், பெயர்ந்திட - (அவ் விடம் விட்டுச்) செல்லு தற்கு, விடை கொடுத்து - உத்திர வளித்து, அரசன் - மஹா ராஜன், மன் நெறி - இராச முறைக் கேற்ற, கோலம் - (ஆடை ஆபரணாதி) அலங்காரங்களை, அகன்று - விட்டு நீங்கி, அந்தப் புரத்தில் - உட் கிரகத்தில், ஒருவ னாய்த் தனித்து - ஏக னாக, வதிந்தனன் - இருந்தனன், (எ-று).

ஐயமும் திரிவும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. அகன்றிட - பெயர்ந்திட - இடு - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அணிவதா - நெறியதனை - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அரசியற்கையினில் - இன் - சாரியை - இல் - ஏழ னுருபு. சிறிது நாள் - பண்புத் தொகை. சிறிது - ஈண்டுக், குறிப்பு வினையா லணையும் பெயர். அனைவரையும் - உம் - முற் றும்மை. நெறிக் கோலம் - நான்க னுருபும் பயனும் உடன் தொக்க தொகை. அந்தப் புரத்தில் - அத்து - சாரியை. தனித் தே - ஏ - ஈற் றசை. அரசன் - எழுவாய். வதிந்தனன் - பய னிலை. (30)

மந்திரி முதலியோர், மஹா ராஜனை வினவுதலும், அதற்கு மஹா ராஜன், விடை யருளிச் செய்தலும், கூறல்.

அரசர்க ளமைச்சர் புரோகிதர் பெரியோ ரனைவரு மவ்விடத் தேகி, அரசனை நோக்கி நித்திய கரும மகன் றுவா ளாவிருந் திடுதல், அரசிலக் கணமன் றெனவவர் வேண்ட வவர்களை நோக்கியே வேந்தன், அரசியற் கையினை வேண்டல னென்னை யறியவே வேண்டின னன்றே. (31)

(இ—ள்) அரசர்கள் - சிற் றரசர்களும், அமைச்சர் - மந்திரி களும், புரோகிதர் - முன் நன்மை கூறுவோரும், பெரியோர் -

விருத்தர்களும், அனைவரும் - (ஆகிய) யாவரும், அவ் விடத்து - அந்தப் புரத்துக்கு, ஏகி - சென்று, அரசனை - மஹா ராஜனை, நோக்கி - பார்த்து, நித்திய - நா டோறும், கருமம் - (செய்யத் தக்க ஸ்நாநம் ஜப தப முதலிய) தொழில்களை, அகன்று - விட்டு, வாளா - சும்மா, இருந்திடுதல் - இருக்குதல், அரசு - ராஜ, இலக்கணம் - லக்ஷணம், அன்று - அல, என - என்று கூறி, அவர் - அவர்கள் (யாவரும்), வேண்ட - (ராஜ சபைக்கு வந்து ராஜ்ய விவகாரங்களைக் கவனிக்க வேண்டு மென்று) விரும்ப, [மஹா ராஜன் விடை யருளிச் செய்கின்றன்] வேந்தன் - மஹா ராஜன், அவர்களை - குறு நில மன்னர் முதலியோரை, நோக்கி - பார்த்து, அரசியற்கையினை - ராஜ்யத்தினை, வேண்டலன் - விரும்பிலன், என்னை - எனது யதார்த்த சொரூபத்தினை, அறிய - உணர, வேண்டினன் - விரும்பினேன், (எ-று).

அரசர்கள், அமைச்சர், புரோகிதர், பெரியோர் - என்பவற்றினிடையே எண் ணும்மைகள் தொக்கன. அனைவரும் - உம் - முற் றும்மை. இருந்திடுதல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. நோக்கியே - அறியவே - ஏ - இரண்டும் அசை நிலைகள். இயற்கையினை - இன் - சாரியை. அன்று, ஏ - அசை நிலைகள். யான் - தோன்றா எழுவாய். வேண்டலன் - பய னிலை. அரசியற்கை - செயப்படு பொருள். யான் - தோன்றா எழுவாய். அறியவேண்டினன் - பய னிலை. என்னை - செயப்படு பொருள். (31)

ஆண்டதோ ரரசு தனிலும்போ கத்து மாசையற் றேனினி வேண்டேன், மாண்டதோர் வநத்தி லொருவனுய்த் தனித்தே மநத்தசை வறுத்துவீ டடைவேன், பூண்டவென் மநமிங் கினித்திரும் பாது போகத்தைப் பொருளென வெண்ணி, வேண்டல னீங்க ளரசனு வேறே விதித்துக்கொளுங்களென் றுரைத்தான். (32)

(இ—ள்) ஆண்டது - (யான்) ஆக்ஷி செய்ததாகிய, ஓர் - ஒப் பின்றிய, அரசுதனிலும் - ராஜ்யத்திலும், போகத்தும் - (ராஜ) போகத்திலும், ஆசை - இச்சையினை, அற்றேன் - விட்டேன், இனி - மீண்டும், வேண்டேன் - விரும்பேன், மாண்டது - மாக்ஷிமை தங்கிய, ஓர் - ஒப் பின்றிய, வநத்தில் - ஆரண்யத்தில், ஒருவனாய்த் தனித்து - ஏகனாய், மநத்து - மநதிலுள்ள, அசைவு - விக்ஷேபங்களை, அறுத்து - நிவிர்த்தித்து, வீடு - மோக்ஷத்தினை, அடைவேன் - பெறுவேன், பூண்ட - (இவ்வித நிச்சயத்தினைப்) பொருந்திய, என் - எனது, மநம் - மநம், இங்கு - இந்த ராஜ்ய விஷயத்தில், இனி - பின், திரும்பாது - மீளாது, போகத்தை - (ராஜ்ய) போகத்தினை, பொருள் - புருஷார்த்தம், என - என்று, எண்ணி - கருதி, வேண்டலன் - விரும்பிலன் (யான்), நீங்கள் - நீங்கள், அரசன் ஆ(க) - ராஜனாக, வேறு - அந்நியர் (ஒருவரை), விதித்துக் கொளுங்கள் - நியமித்துக் கொள்ளுங்கள், என்று - என, உரைத்தான் - புகன்றனன், (எ-று).

வநம் — காமக் குரோதாதிகளை உண்டாக்காததும், உலகப் பற்றற்ற மௌநிகளால் சஞ்சரிக்கப் பெறுவதும், ஆதலின், வநத்துக்கு, "மாண்டது" என அடை கொடுத்தார். வநத்தில் இருப்பினும், சீடர் முதலிய உபசாரங்களுடன் உறில், "ஏவலனொருவனேடுறினும் சித்த சஞ்சல முண்டு" என்று வைராக்ய தீபம் 53-வது கவியில், தமது குரவர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் கூறியபடி, மநத்திற்கு அசை வுண்டா மாதலின், அதுவும் கூடாதென்பார், "ஒருவனாய்" என்று, "தனித்து" என்பதற்கு அடை கூறினார் என்க.

ஆண்டது - மாண்டது - இரண்டும் வினையாலணையும் பெயர்கள். ஆண்டதோரரசு - பண்புத் தொகை. அரசுதனிலும் - தன் - சாரியை. உம் - எண்ணுப் பொருளது. போகத்தும் - அத்து - சாரியை. உம் - எண்ணுப் பொருளது. இனி - எதிர்

காலங் காட்டு மிடைச் சொல். தனித்தே - வேறே - ஏ - இரண்டும் அசை நிலைகள். மதத்து - அத்து - சாரியை. அரசனு - அரசனுக என்பதன் ஈறு குறைந்த வினை யெச்சம். (முன் பாவிலுள்ள) வேந்தன் - எழுவாய். உரைத்தான் பய னிலை. (மேற் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும்) செயப்படு பொருள். (32)

## மந்திரி முதலியோர் வினவலைக் கூறல்.

ஆதியி னினது தாதையு நினையே அரசினி விளமையிற் சூட்டத், தீதின்றி யுனது புயவலி மையினிற் செகமதைத் தாங்கினை யினிமேல், நீதியி னுனிய மதியினு தரவி னின்னைப்போ லொருவர்மற் றுளரோ, ஈதியற் கையதன் றிவ்வுட லுடனே யிச்செல்வ மன்றிவே றுளதோ. (33)

(இ—ள்) நினது - உனது, தாதையும் - தந்தையும், ஆதியில் - முதலில், நினையே - உன்னையே, இளமையில் - பால்ய காலத்தில், அரசினில் - ராஜ்யத்தில் (அதற்கு அதிபதி யாக), சூட்ட - (முடி) அணிவிக்க (நீ அதனை அணிந்து), உனது - நினது, புய - புஜத்தினது, வலிமையினில் - சாமர்த்தியத்தினுல், செகமதை - உலகத்தினை, தீது இன்றி - குற்றம் அற, தாங்கினை - காப்பாற்றினுய், இனி மேல் - பின், நின்னை - உன்னை, போல் - ஒப்ப, நீதியின் - நியாயம் வழங்குவதிலும், நுனிய மதியின் - சூக்ஷ்ம புத்தியிலும், ஆதரவின் - ஆதரிப்பதிலும், மற்று ஒருவர் - வேறு ஒருவர், உளரோ - இருக்கின்றனரா? (இல்லை), ஈது - (ஆனதால்) இது, இயற்கையது - (க்ஷத்திரிய) ஸ்வபாவம், அன்று - அல்லாதது, இவ் வுடலுடன் - இந்தச் சரீரத்தினேடு (கூடி யநுபவித்தற்கு இவ் வுலகில்), வேறு - அந்நிய (செல்வம் ஒன்று இதனினுஞ் சிறந்த தாக), உளதோ - இருக்கின்றதா? (இல்லை), (எ-று).

சரீரம் உடைய பிராணிகளுக் கெல்லாம் போகமே பெரும் பொருள் எனவும், அது மஹா ராஜ பதவியை யுடைய இவனுக்கு நிரம்பி யிருக்கின்ற தெனவும், இவர்கள் எண்ணினவர்க ளாதலின், "இவ் வுடலுடனே இச் செல்வ மன்றி வேறுளதோ" என்று கூறினர்.

நினது தாதை - உயர் திணைக் கிழமைப் பொருள் வருமிடத்து, நினக்குத் தாதை என நிற்க வேண்டும். அவ் வா றின்றி, "நினது தாதை" என, அஃறிணை யொருமை 'அது' உருபு வந்தமை, "அரனது தோழன்" என்றாற் போன்ற சிறு பான்மை வழக்கு. தாதையும் - உம் - எச்ச வும்மை, (மந்திரியாதியரையும் தழுவ லின்). நீளையே - ஏ - தேற்றம். அரசினில் - வலிமையினில் - தாங்கினை - இன் - மூன்றும் சாரியைகள். செகமது - இயற்கை யது - அது இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். மற்று - பிறிது என்னும் பொருளது. உளரோ - உளதோ - ஓ - இரண் டும் எதிர் மறைப் பொருளில் வந்தன. ஈது - நீண்ட அண்மைச் சுட்டு. உடலுடனே - ஏ - அசை நிலை. நீ - தோன்றா எழுவாய். தாங்கினை - பய னிலை, செகம் - செயப்படு பொருள். ஒருவர் - எழுவாய். உளரோ - பய னிலை. ஈது - எழுவாய். இயற்கைய தன்று - பய னிலை. வேறு - எழுவாய். உளதோ - பய னிலை. (33)

அரசன் மந்திரி முதலியோரைப் பார்த்து, ஜகத் சத்தியம் என்னும் புத்தியினை யுடைய உங்கட்கு, யாம் கூறினும் விவேகம் உண்டாகாது எனக் கூறலைக் கூறல்.

அலதுநீ யேகி னவநியுங் காப்பற் றவத்திலே
யலைந்திடும் யாமும், சலநம துறுவே மித்தகை யெமைநீ
தவிக்கவிட் டேகுதல் கடனன், றிலகிட வெமக்கீ தருளென
வமைச்ச ரியம்பிட வரசனும் பார்த்தே, உலகமெய்
யெனவெண் ணுறுமதி யுடையோர்க் குரைப்பினு முணர்வுதி
யாதால். (34)

(இ—ள்) அலது - அன்றியும், நீ - நீ, ஏகின் - (ராஜ்யத்தினை விட்டுச்) செல்லின், அவநியும் - பூமியும், காப்பு - ரக்ஷிப்பு, அற்று - இன்றி, அவத்தில் - வீணாக, அலைந்திடும் - சலித்துக் கெடும், யாமும் - நாங்களும், சலநமது - (சஞ்)சலத்தினை, உறுவேம் - அடைவோம், இத் தகை - (ஆனதால்) இத் தன்மை (வாய்ந்த), எமை - எங்களை, நீ - நீ, தவிக்கவிட்டு - துன்புறவிட்டு, ஏகுதல் - செல்லுதல், கடன் - முறை, அன்று - அன்று, எமக்கு - (ஆனதால்) எங்கட்கு, ஈது - இதனை, இலகிட - விளங்கும்படி, அருள் - உரைத்தருள்வீராக, என - என்று, அமைச்சர் - மந்திரிமார்கள், இயம்பிட - கூற, [அதற்கு மஹாராஜன் விடை பகர்கின்றன்.] அரசனும் - மஹா ராசனும், பார்த்து - (மந்திரிமார்களை) நோக்கி, உலகம் - ஜகத்தினை, மெய் - சத்தியம், என - என்று, எண்ணுறு - கருதுகின்ற, மதி யுடையோர்க்கு - புத்தியினை யுடைய உங்கட்கு, உரைப்பினும் - (யாம்) கூறினும், உணர்வு - ஞாநம், உதியாது - உண்டாகாது (என்றனன்), (எ-று).

அவனியும் - உம் - எதிரது தழீஇய எச்ச வும்மை. அவத்திலே - அத்து - சாரியை. ஏ - அசை நிலை. அலைந்திடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. யாமும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். சலனமது - அது - பகுதிப் பொருள் விகுதி. ஈது - நீண்ட அண்மைச் சுட்டு. இயம்பிட - இடு - பகுதிப் பொருள் விகுதி. அரசனும் - உம் - இறந்தது தழீஇயது. பார்த்தே - ஏ - அசை நிலை. உடையோர் - வினையா லணையும் பெயர். உரைப்பினும் - உம் - இழிவு சிறப்பு. உதியாதால் - ஆல் - ஈற் றசை. அரசன் - எழுவாய். (அவாய் நிலையாற் பெற்ற) என்றனன் - பயனிலை. (மேற் கூறப்பட்ட செய்திகள்) செயப்படு பொருள். (34)

## அரசாக்ஷியால் வரும் துன்பம் கூறல்.

இவ்வர சியற்கை யற்பமற் றிதனு லெய்திடுந் துன்பினுக் களவின், றவ்வகை யதனை யூகமின் மையினு லறிகிலிர்

நீங்களின் பென்றே, எவ்வகை நினைந்தீ ரினியெக்கா
லுங்கட் கிதின்ப மலதெனத் தோன்றும், ஒவ்வமற் றிதனுக்
கூகமே தோன்றா துங்களுக் குலகயூ குதிக்கும். (35)

(இ—ள்) இவ் அரசு - இந்த ராஜ்யபாரத்தின், இயற்கை - தன்மை, அற்பம் - கேவல மானது (தாழ்ந்தது என்றபடி), இதனால் - இந்த ராஜ்யபாரத்தினால், எய்திடும் - (வந்து) பொருந்துகின்ற, துன்பினுக்கு - துக்கத்திற்கு, அளவு - எல்லை, இன்று - இல்லை, அதனை - அத் துக்க வது வாந் தன்மையினை, அவ் வகை - அவ் விதம் (உள்ளபடியே), நீங்கள் - நீங்கள், யூகம் - (சூக்ஷ்ம) புத்தி, இன்மையினால் - இல்லாததனால், அறிகிலிர் - உணர்கிலீர், இன்பு - (அத் துக்க வதுவைச்) சுக (வது), என்று - என, எவ்வகை - எவ் வாறு, நினைந்தீர் - உணர்ந்தீர், ஈது - இவ் விராஜ்ய பாரம், இன்பம் - சுக (வது), அலது - அல்லாதது, என - என்று, இனி - பின், எக் கால் - எப் பொழுது, உங்கட்கு - உங்களுக்கு, தோன்றும் - (புத்தியில்) விளங்கும், உங்களுக்கு - (ஆனதால்) உங்கட்கு, ஒவ்வம் அற்ற - சமானம் இல்லாத, இதனுக்கு - (அது துக்க வேதுவே யன்றி இன்ப வேது வன்று என்னும்) இவ் விவேகத்திற்கு ஏற்ற, ஊகம் - யுக்தி, தோன்றாது - உண்டாகாது, [பின் யாது உண்டாம் எனிற் கூறுகின்றார்.] உலக - ராஜ்ய பாரத்தை (இன்பம் வது வாகக் கருதி அதனை) விருத்தி செய்தற்கு வேண்டிய, யூகு - யுக்தி, உதிக்கும் - உண்டாகும், (எ-று).

மற்று - அசை நிலை. எய்திடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. துன்பினுக்கு - இன் - உ - இரண்டும் சாரியைகள். அதனை - அன் - சாரியை. அறிகிலர் - கு - சாரியை. இல் - எதிர் மறை இடை நிலை. இன்மையினால் - இன் - சாரியை என்றே ஊகமே - ஏ - இரண்டும் அசை நிலைகள். எக் கால் - கால் - காலம் என்பதன் விகாரம். அற்ற - இதனுக்கு - அற்றித

னுக்கு என அகரம் தொக்கது. இதனுக்கு - அன் - உ - இரண்டும் சாரியைகள். உங்களுக்கு - உ - சாரியை. இப் பாட்டுக்குளகம். அரசியற்கை - எழுவாய் - அற்பம் - பய னிலை. அளவு - எழுவாய். இன்று - பய னிலை. நீங்கள் - எழுவாய். அறிகிலிர் - பய னிலை. அதனை - செயப்படு பொருள். (நீங்கள்) - எழுவாய். நினைந்திர் - பய னிலை. வகம் - எழுவாய். தோன்றாது - பய னிலை. உலக யூகு - எழுவாய். உதிக்கும் - பய னிலை. (35)

மகா ராஜன் நாட்டை விட்டுச் செல்லலும், பட்டினத்தார் அனைவரும் பின் தொடர்ந்து புலம்பலும் கூறல்.

என்றுமற் றநேக மாவிரித் தரச னெடுத்தமைச் சர்கட்மக் கியம்பி, நின்றுபின் னவரை நிலுமென நிறுத்தி நிதிதுனும் பொன்மனை விடுத்தே, சென்றுபின் னகர வீதியி னடக்கத் திரண்டனை வர்களும்பின் றொடர்ந்து, வன்றுய ரடைந்து வாடியே மெலிந்து வாரியி னோசையி னழுதார். (36)

(இ—ள்) என்று - இவ் வாறு, அரசன் - மஹா ராஜன், அநேகம் ஆ(க) - நாநா வாக, விரித்து - விஸ்தரித்து, அமைச்சர்கள் தமக்கு - மந்திரிகளுக்கு, எடுத்து - எடுத்து, இயம்பி - கூறி, நின்று - (அவ் விடத்தில்) நின்று கொண்டு, அவரை - மந்திரி முதலியோரை, நிலும் - (இவ் விடத்திலே) நில்லுங்கள், என - என்று கூறி, நிறுத்தி - (அவரை) நிறுத்திவிட்டு, பின் - பின்னர், நிதி - செல்வங்கள், துனும் - நிறைந்திருக்கின்ற, பொன் மனை - அழகிய அரண்மனையை, விடுத்துச் சென்று - விட்டு நீங்கி, பின் - பின்பு, நகர வீதியில் - பட்டணத்தி லுள்ள (ராஜ) வீதியில், நடக்க - (பாதசாரியாய்ச்) செல்ல, அனைவர்களும் - (அப் பொழுது பட்டணத்தி லுள்ளார்) யாவரும், திரண்டு - (ஒன்று)

சேர்ந்து, பின் - (அரசன்) பின்னே, தொடர்ந்து - நில்லாது சென்று, வன் (மை) - கொடிய, துயர் - துக்கத்தினை, அடைந்து - பொருந்தி, வாடி - சோர்ந்து, மெலிந்து - இளைத்து, வாரியின் - சமுத்திரத்தினது, ஓசையின் - சப்தம் போல, அழுதார் - உரக்கச் சத்த மிட்டுக்) கதறினர், (எ-று).

மற்று - அசை நிலை. அநேக மா - அநேக மாக என்பத னீற்றுக் குறுக்கம். அமைச்சர்கடமக்கு - தம் - அ - இரண்டும் சாரியைகள். விடுத்தே - வாடியே - ஏ - இரண்டும் அசை நிலைகள். அனைவர்களும் - உம் - முற் றும்மை. வாரியின் - இன் - சாரியை. ஓசையின் - இன் உவம உருபு. அனைவர்களும் - எழுவாய். அழுதார் - பய னிலை. (36)

தன்னைப் பின் தோடர்ந்து வந்த பட்டினத்தாருக்கு மகா ராஜன் சமாதாநங் கூறல்.

அவரவர் வினையி னவரவர் வருவா ரவரவர் வினையளவுக்கே, அவரவர் போக மென்றதே யாயி னுருக்கார் துணையதா குவர்கள், அவரவர் தேக முளபொழு துடனே யாதர வாரென நாடி, அவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமோ. (37)

(இ—ள்) அவர் அவர் - (இவ் வுலகில்) அந்த அந்த ஜீவர்களினது, வினையின் - கர்மத்தினால், அவர் அவர் - அந்த அந்த ஜீவர்கள், வருவார் - (வந்து) பிறப்பார்கள், அவர் அவர் - (ஆனதால்) அந்த அந்த ஜீவர்களினது, வினை - கர்ம, அளவுக்கு - மட்டிற்குத் தகுந்தபடி, அவர் அவர் - அந்த அந்த ஜீவர்களின், போகம் - சுக துக்காநுபவம் (ஆம்), என்றது - எனச் சாஸ்திரங் கூறியது, ஆயின் - (உண்மை) யாகில், ஆருக்கு - யாவர்க்கு, ஆர் - யாவர், துணையது - ஆதரவு, ஆகுவர்கள் - ஆவர், அவர்

அவர் - (ஜீவர்கட்கு ஜீவர் துணை அல்லராகலின்) அந்த அந்த ஜீவர்கள், தேகம் - (தம் தம்) சரீரம், உள பொழுது - இருக்கும் காலத்து, ஆதரவு - (தமக்கு உண்மைப்) பற்றுக்கோடு, ஆர் - யாவர், என - என்று, உடனே - சீக்கிரமாக, நாடி - விசாரித்து, அவர் அவர் - அந்த அந்த ஜீவர்கள், அடைதல் - (தமக்கு உண்மைப் பற்றுக் கோடாயுள்ள பரமேசுவரனைச்) சார்தல், நெறி - நியாய மாம், கன்மத்து - கர்மத்தினால், அடையும் - பொருந்து கின்ற, ஆதரவு - பற்றுக்கோடு, ஆதரவு - (உண்மைத்) துணை, ஆமோ - ஆகுமோ (ஆகாது), (எ-று).

வினையின் - இன் - சாரியை. அளவுக்கே - என்றதே - ஏ - இரண்டும் அசை நிலைகள். ஆர் - யாவர் என்னும் வினாப் பெயரின் விகாரம். துணையது - அது - பகுதிப் பொருள் விகுதி. ஆகுவர் கள் - விகுதி மேல் விகுதி வரப் பெற்றது. உடனே - ஏ - தேற்றம். கன்மத்து - அத்து - சாரியை. ஆமோ - ஓ - எதிர் மறை. அவரவர் - எழுவாய். வருவார் - பய னிலை. ஆர் - எழு வாய். ஆகுவர்கள் - பய னிலை. அடைதல் - எழுவாய். நெறி - பய னிலை. ஆதரவு - எழுவாய். ஆமோ - பய னிலை. (37)

## கர்மத்தால் வரும் சம்பந்தத்தினைக் கூறல்.

வினையுள வளவுங் கூடியே நிற்கும் வினையகன் றிடிற் பிரிந் திடுமால், வினையினால் வருமா தரவினி னியற்கை மெய்யுணர் வத்தகை யன்றே, வினையிலை யுங்க ளிடத்தினா னிருக்க மெய்யுணர் வொன்றையே நாடி, வினையறு காநம் புகுதவே வேண்டி விரும்பினே னீர்நிலு மிங்ஙன். (38)

(இ—ள்) வினையினால் - கர்மத்தினால், வரும் - உண்டா கின்ற, ஆதரவினின் - பற்றுக் கோட்டின், இயற்கை - தன்மை யானது, வினை - கர்மம், உள - இருக்கின்ற, அளவும் - வரையும்,

கூடி நிற்கும் - சம்பந்தித்திருக்கும், வினை - கர்மம், அகன்றிடில் - நீங்கில், பிரிந்திடும் - நீங்கிப் போம், மெய் உணர்வு - (ஆத்ம) தத்துவ ஞானமோ, அத் தகை அன்று - அவ் வித (ஆதாவின் இயற்கை போன்றது) அன்று, நான் - (ஆனதால்) நான், உங்களிடத்தில் - உம்மிடை, இருக்க - (பொருந்தி) இருத்தற்கு, வினை - கர்மம், இலை - இல்லை, மெய் உணர்வு - (ஆத்ம) தத்வ ஞானம், ஒன்றையே - ஒன்றனையே, நாடி - கருதி, வினை அறு - (இலௌகிகாதி கிருத்திய) தொந்தரவாக ளற்ற, காநம் - வநத்தினை, புகுத - அடைய, வேண்டி - வேண்டும் (என), விரும்பினேன் - இச்சை கொண்டேன், இங்ஙன் - (ஆனதால்) இவ் விடத்தில், நீர் - நீங்கள், நிலும் - நிற்கக் கடவீர், (எ-று).

கூடியே - அன்றே - புகுதவே - ஏ - மூன்றும் அசை நிலைகள். அகன்றிடில் - பிரிந்திடும் - இடு - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். பிரிந்திடுமால் - ஆல் - அசை நிலை. ஆதாவினினின் - இன் - இரண்டும் சாரியைகள். இயற்கை - எழுவாய். நிற்கும் - பய னிலை. இயற்கை - எழுவாய். பிரிந்திடும் - பய னிலை. மெய்யுணர்வு - எழுவாய். (அத் தகை) யன்று - பய னிலை. வினை - எழுவாய். இலை - பய னிலை. யான் - தோன்றா எழுவாய். விரும்பினேன் - பய னிலை. காநம் - செயப்படு பொருள். நீர் - எழுவாய். நிலும் - பய னிலை. இப் பாட்டுக் குளகம். (38)

## மகா ராஜனைச் சுற்றத்தார் தடுத்தலைக் கூறல்.

என்றுநல் வேந்த னேதிலார் போல வேகின னனை வருங் கண்ணீர், நின்றெதிர் சொரிய வாய்விட்டே யலறி நின்றனர் தமர்கள்பின் னேகி, இன்றெமை யாவர் காத்தளித் திடுவ ரினியைநீ யேகுத னீதி, அன்றென வுரைத்தா ரவர்களை நோக்கி யரசனீ துரைத்தனனன்றே. (39)

(இ—ள்) என்று - (என) இவ் வாறு (கூறி விட்டு), நல் - நல்ல, வேந்தன் - அரசன், ஏதிலார் - அயலார், போல - போன்று, ஏகினன் - (ஆரண்யத்தினை நோக்கிச்) சென்றனன், அனைவரும் - யாவரும், எதிர் நின்று - முன்னர் நின்று, கண்ணீர் - கண்ணீரை, சொரிய - சொரிந்து கொண்டு, வாய்விட்டு - வாய் திறந்து, அலறி - (ஓ வென்று) கதறி, நின்றனர் - நின்று விட்டனர், [சுற்றத்தாருக்கு மஹா ராஜன் சமாதாநங் கூறல்.] தமர்கள் - சுற்றத்தார்கள், பின் - (அரசன்) பின்னால், ஏகி - (தொடர்ந்து) சென்று, இன்று - இன்று (முதல்), எமை - எங்களை, யாவர் - யார், காத்து அளித்திடுவர் - காப்பாற்றி இரக்ஷிப்பார், இனியை - விரும்பத் தகுந்தவரே, நீ - நீர், ஏகுதல் - (ஆரண்யத்திற்குச்) செல்லுதல், நீதி அன்று - நியாயம் அன்று, என - என்று, உரைத்தார் - கூறினர், அரசன் - மஹா ராஜன், அவர்களை - அவ் வாறு கூறியவர்களை, நோக்கி - பார்த்து, ஈது - (மேல் வரும்) இதனை, உரைத்தனன் - கூறினன், (எ-று).

அனைவரும் - உம் - முற்றும்மை. விட்டே - ஏ - அசை நிலை. இனியை - அன்மை விளி. அன்று - ஏ - அசை நிலைகள். வேந்தன் - எழுவாய். ஏகினன் - பய னிலை. அனைவரும் - எழு வாய். நின்றனர் - பய னிலை. தமர்கள் - எழுவாய். உரைத்தார் - பய னிலை. அரசன் - எழுவாய். உரைத்தனன் - பய னிலை. (39)

மகா ராஜன் சுற்றத்தார்க்குச் சமாதாநங் கூறல்.

உறவாகு மெனவெனைநீர் தொடர்வதியல் பன்றாகு முயிர்கட் கெல்லாம், உறவாகு ஞாநகனி பகையாகு மஞ்ஞாந முய்த்து நோக்கின், உறவான வதையடைந்து பகையான விதைநீங்கி யொருமை யாக, உறவாத றனக் குத்தா னேயெனமற் றுறவுவிடுத் துறையு மென்றான். (40)

(இ—ள்) நீர் - நீங்கள், எனை - என்னை, உறவு ஆகும் - (உங்கள்) பந்து வாம், என - என்று கருதி, தொடர்வது - பின்பற்றி வருவது, உய்த்து - விசாரித்து, நோக்கின் - பார்க்கு மிடத்து, இயல்பு - தகுதி, அன்றாகும்-அல்லாததாம்(ஏனெனின்), உயிர்கட்கு எல்லாம் - சீவ ரனைவர்க்கும், ஞானம் - பிரஹ்மா பிந்ந யதார்த்த சொரூப) ஞாநமே, உறவு - (உண்மை யான) பந்து, ஆகும் - ஆம், அஞ்ஞானம் - (பந்த எது வான) அஞ்ஞானம், நனி - மிகவும், பகை ஆகும் - விரோதி யாம், உற வான - (ஆனதால்) (மெய்ப்)பந்து வான, அதை - அந்த ஞாநத்தை, அடைந்து - உற்று, பகை ஆன - சத்துரு வான, இதை - இவ் வஞ்ஞாநத்தை, நீங்கி - (விட்டு) விலகி, ஒருமை ஆக - நிச்சய மாக, தனக்கு -(தன்)றனக்கு, உறவு - பந்து, ஆதல் - ஆகுதல், தானே - (தான்)றானேயாம், என - எனக் கருதி, மற்று - மற்றைய, உறவு - (பொய்ப்) பந்துக் களை, விடுத்து - நீக்கி, உறையும் - வசிப்பீர்க ளாக, என்றான் - என (மஹா ராஜன்) கூறினன், (எ-று).

எனை - என்னை என்பதன் விகாரம். தானே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். உறவு, பகை - என்னும் பண்புப் பெயர்கள் ஆகு பெயர்க ளாய் அவ் வப் பண்பிகளை உணர்த்தின. மற்று - பிறிதுப் பொருளது. தொடர்வது - எழுவாய். அன்றாகும் - பய னிலை. ஞாநம் - எழுவாய். உறவாகும் - பய னிலை. அஞ்ஞாநம் - எழுவாய். பகையாகும் - பய னிலை. அரசன் - தோன்றா எழுவாய். என்றான் - பய னிலை. (மேற் கூறப்பட்டவை) செயப்படு பொருள். (40)

## மகா ராஜனை மாதா பிதாக்கள் தடை செய்ததைக் கூறல்.

தந்தைதா யிருவருந்தம் புதல்வனெனும் வாஞ்சையி
னாற் றாம்பின் னேகி, மைந்தவா வெங்களிரு வரையுமெவர்
காப்பதற்கு வைத்தாய் நீதான், சிந்தைதா னுனக்கெங்கே

மகனேயுன் றிருமுகத்தைத் திரும்பிக் காட்டாய், னொந்து
தான் பெற்றவயி றெரிகின்ற தெனவுரைக்க நோக்கி
மன்னன். (41)

(இ—ள்) தந்தை - பிதாவும், தாய் - மாதாவு மாகிய, இரு
வரும் - இரண்டு பேரும், தம் - தம்முடைய, புதல்வன் -
புத்திரன், எனும் - என்னும், வாஞ்சையினல் - பிரியத்தினல்,
பின் - (அவ் வரசன்) பின்னே, ஏகி - சென்று, மைந்த - குழந்
தாய், ஆ - ஆச்சரியம், எங்கள் - எங்கள், இருவரையும் -
இரண்டு பெயரையும், எவர் - யாவர், காப்பதற்கு - ரக்ஷிப்பதற்
காக, நீ - நீ, வைத்தாய் - வைத்துப் போகின்றாய், உனக்கு -
நினக்கு, சிந்தை - மந மானது, எங்கே - எவ் விடத்திருக்கின்றது,
மகனே - குழந்தாய், உன் - நின், திரு - அழகிய, முகத்தை -
வதநத்தை, திரும்பி - திருப்பி, காட்டாய் - காண்பிப்பாயாக,
நொந்து - (பத்து மாதம்) வருந்தி, பெற்ற - ஈன்ற, வயிறு -
உதரம், எரிகின்றது - தகிக்கின்றது, என - என்று, உரைக்க -
(இருவர்களும்) கூற, மன்னன் - (அவ் வாறு கூறிய மாதா பிதாக்
களை) அரசன், நோக்கி - பார்த்து, (எ-று).

தந்தைதாய் - உம்மைத் தொகை. இருவரும் - உம் - முற்று.
வாஞ்சையினுற் றாம் - தாம் - அசை நிலை. மைந்த வா - மைந்த -
அண்மை விளி. ஆ - பெருந் துக்கத்தைக் குறிக்கும் ஓ ரிடைச்
சொல். அல்லது, ஓ ரதிசய இரக்கக் குறி. நீ தான் - சிந்தை
தான் - நொந்து தான் - தான் - மூன்றும் அசை நிலைகள்.
எங்கே - ஏ - வினா. மகனே - ஏ - விளி. இப் பாட்டுக்
குளகம். (41)

மகா ராஜன் மாதா பிதாக்களுக்கு சமாதாநஞ் சாற்றலைக்
கூறல்.

அறிவைநோக் கிடிலதற்குத் தாய்தந்தை யிலையிவ்வுட
லதனை நோக்கில், இறையுநீ ருபாதாந காரணமன்
றிருமாயை யினிலுண் டாகும், குறியிதுவிங் காயின்மணி

லெனைப்பெறு தவரிலேயக் கொள்கை நீரு, நிறையுமதி யிலரேநீர் நில்லுமென விருவரையு நீத்துப் போனன். (42)

(இ—ள்) அறிவை - (சீவ பத வாச்சியார்த்த மாகிய சேதந சட பாக மிரண்டனுள்) சேதநத்தை, நோக்கிடில் - விசாரித்துப் பார்க்கில், அதற்கு - அச் சேதநத்திற்கு, தாய் - (நித்தியத் தன்மை யிருத்தலின்) மாதாவும், தந்தை - பிதாவும், இலே - இல்லே, இவ் வுடலதனே - (சட மாகிய) இந்தச் சரீரத்தினைக் குறித்து, உபா தாந காரணம் - முதற் காரணம், நோக்கில் - விசாரிக்கில் (அதற்கு), இறையும் - அற்பமும், நீர் - நீங்கள், அன்று - அல்ல [யாங்கள், உபாதாந காரணம் அன்றயின், பின் உபாதாந காரணம் யாது என்னும் வினவிற்கு, மாயை உபாதாந காரணம்; அதனின்றும் இந்தச் சரீரம் உண்டாயிற்று என்று கூறுகின்றர்]. இரு - பெருமை பொருந்திய, மாயையினில் - மாயை யாகிய உபாதாநத்தி னின்றும், உண்டாகும் - உற்பத்தியாகும், இங்கு - இவ்விடத்து, இது - இதுவே, குறி - (சாஸ்திரக்) கிரமம், [நாங்கள் நிமித்த காரணமும் அலேமோ வெனிற் கூறுகின்றர்]. ஆயின் - (நீங்கள்) நிமித்த காரண ராயின் (ஆகுக), மணில் - பூமியின்கண் (நீங்கள் செநிப்பித்தமை போல்), எனே - என்னே, பெருதவர் - செநிப்பி யாதவர் (எவரும்), இலே - இல்லே (அவர்க ளனைவரையும் பிராரப்த வசத்தால் விட்டுப் பிரிந்து வந்திருக்கின்ற எனக்கு), நீரும் - நீங் களும், அக் கொள்கை - அத் தன்மையே (ஆவீர்கள்), நிறையும் - (ஆனதால்) பூரண, மதி யிலரே - புத்தி யில்லாதவரே, நீர் - நீங்கள், நில்லும் - நிற்பீராக, என - என்று கூறி, இருவரையும் - (மாதா, பிதா) இருவரையும், நீத்து - விட்டு, போனன் - (மஹா ராஜன் ஆரணியத்தை நோக்கிச்) சென்றன், (எ-று).

நோக்கிடில் - இடு - பகுதிப் பொருள் விகுதி. உடலதனே - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை, இறையும் -

உம் - முற்று. மாயையினில் - இன் - சாரியை. ஆயின் - என்புழி, நிமித்த காரணம் அவாய் நிலையால் வருவிக்கப் பெற்றது. மணில் - என்பது, மண்ணில் என்பதன் விகாரம். நீரும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். மதியிலரே - ஏ - விளி யுருபு. இருவரையும் - உம் - முற் றும்மை. அரசன்-தோன்று எழுவாய். போனன் பய னிலை. (42)

மனைவி மகா ராஜனைத் தடை செய்தலைக் கூறல்.

அரிவையர்க டமகிலக் கணம்கூறு நூலதனி லதனை
யெல்லாம், உரிமையதா வுடையவளா மினியமனை தொடர்ந்
தேகி யுருகி நின்று, பரிவினுட னடிகள்பணிந் தரற்றியே
பதைபதைத்துப் பனிகண் பாயத், தரியெனுமை விடுத்துலக
மதனிலொரு கணமேனுஞ் சாவே னென்றாள். (43)

(இ—ள்) அரிவையர்கள் தமக்கு - பெண்கட்கு, இலக் கணம் - லக்ஷணங்களை, கூறும் - பிரதிபாதிக்கின்ற, நூலதனில் - (சாமுத்திரிகா) சாஸ்திரத்தி லுள்ள, அதனை எல்லாம் - அவ் விலக்ஷணங்க ளனைத்தையும், உரிமையது ஆ(க) - (தனக்கு) உரித் தாக, உடையவள் ஆம் - கொண்டவ ளாகிய, இனிய - விரும்பத் தகுந்த, மனை - மனைவி, தொடர்ந்து - (பின்) தொடர்ந்து, ஏகி - சென்று, உருகி நின்று - (அனலிற் காட்டிய மெழுகைப் பார்க்கிலும் மந) நெகிழ்ச்சி யடைந்து, பரிவின் உடன் - விருப்பத்தோடு, அடி கள் - (திரு) வடிகளில், பணிந்து - நமஸ்கரித்து, பதை பதைத்து - மிக வருந்தி, கண் - கண்களில் (இருந்து), பனி - ஜல மானது, பாய - (பூமியில்) ஓட, அரற்றி - அழுது (கொண்டு), உமை - தேவ ரீரை, விடுத்து - விட்டு, உலகமதனில் - உலகத்தில், ஒரு கண மேனும் - ஒரு க்ஷணமேனும், தரியேன் - இருக்க மாட்டேன், சாவேன் - பிராணத் தியாகஞ் செய்வேன், என்றாள் - எனக் கூறினள், (எ-று).

மஹா ராஜனுக்குப் பெண் ணுசை யின் றென்பதை உணர்த்து வான் கருதி, பெண் இலக்கணம் கூறும் நூல்களில் உள்ள இலக் கணங்கள் யாவும் உடைய மனைவி என்பது தோன்ற, "அரிவையர் கடமக் கிலக்கணங் கூறு நூலதனி லதனை யெல்லாம் உரிமையதா வுடையவளா மினிய மனை" என்றும், "தொடர்ந்தேகி யுருகி நின்று பரிவினுட னடிகள்பணிந் தரற்றியே பதைபதைத்துப் பணிகண் பாயத் தரியேனுமை விடுத்துலக மதனிலொரு கணமேனுஞ் சாவே னென்றுள்" என்றும் கூறி விளக்கினர்.

*அரிவையர்கடமக்கு - தம் - அ - சாரியைகள். நூலதனில் - உலகமதனில் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அதனை - பன்மையில் ஒருமை மயக்கம். உரிமையதா - அது - பகு திப் பொருள் விகுதி. ஆ - ஆக என்பதன் விகாரம். பரிவினுடன் - இன் - சாரியை. அரற்றியே - ஏ - அசை நிலை. கணமேனும் - உம் - முற் றும்மை. மனை - எழுவாய். என்றுள் - பய னிலை. (அவள் முற் கூறி வந்த செய்திகள்) - செயப்படு பொருள்.* (43)

மகா ராஜன் மனைவிக்குச் சமாதானஞ் சாற்றலைக் கூறல்.

*நின்னுடைய நாயகனை நினதுள்ளே யுறநோக்கி நிற்க மாட்டா, துன்னுடைய நாயகனென் றென்றனையே கருதிநீ யுழல்வ தென்னே, மின்னனைய விடையாய்கே ளனைவருக்கு நாயகனோர் மேலா மீசன், அன்னவனை யேதேடிப் போ கின்றே னெனவரசற் கரிவை சாற்றும்.* (44)

(இ-ள்) *மின் - மின்னல், அனைய - போன்ற,* இடையாய் - இடை *யினை யுடைய பெண்ணே!* , கேள் - (*யாம் கூறுவதைக்*) கேட்பாயாக, *நின் னுடைய - உன் னுடைய, நாயகனை - (அந்தரியாமி யாகிய உண் மைத்) தலைவனை, நினது - உனது, உள்ளே - மனத்தின்கண், உற - பொருந்தும்படி, நோக்கி - பார்த்து, நிற்கமாட்டாது - (நிலை பெற)*

இருக்காது, என்தனையே - (உண்மைப் பதி யல்லாத அற்ப சீவ ஞன) என்னையே, உன் னுடைய - உனது, நாயகன் - தலைவன், என்று - என, நீ - நீ, கருதி - நினைத்து, உழல்வது - (என் பின்னே) சுழன்று திரிவது, என்னே - என்ன அறியாமை, அனைவருக்கும் - (உலகத்தில் உள்ளார்) யாவருக்கும், நாயகன் - தலைவன், ஓர் - ஒப்பற்ற, மேல் ஆம் - உயர்வு பொருந்திய, ஈசன் - பரமேசுவரனே (ஆவன்), அன்னவனையே - அப்படிப்பட்ட பரமேசுவரனையே, தேடி - (விசாரித் தறிய) நாடி, போகின்றேன் - (ஆரணியத்தை நோக்கிச்) செல்லுகின்றேன், என - என்று (மஹா ராசன்) கூற, அரசற்கு - (அங்ஙன் கூறிய) மஹா ராஜனுக்கு, அரிவை - (இளம் பெண் ணுகிய அவன்) மனைவி, சாற்றும் - (பின் வருபவற்றைக்) கூறுவா ளாயி னள் (எ-று).

உள்ளே - ஏ - அசை நிலை. என்றனையே - தன் - சாரியை. ஏ - பிரி நிலை. என்னே - ஏ - அசை நிலை. அனைவருக்கும் - உம் - முற்று. அன்னவனையே - தேற்றம். உழல்வது - எழுவாய். என் - பய னிலை. நாயகன் - எழுவாய். ஈசன் - பய னிலை. அரிவை - எழுவாய். சாற்றும் - பய னிலை. (44)

"மனைவி கணவனை விட்டுத் தனித் திருக்க விதி யில்லை" என்று மனைவி கூறலைக் கூறல்.

ஞானமா னதுபொதுவே நூலதனிற் றுறவதற்கு நவில்வ தில்லாள், ஆனமா தினையலவோ விடுகவென வறையும்பதி யான வுன்னை, ஈனமா விடுகவென வறை யுமதோ துறவறமிங் கெனக்கென் சொல்லும், ஆனதா லுமையொழிந்து கதியிலையே வெனவெணியா னடுத்தே னென்றாள். (45)

(இ—ள்) ஞானம் - (தத்துவ) ஞானம், ஆனது - ஆனது, பொது - (ஸ்திரீ புருஷர் இருவருக்கும்) சமம் (என்பதாம்), நூல தனில் - (ஞான) சாஸ்திரத்தில், நவில்வது - பிரதிபாதிக்கப் படுவது, துறவதற்கு - (ஆடவரின்) சந்நியாசத்திற்கு, இல்லாள் ஆன - மனைவி யான, மாதினை - பெண்டீரை, அலவோ - அல்லவா, விடுக - தியாகஞ் செய்க, என - என்று, அறையும் - கூறும், இங்கு - இவ் விடயத்தில், எனக்கு - (ஸ்திரீ யான) அடியவளுக்கு, துற வறம் - சந்நியாச சாஸ்திரம், பதி ஆன - நாயக னாகிய, உன்னை - தேவரீரை, ஈனம் ஆ(க) - (யாவரும்) நிந்திக்கும்படியாக, விடுக - தியாகம் செய்க, என - என்று, அறையுமதோ - கூறுமோ? (கூறாது), என் சொல்லும் - என்ன கூறும், ஆனதால் - (எனக்குத் தேவரீரை விடுத லாகிய சந்நியாசத்தில் அதிகாரம் இல்லாத) காரணத்தினால், உமை - தேவரீரை, ஒழிந்து - விட்டு நீங்குதலால், கதி - மோக்ஷம், இலை - இல்லை, என - என்று, எணி - கருதி, யான் - நான், அடுத்தேன் - (உம்மை வந்து) கிட்டினேன், என்றாள் - எனக் கூறினாள், (எ-று).

"உமை யொழிந்து கதியிலையே என எணி" என்பதற்கு உதாரணம்: வாசிட்டம் 6-வது நிருவாணப் பிரகரணம் 9-வது சிகித் துவசன் கதை, "பதி யொழிந்து கதியில்லைக் குலமகளிர்க் காசனை நாம் பயிறு மென்னு" (வாசிட்டம் 76) என்று கூறியிருத்தலைக் கொள்க.

ஞான மானது - ஆனது - முதல் வேற்றுமைச் சொல் லுருபு. பொதுவே - எ - அசை நிலை. நூலதனில் - துறவதற்கு - அறையு மதோ - அது - மூன்றும் பகுதிப் பொருள் விகுதிகள். அன் - இரண் டும் சாரியைகள். ஓ - எதிர் மறை. அலவோ - அல்லவோ என்பதன் இடைக் குறை. ஓ - பிரி நிலை. இது - ஒருமையிற் பன்மை மயக்கம். என் சொல்லும் - என் - எவன் என்னும் வினா வினைக் குறிப்பின்

விகாரம். இலேயே - இலே - இல்லே என்பதன் இடைக் குறை. ஏ - அசை நிலே. உமை - உம்மை என்பதன் இடைக் குறை. ஈனமா - ஈன மாக என்பதன் கடைக் குறை. எணி - எண்ணி என்பதன் இடைக் குறை. (அரிவை) - எழுவாய். என்முள் பய னிலே. (மேற் கூறி வந்த செய்தி) - செயப்படு பொருள். (45)

மகா ராஜன் மனேவிக்குச் சமாதாநங் கூறி விட்டு, வநம் நோக்கிச் செல்லுதலேக் கூறல்.

ஆகமத்தின் விதிதவரு தறைந்தனே நீ விவேகியே யாவா யானும், தேகமுதற் பிரபஞ்ச மதனினசை விடுத்து வநஞ் செல்லா நின்றேன், நாகமுலே யாயெனுரை தடுத்த லுன்றன் விரதமல நாடு தன்னில், போகுதியென் றவளே விடுத் தேதிலரைப் போலகன்று போகா நின்முன். (46)

(இ-ள்) நாகம் - பருவதம் (போலும்), முலேயாய் - ஸ்தநங் களே யுடைய பெண்ணே, நீ - நீ, ஆகமத்தின் - சாஸ்திரத்தின், விதி, ஒழுங்கு, தவருது - கடவாது, அறைந்தனே - கூறினுய், விவேகியே ஆவாய் - (அதனுல்) விவேகியே ஆகின்முய், யானும் - நான், தேக முதல் - சரீர முத லான, பிரபஞ்சமதனில் - பிரபஞ்சத்தில், நசை - ஆசையை, விடுத்து - நீக்கி, வநம் - காட்டிற்கு, செல்லாநின்றேன்- போகின்றேன், என் - (உன்னுல் நாயக னுகக் கருதப்பட்ட) எனது, உரை - வாக்கியத்தை, தடுத்தல் - மறுதலித்தல், உன் - (பதி விரதா ஸ்திரீயாகிய) நினது, விரதம் - தர்மம், அல - அன்று, நாடுதன்னில் - (ஆனபடியால்) பட்டணத்திற்கு, போகுதி - செல்லக்கடவாய், என்று - என (மறு மொழி கூறி), அவளே - மனேவியை, விடுத்து - விட்டு, எதிலரை - அயலாரை, போல் - போல, அகன்று - விலகி (அல்லது) பிரிந்து, போகாநின்முன் - போனுன் (எ-று).

விவேகியே - ஏ - தேற்றம். யானும் - உம் - அசை நிலை. பிரபஞ்சமதனின் - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. உன் றன் - நாடுதன்னில் - தன் - இரண்டும் சாரியைகள். விரத மல - அல - ஒருமையிற் பன்மை மயக்கம். நாடுதன்னில் - நான்க னுருபு நிற்க வேண்டிய விடத்து ஏழ னுருபு வந்தமை உருபு மயக்கம். செல்லாநின்றேன் - போகாநின்றான் - இரண்டும் செய்யா என்னு வாய் பாட்டு உடன் பாட்டுத் தெரி நிலை வினை முற்று. (மஹாராசன்) - எழுவாய். போகாநின்றான் - பய னிலை. (46)

## மனைவி மகா ராஜனை நோக்கி வருந்தலைக் கூறல்.

விரிவாய ஞானமதை யுணர்ந்தாலு மடந்தைபதி
விலங்க நிற்றல், அரிதாய தகைமையினு லேங்கியே பதை
பதைத்து மவனை நோக்கித், தரியாது கதறியே வினை
தனையே நொந்துதான் றளர்ந்து நின்று, தெரியாது
மறைந்தவிடந் தனின்மிகவு முருகியே தேம்பி வீழ்ந்து. (47)

(இ—ள்) விரிவு ஆய - பூரண மான, ஞானமதை - ஞான சாஸ்திரங்களை, உணர்ந்தாலும் - அறிந்திருப்பினும், மடந்தை - மனைவி, பதி - கணவனை, விலங்க - (விட்டு) நீங்கும்படி, நிற்றல் - இருத்தல், அரிது ஆய - கூடாத, தகைமையினால் - தன்மையினால், ஏங்கி - ஏக்க முற்று, பதை பதைத்தும் - (மனம்) துடி துடித்தும், அவனை - மஹா ராஜனை, நோக்கி - பார்த்து, கதறி - அலறி, தரியாது - (பூமியில்) நில்லாது, வினைதனை - கருமத்தினை (நினைந்து), நொந்து - வருத்த முற்று, தளர்ந்து நின்று - தளர்ச்சி யடைந்து, தெரியாது - புலப்படாது, மறைந்த - (மஹா ராஜன்) மறைபட்ட, இடந்தனில் - இடத்தில், மிகவும் - அதிக மாக, உருகி - நெகிழ்ச்சி யடைந்து, தேம்பி - கவலையோடு, வீழ்ந்து - (தரையில்) வீழ்ந்து. (எ-று).

ஞானமதை - அது - பகுதிப் பொருள் விகுதி. ஞானம் - ஈண்டு ஆகு பெயராய் ஞான சாத்திரத்தை யுணர்த்திற்று. உணர்ந்தாலும் - உம் - உயர்வு சிறப்பு. ஏங்கியே - கதறியே - உருகியே - ஏ - மூன்றும் அசை நிலைகள். பதை பதைத்தும் - பிரிந் திசையா இரட்டைக் கிளவி. உம் - எதிரது தழீஇயது. வினைதனையே - இடந்தனில் - தன் - இரண்டும் சாரியைகள். ஏ - பிரி நிலை. நொந்து தான் - தான் - அசை நிலை. மிகவும் - உம் - அசை நிலை. இப் பாட்டுக் குளகம். வீழ்ந்து - என்னும் வினை யெச்சம் அடுத்த பாவில் 'புலம்பி' என்னும் வினை யெச்சங் கொண்டது. (47)

மனைவி வருத்தம் உற்று, மாமன் வீடு போய்ச் சேர்தலைக் கூறல்.

வேந்தனே யுனைவிடுத்து முலகமதி லிருக்கவோ விதித்
தா னீசன், தீர்ந்ததோ வுமக்கெனக்கும் வினைதானு மின்
றளவிற் சேர்ந்து நிற்கும், போந்தவுமை யெக்காலங் காண்
பேனு னினியெனவே புலம்பி மாதும், சாந்தனள்பின்
றிரும்பியே நகரதனின் மாதுலன்றன் சார்பு தன்னில். (48)

(இ-ள்) வேந்தனே - அரசரே, உனை - தேவரீரை, விடுத்தும் - விட்டுப் பிரிந்தும், உலகமதில் - (இந்த) லோகத்தில், இருக்கவோ - இருக்கும்படியாகவா, ஈசன் - பரமேசுவரன், விதித்தான் - நியமித்தான், உமக்கு - உங்கட்கும், எனக்கும் - எனக்கும், சேர்ந்து - (பரஸ்பரம்) கூடி, நிற்கும் - இருத்தற் (கேதுவா) யுள்ள, வினைதானும் - கருமமும், இன்று அளவில் - இன்றோடே, தீர்ந்ததோ - நீங்கிவிட்டதா?, போந்த - (காட்டிற்குச் செல்வான் பிரிந்து) வந்த, உமை - தேவரீரை, இனி - (இதற்கு) மேல், எக் காலம் - எப்பொழுது, நான் - நான், காண்பேன் - தரிசிப்பேன், என - என்று, மாதும் - மனைவியும், புலம்பி - வருத்த முற்று, பின் - பின்னர்,

திரும்பி - (வந்த வழியே) மீண்டு போய், நகரதனில் - மா புரிப் பட்டணத்தில், மாதுலன் - மாமனுரது, சார்புதன்னில் - வீட்டினை, சார்ந்தனள் - சேர்ந்தாள் (எ-று).

வேந்தரே உமை என உயர்த்தற்கட் பன்மையில் நிற்க வேண்டிய விடத்து, "வேந்தனே யுனை" என வந்தமை பான் மயக்கு. விடுத்தும் - உம் - இறந்தது தழீஇயது. உலகமதில் - நகரதனில் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அன் - சாரியை. இருக்கவோ - ஓ - கழி விரக்கம். தீர்ந்ததோ - ஓ - வினு. உமக்கும் எனக்கும், என நிற்க வேண்டிய எண் ணும்மைகளில், முதலது தொக்கி, "உமக் கெனக்கும்" என நின்றது. வினைதானும் - தான், உம் - அசை நிலைகள். உமை - உம்மை என்பதன் இடைக் குறை. இனி - கால எல்லைப் பொருள் குறிக்கும் ஓர் இடைச் சொல். எனவே - திரும்பியே - ஏ - இரண்டும் அசை நிலைகள். மாதும் - உம் - இறந்தது தழீஇயது. மாதுலன் றன் - சார்புதன்னில் - தன் - இரண்டும் சாரியைகள். சார்புதன்னில் - ஈண்டு இரண்ட னுருபு, 'தூணின்கட் சார்ந்தான்' என்புழிப் போல ஏழ னுருபுடன் வந்தது. சார்ந்தனள் - பய னிலை. சார்பு - செயப்படு பொருள். (48)

வநம் சென்ற மகா ராஜன் நிலைமையினைக் கூறல்.

அரசனந்த நகர்விடுத்துத் தேசநா டுகளுமகன் றடவி
சென்றே, இரவுபக லகநிலையே நிலையாக விருந்தவர்க
ளிடமே சேர்ந்து, பரகுருவி னுபதேசத் தரியபொருள்
வினவியவர் பகரக் கேட்டுத், திரமநமா யொருவராற்
கலங்காத ஞாநியாய்த் தீர ஞகி. (49)

(இ—ள்) அரசன் - மஹா ராஜன், அந்த - அம் மாபுரி (என்னும்), நகர் - பட்டணத்தை, விடுத்து - விட்டு நீங்கி, தேசம் - (இடையி லுள்ள) தேசங்களையும், நாடுகளும் - (ஏனைய) பட்டணங்

களையும், அகன்று - தாண்டி, அடவி - காட்டில், சென்று - போய், பகல் இரவு - அகோராத்திரம், அகம் நிலையே - அந்தர் முக திருஷ்டி யிலேயே, நிலை ஆக - ஸ்திர மாக, இருந்தவர்கள் இடமே - இருந்த பெரியோர்களி னிடத்தை, சேர்ந்து - அடைந்து, பர குருவின் - (பூர்வ குரு வாகிய) வேத முநிவரின், உபதேசத்து - உபதேசத்தால் (பெறப்பட்ட), அரிய - துர்லப மான, பொருள் - (பிரம்ம) வஸ்து (வைப் பற்றி), வினவி - (அவர்பால் தெளி வுறக்) கேட்டு, அவர் - (அது பற்றி) அவர்கள், பகர - (விரி வாய்க்) கூற, கேட்டு - (அவற் றைச்) சிரவணஞ் செய்து, திர - (சந்தேக விபரீதங்க ளின்றி அப் பொருளில்) நிலைத்த, மநம் ஆய் - மந முடையவ னாய், ஒருவரால் - (பேத வாதியர்) எவராலும், கலங்காத - சலந முறாத, ஞாநி ஆய் - (திட) ஞாந முடையவ னாய், தீரன் ஆகி - தைரியசாலியாய், (எ-று).

தேச நாடுகளும் - தேசமும், நாடுகளும், என நிற்க வேண்டிய எண் ணும்மைகளில், முதலது தொக்கது. சென்றே - இடமே - ஏ - இரண்டும் அசை நிலைகள். அக நிலையே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். இப் பாட்டுக் குளகம். தீர னாகி - என்னும் வினை யெச்சம், அடுத்த பாட்டில் 'ஏகி' என்னும் வினை யெச்சங் கொண்டது. (49)

மகா ராஜன் கர தல பிக்ஷை வாங்கலையும், மாந அப மாநம் இன்றி யிருத்தலையும், கூறல்.

நகர்தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறும்
அகமகிழ்ந் தங்கை யேற்றே யவ்விடத் தருந்தி யாங்கே
செகமுளோர் பேயென் றெண்ணிச் சிரித்திட நாண மின்றி
இகபரத் திச்சை யற்றே யேகனா யுலாவ லுற்றான். (50)

(இ—ள்) நகர்தனில் - பட்டணத்தில், ஏகி - சென்று, மனைகள் தோறும் - (அங் குள்ள) வீடுகள் தோறும், நண்ணி - பொருந்தி, பிச்சை - பிக்ஷையை, அம் கை - உள்ளங் கையில்,

அகம் - மனம், மகிழ்ந்து - உவந்து, ஏற்று - வாங்கி, அவ் விடத்து - ஆண்டே, அருந்தி - புசித்து, ஆங்கு - (அதனைப் பார்த்து) அவ் விடத் துள்ள, ஜெகம் - ஊர்களில், உளோர் - இருப்பவர்கள், பேய் - பிசாசு, என்று - என, எண்ணி - கருதி, சிரித்திட - நகைக்க, நாணம் - (அதனால் உண்டாம்) வெட்கம், இன்றி - இல்லாமல், இகம் - இக லோகத்தி லுள்ள (சிர்க்கு, சந்தந, வநிதாதி விஷய போகங்களிலும்), பரத்து - பரலோகத்தி லுள்ள (அப்ஸரஸ்திரீ, அமிர்தாதி போகங்களிலும்), இச்சை - ஆசையை, அற்று - விட்டு, ஏகன் ஆய் - ஒருவ னாய், உலாவல் உற்றான் - (எங்கும்) சஞ்சரித்தான், (எ—று).

வைராக்கிய தீபம் 68-வது கவி, "உச்சியம் போதின் மீதரும் பசிக்கவ் வூர்வல மாயிலந் தோறும், பிச்சைகை யிடையிற் காடிகூழேனும் பெற்றது பற்றியுள் வெற்றுப்போ, டிச்சையற் றருந்திப் பொருந்தவே காந்தத் திடையினுந் தாகவந் தடையி, னச்சிநீ ரூரிற் புகுந்தூரு தேரி யாதியி னருந்துத னன்றே." என்பதனால், கையில் பிக்ஷை வாங்க வேண்டு மென்பதும், வாங்கும் பிக்ஷையைப் பிரிய அப்பிரிய மின்றிப் புசிக்க வேண்டு மென்பதும், விளங்குதலால், இப் பாவினு மக் கருத் துண் டென இசை யெச்ச முதலியவற்றாற் கொள்ளற் றகுதி யாம்.

நகர் தனில் - தன் - சாரியை. நண்ணியே - ஏற்றே - அற்றே - ஏ - மூன்றும் அசை நிலைகள். தோறும் - இடப் பன்மைப் பொருள் தரும் ஓ ரிடைச் சொல். ஆங்கே - அங்கு - ஏ - இரண்டும் அசை நிலைகள். உளோர் - உள்ளோர் என்னும் வினையா லணையும் பெயரின் இடைக் குறை. சிரித்திட - இடு - பகுதிப் பொருள் விகுதி. இக பரம் - உம்மைத் தொகை. இகம் பரம் என்னு மிரண்டும் ஆகு பெயர்க ளாய் ஆங் குள்ள போகங்களை உணர்த்தின. (அரசன்) - எழுவாய். உற்றான் - பய னிலை. உலாவல் - செயப்படு பொருள். (50)

மகா ராஜன் தான் வசித்தற் கென ஓர் இடத்தில் நியத மாக இராமல், எங்கும் வசித்துக் கொண்டு சமாகித னாகவே யிருந்தனன் எனக் கூறல்.

பொருந்திவா ழிடமொன் றாகிற் பொருந்திடும் பற் றென் றெண்ணி, இருந்தில னோரி டத்து மெங்கெங்கு மொருவ னாகித், திருந்திய சமாதி விட்டுத் திரும்பிடா துறைக்க வுன்னி, இருந்திருந் திடங்க ளெங்கு மேகமே நோக்கி நின்றான். (51)

(இ—ள்) பொருந்தி - அமைந்து, வாழ் - வஸித்தற் குரிய, இடம் - ஸ்தானம், ஒன்று - ஒன்றே, ஆகில் - (நியம மாக இருக்கு) மாயின், பற்று - (அதன்கண்) அபிமானம், பொருந்திடும் - (வந்து) சாரும், என்று - என, எண்ணி - கருதி, ஓர் - ஒரு, இடத்தும் - ஸ்தானத்திலும், இருந்திலன் - (நிலை யாய்) இருக்காதவ னாய், எங்கும் எங்கும் - எல்லா இடங்களிலும், ஒருவன் ஆகி - ஏக னாய், திருந்திய - நிருவிகற்ப, சமாதி - சமாதியை, விட்டு - விட்டு, திரும்பிடாது - பகிர் முகத்தை யடையாது, உறைக்க - (அதில்) ஸ்திரம் பெற்றிருக்க, உன்னி - கருதி, இருந்த இருந்த - (தான்) உட்கார்ந்த உட்கார்ந்த, இடங்கள் எங்கும் - இடங்கள் தோறும், ஏகமே - அத்வைதப் பிரம்ம ஸ்வரூபத்தையே, நோக்கி நின்றான் - (திருசியா நுவித்த நிருவிகற்ப சமாதி வாயி லாக) அநுபவித்துக் கொண்டிருந்தனன், (எ-று).

சமாதி:- 1. பாகிய திரிசியா நுவித்த சவிகற்ப சமாதி. 2. பாகிய சப்தா நுவித்த சவிகற்ப சமாதி. 3. பாகிய நிர்விகற்ப சமாதி. 4. ஆந்தா திரிசியா நுவித்த சவிகற்ப சமாதி. 5. ஆந்தா சப்தா நுவித்த சவிகற்ப சமாதி. 6. ஆந்தா நிர்விகற்ப சமாதி என அறு வகைத் தாம்.

இவற்றுள், பாகிய திரிசியா நுவித்த சவிகற்ப சமாதி, பாகிய சப்தா நுவித்த சவிகற்ப சமாதிகளின் அப்யாச தார்ட்டியத்தினால்,

அலையில் கடல் போல், பிரஹ்மாநந்தத்தில், மநம் லயப்பட்டிருத்தல், பாகிய நிர்விகற்ப சமாதி யாகும். இச் சமாதியை அநுஷ்டித்துக் கொண்டிருந்தனன் மஹா ராஜன் என உணர்க.

வைராக்ய தீபம் 46-வது கவி, "பொருளறத் துறந்து பைக்க மேற் றருந்திப் பொருந்தினு மோரிடம் பிடித்துள், வெருளறப் பனியா தியினுடற் பழக வேண்டுமின் றுருத றுனும், இருளறத் தீப மேற்றமுன் றெழில்க ளென்றும்வேண் டிடுதலா னிடரும், அரு ளறச் சிதலை முதலுயிர்க் குறுக ணுற்றலு மதன்பொருட் டாமால்." என்னும் கவியில், மநோ பயம் நீங்காமையினாலும், பனி முதலிய வற்றில் தேகம் பழகாமையினாலும், இருள் நீங்க விளக் கேற்றல் முதலிய தொழில்கள் எப் பொழுதும் விரும்பப்படுதலால் துன்பம் வருதலினாலும், ஜீவ காருண்யம் இன்றிச் செல்லு எறும்பு கொதுகு மூட்டுப் பூச்சி முதலியவற்றிற்குத் துன்பம் செய்தலினாலும் என, நான்கு வித ஏதுக்களால், இடத்தினால் வரும் துன்பம் கூறியிருத் தலைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

வாசிட்டம் 5 உபசாந்திப் பிரகரணம், சுரகு கதை.

"வெறிதி ருக்கினுந் தொழிலினை மேவினும் விடாமல், அறிஞ னென்றுதான் சமாதிவிட் டகன்றவ னுகும், செறியு ஞானஞ்சேர் மநத்தினர் சகத்தொழில் செயினும், பிறிவி றத்துவ நிட்டாயச் சமாதியிற் பெயரார்." (40) என்று, ஞாநி சதா சமாகிதன் என, "திருந்திய சமாதி விட்டுத் திரும்பிடாது உறைக்க வுன்னி இருந்த இருந்த இடங்கள் எங்கும் ஏகமே நோக்கி நின்றான்" என்று, கூறியது போலவே, கூறியிருப்பதைக் கொள்ள றகும்.

இருந்திலன் - வினை முற்று வினை யெச்ச மானது. ஓரிடத்தும் - உம் - முற் றும்மை. எங் கெங்கும் - எங்கும் எங்கும் என்பன அடுக்கி நின்று இடையில் உம்மை தொகப் பெற்றன. திரும்பிடாது - இடு -

பகுதிப் பொருள் விகுதி. இருந் திருந் திடங்கள் - என்புழி, இருந்த, இருந்த என்னும் வினை யெச்சங்கள் அகர விகுதி தொகப் பெற்று அடுக்கி நின்று புணர்ந்தன. எங்கும் - உம் - முற் றும்மை. ஏகமே - ஏ - பிரி நிலை. (அரசன்) - எழுவாய். நின்றான் - பய னிலை. (51)

பிரமத்தின்கண் அநிர்வசநீயமாக உலகந் தோன்றுதலின், பிரம சொரூபமாகவே உலகினை மகா ராஜன் பார்த்தனன் எனக் கூறல்.

தோன்றிடு முலக மெங்கே தோன்றிடு மென்ன நோக்கித், தோன்றிடு நினைவி லென்றே தோன்றிய நினைவு தானும், தோன்றிடு மிடத்தைப் பார்த்துத் தோன்றிடுஞ் சொரூபத் தென்றே, தோன்றிடும் பொருள்க ளெல்லாஞ் சொரூபமே யென்று கண்டான். (52)

(இ—ள்) தோன்றிடும் - (சகல ஜநங்களுக்கும்) பிரதீதி யாகின்ற, உலகம் - பிரபஞ்சம், எங்கு - எந்த இடத்தில், தோன் றிடும் - விளங்குகின்றது, என்ன - என்று, நோக்கி - ஆராய்ந்து பார்த்து, நினைவில் - மநோ விருத்தியி னின்றும், தோன்றிடும் - விளங்குகின்றது, என்று - என (நிச்சயஞ் செய்து), தோன்றிய - (பின் அங்ஙன் அதற்கு ஆதார மாகப்) பிரதீதியாகின்ற, நினைவு தானும் - அம் மநோ விருத்தியும், தோன்றிடும் -(இருந்து)விளங்கும், இடத்தை - (ஆதார) ஸ்தாநத்தை, பார்த்து - (ஆராய்ந்து) பார்த்து, சொரூபத்து - (அதன் அதிஷ்டாநப் பிரம்ம) ஸ்வரூபத்தினின்றும், தோன்றிடும் - (அது) விளங்குகின்றது, என்று - என (நிச்சயஞ் செய்து), தோன்றிடும் - (பின்னர் அங்ஙன்) விளங்காநின்ற, பொருள்கள் எல்லாம் - வஸ்துக்க ளனைத்தையும், சொரூபமே - (அவற்றின் விவர்த்த உபாதாநப் பிரம்ம) சொரூபமே, என்று - என, கண்டான் - சாக்ஷாத்கரித்தான், (எ-று).

எங்கே - என்றே - என்றே - ஏ - மூன்றும் அசைநிலைகள். சொரூபமே - ஏ - தேற்றம். தோன்றிடும் - என்பவற்றுள்ள - இடு - ஆறும் பகுதிப் பொருள் விகுதிகள். தோன்றுகின்ற - கால வழுவமைதி. நினைவு தானும் - தான் - அசை நிலை. உம் - இறந்தது தழீஇயது. (அரசன்) - எழுவாய். கண்டான் - பயனிலை. எல்லாம் - செயப்படு பொருள். (52)

பிரமத்தின் சச்சிதாநந்த சொரூபமே உலகப் பொருள்களில் அத்தியஸ்தமாகத் தோன்றுகிறபடியால், பிரபஞ்சம் அசத்து என்றும், பிரமம் சச்சிதாநந்த வடிவம் என்றும், அதுவே தனது சொரூப மேன்றும், மஹா ராஜன் கண்டிருந்தான் எனக் கூறல்.

தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த் தோன்றியே யின்ப மாகித், தோன்றிடு மதனு லந்தச் சொரூபமே யென்று கண்டு, தோன்றிடுஞ் சொரூபந் தன்னிற் றோன்றுமீ தசத்தே யென்று, தோன்றிடுஞ் சொரூபந் தானுய்த் துளக்கமற் றிருந்தான் வேந்தன். (53)

(இ-ள்) தோன்றிடும் - புலப்படுகின்ற, பொருள்கள் - (பிரபஞ்ச) பதார்த்தங்கள், உண்டாய் - சத்தாய் (உள்ளதாய்), தோன்றி - சித்தாய், இன்பம் - ஆநந்த சொரூபம், ஆகி - ஆய், தோன்றிடும் - விளங்குகின்ற, அதனுல் - காரணத்தினுல் (அச் சச்சிதாநந்த வடிவம்), அந்தச் சொரூபமே - அப் பிரம்ம சொரூபமே, என்று - என, கண்டு - அறிந்து, தோன்றிடும் - (சச்சிதாநந்தமாய்) விளங்காநின்ற, சொரூபந்தன்னில் - அப் பிரம சொரூபத்தில், தோன்றும் - பிரதீதியாகின்ற, ஈது - (இந் நாம ரூபப்) பிரபஞ்சம், அசத்தே - மித்தையே, என்று - என (நிச்சயஞ் செய்து), தோன்றிடும் சொரூபம் - (அதன் அதிஷ்டாநமாக) விளங்கும் சித்து ரூபப் பிரமம்,

தான் ஆய் - தனது ஸ்வரூப மெனத் தெளிந்தவனாய், துளக்கம் - (சித்தத்தின்கண்) சலநம், அற்று - இன்றி, வேந்தன் - மஹாராஜன், இருந்தான் - இருந்தான், (எ-று).

தோன்றிடும் - என்பவற் றுள்ள - இடு - நான்கும் பகுதிப் பொருள் விகுதிகள். தோன்றியே - ஏ - அசை நிலை. சொரூபமே - அசத்தே - ஏ - இரண்டும் தேற்றம். சொரூபந்தன்னில் - தன் - சாரியை. வேந்தன் - எழுவாய். இருந்தான் - பய னிலை. (53)

காடு நாடு பூமி முழுவதும் சென்றும், மஹாராஜன் மநம் ஆத்ம திருஷ்டி மாறாது இருந்தது எனக் கூறல்.

கடிநகர் தோறுஞ் சென்றுங் கானகந் தோறுஞ் சென்றும், படிவல மாக வந்தும் பார்வைமா றாட்ட மின்றி, மடிவிலா மநத்த னாகி மாசிலா நிலைமை பெற்று, முடியுடை வேந்தர் வேந்தன் முத்தியே வடிவ மானான். (54)

(இ—ள்) முடி - கிரீடத்தை, உடை - உடைய, வேந்தர் வேந்தன் - அரசர்களுக்குத் தலைவ னான அரசன் (சக்கரவர்த்தி), கடி - அழகிய, நகர் தோறும் - பட்டணங்கள் தோறும், சென்றும் - போயும், கானகந் தோறும் - வநங்கள் தோறும், சென்றும் - போயும், படி - பூமியை, வலம் ஆக வந்தும் - பிரதக்ஷணஞ் செய்தும், பார்வை - (தன் பிரம்ம) திருஷ்டி, மாறாட்டம் இன்றி - வேறு படாது, மடிவு - கேடு, இலா - இன்றிய, மநத்தன் - மந முடையவன், ஆகி - ஆய், மாசு - குற்றம், இலா - இல்லாத, நிலைமை - தன்மையை, பெற்று - அடைந்து, முத்தியே - மோக்ஷமே, வடிவம் - ஸ்வரூபம், ஆனான் - ஆயினான், (எ-று).

நகர் தோறும் - கானகந் தோறும் - தோறு - இரண்டும் இடப் பன்மைப் பொருளில் வந்த இடைச் சொற்கள். உம் - முற் றும்மை.

சென்றும் - சென்றும் - வந்தும் - உம் - மூன்றும் எண்ணுப் பொருளன. முடி யுடை - உடை - உடைய என்னும் பெய ரெச்சத்தின் ஈறு குறைந்தது. முத்தியே - ஏ - தேற்றம். வேந்தன் - எழுவாய். ஆனுன் - பய னிலை. (54)

மகா ராஜன், "அத்வைத சாம்ராஜ்ய மஹா ராஜன் நான் தான்" என்று நிச்சயித்து, கற்பித ஆவிர்ப் பாவ ஜீவ பாவத்தை நீக்கி, பிரஹ்ம ஸ்வரூப மாக விளங்கினன் எனக் கூறல்.

முத்தியே வடிவ மான முடியுடை வேந்தர் வேந்தன், எத்திசை தனக்கும் ராஜ னெமைவிட வேறில் லென்று, சத்திய மாக வெண்ணித் தன்னிட மதனிற் றன்னைச், சுத்திசெய் தனைத்து மாகிச் சுயஞ்சோதி யாகி நின்முன். (55)

(இ—ள்) முத்தி - மோக்ஷ, வடிவம் - சொரூபம், ஆன - ஆனவனும், முடி - கிரீடத்தினை, உடை - உடைய, வேந்தர் - சிற் றாசர்களுக்கு, வேந்தன் - (அரசனு மாகிய) மஹா ராஜன், எத் திசை தனக்கும் எமை விட - எல்லாத் திக்குகளுக்கும் (யான் ஈசுர சொரூப னுதலின்) நம்மைத் தவிர, வேறு - அந்நிய மாக, ராஜன் - அரசன் (தலைவன்), இல் - இல்லை, என்று - என, சத்தியம் ஆக - உண்மை ஆக, எண்ணி - கருதி, தன்னிடமதனில் - (தனது யதார்த்த சொரூப மான்) பரிபூரணப் பிரமத்தி னிடத்தில், தன்னை - (தன் கற்பித சொரூப) ஜீவத் தன்மையை, சுத்தி செய்து - (நிவிர்த்தித்த லாகிய) பவித்திரத்தைச் செய்து, அனைத்தும்-சர்வாத் மகம், ஆகி - ஆய், ஸ்வயஞ் சோதி ஆகி - ஸ்வப்ரகாச வடிவம் ஆய், நின்முன் - நிலைத்தான், (எ-று).

முத்தியே - ஏ - அசை நிலை, அல்லது, தேற்றம். உடை - ஈறு குறைந்த உடைய என்னும் பெய ரெச்சம். எத் திசை தனக்கும் -

தன் - அ - இரண்டும், சாரியைகள். உம் - முற் றும்மை. எமை - எம்மை என்பதன் இடைக் குறை. இல் - இல்லை என்பதன் கடைக் குறை. தன்னிடமதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. அனைத்தும் - முற் றும்மை. வேந்தர் வேந்தன் - எழு வாய். நின்றான் - பய னிலை. (55)

பொன்னைத் தவிரப் பூடணம் இல்லாதது போல, "மின்னல் போன்ற பிரபஞ்சம் பிரஹ்ம ரூபத் தனக்கு அந்நிய மாக இல்லை" என உணர்ந்து, அநுபூதியில் இருந்தனன் மஹா ராஜன் எனக் கூறல்.

தன்னையே யன்றி யொன்றுந் தானுதி யாவி டத்தின்,
மின்னையே யொத்த வைய மித்தைகற் பிதம தென்றும்,
பொன்னையே யன்றி வேறு பூடண மிலது போல,
என்னையே யன்றி யொன்று மில்லெனத் தேர்ந்தான் வேந்தன். (56)

(இ—ள்) தன்னையே - தனது சொரூப (இருப்பு மாத்திரமே), அன்றி - அல்லாமல், ஒன்றும் - (வாஸ்தவத்தில் தனக்கு அந்நிய மாக) ஒரு பதார்த்தமும், உதியாவிடத்தில் - தோன்றாத தனது சொரூ பத்தின்கண், மின்னை - (தோன்றி ஒடுங்குவதில்) மின்னலை, ஒத்த - ஒத்திருக்கின்ற, வையம் - (இப்) பிரபஞ்சம், மித்தை கற்பிதம் (அது) - சதசத் விலக்ஷண ஆரோபம், என்றும் - எனவும், பொன்னையே - ஸ்வர்ணமே, அன்றி - அல்லாமல், வேறு - (அதற்கு) அந்நிய மாக (அதன்கண்), பூடணம் - ஆபரணம், இலது - (வாஸ்தவத்தில்) இல்லாதது, போல - போல, என்னையே - (பரிபூரண அதிஷ்டானப் பிரம மாகிய) எனது இருப்பே, அன்றி - (உளது) அல்லாமல், ஒன்றும் - (எனது இருப்புக்கு அந்நிய மாக) ஒரு பதார்த்தத்திற்கும், இல் - (இருப்பு) இல்லை, என - என்றும்,

வேந்தன் - மஹா ராஜன், தேர்ந்தான் - (உண்மை நிலையைத்) தெளிந்தான், (எ-று).

இதற்கு உதாரணம். விவேக சூடாமணி:- "போதமாத் திரமே யாகப் பொருந்திய சாட்சி யின்கண், ஏதமின் மநத்தை நன்று யிருத்திநற் பழக்கத் தாலே, சாதுவே மெள்ள மெள்ளச் சலநமில் லாது செய்து, தீதிலாப் பூர ணத்தைத் திகழவே நோக்க வேண்டும்." (437) என்றும், "ஏதமாந் தேகம் பிராண னிந்திய மநத கந்தை, ஆதியஞ் ஞாநத் தாலே யாக்கிய வுபாதிக் கூட்டம், ஏதுவி லகண்ட போத வின்பமாந் தன்னுந் மாவை, ஓதிய மகாகா சம்போ லொன்றென வுணர வேண்டும்." (438) என்றும், "ஓதிய கடங்கு சூல மூசியே முதலாய் வந்த, பேதமா முபாதி போனற் பெரியவா காச மொன்றே, ஈதுபோ லகங்கா ராதி யீநமா முபாதி போனல், போதவா நந்த சுத்த பூரண வாந்மா வொன்றே." (439) என்றும், "யாதினு லயனே யாதி யீநமாந் தம்ப மீறுய், ஓதிய வுபாதி யெல்லா முண்மையில் லாத தாகும், ஆதலா லேக ரூப மாகிய தன்னுந் மாவைப், பேதமில் புரண மாகப் பேணியே பார்க்க வேண்டும்." (440) என்றும், "எதிலெது மயக்கத் தாலே யிங்குக்கற் பிதமா யிற்றே, அதுவது வாகு மன்றி யுயிந்திடி லதில்வே றுகா, திதமுறு ஞாநத் தாலே திகழ்மய னசிக்கும் போதிங், கெதிரிலே கண்ட சர்ப்ப மிரச்சுவே யன்றி வேறே." (441) என்றும், "ஈதுபோ லாந்மா வின்க ணிலங்கிய யாவு மாந்மா, வாதலா லாந்மாத் தானே யயனரி யரனு மாகும், ஓதுமிந் திரனு மாகு முயர்சுரர் நரரு மாகும், ஏதுமே யாந்மா வன்றி யெவளவு மிதில்வே றில்லை." (442) என்றும், உள்ள கவிகளில், ஆத்மாவுக்கு அந்நிய மாகப் பிரபஞ்சம் இல்லை என்றும், பிரபஞ்சம் மித்தை கற்பிதம் என்றும், அதிஷ்டாநத்திற்கு அந்நிய மாக வஸ்து வாக ஆரோபம் இல்லை என்றும், ஆந்மாவே சர்வ தேவதா ரூபமாகவும் விளங்கிக் கொண் டிருக்கின்ற தென்றும், கூறியிருப்பது கொண்டு உணரற்பாற்று.

தன்னையே - ஐ - சாரியை. ஏ - தேற்றம். ஒன்றுந் தான் - உம் - முற்று. தான் - அசை நிலை. உதியா - ஈறு தொக்க உதியாத என்னும் பெய ரெச்சம். மின்னையே - ஏ - தேற்றம். கற்பிதமது - அது - பகுதிப் பொருள் விகுதி. என்னும் - உம் - எதிரது தழீஇயது. பொன்னையே - ஐ - சாரியை. ஏ - தேற்றம். என்னையே - ஐ - சாரியை. ஏ - தேற்றம். ஒன்றும் - உம் - முற்று. இல் - ஈறு தொக்க இல்லை என்பது. என - இறந்தது தழீஇய எச்ச உம்மை குறைந்து நின்றது. வேந்தன் - எழுவாய். தேர்ந்தான் - பய னிலை. (உண்மை நிலை) - செயப்படு பொருள். (56)

பிரபஞ்சம் பிரஹ்மாபிந்ந மாய தனக்கு வேருய்ச் சத்தாயிருப்பது அன்று, பிரஹ்மாபிந்ந தன் ஸ்வரூப மாகவே பிரபஞ்சம் தோன்றுகின்றது. யாவும் மனோ சங்கற்பமே, அச் சங்கற்பமு மேனக் கந்நிய மாக இல்லை என உணர்ந்தான், எனக் கூறல்.

உலகினை வேற தாக வுணர்ந்திடிற் பந்த மாகும்,
உலகினைத் தானே யாக வுணர்ந்திடின் முத்தி யாகும்,
இலகிடத் தோன்ற லெல்லா மென்னினை வேயென்
றெண்ணி, இலகிடக் கண்டு வேறற் றிருந்தன னிளமை
வேந்தன். (57)

(இ—ள்) உலகினை - (இம் மித்தையாப்) பிரபஞ்சத்தினை, வேறது ஆக - (அதிஷ்டானப் பிரஹ்மாபிந்ந தன் யதார்த்த சொரூபத்திற்கு) அந்நிய மாக, உணர்ந்திடில் - அறியில், பந்தம் ஆகும் - பந்தமாகும் (தளையாகும்), உலகினை - (இம் மித்தையாப்) பிரபஞ்சத்தினை, தானே ஆக - (அதிஷ்டானப்) பிரம்மாபிந்ந தன் யதார்த்த சொரூபமே யாக, உணர்ந்திடில் - அறியில், முத்தி ஆகும் - மோக்ஷமாகும் (ஆனதால்), இலகிட - விளக்க மாக, தோன்றல் -

பிரதீதியாதலை யுடைய இப் பிரபஞ்சம், எல்லாம் - அனைத்தும், என் - எனது, நினைவே - சங்கற்ப மாத்திரமே, என்று - என, எண்ணி - கருதி, வேறு - (அச் சங்கற்பமும்) பேத மாக, அற்று - இன்றி, இலகிட - (தன் யதார்த்த சொரூப மாக) விளங்க, கண்டு - சாக்ஷாத்கரித்து, இளமை - யௌவநப் பருவத்தினை யுடைய, வேந்தன் - மஹா ராஜன், இருந்தனன் - வீற்றிருந்தனன், (எ-று).

"உலகு பிரஹ்மத்துக்கு அந்நியமாக இல்லை" என்பதற்கும், "உலகை வேறாக உணர்வதால், அந்தகாரம் உடையவர்கள் ஆகின்றனர்" என்பதற்கும், "காரணத்திற்கு அந்நிய மாகக் காரியம் இல்லை" என்பதற்கும், உதாரணம். விவேக சூடாமணியில், "யாதிது சகல ஞால மென்பதாய் நாநா வாகத், தீதுசெய் யஞ்ஞா னத்தாற் றிருசியம் போலத் தோன்றும், சாதுவே யவைய னைத்துஞ் சகலகற் பனையு மற்ற, போதவா நந்த வுண்மைப் பூரணப் பிரம மேயாம்." (262) என்றும், "கநமுடைத் தான மண்ணின் காரிய மான கும்பம், அநகனே மண்ணே யன்றி யற்பமும் பிந்ந மல்ல, வினவிடிற் கும்ப ரூபம் விளங்கிய மண்ணின் ரூபம், தனையலால் வேற தாகத் தானிலாத் தன்மை யாலே." (263) என்றும், "விரிவுறு மண்ணை யன்றி வேறதாய்க் கடத்தைக் காட்ட, ஒருவனுஞ் சமர்த்த னில்லை யுலகினி லதனாற் கும்பம், கருதொணா மோகத் தாலே கற்பிதம் பொய்யே மற்றும், மருவிய வதுதா னும மாத்திர மண்ணே யுண்மை." (264) என்றும், "சாற்றிய நீதி யேபோற் சத்தியப் பிரமத் தின்கண், தோற்றுகா ரியம னைத்துந் துகளிலாப் பிரம மேயாம், ஏற்றிய பிரம மல்லா லெவ்வளவும் வேறே யில்லை, தேற்றமா யுசாவி லெங்குந் திகழ்வது பிரமந் தானே." (265) என்றும், "கநபரப் பிரம மல்லாற் கற்பித மான ஞாலம், தினையள வேனும் வேறாய்த் திகழுமென் றுரைப்போர்க் கெல்லாம், அநகமோ காந்த கார மற்பமு மகல வில்லை, அனையவர் சொல்வ தெல்லா மசத்தியந் துயில்வோர் சொற்போல்." (266) என்றும், "இது

-வெனுஞ் சகமனைத்து மேகமாம் பிரமமேயென், றதர்வண வுபநி டத்தி னதிசய மான வாக்கும், திதமதாய்ச் சொல்வ தாலே திருசிய சகம னைத்தும், உதயமத் தமன மின்றி யொளிர்ந்திடும் பிரம மேயாம்.'' (267) என்றும், வரும் ஆறு செய்யுட்களானும், இன்னும் வருவனவற்றானும் உணர்க.

வேறது - அது - பகுதிப் பொருள் விகுதி. உணர்ந்திடில் - உணர்ந்திடல் - இலகிட - இலகிட - இடு - நான்கும் பகுதிப் பொருள் விகுதிகள். நினைவே - ஏ - தேற்றம். வேந்தன் - எழுவாய். இருந்தனன் - பய னிலை. (57)

ஆத்ம ஞாந ராஜ்ய ஆட்சிக்கு, இந்திரனது செல்வப் போகம் யாவும் துரும்புக்குச் சமாநம் எனவும், சூக்ஷ்ம புத்தியினாலும், ஆசாரியர் உபதேசத்தினாலும், ஆட்சிபண்ணும் படி கிடைத்த ஆநந்த நாட்டை அடைந்து, மகா ராஜன் கிருத கிருத்தியன் ஆயினன் எனவும், கூறல்.

ஏகசக் கரம தாக விருந்தர சாள்வோன் செல்வப்,
போகமுந் திரண மாமப் போதநாட் டரசி யற்கை, யூகபுந்
தியினா லாசா னுபதேசத் தாள வந்தச், சோகமற் றிடுநா
டெய்தித் தொழிலெலா முடித்தான் மன்னன். (58)

(இ—ள்) ஏக - ஒரே, சக்கரமது - (ஆஞ்ஞா) சக்கரம், ஆக - (எங்கும் செல்லும்படி) ஆக, இருந்து - (ஸிம்மாசநத்தில்) இருந்து, அரசு ஆள்வோன் - அரசாக்ஷி செய்கின்ற தெய்வேந்திரனது, செல்வ - ஐசுவரிய, போகமும் - சுகமும், அப் போத நாட்டு - அந்த ஞாந நாட்டினது, அரசு இயற்கை - அரசாக்ஷியின் தன்மை யைக் குறித்து, திரணம் ஆம் - (துரும்பு நிகராம்) அற்ப மாம், ஊக - (ஆனதால்) விவேக, புந்தியினால் - புத்தியினாலும், ஆசான் -

ஆசாரியரது, உபதேசத்து - உபதேசத்தினுலும், ஆள - ஆளும்படி யாக, வந்த - கிடைத்த, சோகம் - துக்கம், அற்றிடு - நீக்கி யிருக்கின்ற, நாடு - (மோக்ஷ) பூமியை, எய்தி - அடைந்து, மன்னன் - (அம்) மஹா ராஜன், தொழில் எலாம் - (செய்ய வேண்டிய) தொழி லனைத்தையும், முடித்தான் - (செய்து) முடித்தனன் ஆனுன் (கிருத கிருத்தியன் என்றபடி), (எ-று).

சக்கரமது - அது - பகுதிப் பொருள் விகுதி. அரசாள்வோன் - வினையா லணையும் பெயர். போகமும் - உம் - உயர்வு சிறப்பு. போத நாடு - பண்புத் தொகை. ஞாந சொரூபம், நாடாக உரு வகிக்கப்பட்டது. புந்தியினுல் - என்பத னீற்றில் எதிரது தழீஇய எச்ச உம்மை தொக்கது. உபதேசத்து - என்பதீ னீற்றில் மூன்ற னுருபும், இறந்தது தழீஇய எச்ச உம்மையும், தொக்கன. அற்றிடு - இடு - பகுதிப் பொருள் விகுதி. மன்னன் - எழுவாய். முடித்தான் - பய னிலை. தொழி லெலாம் - செயப்படு பொருள். (58)

பந்தம் மோக்ஷம் என்பன உண்மை யாக இல்லை, பரம் பொருள் ஒன்றே சத்திய மாக இருப்ப தாம், அங்ஙன மிருந்தும், ஜீவர்கள் தங்கள் தங்கள் மனோ சங்கற்பத்தினுல் பந்தம் மோக்ஷங்கள் பிரமத்திற்கு வே ருகச் சத்தியமா யுள்ள வேனக் கொண்டு மயக்கத்தினை அடைகின்றனர் எனக் கூறல்.

பந்தம்வீ டென்று மில்லைப் பரம்பொரு ளொன்றே
யென்றும், தந்தஞ்சங் கற்பத் தாலே சாலமோ கிப்பர்
தீயோர், அந்தமா திகளு மில்லா வரும்பொரு ளுமே
யென்று, சந்தத நோக்கி யந்தத் தற்பரந் தானே
யானுன். (59)

(இ—ள்) பந்தம் - பந்தமும், வீடு - மோக்ஷமும், என்றும் - எப் பொழுதும், இல்லை - இலவாம், என்றும் - எப் பொழுதும்,

பரம் பொருள் - பிரம்ம வஸ்து, ஒன்றே - ஒன்றே (உண்மை யாக வுள்ளது அதனை யறியாது), தீயோர் - பாவிகள், தம் தம் - தமது தமது, சங்கற்பத்தால் - (மனோ) கற்பனையினால், சால - மிகவும், மோகிப்பர் - (பிரமத்திற்கு வேறாக பந்தமும், வீடும், சத்திய மாக விருக்கின்றன - வென்னும்) மயக்கத்தை யடைகின்றனர், அந்தம் - (அப்படி யின்றி மஹா ராஜன்) முடிவும், ஆதிகளும் - முதலும், இல்லா - இன்றிய, அரும் - அரிய, பொருள் - (பிரம்ம) வஸ்து, நாமே - யாமே (நம் உண்மைச் சொரூபமே), என்று - என, சந்ததம் - சதா காலமும், நோக்கி - கருதி, அந்த - (முற் புகன்ற) அந்த, தத் பரந் தானே - பிரம்ம மாகவே, ஆனன் - ஆயினன், (எ-று).

வாசிட்டம் 3 உத்பத்திப் பிரகரணம் 8-வது சித்தன் (சாம்பரிகன்) கதையில், "தங்கள்சங் கற்பத் தாலறி வில்லோர் சாலமோ கிப்பர்நல் லறிஞர், பொங்குநல் விசார மதியினால் மயங்கார் புந்தியாற் பொய்ம்மையை யொழித்துத், துங்கமெய் யுணர்வாய்ப் பந்தமற் றிருந்துந் தொடர்புறு பந்தமுண் டென்று, பங்கமுற் றயரே லமலமா யழியாப் பரம்பொருள் பந்தமுற் றிடுமோ." 1. "அந்தமற் றொன்றாய் விகற்பமற் றறிவா யழிவிலாப் பரம்பொரு ளிருக்கப், பந்தமுற் றவரார் முத்திபெற் றவரார் பாவனை விகற்பமே யனைத்துஞ், சிந்தனை விரிவு பந்தமா மதனைத் தீர்ந்திடன் முத்தி யாம் மநத்தின், சொந்தலீ லையினாற் றாரமா மணித்துந் தாரமு மண்ணிதாய்த் தோன்றும்." 2. என்று, பந்தமும் இல்லை, வீடும் இல்லை, பிரம்மம் தான் இருப்பது. அறிவிலிகள் தம் மனோ சங்கற் பத்தினால் பந்தம் என்றும், வீடு என்றும், மோகத்தை அடைகின்றனர் என்று கூறியிருத்தல், இதனை வலியுறுத்தும்.

பந்தம் வீடு - உம்மைத் தொகை. என்றும் - என்றும் - உம் - இரண்டும் முற் றும்மைகள். ஒன்றே - ஏ - தேற்றம். சங்கற்பத்தாலே - ஏ - அசை நிலை. அந்தமாதிகளும் - உம் - முற்று. இல்லா - ஈறு

தொக்க இல்லாத என்னும் பெயரெச்சம். நாமே - தற்பரந் தானே - ஏ - இரண்டும் தேற்றம், தான் - அசை நிலை. பந்தம் வீடு - எழுவாய். இல்லை - பயனிலை. தீயோர் - எழுவாய். மோகிப்பர் - பயனிலை. அரசன் - எழுவாய். ஆனுன் - பயனிலை. (59)

மஹா ராஜன், அகண்ட பரிபூர்ண சச்சிதாநந்த ஸ்வரூப மாகவே, தான் சென்ற சென்ற இடம் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனன் எனக் கூறல்.

குறைவிலா நிறைவ தாகிக் குளிர்ந்திளைப் பாறி வேந்தன், இறையள வேனுந் துன்ப மின்றியே யின்ப மாகி, உறைவிட மின்ன தென்ன வோரிட மின்றி யெங்கு, நிறைவதே யிடமாய் நின்று னிகரின்மா ராஜன் றனே. (60)

(இ—ள்) மஹா ராஜன் - மஹா ராஜன் (எனப் பெயரிய), நிகரில் - சமான ரகித ஞன, வேந்தன் - அரசன், குறைவு இலா நிறைவது ஆகி - அபரிச்சிந்ந பூரணமாதலை யுடையனுய், குளிர்ந்து - சீதள மாய், இளைப்பு ஆறி - ஆயாசம் தீர்ந்து, இறை யளவேனும் - அற்பமேனும், துன்பம் இன்றி - கிலேசம் இன்றி, இன்பம் ஆகி - இன்ப சொரூப மாய், உறை - வஸித்தற்கு, இன்னது இடம் - இவ் விடம், என்ன - என, ஓர் இடம் - ஓர் ஸ்தாந மேனும், இன்றி - இல்லாமல், எங்கும் - சென்ற சென்ற இட மெல்லாம், நிறைவதே - பூரணப் பிரமமா யிருத்தலே, இடம் ஆய் - நிலை யாய், நின்றுன் - இருந்தான், (எ-று).

இலா - இடையும் ஈறும் குறைந்த இல்லாத என்னும் பெய ரெச்சம். நிறைவது - தொழி லாகு பெயர். இறை யளவேனும் - எங்கும் - உம் - இரண்டும் முற் றும்மைகள். நிறைவதே - ஏ -

தேற்றம். மா ராசன் றுனே - தான் - ஏ - இரண்டும் அசை நிலைகள். அரசன் - எழுவாய். நின்றான் - பய னிலை. (60)

பெருங்காயம் இருந்த பாண்டம் போல, மகா ராஜன், உருவ மநதைக் கெடுத்து, அருவ மநதோடு கூடி விளங்கினன் எனக் கூறல்.

எங்குமாய் நிறைந்து நின்ற வேகராச் சியம தாள் வோன், தங்குத லின்றி யெங்குந் தானெனக் கண்ட தூயோன், இங்குறைந் தகன்ற பாண்டத் தியல்பினெஞ் சருவம் பற்றி, அங்குரு வகற்றி நின்று னநந்தி யாகி வேந்தன். (61)

(இ—ள்) எங்கும் ஆய் - எவ்விடத்தும் உள்ள தாய், நிறைந்து - பூரித்து (பொலிந்து), நின்ற - இருக்கின்ற, ஏக - அத்வைத ரூப மான, ராச்சியமது - (பிரஹ்ம) ராஜ்ஜியத்தை, ஆள்வோன் - ஆக்ஷி செய்பவனும், தங்குதல் - தடை, இன்றி - இல்லாமல், எங்கும் - எவ்விடத்தும், தான் என - தானே யுளன் என்பதாக, கண்ட - சாக்ஷாத்கரித் துள்ள, தூயோன் - பரிசுத்தனும் ஆகிய, வேந்தன் - மஹா ராஜன், இங்கு - பெருங் காயம், உறைந்து - இருந்து, அகன்ற - நீங்கிய, பாண்டத்து - பாத்திரத்தினது, இயல் பின் - (தூலப் பெருங்காயம் நீங்கியும், அதன் நீங்காத சூக்ஷமாம்சத் தை யுடைத்தாந்) தன்மை போல, உருவு - தூல மான, நெஞ்சு - மநதை, அகற்றி - நீக்கி, அருவம் - சூக்ஷ்ம மான (மநதை), பற்றி - பொருந்தி, ஆநந்தி ஆகி - ஆநந்த சொரூபி யாகி, நின்றான் - இருந்தான், (எ-று).

"மநநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும் வகுத்து ரைப்பா ரிருவகையா வருமி வற்றில், வினவாத சிவன்முத்த ரிடத்தி

லொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய், தன தான சத்துவமாய் மநஞ்சே டித்துத் தமசுரச சுகணசித்தல் சொரூப நாசம், அஈகாசத் துவந்தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம்'' (2—20) என்று, கைவல்ய நவநீதம், 2. சந்தேகந் தெளிதற் படலம், 20 கவி கூறுவது இங்கு உணரத் தக்கது.

ஏங்கும் - எங்கும் - உம் - முற் றும்மை. இராச்சியமது - அது - பகுதிப் பொருள் விகுதி. ஆள்வோன் - தூயோன் - இவ் வினையா லணையும் பெயர்க ளிறுதியில் எண் ணும்மைகள் தொக்கன. இயல்பின் - இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. அங்குரு - அங்கு - அசை நிலை. வேந்தன் - எழுவாய். நின்றான் - பய னிலை. (61)

அருவ மநம், ஜீவந் முக்தர்க ளிடத்தி லிருப்ப தெனவும், அருவ மநம், விதேக முக்தியில் நாசமாம் எனவும், மகா ராஜன் கைவல்ய ஸ்வரூப மாகவே விளங்கினன் எனவும், கூறல்.

சீவந்முத் தர்கள்பா னிற்குஞ் செப்பிய மநத்த ரூபம்
மேவரும் பரம முத்தி மேவிடி னுச மாகும்
தாவரு நிலைமை நன்றாய்ச் சற்குரு வருளாற் பெற்றுக்
கேவல மாகி நின்றான் கேடிலா ஞாந வேந்தன். (62)

(இ—ள்) சீவந் முத்தர்கள்பால் - ஜீவந் முத்தர்களிடத்தில், நிற்கும் - இருக்கின்ற, செப்பிய - (முன்னர்க்) கூறிய, மநத்து - மநத்தின், அரூபம் - சூக்ஷ்ம சொரூபம், மேவ - அடைதற்கு, அரும் - அரிய, பரம - மே லான, முத்தி - (விதேக) மோக்ஷத்தை, மேவிடில் - அடையில், நாசம் ஆகும் - அழியும், தாவு - கெடுதற்கு, அரும் - அரிய, நிலைமை - (ஞாந) ஸ்திதியை, சற் குரு - ஞாநாசாரி

யாது, அருளால் - அநுக்கிரகத்தினல், நன்று ஆய் - செவ்வையாக, பெற்று - அடைந்து, கேடு - (அத் தகைய ஐயம் திரி வாதி) பழுதுகள், இலா - இல்லாத, ஞாந - (திடாபரோக்ஷ) ஞாநத்தினை யுடைய, வேந்தன் - (அவ்) அரசன், கேவலம் ஆகி - கைவல்லியத்தை யடைந்தவ ஞய், நின்ருன் - இருந்தான், (எ-று).

கைவல்ய நவநீதம் 2-வது சந்தேகந் தெளிதற் படலம் 98 கவி:— "அரியமெய்ஞ் ஞாநத் தீயா லவித்தையா முடனீ ருரும், பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நோம், உரியசூக் குமசரீர மூலயிரும் புண்ட நீர்போல், துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே." (2—93) என்று, சூக்ஷ்ம சரீரம், விதேக முக்தியில் ஸ்வரூபத்தில், அத்தியந்தாபாவத்தை அடையும் என்றும், லய ரூப நிவிர்த்தி அன்று என்றும், கூறுவதை நன்கு உணரவேண்டும்.

மநத்து - அத்து - சாரியை. மேவரும் - தாவரும் - (மேவ + அரும் - தாவ + அரும்) என்பன மேவ, தாவ என்னும் நிலை மொழிகளி னிறுதி அகரங்கள் தொக, மெய் யீருக நின்று புணர்ந்தன. மேவிடில் - இடு - பகுதிப் பொருள் விகுதி. இலா - இடையும் ஈறும் குறைந்த இல்லாத என்னும் பெய ரெச்சம். வேந்தன் - எழுவாய். நின்ருன் - பய னிலை. (62)

மகா ராஜனது ஞாந சித்தியைப் பலர் கூறக் கேட்ட, மகா ராஜனது மந்திரிகளுள் அறிஞ ஞெருவன், காநம் சென்று, மகா ராஜனைக் கண்டு கேட்டலைக் கூறல்.

இத்தகை ஞாநம் பெற்றே யெழின்முநி யாகி யெங்கும்
சித்தனய்த் திரித றன்னைச் செப்புமுன் னமைச்சர் தம்முள்
வித்தக ஞெருவன் கேட்டு வினவிட வேண்டு மென்றே
சுத்தனு மரசைத் தேடிக் கண்டடி பணிந்து நின்ருன். (63)

(இ—ள்) இத் தகை - இவ் வாறுய, ஞாநம் - (திட அப ரோக்ஷ) ஞாநத்தினை, பெற்று - அடைந்து, எழில் - (மைத்திரியாதி) சோபைகளோடு கூடிய, முநி ஆகி - மநந சீல ளுய், எங்கும் - எவ் விடத்தும், சித்தன் ஆய் - (ஞாந) சித்தி யுடையவ ளுய், திரிதல் தன்னை - சஞ்சரிக்கின்ற (மஹா ராஜனது சரித்திரத்தினை), முன் செப்பு - முன்னர் (அவன தரண் மனையி லிருந்தவர்க ளாகச்) சொல் லப்பட்டுள்ள, அமைச்சர் தம்முள் - மந்திரிமார்களுள், வித்தகன் - அறிஞ ளுகிய, ஒருவன் - ஒரு மந்திரி, கேட்டு - கேள்விப்பட்டு, வினவிட வேண்டும் - (மஹா ராஜனைக் கண்டு சில) கேள்விகளைக் கேட்க வேண்டும், என்று - என (க் கருதி), கத்தன் ஆம் - (தன்) யஜமான ளுகிய, அரசை - அரசனை, தேடி - தேடி (ப் போய்), கண்டு - தரிசித்து, அடி - (திரு) வடிகளில், பணிந்து - நமஸ்கரித்து, நின்ருன் - (எழுந்து) நின்ருன், (எ-று).

பெற்றே - ஏ - அசை நிலை. எங்கும் - உம் - முற் றும்மை. திரிதல் தன்னை - தன் - சாரியை. அமைச்சர் தம்முள் - தம் - சாரியை. வினவிட - இடு - பகுதிப் பொருள் விகுதி. என்றே - ஏ - அசை நிலை. ஒருவன் - எழுவாய். நின்ருன் - பய னிலை. (63)

மந்திரி பார்க்கும் சமயம், மஹா ராஜன், பூமி படுக்கை, ஆகாயம் மேற்கட்டி, சூரிய சந்திரர் விளக்கு, வாயுவு சாமரம், பற்று ஒழிதல் மனைவி, தனித் திருத்தல் இன்பம் எனக் கருதி, விளங்கிக்கோண்டிருந்தனன் எனக் கூறல்.

பூவணை யாகி வானம் பொருந்துமேற் கட்டி யாகித்
தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக்
கேவலமின்பமாகிக் கிளர்ச்சியாய் நின்ருன் வேந்தன். (64)

(இ—ள்) வேந்தன் - மஹா ராஜன், பூ - பூமியே, அணை ஆகி - படுக்கை யாகவும், வாநம் - ஆகாயம், பொருந்து - கூடியிருக் கின்ற, மேற் கட்டி ஆகி - விதாந மாகவும், இந்து - சந்திரனும், செம் - சிறந்த, கதிர் - சூரியனும், தீவமது ஆகி - தீப மாகவும், வீசும் - சுழலாநின்ற, காற்று - வாயு, மேவு - பொருந்திய, சாமரமது ஆகி - (வெண்) சாமரை யாகவும், விடுதலே - (பந்த) நீக்கமே, மனைவி ஆகி - இல்லா ளாகவும், கேவலம் - தனிமை யாக இருத்தலே, இன்பம் ஆகி - சுக மாகவும் (கொண்டு), களர்ச்சி ஆய் நின்றான் - மந நிறைவு, குதூகுலம், ஆநந்தத்தோடு கூடியிருந்தான், (எ-று).

ஈண்டுப் "பூ அணை யாகி" என்பதாதியவற்றுள்ள, "ஆகி" என்னும் செய் தென் வாய்பாட்டு வினை யெச்சங்களை எல்லாம், செய வென் வாய்பாட்டு வினை யெச்சங்க ளாக்கிப் பொருள் கொள்க. இந்து செங் கதிர் - உம்மைத் தொகை. தீவமது - சாமரமது - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். ஞாந வேந்தன் - எழுவாய். நின்றான் - பய னிலே. இப் பாவில் உலக அரசனுக் குரியவை, ஞாந அரசனுக்கு முள என உருவகிக் கின்றார். (64)

நவ ரத்நம் இழைத்த சிம்மாசநத்தில், சது ரங்க சேனைகள் சூழ வந்து, சிங்காதநத்தில் அலங்காரத்தோடு விளங்கவேண் டிய மஹா ராஜன், மந்திரி பார்க்கும் போது, விபூதி உத்தூளந கௌபீந தாரியாய், ஜடா முடியோடு விளங்கினன் எனக் கூறல்.

ரதமுதற் சேனை சூழ ரத்நசிங் காத நத்தில்
விதவலங் காரத் தோடு வீற்றிருந் தமரு வேந்தன்
உதவுகோ வணனாய் மேனி யுருத்தெரி யாத நீறாய்
முதன்முடி விரித்து நின்றான் முநிவனா யொருவ னாகி. (65)

(இ—ள்) ரதம் - தேர் (ப் படை), முதல் - முதலிய, சேனை - (சது ரங்க) சைந்யங்களும், சூழ - (தம்மைச்) சூழ்ந்துவர, ரத்ந - (நவ) ரத்திநங்களால் செய்யப்பட்ட, சிங்க ஆதநத்தில் - சிம்மாசநத்தில், வித - (அநேக) வித, அலங்காரத்தோடு - (ஆபரணம் அல்லது, சிறப்பு) அலங்காரங்களோடு, வீற்று இருந்து - எழுந்தருளியிருந்து, அமரு வேந்தன் - மகிழும் அரசன், உதவு - (மாநத்தைக் காத்தற்கு)உதவும்படியான, கோவணன் ஆய் - கௌபீநத்தை யுடையவனாய், மேனி - சரீரத்தின், உரு - சொரூபம், தெரியாத - விளங்காதிருக்கும்படி யான, நீறு ஆய் - விபூதிப் பூச்சு உடையவனாய், முநிவன் ஆய் - மௌந சீலனாய், ஒருவன் ஆகி - ஏகனாய், முதல் - சிரேஷ்டமான, முடி - சடையை, விரித்து - விரித்துக்கொண்டு, நின்றான் - (தபஸ்வியாக) இருந்தான், (எ-று).

ரதம் - ரத்நம் - இகரம் தொகப் பெற்ற, இரதம், இரத்நம் என்பன. அமரு வேந்தன் - உதவு கோவணன் - இவை யிரண்டும் வினைத் தொகைகள். வேந்தன் - எழுவாய். நின்றான் - பய னிலை. அமர்தல் - மகிழ்தல். (65)

சதுரங்க சேனைகளும் இன்றிப் பாதசாரியாய், ஒரு வீட் டுண வின்றி, ஊர் முழுதும் பிக்ஷை ஏற் றுண்பவனாய், அரச சின்னம் இன்றித், தவச் சின்னம் உடையவனாய்ச் சஞ்சரிக்கும் மஹா ராஜனைக் கண்டு, மந்திரி கேட்டனன் எனக் கூறல்.

கரிரத மிவர்த லின்றிக் கானடை யாகி யெங்கு
முரியதோர் மனையூ ணின்றி யூரெங்கு முண்பா னாகி
அரியரா சாங்கக் கோல மகற்றியே தவாங்க மாகித்
திரியுமவ் வரசைநோக்கிச்செப்பினனமைச்சன்றானே. (66)

(இ—ள்) கரி - யானையிலும், இரதம் - இரதத்திலும், இவர்தல் - (ஏறிச்) செல்லல், இன்றி - இல்லாமல், எங்கும் - எவ் விடத்திற்கும், கால் நடை ஆகி - பாதசாரி யாகச் சென்றும், உரியது - உரித் தாக உள்ள, ஓர் - ஒரு, மனை - வீட்டின்கண், ஊண் - (நியம மாக உண்ணும்) உணவு, இன்றி - இல்லாமல், ஊர் எங்கும் - ஊரில் உள்ள இல்லங்கள தோறும், உண்பான் ஆகி - (சென் றிரந்து கையில் வாங்கி) உண்பவனும், அரிய - (கிடைத் தற்கு) அருமை யான, இராச அங்க கோலம் - இராச சின்னத்திற் குரிய அலங்காரங்களை, அகற்றி - நீக்கி, தவ - தவத்திற் குரிய, அங்கம் ஆகி - சின்னங்களே உடையவ னாகியும், திரியும் - சஞ்சரித் துக்கொண்டிருக்கின்ற, அவ் அரசை - அந்த மஹா ராஜனை, நோக்கி - பார்த்து, அமைச்சன் - மந்திரி, செப்பினன் - (பின் வரு மாறு) கூறினன், (எ-று).

கரி + இரதம் = கரி ரதம் — ஈண்டு இகரம் தொக்க நின்றது. கரி ரதம் என்பவற்றி னீறுகளில் ஏழ னுருபுகளும் தொக்கன. எங்கும் - உம் - முற்று. ஊர் - ஆகு பெய ராய் அங்குள்ள இல்லங்களைக் குறித்தது. (ஊர்) எங்கும் - பன்மை குறித்த தொறுப் பொருளில் வந்தது. நடை யாகி - உண்பா னாகி - அங்க மாகி - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. உரியது - என்னும் குறிப்பு வினை முற்று, ஈண்டுப் பெய ரெச்சமாய் நின்றது. இராச + அங்கம் = இராசாங்கம் - தவ + அங்கம் = தவாங்கம் - வடமொழித் தீர்க்க சந்தி. அகற்றியே - அமைச்சன்றானே - ஏ - தான் - ஏ - மூன்றும் அசை நிலைகள். அமைச்சன் - எழுவாய். செப்பினன் - பய னிலை. (பின் வரு மாறு) - செயப்படு பொருள். (6)

மகா ராஜனை, மந்திரி கேட்டதனைக் கூறல்.

அவனியி னினக்கு மேலோ ரரசனு மில்லை யிந்தத்,
தவவடி வாகி யெங்குஞ் சரித்திட லெற்றி னுக்கோ,

நவமதா யுடலி தோடே நண்ணுவ தெனையீ தன்றி, இவ
ணெனக் கருள வேண்டு மெனக்கறி வோங்கு மாறே. (67)

(இ—ள்) அவனியில் - பூமியில், நினக்கு - உனக்கு, மேல் - உயர் வாக, ஓர் - ஒரு, அரசனும் - இராஜனும், இல்லை - இல்லை, இந்த - (அப்படி யிருக்க) இப்போது காணப்படுகிற, தவ - தவத்திற் குரிய, வடிவு ஆகி - அடையாள முடையவ ளுய், எங்கும் - எவ் விடத்தும், சரித்திடல் - (சஞ்) சரித்திடல், எற்றினுக்கோ - எதனைக் கருதியோ (யாம் அறிகிலேம்), உடலிதோடு - இந்தத் தூல (மனித) சரீரத்தோடு (அடைதற் குரியது), ஈது - (கிடைத்தற் கரிய) இந்த இராச போகமே, அன்றி - அல்லாமல், நவமது ஆய் - (இதற்கு அன்னிய மாய்ப்) புதி தாக, நண்ணுவது - அடையப் போவது, எனை - யாது இருக்கின்றது (அப்படி ஒன்று இருக்கு மாயின்), எனக்கு - அடியேனுக்கு, அறிவு - ஞானம், ஓங்கும் ஆறு - விருத்தியாகும்படி (வளரும்படி), இவண் - இவ் விடத்து, எனக்கு - அடியேனுக்கு, அருள வேண்டும் - (அதனை) அநுக்கிரகிக்க (உபதேசித்தருள) வேண்டும் என மந்திரி கூறினன், (எ—று).

ஓராசனும் - எங்கும் - உம் - இரண்டும் முற் றும்மைகள். சரித்திடல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. எற்றினுக் கோ - ஓ - வினு. நவமதாய் - அது - பகுதிப் பொருள் விகுதி. இதோடே - ஓங்குமாறே - ஏ - இரண்டும் அசை நிலைகள். நண்ணு வது - வினையா லணையும் பெயர். எனை - என்ன என்பதன் விகாரம். ஈது - நீண்ட சுட்டு. (நீர்) தோன்றா எழுவாய். அருள வேண்டும் - பய னிலை. நண்ணுவது - செயப்படு பொருள். (67)

இல் லறத்தி லிருந்து பத மோக்ஷத்தினை அடையலாம், இல் லறத்தி லிருந்தே ஞானத்தினுல் பர முத்தியையும் அடைய லாம். இங்ஙனம் இருக்க, எதனை விரும்பி "இழிந்த பரதேசிக்

கோலம் கொண்டது" என்று மஹா ராஜனைப் பார்த்து, மந்திரி கேட்டான் எனக் கூறல்.

பதத்தினை வேண்டின் முன்னம் பற்றிநின் றில்ல றத்தைப்
பதப்பட நிறுத்தி யேகல் பண்பதா மேலா முத்திப்
பதத்தைவேண் டிடிலோ ஞாநப் பார்வையிற் கூடு நீயெப்
பதத்தினை வேண்டி யிந்தப் பரதேசி யான தென்றான். (68)

(இ—ள்) பதத்தினை - (கைலாசாதி) பத மோக்ஷங்களை, வேண்டின் - விரும்பினால், முன்னம் - முதலில், இல் லறத்தை - கிரக தர்மத்தை, பற்றி - பொருந்தி, நின்று - இருந்து, பதப்பட - ஒழுங்காக அதனைச் (சீர் பெற), நிறுத்தி - நிலை நாட்டி, ஏகல் - (கைலாசாதி பதங்களைப் போ) யடைதல், பண்பது ஆம் - ஒழுங்காம் (தகுதி யாம்), மேல் ஆம் - (புநராவிருத்தி யின்றிய தன்மையால்) மேன்மை யாய, முத்தி பதத்தை - மோக்ஷ நிலையை, வேண்டின் - (அடைய) விரும்பின், ஞாந பார்வையின் - ஞாந திருஷ்டியினால், கூடும் - (அது) பொருந்தும் (கைகூடும் - சித்திக்கும்), நீ - (அப்படி யிருக்க) நீர், எப் பதத்தினை -(வேறு) எந்த மோக்ஷத்தினை, வேண்டி - விரும்பி, இந்த - இவ் வித, பர தேசி - பிச்சைக் கார னாக, ஆனது - ஆனமை, என்றான் - என்று மந்திரி வினவினான், (எ-று).

மந்திரிக்கு, "துறவு உயர்வு" என்று தோன்றாமையின், "நீ எப் பதத்தினை வேண்டி இந்தப் பரதேசி ஆனது" என்று இழிவுக் குறிப்புத் தோன்றக் கூறினான். பரதேசம் - அயல் தேசம், பரதேசி - அயற் றேசத்தான் என்பதே அதன் உண்மைப் பொருள். அங்ஙன மிருப்ப அதனை உணராது, இழிந்த கருத்தோடு, "பரதேசி" எனக் கூறினான் மந்திரி என்பது இவ் குணாரற்பாற்று. அது எது போலும் எனின், தாசி - தட்டு வாணிச்சி - தே வடியாள் - அவிசாரி மகன் - ஆண்டி - பண்டாரம் - தே வடியாள் மகன் என்னும் சொற்கள் நல்ல

நிலைமையி லிருக்க, அதனை இக் காலத்தவர் இழி சொல் லாகக் கருதிப் பொருள் கொள்ளல் போலும் என்க.

பதத்தினை - எப் பதத்தினை - இன் - இரண்டும் சாரியைகள். பண்பதாம் - அது - பகுதிப் பொருள் விகுதி. வேண்டிடிலோ - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஓ - அசை நிலை. எகல் - எழுவாய். பண்பதாம் - பய னிலை. அது (முத்திப் பதம்) - தோன்றா எழுவாய். கூடும் - பய னிலை. அமைச்சன் - தோன்றா எழுவாய். என்றான் - பய னிலை. (மேற் கூறி வந்த விடயங்கள்) - செயப்படு பொருள். (68)

மஹா ராஜன் மந்திரிக்கு விடை கூறத் தொடங்கி, யவனை யேகாக்கிர சித்தனு யிருந்து கே ளெனக் கூறி, "நமக்கு மேலாக ஓர் அரசர் இல்லை" என்று மந்திரி கூறிய சொல்லைத் தெளிவுபட விளக்குதலைக் கூறல்.

அமைவுடை யமைச்சின் மிக்கோ யடைவுடன்
வினவிக் கேட்டாய், இமையள வேனுஞ் சித்த மிதுவது
வெனவோ டாது, சமைவுடன் கேணீ சொன்ன
சங்கைக்குத் தரங்க ணன்றாய், நமைவிட வேறோர்
வேந்து நாட்டிலை யென்ப தொக்கும். (69)

(இ—ள்) அமைவு உடை - பொறுமையினை யுடைய, அமைச்சில் - மந்திரிமார்களுள், மிக்கோய் - சிரேஷ்டம் பொருந்தி யவனே, அடைவுடன் - கிரமத்தோடு, வினவிக் கேட்டாய் - (ஆராய்ந்து) வினவினாய், நீ - நீ, சொன்ன - கூறிய, சங்கைக்கு - வினுவுக்கு, உத்தரங்கள் - விடைகளை, இமை யளவேனும் - இமை கொட்டுகிற காலமேனும்; சித்தம் - மந மானது, இது அது என - (அண்மை விடய தூர விடயங்களை முறையே) இது என்றும், அது என்றும் கருதி, ஓடாது - (வெளிச்) செல்லாது, சமைவுடன் -

(அதனை அடக்க லாகிய) மந நிக்கிரகத்துடன் இருந்து, நன்று ஆய் - செவ்வை யாக, கேள் - கேட்பாயாக, நமைவிட - (நாமே யன்றி) நம்மைக் காட்டிலும் (உயர் வாக), வேறு - அந்நிய, ஓர் - ஒரு, வேந்து - அரசன், நாட்டு - உலகத்தில், இலே - இல்லை, என்பது - எனக் கூறியது, ஒக்கும் - (நமக்கும்) சம்மதம், (எ-று).

அமை வுடை - உடை - ஈறு குறைந்த உடைய என்னும் பெய ரெச்சம். அளவேனும் - உம் - முற் றும்மை. இலே - இல்லை என்ப தன் இடைக் குறை. என்பது - எழுவாய். ஒக்கும் - பய னிலை. (69)

இல் லறத்தி லிருந்து பத மோக்ஷம் அடையலாம் என வும், இல் லறத்தி லிருந்து பர மோக்ஷ மடைதற் குரிய சாதந மாகிய ஞாநம், குடும்ப பாரத்தில் மூழ்குவோருக்கு உண்டாகா தேனவும் கூறல்.

பதமதை வேண்டி னில்லைப் பதப்பட நிறுத்தி யேகல்,
இதமென்ற லொக்கு முத்தி யெய்துதன் ஞாநப் பார்வை,
விதமதிற் றேன்று மென்றாய் விருப்பமாய்க் குடும்ப
பாரத், திதமதா யழுந்து வோருக் கெங்ஙனம் பார்வை
தோன்றும். (70)

(இ—ள்) பதமதை - (கைலாசாதி) பதத்தினை, வேண்டின் - விரும்பினுல், இல்லே - இல் லறத்தை, பதப்பட - ஒழுங்காக, நிறுத்தி - நிலைக்கச் செய்து, ஏகல் - (அதனைப்) போ யடைதல், இதம் - ஒழுங்காம் (உரியதாம்), என்றல் - எனக் கூறியது, ஒக்கும் - (நமக்கும்) சம்மதம், முத்தி - (ஜீவந் முத்தி), விதேக முத்திகளை, எய்துதல் - அடைதல், ஞாந பார்வை - ஞாந திருஷ்டி யாகிய, விதமதில் - உபாயத்தால், தோன்றும் - உண்டாம், என்றாய் - என (நீ) கூறினுய், விருப்பம் ஆய் - ஆசையோடு, குடும்ப

பாரத்து - சமுசாரச் சுமையில், அல்லது, குடும்பப் பொறுப்பில், இதமது ஆய் - (அதனை) இனிமைய தாகக் (கருதி), அழுந்து வோருக்கு - மூழ்கிக் கிடப்பவர்களுக்கு, அல்லது, பதிந்து கிடப் பவர்க்கு, பார்வை - (ஞாந) திருஷ்டி, எங்ஙனம் - எவ் வாறு, தோன்றும் - உண்டாகும் (உண்டாகமாட்டாது), (எ-று).

பதமதை - விதமதில் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அழுந்துவோர் - வினையா லணையும் பெயர். என்றல் - எழுவாய். ஒக்கும் - பய னிலை. நீ - தோன்று - எழுவாய். என்றாய் - பய னிலை. எய்துதல் - செயப்படு பொருள். பார்வை - எழுவாய். தோன்றும் - பய னிலை. (70)

மநம் ஏக காலத்தில் இரு பொருளைக் கவராது எனவும், அட்டாவதாநம் முதலியன வெளி நோக்கம் எனவும், மோக்ஷம் உள் நோக்கம் எனவும், இல் லறம் புற நோக்கம் எனவும், இவற்றிற்குத் திருஷ்டாந்தத்துக் குரிய உக்திகளும் கூறுவாம் எனவும், கூறல்.

மநமிரு பொருளைப் பற்ற மாட்டாதட் டாவ தாநம்
இனமவை புறநோக் கான வேதினுற் கூடும் வீடு
கனவுண்ணுக் காகு மில்லங் கருதிய புறநோக் காகும்
அநகவிவ வூகந் தோன்ற வறைகுவ நாமே கேளாய். (71)

(இ—ள்) மநம் - அந்தக் கரணம், இரு - இரண்டு, பொருளை - வஸ்துக்களை, பற்றமாட்டாது - (ஏக காலத்தில் வெவ் வேறு விருத்திகளால்) பொருந்தமாட்டாது, [அஷ்டாவதாந முதலி யன ஏக காலத்தில் காணப்படுகின்றனவே யெனின், அதற்குச் சமா தாநங் கூறுகின்றார்.] அட்டாவதாநம் - அஷ்டாவதாநமும், இனம் அவை - அதனை ஒத்த தசாவதாநம், ஷோடசாவதாநம், சதாவ

தாநம் முதலியவையும், புற - பாகிய, நோக்கு ஆன - திருஷ்டி யான, எதினல் - காரணத்தினல், கூடும் - (ஏக காலத்தில் வெவ் வேறு விருத்திகள்கொண்டு வெவ் வேறு வஸ்துக்களை அவதாநித்தல்) பொருந்தும், [இனி இல் லறமும் மோக்ஷமும் பற்றியோ என்றல் அவற்றைக் கூறுகின்றர்.] வீடு - மோக்ஷம், கன - மிகவும், உள் - ஆந்தர, நோக்கு ஆகும் - திருஷ்டிக் குரியதாம், இல்லம் - இல் லறம், கருதிய - விரும்பாநின்ற, புற - பாகிய, நோக்கு ஆகும் - திருஷ்டிக் குரியதாம் (ஆகலின், இவை ஒன்றற் கொன்று நேர் மாருனவை), அநக - பாவ மற்றவனே (மந்திரி), இவ் ஆகம் - இந்தக் கருத்து, தோன்ற - (உனக்கு) விளங்கும்படி, நாமே - யாமே, அறைகுவம் - (யுக்தியைக்) கூறுவோம், கேளாய் - (நீ உள் முகத்தோடு) கேட்பா யாக, (எ-று).

அஷ்ட அவதாநம், தச அவதாநம், சோடச அவதாநம், சத அவ தாநம் முதலியன ஒரே காலத்தில் நடப்பன போலத் தோன்று வது மயக்கத்தா லாம். அவை ஒன்றன் பின் ஒன்ருகக் கிரமமாய் நடக் கின்றன. அவற்றில், ஒரே காலத்தில் நடப்பதாக மயக்கம் உண்டா கின்றது. அது எது போல எனின், நூறு வெற்றிலையின் மேல், "ஒரே குத்தாய் குத்தி விட்டேன்" என்று உண்டாவது போல ஆம். அதாவது, ஒவ் வொரு வெற்றிலை யாகக் குத்தப்பட்டு நூறு வெற்றிலையும் குத்தப்பட்டனவே அன்றி, ஒரே காலத்தில், நூறு வெற்றிலையும் குத்தப்பட வில்லை. அப்படியிருந்தும் ஒரே குத்தில் ஒரே காலத்தில் குத்தப்பட்டனவாக மயக்கம் உண்டாகின்றது. இன்னும், "அதே விளக்கு" என்பதும், மாவலி (கொள்ளிக் கட்டை) யில், "சக்கரம் போன்று வட்டமா யிருக்குந் தன்மை" தோன்றுவதும், மயக்க மாம். விளக்கு ஒரே மாதிரியாக எரிந்து கொண்டிருத்தலின், சாதிருசியத்தால், அந்த விளக்கே, அதாவது மாலையில் வைத்த விளக்கே, காலையிலும் இருக்கின்றது என்று தோன்றுகின்றது. வேகத்தால், மாவலி (கொள்ளிக் கட்டை) யில்,

நெருப் பின்றிய இடங்களிலும் நெருப்பினுல் உண்டாம் வட்ட வடிவைத் தன்மை தோன்றுகின்றது என உணர்க.

நோக்காகும் - ஈண்டு, நோக்குக் குரியவற்றை நோக்கு என உபசரித்தார். அநக அண்மை விளி. கேளாய் - முன் னிலே யேவல் உடன்பாட்டுத் தெரி நிலே வினை முற்று. நாம் - எழுவாய். அற்றைகுவம் - பய னிலே. ஊகம் - செயப்படு பொருள். (71)

தெற்கு நோக்கிச் செல்வோர், வடக்கி லிருக்கும் கங்கை நதியை அடையார் எனவும், இல் லறத்தார் ஞாந வாயி லாக மோக்ஷம் அடையார் எனவும், அரசர்கள் ராஜ்ஜிய வியவகாரத்தில் அவற்றைக் குறித்து மந்திரிகளோடு ஏகாந்தத் தாநத்தினை அடைந்து யூகம் செய்வார் எனவும், கூறல்.

தென்றிசை நடப்போர் கங்கை சென்றுதோய்ந்
திடுவ ரோதான், நின்றிதை நோக்கா யில்வி னிற்பவர்
முத்தி சேரார், அன்றியு மவனி வாழ்க்கைக் கமைச்சர்க
ளுடனே காந்தம், ஒன்றியே யூகஞ் செய்வா ருலகவேந்
தாயி னோர்கள். (72)

(இ—ள்) தென் திசை - (காசியினின்றுந் தெற்கே யுள்ள வூரி லிருந்து) தெற்கு நோக்கி, நடப்போர் - நடந்து செல்லுவோர், கங்கை - (வட திசையி லுள்ள அக் காசிக்) கங்கா நதியை, சென்று - போய் அடைந்து, தோய்ந்திடுவரோ - (அதில்) ஸ்நாநஞ் செய்வார்களா? (செய்யமாட்டார்கள் அது போல), இல்வில் - கிரக விவகாரத்தில், நிற்பவர் - (அழுந்தி) இருப்பவர், முத்தி - மோக்ஷத்தினை, சேரார் - அடையமாட்டார், அன்றியும் - மற்றும், அவனி வாழ்க்கைக்கு - உலகர் வாழ்விற்குச் சாதநமான ராஜ்ய விவகாரத்தைக் குறித்து, உலக - (இக) லோகத்தி லுள்ள, வேந்தாயி

ஞோர்கள் - அரசர்கள், ஏகாந்தம் - (நிர்ஜநப் பிரதேச மாய) தனி யிடத்தை, ஒன்றி - பொருந்தி, அமைச்சர்களுடன் - மந்திரிமார்க ளோடு சேர்ந்து, யூகம் - ஆலோசனையை, செய்வார் - செய்கின்றார் கள் (அது போல் குரு அருளிய முத்தி மார்க்கத்தினை ஏகாந்தத்தி லிருந்து ஆராய்ந்து அநுட்டித்தல் வேண்டும், இதை - இவ் விஷயத் தினை, நின்று - (தனி இடத்தில் நிலைத்து) இருந்து, நோக்காய் - விசாரித்துப் பார்ப்பாயாக, (எ-று).

வைராக்யதீபம் கவி 41. "எடுத்துள குடும்பச் சுமையொ டுண் டொருவ னெங்ஙன ஞாநவா சானை, அடுத்தவ னேவ ஹெடுத் தருள் சுரக்கு மளவுநின் றுளமகிழ்ந் தன்னோன், கொடுத்தநாள் வாங்கிக் கொளும்பர மார்த்தங் கூடினுங் காலமா திகளால், தடுத் துரை தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தஃ துணரவும் படுமே." (41) என்பது, இல் லறத்தான் ஞாநாசாரியரை அடைய முடியா தென்றும், அவனுக்குப் பூரண கிருபை வருமளவும் அவனது ஏவற் பணி விடையைத் தொடங்கிச் செய்து நிற்கமுடியா தென்றும், அந்த ஞாநாசாரியன் திரு வுள்ள மகிழ்ந்து ஞாந உபதேசத்தை அநுக்கிரகம் பண்ணிய காலத்துத் தான் வாங்கிக்கொள்ள வேண்டும், அதுவரைக் காத்திருக்க முடியாது என்றும், கூறுவதை ஊன்றி நோக்குவார்க்கு, "இல்லி னிற்பவர் முத்தி சேரார்" என்பது நன்கு புல னும்.

நடப்போர் - வேந்தாயினோர்கள் - நிற்பவர் - இவை மூன்றும் வினையா லணையும் பெயர்கள். தோய்ந்திடுவரோ தான் - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஓ - எதிர்மறை. தான் - அசை நிலை. அன்றியும் - உம் - எதிரது தழீஇய எச்சம். அவனி - இட வாகு பெயர். நோக்காய் - உடன்பாட்டு முன் னிலை யேவல் வினை முற்று. இல்லில் - இட வாகு பெய ராய் ஆங்குள்ள விவகாரத்தினைக் குறித்தது. நடப்போர் - எழுவாய். தோய்ந்திடுவரோ - பய னிலை.

வேந்தாயினோர்கள் - எழுவாய். செய்வார் - பய னிலே. யூகம் - செயப்படு பொருள். "அது போல், குரு அருளிய முத்தி மார்க்கத் தினை ஏகாந்தத்தி லிருந்து ஆராய்ந்து அநுட்டித்தல் வேண்டும்" என்பது இசை எச்சத்தால் வந்தது. நீ - தோன்ரு எழுவாய். நோக்காய் - பய னிலே. இது - செயப்படு பொருள். நிற்பவர் - எழுவாய். சோரார் - பய னிலே. முக்தி - செயப்படு பொருள். இதில் உவமை யணி யுண்டு. (72)

ஞாநி யெனப்படுவோர், சொல் லளவில் ஞாநி யாக விளங்குவோரும், செயல் அளவில் ஞாநியாக விளங்குவோரும் என இரு வகைய ராவர். இவரை வாசா ஞாநிகள் எனவும், அநுபவ ஞாநிகள் எனவும் கூறுவர். பாசம் விரோதி எனும் விவேக ஞாநம் உண்டாயின், பாசத்தில் ஆசை வைத்துப் பொருந்தல் கூடாது. வாசா ஞாநிகளோ, பாசம் விரோதி என்று கூறுவர், பாசம் விடார், எல்லாம் பிரஹ்மம் எனப் புலம்புவர் எனக் கூறுதல்.

*பாசந்தான் பகைய தாகப் பார்வைபெற் றிடிற்பா சத்தில், பாசந்தான் வைத்துப் பின்னும் பற்றவுங் கூடு மோதான், பாசந்தான் பகைய தென்றே பகருநூன் மட்டே கற்ருேர், பாசந்தான் விடவு மாட்டார் பரமெலா மெனவாய்ப் போக்கும்.* (73)

(இ—ள்) பாசம் - (சம்சார) பந்தம், பகையது ஆக - விரோதி என்ப தாக, பார்வை - (ஒருவர் உண்மை) ஞாநத்தை (விவேக நோக்கை), பெற்றிடில் - அடையில், பின்னும் - (அங்ஙனம் அதனை அடைந்த) பின்னரும், பாசத்தில் - (அச் சமுசார) பந்தத்தில் (அவர்), பாசம் வைத்து - ஆசையை வைத்து, பற்றவும் கூடுமோ -

பொருந்துதல் தகுமா? (கூடாது என்றபடி), [சிலர் சம்சாரத்தில் இருந்துகொண்டே சம்சாரம் விரோதம் என்று கூறுகின்றார்களே எனில், அதற்கு, வாசா ஞாநிகள் கூறுவர் எனச் சமாதாநங் கூறுகின்றார்.] பாசம் - சம்சாரம், பகையது - விரோதி, என்று - என, பகரும் - (வைராக்கியத்தைக்) கூறும், நூல் மட்டே கற்றோர் - (துறவு சாஸ்திர ஒழுக்க மின்றி அதன்) படிப்பு மாத்திர முடையோர், பாசம் - (சம்சார) பந்தத்தை, விடவுமாட்டார் - விட்டு நீங்கார், எலாம் - (அன்றியும்) யாவும், பரம் - பிரம்ம சொரூபமே, என - என்று, வாய் போக்கும் - வார்த்தை (மாத்திரம்) செலவிடுவர், (எ-று).

வைராக்ய தீபம் கவி 40. "தத்துவ முணர வேண்டினேன் மனைமுற் சகலமும் விடுத்துமெய்ஞ் ஞாந, முத்திரை திகழச் சமாதியுற் றல்லான் முடியுமோ வெனவுமை முதலா, வைத்ததற் குழாத்தை யொருவிநீள் கல்லான் மரத்தினீ ழலிற்சமா தியையுற், றத்தனே யுணர்த்தி னெனிற் பினும்வே றறைதனம் மிகுமட னன்றே" (40) என்பது, ஆத்ம தத்துவத்தினை உணர விரும்பினேன், மனை முதலிய யாவற்றையும் விடவேண்டும் என்றும், பரசிவனே உமை முத லாகிய தன் குழாத்தை விட்டு நீண்ட கல் லால மரத் தடி நிழலில் சமாதி பொருந்தி யிருந்து உணர்த்தினன் என்றும், கூறுவது கொண்டு, பாசத்தை விடவேண்டும் என்றும், பாசத்தை விட்டேன் என்று பிறர் மெச்சச் சொல்லும் சொல்லால் பயன் இன்று என்றும் உணர்க.

பாசந் தான் - என்பவற் றுள்ள - தான் - நான்கும் அசை நிலைகள். பகையதாக - பகைய தென்றே - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். பின்னும் - உம் - எதிரது தழீஇய எச்சம். பற்றவும் - அசை நிலை. கூடுமோ தான் - ஓ - எதிர் மறைப் பொருள் குறித்தது. தான் - அசை நிலை. பகரும் - பெய

ரெச்சம். மட்டே - ஏ - பிரி நிலை. விடவும் - அசை நிலை. வாய் போக்கும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. வாய் - ஆகு பெய ராய் வாக்கினைக் குறித்தது. போக்கும் - என்னும் செய்யு மென் முற்றுப் பல்லோர் படர்க்கையில் வாராது. ஈண்டு, அங்ஙன் வந்தமை இட வழு வமைதி. கற்றோர் - எழுவாய். போக்கும் - பய னிலை. வாய் - செயப்படு பொருள். (73)

"ஆத்ம ஞானத்தினால் மோக்ஷம் அடையலாம். துற வறம் வேண்டாம்." என்று மந்த அதிகாரிகளைக் குறித்து நூல் கூறும், தீவிர அதிகாரிகளைக் குறித்து, "துற வறம் வேண் டாம்." என்று, நூல் கூறாது எனக் கூறல்.

அந்தமா திபுமி லாவீ டடைந்துடற் பிறப்ப றுக்கச்
சுந்தர ஞானம் போதுந் துறவற மேதுக் கென்றே
மந்ததி காரி யோரை மதித்துநூ லுரைக்குஞ் செய்தி
அந்தம தான பேருக் கத்தகை விளம்பா தென்றும். (74)

(இ—ள்) மந்த அதிகாரியோரை - (மோக்ஷம் அடைய வேண்டு மென்னும்) தீவிர இச்சை வைராக்கிய மில்லாதவரை, மதித்து - உத்தேசித்து, நூல் - சாஸ்திரம், அந்தம் - முடிவும், ஆதியும் - முதலும், இலா - இன்றிய, வீடு - மோக்ஷத்தை, அடைந்து - பொருந்தி, உடல் - (வினை வயத்தால் வரும்) சரீரத்தினது, பிறப்பு - (சம்பந்த முற லாகிய) பிறவியை, அறுக்க - நாசஞ் செய்ய, சுந்தர - (அஞ்ஞானத்தை நிவிர்த்திக்கும்) வனப் புடைய, ஞானம் - பிரத்தியக பின்ன பிரம்ம சாக்ஷாத்காரம் (மட்டும்), போதும் - போதிய தாகும், துற வறம் ஏதுக்கு - சந்நியாசம் எதற்காகச் செய்ய வேண்டும் (செய்ய வேண்டிய தில்லை), என்று - என, செய்தி உரைக்கும் - (மோக்ஷ சாதந)விஷயத்தை சொல்லும், [தீவிர வைராக்கிய மோக்ஷ இச்சை உடைய உத்தம அதிகாரிக்கு அவ் வாறு கூறாது என்கின்றார்.]

அந்தமது ஆன - (சதுட்ட சாதநங்களும்) அவதிபரியந்தங் கைவரப் பெற்ற, பேருக்கு - (உத்தம) அதிகாரிக்கு, அத் தகைய - அவ் விதம் (சந்நியாசத்தை அடைய வேண்டாம் ஞாநம் ஒன்றே போதும் என்னும்) தன்மையை, என்றும் - எப் பொழுதும், விளம்பாது - (அச் சாஸ்திரம்) கூறமாட்டாது, (எ—று).

அந்த மாதியும் - உம் - இறந்தது தழீஇய எச்ச வும்மை. அந்தம் - என்பத னீற்றில் எதிரது தழீஇய எச்ச உம்மை தொக்கது. இலா - இடையும் ஈறுங் குறைந்த இல்லாத என்னும் பெய ரெச்சம். என்றே - ஏ - அசை நிலை. அந்தமது - அது - பகுதிப் பொருள் விகுதி. என்றும் - உம் - முற் றும்மை. நூல் - ஏழுவாய். உரைக்கும் - பய னிலை. செய்தி - செயப்படு பொருள். (நூல்) - எழுவாய். விளம்பாது - பய னிலை. அத்தகை - செயப்படு பொருள். (74)

“உத்பத்தியாகின்ற பிரபஞ்சப் பொருளின் தன்மையும், உத்பத்தி செய்கின்ற பிரமப் பொருளின் தன்மையும், அசுத்தந் துக்கம் அநித்தியத் தன்மையும், சுத்தஞ் சுக நித்தியத் தன்மையும் விளங்க உபதேசிப்பாம்” என, மஹா ராஜன் மந்திரிக்குக் கூறினன், எனக் கூறல்.

தோன்று கின்ற பொருளியல்புந் தோற்று விக்கும் பொருளியல்பும், தோன்ற வுனக்கி யாமுரைக்கச் சோக மறவே கேட்டிடுவாய், தோன்று பொருள்க ளநித்தமு மாய்த் தூய்மை யின்றித் துக்கமுமாய்த், தோன்றுந் தோற்று விக்கும்பொருள் சுகமாய்ச் சுத்த நித்தமு மாம். (75)

(இ—ள்) தோன்றுகின்ற - காணப்படுகின்ற, பொருள் - பிரபஞ்சத்தின், இயல்பும் - சுபாவமும், தோற்றுவிக்கும் - (இதனை)

விளக்குவிக்கின்ற, பொருள் - (பிரஹ்ம) வஸ்துவின், இயல்பும் - சுபாவமும், உனக்கு - நினக்கு, தோன்ற - (நன்கு) விளங்கும்படி யாக, யாம் - நாம், உரைக்க - கூற, சோகம் - வருத்தம், அற - இன்றி, கேட்டிடுவாய் - (அதனை நீ) கேட்பாயாக, தோன்று - விளங்காநின்ற, பொருள்கள் - (இப் பிரபஞ்ச) பதார்த்தங்கள், அநித்தமும் ஆய் - அநித்திய மாயும், தூய்மை இன்றி - சுத்த மில்லா மல் (அசுத்த மாயும்), துக்கமும் ஆய் - துக்க மாயும், தோன்றும் - விளங்கிக் கொண்டிருக்கும், தோற்றுவிக்கும் - (அசுத்த, துக்க, அநித்தியத் தன்மை விசிட்டப் பிரபஞ்சத்தை) விளக்குவிக்கின்ற, பொருள் - (பிரம்ம) வஸ்து, சுத்தம் - சுத்த மாயும், சுகம் ஆய் - சுக மாயும், நித்தமும் ஆய் - நித்திய மாயும் (இருப்பதாம்), (எ-று).

இயல்பும் - இயல்பும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. உனக்கியாம் - இ - சாரியை. அறவே - ஏ - அசை நிலை. கேட்டிடு வாய் - இடு பகுதிப் பொருள் விகுதி. அநித்தமும் - துக்கமும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. நித்தமும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். நீ - தோன்ற எழுவாய். கேட்டிடுவாய் - பய னிலை. (இயல்பு) - செயப்படு பொருள். பொருள்கள் - எழுவாய். தோன்றும் - பய னிலை. தோற்றுவிக்கும் பொருள் - எழுவாய். ஆம் - பய னிலை. (75)

முற் பாட்டிற் கூறியபடியே பிரபஞ்சத்தின் அநித்தியத் தன்மை முதலியவற்றையும், பிரமத்தி னித்தியத் தன்மை முதலியவற்றையுங் கூறத் தொடங்கி, முதலில் தேக அநித்தியத் தன்மையைக் கூறல்.

பால னெனப ருவம்போம் பன்னுகு மாரப்ப ருவம் போம், கோல மானத ருணம்போங் கோலை யூன்றிக்கு னிந்தெழுந்து, காலன் மாய்க்கவ னவர்களுங் கல்லென் றழுது பேர்மாற்றி, ஏலப் பிணமென் றெருபெயரிட் டிடுகாட் டிடுத லொருதலையே. (76)

(இ—ள்) பாலன் ஆன பருவம் - பாலன் என்பதான (7 வயதிற் குட்பட்ட) குழந்தைப் பருவமும், போம் - நாச மாகும், பன்னு - (எட்டுத் தொடங்கிப் பதி னாறு வயதின தென்று) சொல்லப் படுகின்ற, குமாரப் பருவம் - வாலிபப் பருவமும், போம் - நாச மாகும், கோலம் ஆன - (16 தொடங்கி 30 வயது வரை யுள்ள) அழ கான, தருணம் - (காளைப்) பருவமும், போம் - நாச மாகும், கோலே - தண்டை, ஊன்றி - (மூன்றாங் கா லாக) ஊன்றிக் கொண்டு, எழுந்து - எழுந்து, குனிந்து - வளைந்து (நடக் கும் வார்த்திகப் பருவத்தில்), காலன் - எமன், மாய்க்க - கொல்ல, அனைவர்களும் - (அச் சமயத்தில் உறவின ராதி) யாவர்களும், கல் என்று - "கல்" எனச் (சத்த மிட்டு), அழுது - அலறிக் கொண்டு, பேர் - (முன்னர் உள்ள) நாமத்தை, மாற்றி - வேறு படுத்தி, பிணம் - சவம், என்று - என, ஒரு பெயர் - ஒரு நாமம், எல - பொருந்த, இட்டு - வைத்து, இடு காடு - சுடு காட்டில், இடுதல் - (அச் சரீரத்தை) வைத்துக் கொளுத்துதல், ஒருதலை - நிச்சய மாம், (எ-று).

அனைவர்க்கும் - உம் - முற் றும்மை. கல் - ஒலிக் குறிப்பு. எல - என்னும் வினை யெச்சம் இட்டு என்னும் வினை யெச்சங் கொண்டது. எழுந்து - என்னும் வினை யெச்சம், குனிந்து என் னும் வினை யெச்சத்தையும், குனிந்து என்னும் வினை யெச்சம், அவாய் நிலையாற் பெற்ற நடக்கும் என்னும் பெய ரெச்சத்தையும் கொண்டன. ஒருதலையே - ஏ - ஈற் றசை. காடு - காட்டு என்ப் பகுதி இரட்டித்தது. பருவம் - எழுவாய். போம் - பய னிலை. பருவம் - எழுவாய். போம் - பய னிலை. தருணம் - எழுவாய். போம் - பய னிலை. இடுதல் - எழுவாய். ஒருதலை - பய னிலை. (76)

## இதுவும் அது.

கருவி னின்றும ழிந்துபோங் கண்டகு ழந்தையி னுங்குமரப், பருவந் தனினும் போந்தருணப் பருவந்

தனிலுமழிந்துபோம், உருவ நடுங்கு மூப்பதினு மொடுங்கு மெந்தக் காலையினும், ஒருவி யழித லியல்பாகு முலகத் துடலின் வாழ்க்கையுமே. (77)

(இ—ள்) உலகத்து - பிரபஞ்சத்தில், உடலின் - சரீரத்தினது, வாழ்க்கை - வாழ்வு (விசாரிக்கின்), கருவினின்றும் - கெர்ப்பத்திலிருந்தும், அழிந்து போம் - நாச மடைந்து போகும். கண்ட - பிறந்த, குழந்தையினும், சிஸுவிலும், குமரப் பருவந்தனிலும் - கௌமாரப் பருவத்திலும், போம் - (நாச மடைந்து) போகும். தருணப் பருவந்தனிலும் - யௌவனப் பருவத்திலும், அழிந்து போம் - நாச மடைந்து போகும், உருவம் - அவயவங்கள், நடுங்கும் - நடுங்குகின்ற, மூப்பதினும் - விருத்த பருவத்திலும், ஒடுங்கும் - நாச மடைந்து போகும், எந்த காலையினும் - (இவ்வாறு) எந்த நேரத்திலாயினும், ஒருவி யழிதல் - (உயிர் பிரியப்) பிரிந்து நாச மாய்விடல், இயல்பு ஆகும் - சுபாவ மாகும், (எ-று).

உம் - எழனுள். எந்தக் காலையினும் - உம் - முற்று. வாழ்க்கையுமே - உம் - அசை நிலை. எ - ஈற்றசை. ஏனைய ஐந்தும் எண்ணும்மைகள். பருவந்தனிலும் - பருவந்தனிலும் - தன் - இரண்டும் சாரியைகள். மூப்பதினும் - அது - பகுதிப் பொருள் விகுதி. வாழ்க்கை - எழுவாய். அழிந்து போம் - போம் - அழிந்து போம் - ஒடுங்கும் - இவை முறையே அவ்வெழுவாய்க்குப் பய னிலைகளாம். அழிதல் - எழுவாய். இயல்பாகும் - பய னிலை. (77)

பஞ்ச பூதம் பாநு திங்கள் நக்ஷத்திரங்கள் அசுரர் தேவர் அரக்கர் இந்திரன் பிரமா மால் என்பவர்களின் அநித்தியத் தன்மையைக் கூறல்.

பஞ்ச பூதம மிழிந்துபோம் பாநுத் திங்களு டுக்கள் போம், வஞ்ச வசுரர் மடிந்திடுவர் மாகர் பதம்போம் வல்லரக்கர், துஞ்சு வார்கள் போகிபதந் துஞ்சும் பிரமன் பதந்தானுந், துஞ்சுந் திருமால் பதந்துஞ்சுந் துஞ்சா தொன்றே பரமபதம். (78)

(இ—ள்) பஞ்ச - ஐந்து, பூதம் - பூதமும், அழிந்து போம் - நாச மாம், பாநு - சூரியனும், திங்கள் - சந்திரனும், உடுக்கள் - நக்ஷத்திரங்களும், போம் - நாச மாகும், வஞ்ச - கபடத்தோடு கூடிய, அசுரர் - அசுரர்களும், மடிந்திடுவர் - நாச மாவர், மாகர் - தேவர்களது, பதம் - (சுவர்க்க) பதவியும், போம் - நாச மாகும், வல் - பல முடைய, அரக்கர் - ராக்ஷஸர்களும், துஞ்சுவார்கள் - நாச மாவர், போகி - இந்திரனது, பதம் - (சுவர்க்க லோக தேவ எஜமாநத் தன்மை வாய்ந்த) பதவியும், துஞ்சும் - நாச மாகும், பிரமன் - நான்முகனது, பதந்தானும் - (சத்ய லோக) பதவியும், துஞ்சும் - நாச மாகும், திரு - அழகிய, மால் - மஹாவிஷ்ணுவினது, பதம் - (வைகுண்ட) பதவியும், துஞ்சும் - நாச மாகும், பரம - மே லாகிய, பதம் - (மோக்ஷம் என்னும் கைவல்லிய) பதவி, ஒன்று ஏ - ஒன்று மாத்திரமே, துஞ்சாது - நாசமாகாதிருப்பதாம், (எ-று).

பூதம் முதலிய எழுவாய்ப் பெயர்களின் இறுதி தோறும் எண்ணும்மைகள் தொக்கன. மடிந்திடுவர் - இடு - பகுதிப் பொருள் விகுதி. பதந்தானும் - தான் - அசை நிலை. ஒன்றே - ஏ - பிரிநிலையும், தேற்றமு மாம். பஞ்ச பூதம் - எழுவாய். அழிந்துபோம் - பய னிலை. பாநுத் திங்க ளுடுக்கள் - எழுவாய். போம் - பய னிலை. அசுரர் - எழுவாய். மடிந்திடுவர் - பய னிலை. மாகர் பதம் - எழுவாய். போம் - பய னிலை. அரக்கர் - எழுவாய். துஞ்சுவார்கள் -

பய னிலே. போகி பதம் - எழுவாய். துஞ்சும் - பய னிலே. பிரமன் பதம் - எழுவாய். துஞ்சும் - பய னிலே. திரு மால் பதம் - எழு வாய். துஞ்சும் - பய னிலே. (பரம பத) மொன்று - எழுவாய். துஞ்சாது - பய னிலே. (78)

தேகத்தின் அசுத்தத்தினை விளக்கிப், பிரமமே பரிசுத்த வஸ்து எனக் கூறல்.

தோலி ரத்தமெ லும்பிறைச்சி சுக்கில மேதை மச்சை யொன்றாய்த், தூலிக ரித்தவு டம்பாகுந் தொட்ட வெவை யுந் தன்வடிவாய்க், கோலிய டக்கிக்கொ ளுமிதனைக் கூறு கூறு நோக்காது, போலியு ணர்வோர் மகிழ்வெய்தும் புநித மென்றும் பரமபதம். (79)

(இ—ள்) தோல் - சர்மம், இரத்தம் - உதிரம், இறைச்சி - மாமிசம், மேதை - சநாயு (நரம்பு), எலும்பு - அஸ்தி, மச்சை - மூளை, சுக்கிலம் - சுக்கிலம், ஒன்று ஆய் - (ஆகிய சப்த தாதுக் களும்) ஒன்றாகச் சேர்ந்ததனுல், தூலிகரித்த - பருத்த, உடம்பு ஆகும் - (இச்) சரீரம் உண்டாவ தாம், தொட்ட - (தன்னைச்) சம்பந் தித்த, எவையும் - எந்தப் பதார்த்தங்களையும், தன் வடிவு ஆய் - தனது அசுத்த சொரூப மாக, கோலி - வளைந்து, அடக்கிக் கொளும் - ஒடுக்கிக்கொள்ளுகின்ற, இதனை - இத் தகைய அருவருக் கத் தக்க சரீரத்தினை, போலி உணர்வோர் - அற்பஞ்ஞர் (மயக்க வறி வுடையோர்) (உண்மை யறிவற்றோர்), கூறு கூறு - வேறு வேறாகப் (பிரித்து), நோக்காது - (ஆராய்ந்து) பார்க்காது, மகிழ்வு - (மோகத்தினுல் அதனைப் பிரீதிக் குரியதாகக் கண்டு) சந்தோஷத் தை, எய்தும் - அடைகின்றனர் (அது தவறும். பின்னரோ), என்றும் - எப் பொழுதும், பரம பதம் - (மே லான) பிரம பதமே, புநிதம் - பரிசுத்த மாம், (எ-று).

அஞ்ஞ வதைப் பாணி (19), ஞாந விநோதன் படைச் செருக்கு, "நரம்பெலும்பு மூளை தசை நவைதருதோ லாற் பொதிந்த, குரம்பையினைக் கற்றோருங் கொண்டாட லென் கொண்டே." (21) என, தத்துவராய சுவாமிகளும், தூல தேக இழிவைக் கூறியிருக்கின்றார்கள். விவேக சூடாமணியில், (கவி 100) "மெத்திய தொக்கு மேதை மேதசு மச்சை யத்தி, சுத்திய நரம்பி ரத்தஞ் சுழல்மல மூத்தி ரங்கள், இத்தனை வகைநி ரம்பி யிருக்குமித் தூல தேகம், இத்தினும் வைய கத்தி லிகழ்ந்திடும் பொருள்வே றுண்டோ." என, தூல தேக அசுத்தத்தினைக் கூறி யிருத்தலையும் காண்க.

ஒன்றாய் - ஈண்டு ஆக என்னும் செய வென் வாய்பாட்டுத் தெரி நிலை வினை யெச்சம் காரணப் பொருளில் ஆய் எனத் திரிந்து நின்றது. கொளும் - பெய ரெச்சம். கூறு - என்புழி, ஆக - என்பது ஈறு குறைந்து ஆ என நின்றது. உணர்வோர் - வினையா லணையும் பெயர். மகிழ் வெய்தும் - என்புழி, எய்தும் - என்பது செய்யும் என்னும் முற்று; அது பல்லோர் படர்க்கையில் வாராது; ஆயினும், இழிவு பற்றி, உயர் திணையினை அஃறிணையாக வைத்து அஃறிணைப் பன்மை வினை கொண்டதாகக் கூறப்பட்டது. உடம்பு - எழுவாய். ஆகும் - பய னிலை. போலி யுணர்வோர் - எழுவாய். எய்தும் - பய னிலை. மகிழ்வு - செயப்படு பொருள். பரம பதம் - எழுவாய். புநிதம் - பய னிலை. (79)

பிரபஞ்சத்தின் துக்கத்தினைக் கூறப் புகுந்து, உற்பத்தி நாச காலத் துக்கத்தினை விளக்குதல்.

அரந்தை யதனை யொழுங்காக வறையக் கேணீ யவனியெல்லாம், பரந்த சிருட்டி திதியொடுக்கம் பண்பாய் நிகழுஞ் சிருட்டிதனில், பொருந்து பெரிய துன்பைந்து

போய்மாண் டுறில தென்மடங்கே, இருந்த திதியு மிரண் டாகு மிளமை யென்று மூப்பென்றும். (80)

(இ—ள்) அரந்தை அதனை - (இவ் வுடல் வாழ்க்கையின்) துக்கத்தினை, ஒழுங்கு ஆக - முறை யாக, அறைய - (யாம்) கூற, நீ - நீ, கேள் - கேட்பாயாக, பரந்த - விரிந்த, அவனி (இப்) பிரபஞ்சம், எல்லாம் - முழுதிலும், சிருட்டி - உற்பத்தியும், திதி - நிலைப்பும், ஒடுக்கம் - நாசமும், பண்பு ஆய் - முறை யாக, நிகழும் - தோன்றும், சிருட்டிதனில் - (அவற்றுள்) உற்பத்தியில், பொருந்து - அடையும்படி யான, பெரிய - மிக்க, துன்பு ஐந்து - துக்கம் ஐந்து (உண்டு), போய் மாண்டு உறில் - இறந்து போகில், அது - (அதில்) அத் துக்கம், எண் மடங்கு - (பிறப்புத் துன்பத்தினும்) எட்டுப் பங்கு (அதிக முண்டு), இருந்த திதியும் - (இனி) எஞ்சி யுள்ள நிலைப்பும், இளமை - இளமைப் பருவம், என்றும் - எனவும், மூப்பு - விருத்த பருவம், என்றும் - எனவும், இரண்டு ஆகும் - இரு வகை யாகும், (எ-று).

உத்பத்தி காலத் துன்பம், 1. கருப்பாசயப்பை யுறுத்துதல், 2. அதில் ஜலம் பூரித்தல், 3. உதர அக்கினியால் வேவுதல், 4. பிரசூத வாயுவு முரித்துத் தள்ளுதல், 5. யோநி த்வாரத்தில் நெருக்குண்ணல் என ஐந்து வித மாம்.

மரண காலத் துன்பம், கடவுளே அறியவேண்டுதலின், எண் மடங்கு என்று மிகுதி பற்றி ஓர் அளவு கூறினர்.

மெய்ஞ் ஞாந விளக்கம், "வந்திடு மரணத் துன்பம் மறித்துரை செய்யப் போமோ, உந்திமே லையும் பித்து முணர்வொடு பொறிக லங்கி, நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே, இந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே." என்றும்,

வைராக்ய தீபம் (கவி 11), "உடலிதுற் பவத்தோடு மைம் பெருந் துயர்மாய்ந் திறுகணத் துயரினெண் மடங்கால், இடையுள திதிகட் டுயரமுப் பறிவோங் கிளமையிற் பிணியுறு விடத்தும், விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான் மிகுபொரு டேடுத றுயரீண், டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு மிகு நராற் றுயரே." என்றும்,

குறுந் திரட்டு, "பாண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த, இரண மானவை கொண்டிட விவரைவிட் டியம்பிடா திவணேகும், மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனந்தக், கரணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான்." என்றும்,

திரு ஞாந சம்பந்த சுவாமிகள், திரு வை யாறு, திருக்கடைக் காப்பு, கவி 1. "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந் திட்டைமே லுந்தி, அலமந்த போதாவி யஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில், வலம்வந்து மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச், சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே." என்றும்,

அஞ்ஞ வதைப் பரணி 14 குறி, "உடலை யொன்றிய வுயிர்வி டும்பொழு துணர்வ தன்றியிலே, நடலை கொண்டுட னழுவல் கண்டுள நடுந டுங்கிடுமே." 3 என்றும்,

கூறி யுள்ள பிரமாணங்களை உற்று நோக்கின், மரணத் துன்பம் அதிக மென்பது புல னும்.

அரந்தையதனை - அது - பகுதிப் பொருள் விகுதி. சிருட்டி திதி யொடுக்கம் - இவற்றி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. சிருட்டிதனில் - தன் - சாரியை. பொருந்து - தெரி நிலை வினைப்

பெய ரெச்சம், துன்பு என்னும் பெயர் கொண்டது. மாண்டுறில் - உறு - துணை வினை. மடங்கே - ஏ - அசை நிலை. திதியும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். என்றும் - என்றும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. நீ - எழுவாய். கேள் - பய னிலை. அரந்தை - செயப்படு பொருள். சிருட்டி திதி யொடுக்கம் - எழுவாய். நிகழும் - பய னிலை. துன்பு - எழுவாய். ஐந்து - பய னிலை. அது - எழுவாய். எண் மடங்கு - பய னிலை. திதி - எழுவாய். ஆகும் - பய னிலை. (80)

## திதி கால துக்கத்தினைக் கூறல்.

விருத்த பருவ மிகத்துன்பம் விளங்கு மிளமை யிரண்டவையின், வருத்து பிணியின் மிகத்துன்பம் வளமை யிளமை மூன்றாகும், கருத்த தறியாக் குழந்தையென்றுங் குமார மென்றுங் காளையென்றும், அருத்த மறியா ததிற் றுன்ப மடையும் பாலப் பருவத்தில். (81)

(இ—ள்) இரண்டவையில் (மேற் கூறிய திதியின் கூறாகிய) அவ் விரண்டில், விருத்த பருவம் - முதுமைப் பருவம், மிக - அதிக, துன்பம் - துக்கம் (தருவதாம்), வளமை - (சோபை) அழகிய, இளமை - இளமைப் பருவ மானது (பொதுவாக), வருத்து - கஷ்டப்படுத்துகின்ற, பிணியின் - (அதிகரித்த) வியாதிகளினால், மிக - எல்லை யின்றி, விளங்கும் - (அம் மூக் கூறாக) விளங்கும், இளமை - இளமை (ப் பருவம்), கருத்தது - (கூறுவோரது) அபிப் பிராயத்தை, அறியா - உணர முடியாத, குழந்தை - பாலப் பருவம், என்றும் - எனவும், குமாரம் - கௌமாரப் பருவம், என்றும் - எனவும், காளை - யௌவனப் பருவம், என்றும் - எனவும், மூன்று ஆகும் - மூ வகைத் தாகும், துன்பம் - துக்கம் (தருவதாம்), பாலப் பருவத்தில் - (அப் பிணியா லாம் துன்பமே யன்றிச்) சிசுப் பருவத்

தில், அருத்தம் - பொருள்களின் தன்மையை, அறியாததில் - உணர முடியாமையினால், துன்பம் - (மந முதலியனவற்றை) தாக்கம், அடையும் - பொருந்தும், (எ-று).

வைராக்ய தீபம் (கவி 11), "உடலிதுற் பவத்தோ ரைப்பெருந் துயர்மாய்ந் தறுகணத் துயரினெண் மடங்கால், இடையுள திதிக் கட் டுயரமூப் பறிவோங் கிளமையிற் பிணியுறு விடத்தும், விடல ரும் பசிநோய் காமநோய் தணிப்பான் மிகுபொரு டேடுத றுய ரீண், டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு மிகுகராற் றுயரே." (2) என்று, கூறுவது கொண்டு, உத்பத்தி திதி லயம் என மூன் றவத்தை யுள வெனவும், திதியும், இளமை மூப் பென இரு வகைப்படும் எனவும், இளமையும் பால கௌமார யௌவநம் என மூன்று பிரிவினது எனவும், உத்பத்தி காலத் துன்பம், திதி காலத் துன்பம், லய காலத் துன்பம் எனத் துன்ப மூ வகைப்படு மெனவும் விவேகித்து உணர்க.

வருத்து பிணியின் மிகத் துன்பம் என்றதற்கு உதாரணம், மெய்ஞ் ஞாந விளக்கம், "பிணியினால் வலியுங் கேடாம் பிணியினா லழகும் போகுந், துணிவெலாம் பிணியாற் குன்றுந் தொலைவில்வே தனையைச் செய்யுந், தணிவிலா துள்ளே நின்று சாலவு மொறுக்கும் பொல்லாப், பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிது முண்டோ." எனக் கூறலை உணர்க.

இரண்டவையின் - என்பதனை - அவை இரண்டின் - என அந்நுவயிக்க. கருத்ததறியா - அறியாததில் அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். என்றும் - என்பவற் றுள்ள, உம் - மூன்றும் எண்ணுப் பொருளன. விருத்த பருவம் - எழுவாய். துன்பம் - பய னிலை. இளமை - எழுவாய். துன்பம் - பய னிலை. துன்பம் - எழுவாய். அடையும் - பய னிலை. (81)

## இதுவு மது.

தந்தை தாய ராசிரியர் தாங்கண் முனித றனக்கஞ்சிச்
சிந்தை கலங்குங் கௌமாரஞ் சிறந்த காளைப் பருவத்தின்
முந்து பசிநோய் காமநோய் முடுகித் தணிக்கப் பொருடேட
இந்தப் புவநத் திரவுபக லிடையரு தொழிற்றுன்பம். (82)

(இ—ள்) கௌமாரம் - குமாரப் பருவத்தில், தந்தை - பிதா, தாயர் - மாதா, ஆசிரியர் தாங்கள் - உபாத்தியாயர் (முதலியோர் கள்), முனிதல் தனக்கு - கோபித்தற்கு, அஞ்சி - பயந்து, சிந்தை - மநம், கலங்கும் - வருத்த மடையும், சிறந்த - (கல்வி ஆண்மை திற னுற்று) அழகிய, காளை பருவத்தில் - யௌவநப் பருவத்தில், முந்து - விரைந்து வருகின்ற (மே லெழுகின்ற), பசி நோய் - பசி வியாதியையும், காம நோய் - காம வியாதியையும், முடுகி - விரைந்து, தணிக்க - சாந்தஞ் செய்தற் பொருட்டு, பொருள் - திரவியங்களை, தேட - சம்பாதித்தற்காக, இந்த புவநத்து - இந்த லோகத்தில், பகல் இரவு - அகோராத்திரம், இடையறுத - ஒழி வின்றிய, தொழில் - வேலைகளினால், துன்பம் - துக்கம் ஆம், (எ-று).

"शैशवे गुरुतो भीतिर्मातृत: पितृतस्तथा ।
जनतो ज्येष्ठबालाच्च शैशवं भयमन्दिरम् ॥ ३३ ॥

மஹா உபநிஷத் 3-வது அத்தியாயம். 33-வது மந்திரம்.

பாலப் பருவத்தில் குருவினால் பயம் (உண்டாகின்றது). மாதா வினாலும், பிதாவினாலும், அவ் வண்ணமே. ஜநங்களினாலும், பெரிய பிள்ளைகளினாலும், (பயம் உண்டாகின்றது). பால்யம் பய * மந்திர மாம். (அதாவது பயம் இருப்பதற்கு வீடு ஆம்) என்றும்;

---

* मन्दिरम् - (மந்திரம்) வீடு.

"अज्ञानापहतो बाल्ये यौवने वनिता हतः ।
शेषे कलत्रचिन्तार्तः किं करोति नराधमाः ॥ २३ ॥

மஹா உபநிஷத் 6-வது அத்தியாயம். 23-வது மந்திரம்.

"பால்யத்தில், அஞ்ஞாநத்தினுல் (நரர்கள்) கெடுக்கப்படுகின்றனர். யௌவநத்தில், ஸ்திரீயால் கெடுக்கப்படுகின்றனர். மற்றைய பருவங்களில், மனைவியைக் குறித்த சிந்தனை முதலியவற்றுல் கெடுக்கப்படுகின்றனர். (இங்ஙன மிருத்தலால்) தாழ்ந்த மநிதர்கள் என் செய்வார்கள் என்றும், மஹா உபநிஷத்தில், குரு மாதா பிதா ஜநங்கள் பெரிய பிள்ளைகள் முதலியவர்களாலும், அறியாமையினுல், ஸ்திரீயினுல், மனைவியால், துன்பம் உண்டாகின்றது என்றுங் கூறியிருப்பது காண்க,

அஞ்ஞ வதைப் பரணி 4 பேய் (கவி 14).

"வயிறு சாணும்வ ளர்த்தற்பொ ருட்டந்த வானுஞ் சென்றுவ ரக்காலு டையன, கயிறும் கம்பையு மேடும்பி றர்க்கொரு காக்ஷி போல்வரும் புத்தகக் கையன." (14) என்றும், "கவலையுற்ற தம்பசியைத் தணிப்ப வேறோர் கதியின்மை யாலறந்தாங் காட்டுவார்போல், குவலயத்தோர் பொருள்விரகால் வாங்கிக் கொண்டு குருக்கொடுக்கும் பேய்களொரு கோடி கோடி." (19) என்றும், தத்துவராய சுவாமிகள், பேய் கூற்ருக, அஞ்ஞ வதைப் பரணியில், பசி நோயை நிவிர்த்தித்தற்கு, இந்த லோகத்தில் இரவு பகல் செய்யுந் தொழில் அன்றி, அந்த லோகத்திற்கும் சென்றுவரக் கால்கள் உடையன என்று பசியின் கொடுமையைக் கூறி யிருத்தலையும் உணர்க.

ஆசிரியர் தாங்கள் - தாம் அசை நிலை. முனித றனக்கு - தன் - சாரியை. சிந்தை - எழுவாய். கலங்கும் - பய னிலை. துன்பம் - எழுவாய். (ஆம்) - பய னிலை (அவாய் நிலையாற் பெறப் பட்டது.) (82)

இதுவு மது.

பொருளுண் டாகிற் காப்பதனாற் பொருந்துந் துன்ப மரசாகின், ஒருதம் மிகுத்த வரசரா லுதவுந் துன்ப மொருகுடைக்கீழ், நிருப னாகி னோய்மரண நேரு மென் னும் பயத்தானும், வருவ தெனையோ மறுமையினி லென்றும் வாடித் துன்புறுமே. (83)

(இ—ள்) பொருள் - (புண்ணிய மிகுதியினால்) திரவியம், உண்டாகில் - இருக்கு மாயினும், காப்பதனால் - (அதனை ராஜ சோர அக்கினி முதலியவற்றி னின்றும்) இரக்ஷிப்பதனால், துன்பம் - துக்கம், பொருந்தும் - வந்து சேரும், அரசு ஆகின் - (ஒரு தேசத்து) அரச னாக இருக்கின், தம் - தமக்கு, மிகுத்த - (வலியில்) அதிகரித்த, ஒரு - (வேறு) ஒரு, அரசனால் - இராஜனால், துன்பம் - துக்கம், உதவும் - (அவனுக்கு) கொடுக்கப்படும் (வந்து பொருந்தும்), ஒரு - ஏக (சக்கிராதிபதியாய்), குடைக் கீழ் - (சந்திர வட்டக்) குடையின் கீழ் (இருந்து அரசாக்ஷி செய்கின்ற), நிருபன் - (பேர்) அரசன், ஆகின் - ஆக இருக்கின் (அவன்), நோய் - வியாதியும், மரணம் - மரணமும், நேரும் - (வந்து) பொருந்தும், என்னும் - என்கின்ற, பயத்தானும் - பீதியினாலும், மறுமையில் - (பிரஜை கள் செய்த பாவம் தன்னைப் பற்றும் என்னும் நியாயப்படி) மறு ஜென்மத்தில், வருவது எனையோ - யாது வருமோ (என்கின்ற பீதியினாலும்), என்றும் - சதா காலமும், வாடி - வாட்ட முற்று, துன்பு - துக்கத்தை, உறும் - பொருந்துவன், (எ-று).

வைராக்ய தீபம் கவி 12, "இளமையிற் பிணியற் றொரு குடை நிழற்கீ ழிருநில முழுவதும் புரக்கும், வளமைபெற் றுடைய மகற்குமெய் பொழுது வருங்கொல்கூற் றெனும்பயத் தானும், உளமிகப் பறைநின் றறையுமேற் புவிமீ துடையரோ மற்றைய

ரின்பங், களிமிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங் கருதுரா நரரே." (12) என்று, சார்வபௌமனுக்கும் துன்பம் உண்டு என்று கூறுவது உணரற்பாற்று.

காப்பதனுல் - அது - பகுதிப் பொருள் விகுதி. உதவும் - படு விகுதி குறைந்த, உதவப்படும் என்னும் செயப்பாட்டு வினை. நோய் மரணம் - உம்மைத் தொகை. எனேயோ - ஓ - அசை நிலை. எனே - என்ன என்பதன் விகாரம். என்றும் - உம் - முற்று. உறுமே - ஏ - அசை நிலை. துன்பம் - எழுவாய். பொருந்தும் - பய னிலை. துன்பம் - எழுவாய். உதவும் - பய னிலை. அவன் (நிருபன்) - தோன்ரு எழுவாய். உறும் - பய னிலை. துன்பு - செயப்படு பொருள். (83)

சுவர்க்க லோகத்திலும் துக்கம் உண்டு என்று கூறல்.

மாகர்க் கசுரர் பகையுளது மகிழ்ச்சி வாட்ட மிகவு முள, தாகத் தகலா நோயுமுள தநங்க னுளது நசை யுளது, போகத் தழுந்தன் மிகவுளது பொன்ற லுளது கற்பத்தே, சோகத் திறங்க ளிவையுடைய துறக்கத் தென்னே சுகமுளதே. (84)

(இ—ள்) மாகர்க்கு - தேவர்கட்கு, அசுரர் - அசுரர்களி னுடைய, பகை - விரோத மானது, உளது - இருக்கின்றது, மகிழ்ச்சி - இன்பமும், வாட்டம் - துன்பமும், மிகவும் - அதிக மாக, உளது - உண்டு, ஆகத்து - சரீரத்தில், அகலா - நீங்காத, நோயும் - (நா லாயிரத்து நா னூற்று நாற்பத் தெட்டு) வியாதியும், உளது - இருக்கின்றது, அநங்கன் - மந்மதனது (விகாரமும்), உளது - இருக்கின்றது, நசை - (மிதமிஞ்சிப் போக்கிய பதார்த்தங் களில்) ஆசையும், உளது - இருக்கின்றது, போகத்து - அருந்தல்

பொருந்தல்களில், மிக - அதிக மாக, அழுந்தல் - மூழ்கிக் கிடத்த லும், உளது - இருக்கின்றது, கற்பத்தே - (இந்திர) கற்பத்தினது (முடிவில்), பொன்றல் - நாசத்தை யடைதலும், உளது - இருக் கின்றது, சோகத் திறங்கள் - துக்கத் தன்மைக ளாகிய, இவை உடைய - இவற்றை யுடைய, துறக்கத்து - ஸ்வர்க்கத்தின்கண், என்னே - யாது, சுகம் - சுகம், உளது - இருக்கின்றது (ஒரு வித சுகமு மில்லை யாம்), (எ-று).

ஸ்வர்க்க லோகத்தில், வியாதிக்குச் சிகிச்சை செய்ய, அசுவினி பாலர்கள் என்ற வைத்தியர்கள் இருக்கின்றார்கள். மருந்துகளும், வியாதிக்குத் தக்கபடி பல வேறு வகை யாக இருக்கின்றன என்று உணரற்பாற்று.

மகிழ்ச்சி வாட்ட மிக வுளது - உளது - பன்மையில் ஒருமை மயக்கம். மகிழ்ச்சி வாட்டம் - உம்மைத் தொகை. மிகவும் - உம் - அசை நிலை. நோயும் - உம் - எதிரது தழீஇய எச்சம். கற்பத்தே - ஏ - ஈற்றசை. என்னே - என்ன என்பதன் விகாரம். உளதே - ஏ - ஈற்றசை. பகை - எழுவாய். உளது - பய னிலை. மகிழ்ச்சி வாட்டம் - எழுவாய். உளது - பய னிலை. அழுந்தல் - எழுவாய். உளது - பய னிலை. பொன்றல் - எழுவாய். உளது - பய னிலை. சுகம் - எழுவாய். உளது - பய னிலை. (84)

பூ லோக சுவர்க்க லோகங்களி லுள்ள எழு வகைத் தோற்றத்திலும் துக்கமே யுள தெனவும், நரக லோகத் துன்பத் துக் கோ ரள வில்லை எனவும், பிரத்திய கபிந்ந பிரம ஸ்வரூப மோக்ஷமே இன்ப மயம் எனவுங் கூறல்.

தேவர் மனிதர் துன்பத்தின் றிறங்க ளிவ்வா றாகி யிடில், ஆவ கீழா மிருகமுத லசர மீறு மைவகையில்,

ஓவ லில்லாத் துன்புக்கோ ருவமை யில்லை நிரயத்தில்,
நோவ துன்பஞ் சொல்வதெனை நோயே பவத்திற் சுகம்
வீடே. (85)

(இ—ள்) தேவர் - தேவர்களினதும், மனிதர் - மாநுடர் களினதும், துன்பத்தின் - துக்கத்தின், திறங்கள் - தன்மைகள், இவ் வாறு - முற் செய்யுட்களிற் கூறியபடி, ஆகியிடில் - ஆகுமாயின், ஆ அ - ஆச்சரியம், அல்லது இரக்கம் (ஐயகோ), கீழ் ஆம் - தாழ்வாகிய, மிருக முதல் - விலங்குகள் முதலாக, அசாம் - ஸ்தாவரம், ஈறு ஆம் - பரியந்த மாக (உள்ள), ஐ வகையில் - (மிருகம், ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, ஸ்தாவரம் என்னும்) ஐந்து வித மாக உள்ள பிராணிகளில் படும், ஓவல் இல்லா - கெடாத, துன்புக்கு - துக்கத்திற்கு, ஓர் உவமை - ஒரு உவமானம், இல்லை - (உலகத்தில்) இல்லை, நிரயத்தில் - (ஆகலின்) நரகத்தில், நோவ - (உயிர்கள்) வருந்தற் குரிய, துன்பம் - துக்கத்தினை, சொல்வது எனை - எடுத்துக் கூறுவது எங்ஙனம்? (துக்கத்தின் அளவைச் சொல்ல முடியாதென்ப தாம்), பவத்தில் - (ஆனதால்) சமுசாரத்தில், நோயே - துன்பமே யாம், வீடே - மோக்ஷமே, சுகம் - ஆநந்த ரூப மாம், (எ-று).

ஆகியிடில் - இரு - பகுதிப் பொருள் விகுதி. ஆ + அ = ஆவ - ஓ ரதிசய இரக்கக் குறி. இல்லா - ஈறு தொக்க இல்லாத என்னும் குறிப்புப் பெய ரெச்சம். எனை - என்ன என்னும் வினை வினைக் குறிப்பின் விகாரம். நோயே - வீடே - ஏ - இரண்டும் தேற்றமும், பிரி நிலையு மாம். உவமை - எழுவாய். இல்லை - பய னிலை. சொல்வது - எழுவாய். எனை - பய னிலை. நோய் - (ஆம்) - பய னிலை. (அவாய் நிலையாற் பெற்றது), வீடு - எழுவாய். சுகம் - பய னிலை. (85)

## மாயை அசத்து, பிரஹ்மம் சத்து எனக் கூறல்.

*இந்த விழிவை யுடைய விந்த மாயையச சத்தே*
*அந்த வுயர்வை யுடைய வந்தப் பிரமஞ் சத்தே*
*தந்த மநதிற் றேர்ந்தோர் தள்ளி யெஃதை நிற்பர்*
*உந்தன் மநதி னன்று யூகித் தமைச்ச பாராய்.* (86)

(இ—ள்) இந்த - முன்னர்க் கூறி யுள்ள, இழிவை யுடைய - (அசுத்த துக்கங்க ளாய) தாழ்வினை யுடைய, இந்த மாயை - (75-வது பாட்டு முத லாக இது காறுங் கூறப்பட்டு வந்த அநிர்த ஜட துக்க காரிய ரூப மாய் விளங்கும்) திருசிய மான மாயை, அசத்தே - மித்தை, அல்லது துச்ச மாம், அந்த உயர்வை உடைய - முன்னர் 75-வது செய்யுளிற் கூறி யுள்ள (அச் சுத்த நித்த சுக மாகிய) சிறப்பினை யுடைய, அந்த - (இந்திரியத்துக்கு விஷய மாகாத) அத் தகைய, பிரமம் - அகண்ட சேதநம், சத்தே - நித்தியமா யுள்ள அபாதித மாம், தம் தம் - (இவ் வாறாய தன்மையினை) தங்கள் தங்கள், மநதில் - அந்தக் கரணத்தில், தேர்ந்தோர் - (யுக்தியினு லும், சாஸ்திரத்தினுலும்,) விசாரித் துணர்ந்தவர்கள், எஃதை - (மேற் கூறிய அவ் விரண்டனுள்) எந்தப் பொருளை, தள்ளி - நீக்கி, நிற்பர் - (எந்தப் பொருளி னிடத்து மநதை வைத்து) இருப்பார் கள், அமைச்ச - மந்திரீ !, உம் - உனது, மநதில் - அந்தக் கரணத் தில், நன்றாய் - செவ்வை யாக, ஊகித்து - (இதனை) விசாரித்து, பாராய் - அறிவாயாக, (எ-று).

அசத்தே - சத்தே - ஏ - இரண்டும் தேற்றமும், பிரி நிலையு மாம். தந் தம் - அடுக்குச் சொல். தேர்ந்தோர் - வினையா லணை யும் பெயர். உந் தன் - தன் - சாரியை. அமைச்ச - அண்மை விளி. மாயை - எழுவாய். அசத்து - பய னிலை. பிரஹ்மம் - எழுவாய். சத்து - பய னிலை. தேர்ந்தோர் - எழுவாய். நிற்பர் - பய னிலை.

நீ - தோன்று எழுவாய். பாராய் - பய னிலை. (இதனை) - செயப் படு பொருள். (அவாய் நிலையாற் பெறப்பட்டது). (86)

பிரபஞ்சம் மித்தை, பிரஹ்மம் சத்யம் எனக் கூறல்.

பொய்யென் றிதனை யறிந்தோர் பொருந்தி நிற்ப துளதோ, மெய்யென் றதனை யறிந்தோர் மேவா திருப்ப துளதோ, ஐய முளதோ விதனி லமைச்ச பாராய் நன்றாய், உய்ய வறிவி லாதோ ருழல்வர் நீக்க மாட்டார். (87)

(இ—ள்) இதனை - இத் திருசியப் பிரபஞ்சத்தை, பொய் - மித்தை, என்று - என, அறிந்தோர் - (விசாரித்துத் திட மாய்) உணர்ந்தவர்கள், பொருந்தி நிற்பது - (மீண்டும் இந்தப் பிரபஞ்சத் தோடு பற் றுறக்) கூடி யிருப்பது, உளதோ - உண்டா? (இல்லை என்றபடி), அதனை - (அச் சச்சிதாநந்தப்) பிரஹ்மத்தினை, மெய் - சத்தியம், என்று - என, அறிந்தோர் - (திட மாய்) உணர்ந்தவர் கள், மேவாது இருப்பது - (அந்தப் பிரஹ்மத்தினைப்) பொருந் தாது இருப்பது, உளதோ - உண்டா? (இல்லை என்றபடி), அமைச்ச - மந்திரி, இதனில் - இவ் விஷயத்தில், ஐயம் - சம்சயம், உளதோ - இருக்கின்றதா? (இல்லை என்றபடி), நன்று ஆய் - செவ்வை யாக, பாராய் - (இதனை விசாரித்து) அறிவாயாக, [அஞ்ஞாநிகள் பிரபஞ்சத்தை விடார் என்கின்றார்] உய்ய -(இப் பந்தத்தி னின்றும்) ஈடேற, அறிவு - (தக்க) விவேகம், இலாதோர் - இல்லாதவர்கள், உழல்வர் - (இந்தப் பிரபஞ்சச் சுழலில்) சுழல் பவராய், நீக்க மாட்டார் - (பிரபஞ்சப் பற்றை) விட மாட்டார்கள், (எ-று).

விவேக சூடாமணி.

" சகமிது மெய்யா மாகிற் சத்தியப் பிரமத் திற்குப், புகல்பரி பூர ணத்வம் போயிடும் வேதத் திற்கும், மிகவுமப் பிரமா ணத்வ

மேவிடும் பாசி வற்கும், இகலசத் தியவா தித்வ மெய்திடு மிதுநன் றன்றே." 269.

"சாதுவே குற்ற மூன்றுஞ் சகித்திடார் மேலோ ரியாரும், ஈதுவீ சன்ம நத்து மிசைந்ததன் றெதனு லென்னில், எதுமே யறிந்த வீச னெவையுமே யென்னி லில்லை, யாதினு நானு மில்லை யேகனு மென்ப தாலே." 270.

என்று, பிரமத்திற்கு பூரணத்வம் நீங்கும், வேதத்திற்கு அப்ர மாணத்வம் வரும், பரம சிவத்திற்கும் பொய்யன் எனுந் தன்மை வரும் என்று முக் குற்றம் கூறி, பெரியோருக்கும், ஈசனுக்கும், இக் குற்றம் அங்கீகாரம் அன்று என்று சுருதிப் பிரமாணத்தோடு பிர பஞ்சம் அசத்தியம் எனக் கழறி யிருத்தலைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

அறிந்தோர் - அறிந்தோர் - இலாதோர் - இம் மூன்றும் வினையா லணையும் பெயர்கள். ஓ - மூன்றும் எதிர் மறை. உழல்வர் - வினை முற்று, வினை யெச்ச மாயிற்று. நிற்பது - எழு வாய். உளது - பய னிலை. இருப்பது - எழுவாய். உளது - பய னிலை. ஐயம் - எழுவாய். உள்து - பய னிலை. நீ - தோன்று எழுவாய். பாராய் - பய னிலை. இலாதோர் - எழுவாய். நீக்க மாட்டார் - பய னிலை. பிரபஞ்சம் - செயப்படு பொருள் (அவாய் நிலையாற் பெறப்பட்டது). (87)

அஞ்ஞாநிகள், பொய்ப் பிரபஞ்சத்தை மெய் என்றும், மெய் யான பிரஹ்மத்தினைப் பொய் என்றும் உணர்ந்து, ஞாநம் இன்மையால் சுழல்கின்றனர். விவேக ஞாநிகள், ஞாநாசார்யர் கிருபையினுல் மெய் ஆன பிரஹ்மத்தினை உண்மை என்றும், பொய்ப் பிரபஞ்சத்தினைப் பொய் என் றும் உணர்ந்து, ஆநந்த ரூப மாக இருப்பர் எனக் கூறல்.

பொய்யை மெய்யென் றறிந்து போத மின்மை யாலே, மெய்யைப் பொய்யென் றெண்ணி மெலிந்தே யுழல்வ ருலகர், பொய்யைப் பொய்யென் றறிந்து போத குருவி னருளின், மெய்யை மெய்யென் றறிந்தே மெலிவு தீர்வ ருயர்ந்தோர். (88)

(இ—ள்) போதம் - (ஆத்மாநாத்ம) விவேகம், இன்மை யால் - இல்லாததனுல், உலகர் - உலகத்தி லுள்ள அஞ்ஞாநிகள், பொய்யை - (மித்தை யாகிய) பிரபஞ்சத்தை, மெய் - சத்தியம், என்று - என, அறிந்து - உணர்ந்து, மெய்யை - (சத்திய மான) பிரஹ்மத்தை, பொய் - மித்தை, என்று - என, எண்ணி - உணர்ந்து, மெலிந்து - (பிராந்தியினுல்) வருந்தி, உழல்வர் - (சமுசார சக்கரத்தில்) சுழலுகின்றுர்கள், உயர்ந்தோர் - (ஆத்மா நாத்ம விவேகிக ளாகிய) மேலோர், போத - ஞாநத்தோடு கூடி யிருக்கின்ற, குருவின் - ஆசாரியரது, அருளின் - கிருபையினுல், பொய்யை - (மித்தை யான) பிரபஞ்சத்தை, பொய் - மித்தை, என்று - என, அறிந்து - உணர்ந்தும், மெய்யை - (சத்திய மான) பிரஹ்மத்தை, மெய் - சத்தியம், என்று - என, அறிந்து - உணர்ந்தும் (அவ் வித ஞாநத்தினுல்), மெலிவு - துக்கம், தீர்வர் - இன்றியவ ராவர், (எ-று).

அஞ்ஞ வதைப் பரணி (4 பேய்).

"பொய்ம்மை யாகிமெய் போலவி ளங்கிய பொருடெ ரிக் கினற் புற்புதக் கண்ணின, மெய்ம்மை யானபொ ருளையு ளத்தினில் மீண்டு பார்க்கில்வெ றுங்குரு டாவன." 8. என்று அஞ்ஞ வதைப் பரணியில், தத்துவ ராய சுவாமிகள் பேய்க் கூற்றாக, மெய் போல விளங்குகின்ற பொய்ப் பொருளை அறிவதில், நல்ல கண்களை உடையன என்றும், உண்மை யான பிரஹ்மப் பொருளை உள்ளத்

தில் உணரு மிடத்துக் கண் கெட்ட குருடு ஆகின்றன என்றும், அஞ்ஞாநிகளின் இலக்கணம் கூறியிருக்கின்றதை இங்கு மேற்கோளாகக் கொள்க.

வாசிட்டம் 3-வது உத்பத்திப் பிரகாண இதோபதேசத்தில்:-

"தானலா தான வுடன்முதற் பொருளிற் ருனெனும் பாவனை யாய, ஊனமா மாயை யுணர்விலோர் விதிக்க வுள்ளதா முணர்வுளோர்க் கிலதாம்." (26) என்று கூறுவதும் கொள்ளற்பாற்று.

இன்மையாலே - மெலிந்தே - அறிந்தே - ஏ - மூன்றும் அசை நிலைகள். உயர்ந்தோர் - வினையா லணையும் பெயர். உலகர் - எழுவாய். உழல்வர் - பய னிலை. உயர்ந்தோர் - எழுவாய். தீர்வர் - பய னிலை. மெலிவு - செயப்படு பொருள். (88)

பிரபஞ்சம் துக்கம் என்று தோன்றினால், பிரஹ்மாநந்தத்தினை அடைவர். பிரபஞ்சம் சுக ஸ்வரூபம் என்று தோன்றினால், பிரபஞ்சத்தினை விட்டு நீங்கார். அப்படிப்பட்டவர்கட்கு பிரஹ்ம ஞாநம் உண்டாகாது எனக் கூறல்.

துன்பந் தோன்றி லெவருந் துறந்தே கராய்த்த னித்தே
இன்பந் தேட லியற்கை யின்ப மென்றே தோன்றில்
அன்ப தாக நீங்கா ரவர்கட் கெங்ஙன் கூடும்
நன்ப ரம ஞாந நாட்ட மமைச்ச சொல்லாய். (89)

(இ—ள்) துன்பம் - (பிரபஞ்சத்தில்) துக்க மானது, தோன்றில் - புலப்படின், எவரும் - யாவரும், துறந்து - (அவ் ஏஷணாத்திரயாதி பிரபஞ்சத்தி லுள்ள பற்றோடு அவற்றை) விட்டு, தனித்து - ஒருவரோடுஞ் சேராமல், ஏகர் ஆய் - ஒருவரா யிருந்து, இன்பம் - ஆநந்த (ரூப பிரத்திய கபிந்ந பிரம) த்தை, தேடல் - விசாரித்

தடைதல், இயற்கை - இயல்பு, இன்பம் - (அப் பிரபஞ்சம்) சுகரூபம், என்று - என, தோன்றில் - (ஒருவருக்குத்) தோற்றுமாயின், அன்பது ஆக - (அவர் அதனைத் தம்) அன்பிற் குரிய தாகக் கொண்டு, நீங்கார் - (அவ் வேஷணுதிப் பிரபஞ்சத்தை) விட்டு விலகார், [ஆசை யுடையவர் ஞாந மடையார் என்கின்றார்.] அவர் கட்கு - அப் பிரபஞ்ச ஆசை யுடையவர்களுக்கு, நல் - மிகுந்த, பரம - மேன்மை யுடைய, ஞாந - பிரமான்ம வைக்கிய ஞாந, நாட்டம் - திருஷ்டி, எங்ஙன் - எவ் வாறு, கூடும் - பொருந்தும் (பொருந்தாது என்றபடி), அமைச்ச - மந்திரி, சொல்லாய் - (நீ இதற்குப் பதில்) கூறுவாயாக, (எ-று).

எவரும் - உம் - முற் றும்மை. தனித்தே - என்றே - ஏ - இரண்டும் அசை நிலைகள். அன்பது - குறிப்பு வினையா லணையும் பெயர். தேடல் - எழுவாய். இயற்கை - பய னிலை. அவர் - தோன்ரு எழுவாய். நீங்கார் - பய னிலை. ஞாந நாட்டம் - எழுவாய். கூடும் - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். சொல்லாய் - பய னிலை. இது - செயப்படு பொருள் (அவாய் நிலையாற் பெறப் பட்டது). (89)

பிரபஞ்சத்தினை அசுத்த மாக உணர்ந்தவர், சுத்த மான பிரஹ்மத்தினை அடைவர், பிரபஞ்சத்தினை அசுத்த மாக உணராதவர், சுத்த மான பிரஹ்மத்தினை அடையார், அசுத்த மான பிரபஞ்சத்தினை அசுத்தம் என்று உணர, அசுத்த முடையவர் கட்கு, காலம் வாய்க்காது எனக் கூறல்.

இழிவை யுணர்ந்தா லுயர்வை யெவருந் தேடி நோக்கும்
இழிவை யுணரா ருயர்வை யெய்த நோக்கா ரென்றும்
இழிவை யிழிவென் றுணர வெந்தக் காலம் வாய்க்கும்
இழிவை யுடையோர்க் கமைச்ச விதனை யூகித் துணராய் (90)

(இ—ள்) எவரும் - யாவரும், இழிவை - (அசுத்தப் பிரபஞ்சத்தின்) ஈனத் தன்மையை, உணர்ந்தால் - அறிந்தால் (அதனை விட்டு), உயர்வை - பரிசுத்த (மேலான) பிரஹ்மத்தை, தேடி - விசாரித்தடைய, நோக்கும் - எண்ணுவார்கள், இழிவை - (அசுத்தப் பிரபஞ்சத்தின்) ஈனத் தன்மையை, உணரார் - அறியாதவர்கள், உயர்வை - பரிசுத்த (மேலான) பிரஹ்மத்தை, எய்த - விசாரித்தடைய, என்றும் - எப்பொழுதும், நோக்கார் - கருதார், [அஞ்ஞாநிகளுக்குப் பிரபஞ்சத்தின் அசுத்தத் தன்மை தோற்ற வில்லை என இரங்கிக் கூறுகின்றார்.] இழிவை யுடையோர்க்கு - (அசுத்தமாகிய ஈஷணுத் திரயாதி பிரபஞ்சத்தை விரும்பிக் கைக்கொண்டிருக்கும் அஞ்ஞாநிக ளாகிய) ஈனர்க்கு, இழிவை - அவ் வசுத்தமாகிய பிரபஞ்சத்தை, இழிவு - அசுத்தம், என்று - என, உணர - (உள்ள வாறு) அறிய, எந்த காலம் - எந்த நாள், வாய்க்கும் - கிடைக்குமோ (யாம் அறியேம்), அமைச்ச - மந்திரி, இதனை - இவ் விஷயத்தினை, ஊகித்து - விசாரித்து, உணராய் - (நீ) அறிவாயாக, (எ-று).

அரசர் முதலிய உயர் நிலை யுடையவரும் மற்றையவரு மடங்க "எவரும்" எனக் கூறினர். உலகத்தின் இழிவை இழி வென்றுணர்ந்தவன், வருணம் ஆசிரமம் செல்வ முதலியவற்று லுயர்ந்தவனுயினும், இழந்தவனுயினுஞ், சரி என்பார் "எவரும்" என்றுராகலின், "எவரும் நோக்கும்" என, அஃது செய்யு மென்னு முற்றைக் கொள்ளக் குறை யில்லை என்க.

உயர்வு - உயர்வு - ஈண்டு இவை ஆகு பெயராற் பிரஹ்மத்தைக் குறித்தன. எவரும் - என்றும் - உம் - இரண்டும் முற்றுப் பொருளன. நோக்கும் - செய்யும் என்னு முற்று. இது பல்லோர் படர்க்கையில் வாராது. ஈண்டு வந்தமையின், வழு வமைத்துக் கொள்க. உணரார் - வினையா லணையும் பெயர். இழிவை - இப்

பண்புப் பெயர் ஆகு பெயராய்ப் பண்பி யாய பிரபஞ்சத்தை யுணர்த்திற்று. உணராய் - உடன்பாட் டேவல் வினை முற்று. எவரும் - எழுவாய். நோக்கும் - பய னிலை. உயர்வு - செயப்படு பொருள். உணரார் - எழுவாய். நோக்கார் - பய னிலை. உயர்வு - செயப்படு பொருள். காலம் - எழுவாய். வாய்க்கும் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். உணராய் - பய னிலை. இது - செயப்படு பொருள். (90)

ஜீவேசுவர ஜகத்தின் வேறு பாடு கூறுவோர் போல, பிரபஞ்சம் வேறு, யாம் வேறு, என்று கருதித் துறந்திலன் யான். "எமக்கு அந்நிய மாகச் சத் ரூப மாகப் பிரபஞ்சம் இல்லை" என்னும் திட அபரோக்ஷ ஞாநத்தினால் துறந்த பரிசுத்த மான துறவு இது, இத் துறவால் மநம் சந்திரன் போல் சீதளம் ஆக, பிறவி வெப்பம் நீங்கும் என மகா ராஜன், மந்திரிக்குக் கூறல்.

*பேத வாதி களைப்போற் பிரபஞ் சம்வே றெனவே*
*ஈத கன்ற தலவே யெமையன் றியதில் லென்றே*
*போத விழியிற் றுறந்த புநிதத் துறவே கண்டாய்*
*சீத மதிபோற் குளிர்ந்து செநந வெப்பந் தீரும்.* (91)

(இ—ள்) பேத வாதிகளை - (ஜீவேசுவர ஜகத்தின்) பேதம் கூறுகின்றவர்களை, போல் - போல, பிரபஞ்சம் - ஜகத்து, வேறு - (தனக்கு) அந்நியம், என - என்று கருதித் (துறந்த), ஈது - இத் துறவு, அகன்றது - (உண்மை யாகத்) துறந்தது, அல - ஆகாது, [பின் எவ் வா றயது துறவு எனிற் கூறுகின்றார்.] எமை - எம்மை, அன்றி - தவிர, அது - (எமக்கு அந்நிய மாகக் கூறப்படும்) அப் பிரபஞ்சம், இல் - (உண்மை யாய்) இல்லை, என்று - என்ப தாக,

போத - (சர்வாத்மக) ஞாந, விழியின் - திருஷ்டியினுல், துறந்த - (பேதத்தை) நீத்த, புநித - பரிசுத்த, துறவே - சந்நியாசமே (உண்மைத் துறவு), [இந்தச் சந்நியாசத்திஞல் யாது பய னுள தேனிற் கூறுகின்றுர்.] சீத - (இந்தச் சந்நியாசத்திஞல் மநம்) குளிர்ந்த, மதி - சந்திரன், போல் - போல, குளிர்ந்து - சீதள மடைய, ஜெநந - பிறப்பிஞல் உண்டாக்கப்பட்ட, வெப்பம் - தாபம், தீரும் - நிவிர்த்தி யாம், (எ-று).

அஞ்ஞ வதைப் பரணி 30 கூழ் வார்ப்பு.

"ஞாநம் போலே பலசொல்லி நாடற் கரிய முத்தியினுந், தானுஞ் சிவமும் பாசமுமென் சைவப் பேய்க்கும் வாரிரே." (12) என்று தத்துவ ராய சுவாமிகளும் தாம் இயற்றிய அஞ்ஞ வதைப் பரணியில் பேத வாதிகளின் கருத்தை விளக்கி யிருக்கின்றனர் என்பது உணரற்பாற்று.

"குளிர" என்னுஞ் செய வென் எச்சம், "குளிர்ந்து" எனத் திரிந்தது.

ஏ - நான்கில், முந்திய மூன்றும் அசை நிலைகள். பிந்தியது - தேற்றம். அல - ஒருமையிற் பன்மை மயக்கம். இல் - ஈறு குறைந்த இல்லை என்னும் குறிப்பு வினை முற்று. ஈது - எழுவாய். அல - பய னிலை. புனிதத் துறவு - எழுவாய். உண்மைத் துறவு - பய னிலை. (அவாய் நிலையாற் பெறப்பட்டது). வெப்பம் - எழுவாய். தீரும் - பய னிலை. கண்டாய் - முன் னிலை அசைச் சொல். (91)

பிரஹ்மாநந்தத்தினை இல் லறத்தி லிருந்தே பெறலாம் என்று மந்திரி கூற, அதை யநுவதித்து, மஹா ராஜன், நின்மல மநத்தோடு கூடிய தீர புருஷ ஞகினும், இல் லறத்தைக் கடந்து ஏகாந்த ஸ்தலத்தை மேவி, ஜீவத்துவத்தைக் கெடுக்கவேண்டும் எனில், அதைரிய மந முடையோருக்கு

இல் லறத்தி லிருந்து பல இடையூறுகளோடு கூடிக் கொண்டு ஜீவத்தைக் கெடுப்பது எங்ஙனம் முடியும்? முடியாது எனச் சமாதாநங் கூறல்.

இருந்த விடத்தி லிருந்தே யெய்த லாமென் றுரைக்
கில், திருந்து நிமல மநத்தோர் தீர ரெனினு மொழிந்தே,
பொருந்தி யேகாந் தத்திற் போத மடக்க வேண்டும்,
வருந்து மநத்தோர்க் கென்னை வாய்க்கு மமைச்ச
சொல்லாய். (92)

(இ—ள்) அமைச்ச - மந்திரி, இருந்த - (பூர்வம்) இருந்த, இடத்திலே - இல் லற ஆசிரமத்திலேயே, இருந்து - இருந்து கொண்டு, எய்தல் ஆம் - (பிரஹ்மப் பொருளை) அடைய லாம், என்று - என, உரைக்கில் - கூறுவாயாகில் (அது பொருந்தாதாம். எதனு லெனின்), [தீர புருஷருக்கும் சந்நியாசத்தை யடைந்தா லன்றி ஜீவத்துவத்தை நீக்க முடியாதாயின், அதைரிய புருஷர்கள் இல் லறத்தி லிருந்தே ஜீவத்துவத்தை எங்ஙனம் கெடுப்பர். அவர் களுக்குக் கெடுப்பதற்குச் சாமார்த்திய மில்லை என்கின்றார்.] திருந்து - உயர்ந்த, நிமல - மல மின்றிய, மநத்தோர் - மந முடையோர், தீரர் - தைரியசாலிக ளாக, எனினும் - இருப்பினும், ஒழிந்து - (இல் லறத்தை) விட்டு, ஏகாந்தத்தில் - தனி இடத்தில், பொருந்தி - சார்ந் (திருந்து), போதம் - (யான் சீவன் என்னும் ஜீவத்துவ) ஞாநத்தை, அடக்க வேண்டும் - (விசாரித்து) ஒடுக்க வேண்டும், வருந்தும் - (சமுசாரத்தில்) துன்புறுகின்ற, மநத்தோர்க்கு - மநத்தினை யுடைய அஞ்ஞாநிகளுக்கு, என்னை வாய்க்கும் - யாது கிடைக்கும் (அஜ் ஜீவத்துவத்தைக் கெடுப்பதற் குரிய சாதநங்கள் ஒன்றேனும் கிடைக்காது என்ப தபிப்பிராய மாம்), சொல்லாய் - (நீ இதற்குப் பதில்) கூறுவா யாக, (எ-று).

"ஒழித்து" என்பது, "ஒழிந்து" என மெலித்தலானது.

இருந்தே - ஏ - தேற்றம். அது இடத்தோடு பிரித்துக் கூட்டப்பட்டது. மநத்தோர் - குறிப்பு வினையா லணையும் பெயர். தீர ரெனினும் - உம் - உயர்வு சிறப்பு. ஒழிந்தே - ஏ - அசை நிலை. என்னை - என்ன என்பதன் விகாரம். என்னை - எழுவாய். வாய்க்கும் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். சொல்லாய் - பய னிலை. பதில் - செயப்படு பொருள் (அவாய் நிலையால் பெறப் பட்டது). (92)

"முன் ஜந்மத்தில் சாதந அநுஷ்டாநஞ் செய்தமையால், பிறந்தவுடன் ஆத்ம ஞாநம் வந்தவர்கள் இல் லறத்தி லிருந்தும் பிரஹ்ம பாவனையினின்றும் நீங்கார்" என்று மந்திரி கூற, அதற்கு மஹா ராஜன், அக முக நாட்ட முடையோர் ஜக முக நாட்ட மடையார் என்று திருஷ்டாந்த வாயிலாகச் சமாதாநங் கூறல்.

முனமே யனைத்து முடித்து முழுது முணர்ந்தோ ரில்லின்
இனமே சென்று நின்று மேக நீங்கா ரென்னில்
திநமே யகமாய் நிற்போர் செகத்தி னியல்பை யுணரார்
கனமாம் யாழ்ப்பா ணத்தின் கப்ப லோட்டம் போல.(93)

(இ—ள்) முனமே - பூர்வ ஜெந்மத்தின்கண்ணே, அனைத் தும் - (மோக்ஷத்துக் குரிய சாதநங்கள்) யாவையும், முடித்து - முற் றுற அநுட்டித்து, முழுதும் - (இந்த ஜெந்மத்தில்) எல்லா வஸ்து ரூபமா யுள்ள பிரத்ய கபிந்ந பிரஹ்மத்தை, உணர்ந்தோர் - சாக்ஷாத்கரித்த ஞாநிகள், இல்லின் - இல் லறத்தில், இனம் - தார, புத்திர, தநாதிக ளிடத்தில், சென்று - போய், நின்றும் - நிலைத்திருந்தும், ஏகம் - அத்வைதப் பிரஹ்ம நிலையி னின்றும்,

நீங்கார் - விலகார், என்னில் - என்று நீ கூறுவாயாகில் (அது பொருந்தாது. எ னெனின்), [ஆருட ஞாநிக்குப் பிரபஞ்சமே தோன் றது என்பதனைத் திருஷ்டாந்த வாயிலாகக் கூறுகின்றார்.] கனம் ஆம் - சீர்மைய தாகிய, யாழ்ப்பாணத்தின் - ஈழநாட்டிற்குச் செல்லு கின்ற, கப்பல் - மரக் கலத்தின், ஓட்டம் - போக்கில் (அல்லது ஓட்டத்தில்) இக் கரை தெரியும் வரை அக் கரை தெரியாது, அக் கரை தெரிய இக் கரை தெரியாது, போல - (அது) போல, திநம் - நா டோறும், அகம் ஆய் - உண் முகத்தோடு, நிற்போர் - இருக்கும் பெரியோர் (அவ் வக நாட்ட மிருக்கும் வரை), ஜெகத் தின் - பிரபஞ்சத்தின், இயல்பை - தன்மையை, உணரார் - அறிய மாட்டார்கள், (எ-று).

இக் கரை தோன்றும் வரை அக் கரை தோன்றாது, அக் கரை தோன்றத் தொடங்கும் போது, இக் கரை மறையத் தொடங்கும், அக் கரை முற்றாய்த் தோன்றின், இக் கரை முற்றாய் மறையும் என்பது கருத்து.

இதனை, சதா சிவப் பிரஹ்மேந்திரர் அருளிச் செய்த அத் வைத ரச மஞ்சரி.

दृश्ये स्फुटी भवति नेष्यत एष भूमा
भूम्नि स्फुटी भवति नेष्यत एव दृश्यम् ।
द्वीपान्तरे स्फुरति भूमिरियं न दृश्या
भूमण्डले स्फुरति तच्च तथा विधानम् ॥ २९ ॥

“ திருசியந்தான் புடமாகத் திகழுமெனிற் பூமவுருத் திகழா தாகும், இருமையறு பூமவுரு விலங்குமெனிற் றிருசியமற் றிலங்கா தாமே, மருவலுறு மறுதீவு தெரியுமெனி னிப்பூமி, மறைந்து போகும், தெரிவுறுமே லிப்பூமி மறைந்துபோ மவ்வாறத் தீவு தானே ” என்று (கவி 39) கூறுவ திங்கு அறிதற் குரிய தாம்.

"யாழ்ப்பாணத்தின் கப்பல் ஒட்டம் போல" என்று கூறியது. பண்டை நாளில், தென் ஞடினர் பாய்க் கப்பல் ஏறி, யாழ்ப்பாணத் திற்கே செல்லும் வழக்கம் மிகுதியாக இருந்தமையின், அப் பாய்க் கப்பலினுள் இருக்கும் பிரயாணிக்கு, அக் கப்பலுக்கு வெளியில் உள்ள எந்த விஷயமும் புலப்படாமை, பண்டைப் பாய்க் கப்பலின் தன்மை யாம். அதனுல், யாழ்ப்பாணத்தின் கப்பல் ஒட்டத்தைத் திருஷ்டாந்த மாகக் கூறி யிருக்கின்றனர் என உணர்க.

முனமே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். அனைத்தும் - முழுதும் - உம் - இரண்டும் முற் றும்மைகள். உணர்ந்தோர் - நிற்போர் - இவ் விரண்டும் வினையா லணையும் பெயர். இனமே - திநமே - ஏ - இரண்டும் அசை நிலைகள். நின்றும் - உம் - உயர்வு சிறப்பு. நிற்போர் - எழுவாய். உணரார் - பய னிலை. இயல்பு - செயப்படு பொருள். இதில் உவமை யணி யுளது. (93)

ஒரு கிராம வாசி யாகிய ஒரு புருடனை ஒரு ராஜ்ஜியாதிபதி யாக்கினுல், அவன் கிராம வாசி யாக யிராமல் ராஜ்ஜியாதிபதி யாக இருப்பான். அது போல, பிரபஞ்ச மித்தை யெனக் கண்ட மெய்ஞ் ஞாநிகள் மீண் டதனைச் சத்திய மெனக் கருதி யுழலா ரென மந்திரிக்குத் திருஷ்டாந்த வாயிலாகக் கூறல்.

ஒருத்த ஞெரு ருளனை யொருவேந் தாக்கின்
முன்னம், இருக்கு மிடத்தை நீக்கி யேக ராச தாநி,
இருக்கு மன்றி முன்க ணிருக்கு மோதான் சொல்லாய்,
திருக்கு ஞாந முடையோர் செகத்தை மெய்யென்
றுழலார். (94)

(இ—ள்) ஒருத்தன் - (ஏக சக்கிராதிபதி யாகிய) ஓ ராசன், ஒரு - பல கிராமங்க ளடங்கிய ஒரு (ராஜ்ஜியத்திற்கு), ஓர் - ஒரு, ஊர் உளன் ஐ - கிராம அதிபதியா யுள்ளவனை, வேந்து - அரச ஞக,

ஆக்கின் - செய்விக்கின், முன்னம் - பூர்வம், இருக்கும் - இருந்த, இடத்தை - கிராமத்தை, நீக்கி - விட்டு, ஏக - ஒரே (ஆஞ்ஞா சக்கரஞ் செல்லுகின்ற), இராஜதாநி - பிரதாந பட்டணத்தில் உள்ள அரண்மனையில், இருக்கும் அன்றி - (அவன்) இருப்பனே அல்லாமல், முன் - பூர்வ மிருந்த (கிராமத்தில் உள்ள), கண் - (சிறிய) இடத்தில், இருக்குமோ - இருப்பனு (இருக்கமாட்டான் என்றபடி), சொல்லாய் - (நீ) இதனைக் கூறுவாயாக, [அது போல உயர் வான பிரஹ்மத்தை அடைந்த ஞாநிகள் தாழ் வான இல் லறத்தைச் சத்திய மாகக் கருதி யிருக்கமாட்டார்கள் என்கின்றர்.] திருக்கு - சேதந ரூபப் பிரத்திய கபிந்ந பிரஹ்மத்தின், ஞாந முடையோர் - திட சாக்ஷாத் கார முடையோர், ஜெகத்தை - (இம் மித்தையாப்) பிரபஞ்சத்தை, மெய் - சத்தியம், என்று - எனக் கருதி, உழலார் - (அதில்) சுழலமாட்டார்கள், (எ-று).

ஊருளன் - உடையோர் - இவை குறிப்பு வினையா லணையும் பெயர்கள். இருக்குமோ தான் - ஓ - எதிர் மறை, தான் - அசை நிலை. அவன் - தோன்ரு எழுவாய். இருக்குமோ - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். சொல்லாய் - பய னிலை. இதனை - செயப் படு பொருள். (அவாய் நிலையாற் பெறப்பட்டது). (94)

இல் லறத்தி லிருந்து ஒருவருக்கு, பொருட் சார்வு உயிர்ச் சார்வுகளினுல் வரும் லாபத்தில் சந்தோஷமும், நட்டத்தினுல் வருத்தமும், விஷயாநந்தத்தில் விருப்பும், பின் அதன் கண் பிரவிருத்தியும், என்னும் நான்கும், ஜன்மாந்தர பாக்கியத்தினுல் இல்லாதிருந்தாலும், பிரஹ்மாப்யாசஞ் செய்யுங் காலத்தில் இல் லறத்தைக் கடந்தே இருக்க வேண்டும் எனக் கூறல்.

மனையினின் ருலும் பொருளுயிர்ச் சார்வின் வருத்த நங் கெடுதலின் மகிழ்ச்சி, இனிமையில் வாட்டம் விடய

வின் பதனி லெட்டுணை யாயினு மாசை, பினையதிற் றமது பிரவிர்த்தி தானும் பேசுமிந் நான்குமில் லெனினும், தனையுணர் வதற்குச் சாதகஞ் செயுங்காற் றள்ளியின் னிற்றலே தகுதி. (95)

(இ—ள்) மனையில் - (ஒரு புருஷன்) கிரகத்தில், நின்றாலும் - இருந்தாலும், பொருள் சார்வின் - (கிரக, தந முதலிய) பொருட் சார்வினாலும், உயிர் சார்வின் - (தார, புத்திரர் முதலிய) உயிர்ச் சார்வினாலும் (உண்டாகின்ற), வருத்தநம் - விருத்தியில், மகிழ்ச்சி - சந்தோஷமும், கெடுதலில் - நஷ்டத்தில், இனிமையில் - சந்தோஷம் இன்றிய, வாட்டம் - விஷாதமும் (மநத் தளர்ச்சியும்), விடய - விஷய, இன்பதனில் - சுகத்தில், எள் துணை யாயினும் - எள் ளள வாயினும் (அற்ப மாயினும்), ஆசை - இச்சையும், பினை - பின்னர், அதில் - அவ் விஷய சுகத்தில், தமது - தன் னுடைய, பிரவிர்த்திதானும் - யத்தநமும் என, பேசும் - கூறுநின்ற, இந் நான்கும் - இந்த நாலும், இல் எனினும் - (அவன் கண்) இல்லாமல் இருப்பினும், தனை - (பிரம்மாபிந்ந) தனது யதார்த்த சொரூபத் தினை, உணர்வதற்கு - அறிவதற்கு, சாதகம் - அப்பியாசம், செயுங் கால் - செய்யும் பொழுது, இல் - கிரகத்தை, தள்ளி - விட்டு, நிற்றலே - இருத்தலே, தகுதி - (சாஸ்திர) ஒழுங்காம், (எ-று).

இக் கருத்தினை, வைராக்ய தீபம், "இந்திர சாலத் தொருநகர் காண்போ ரெனத்தநு முதற்பிர பஞ்சம், நந்தினுங் கெடினும் பூரியா வாடா நன்மநச் சநகனு தியரும், மந்திரி, முதலோர் மீதுபூ பாரம் வைத்தொரே காந்தத்துள் வதியாத் தந்தொழி லொருக்கிச் சமாதியுற் றன்றே தவிர்ந்தனர் காணவா தனையே." (47) என்றும்,

"சொற்றிடின் மயக்க மற்றுதித் துளவச் சுகருமொண் டாதையைத் துறவா, உற்றிருஞ் சமாதி யுற்றகப் பற்று மொருவி

டடைந்தனர் சநகர், முற்றவ முனிவர் நால்வரு மொருநான் முகப் பிதா விடத்தவன் வளத்தோர், பற்றுமற் றகப்பற் றையுமுயர் சமாதி பணியொழித் தெணியவீ டடைந்தார்.'' (48) என்றும் கூறுவது கொண்டும் உணரற்பாற்று.

நின்றாலும் - ஆல் - அசை நிலை. உம் - இழிவு சிறப்பு. இல் வாட்டம் - இல் - இல்லாத என்னும் குறிப்பு வினைப் பெய ரெச்சத்தின் விகாரம். இன்பதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. ஆயினும் - உம் - முற்று. பினை - காலப் பொருட்டாய "பின்" என்னும் இடைச் சொல்லின் விகாரம். தமது - தம் - ஒருமையிற் பன்மை மயக்கம். பிரவிர்த்திதானும் - தான் - அசை நிலை. உம் - எச்ச வும்மை. நான்கும் - உம் - முற் றும்மை. எனினும் - உம் - உயர்வு சிறப்பு. நிற்றலே - ஏ - தேற்றம். நிற்றல் - எழுவாய். தகுதி - பய னிலை. (95)

விஷயாநந்தத்தினை வெறுத்துப், பிரஹ்மாநந்தத்தினை விரும்பிச் சாதநங்களை அப்யாசிக்குங் காலத்திலேயே விஷயம் தடையாம், சாத்தியம் கைவந்த பின் பிரஹ்மாநந்தத்தில் மூழ்கி யிருப்பதால் விஷயாநந்தம் ஒரு பொரு ளாகவே தோற்ற மாட்டாது என்றும், துற வில்லாத ஞாநம் அஞ்ஞாநமே என்றும் கூறல்.

தீதுறு மனையின் பினையிகழ்ந் தந்தச் செம்பொரு ளின்பமே வேண்டிச், சாதக மதனிற் றொடங்குகால் விடயந் தடையதாஞ் சாத்திய மான, போதினி லவையுந் தோன்றிடா தந்தப் பொருவிலா நந்தமே விடவே, ஆதலிற் றுறவின் ஞாநமஞ் ஞாந மாகுமென் றறைகுவர் பெரியோர். (96)

(இ—ள்) தீது - (அங்ஙன் இல்லேத் தள்ளி நில்லாது ஒருவன்), குற்றம், உறு - பொருந்திய, மனை - இல்லின், இன்பினை - (விடய) சுகத்தினை, இகழ்ந்து - (வெறுத்து) நிந்தித்து, அந்த - அச் சச்சிதாநந்த ரூப, செம் - சிறந்த, பொருள் இன்பமே - வஸ்து வாய (பிரஹ்ம) சுகத்தினையே, வேண்டி - விரும்பி, சாதகமதனில் - (அதனை அடைதற் குரிய) சாதநங்களில், தொடங்கு கால் - (அப்பியாசத்தினை) ஆரம்பிக்குங் காலத்தில், விடயம் - (அவ் இல் லற) விஷய மானது, தடையது ஆம் -(அதற்குப்) பிரதிபந்தக மாம் (ஆதலின் அதனை விட்டு நீக்கி), சாத்தியம் - (சாதநங்களை அப்பியசித்து அவ் அப்பியாசத்தினல் பிரஹ்மாநந்த மாகிய) சாத்தியம், ஆன போதினில் - சித்தி யான சமயத்தில், அந்த - அச் சாத்திய மாய, பொருவு - சமாநம், இல் - இன்றிய, ஆநந்தம் - பிரஹ்மாநந்தம், மேலிட - அதிகரிக்க, அவையும் - அந்த விஷயாதிகளும், தோன்றிடாது - விளங்கமாட்டா, ஆதலின் - ஆனதால், துறவு - சந்நியாசம், இல் - இன்றிய, ஞாநம் - ஞாநம், அஞ்ஞாநம் ஆகும் - அஞ்ஞாந மாம், என்று - என, பெரியோர் - மஹான்கள், அறைகுவர் - கூறுவார்கள், (எ-று).

இக் கருத்தினை, (வைராக்ய தீபம்), "சாதக தசைக் கண் விடயமே தடையாஞ் சாத்திய மானபின் புசித்தற், காதல்வைத் திடினப் பிரமவா நந்தத் ததிகமோ விடயவா நந்தங், கோதில்வீட் டின்பம் பெறுகலா விடினுங் கூடுதற் கெளிற்கரி பிழைக்கில், தீதிலோர் சிங்க மதனையே யன்றித் தேடுமோ தேரை யூன் றினவே." (45) என்னும், இதன் முத னூ லாகிய வைராக்ய தீபங்கொண்டும் இனி துணர லாம்.

இன்பமே - ஏ - பிரி நிலை. சாதகமதனில் - தடையதாம் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். அவையும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். தோன்றிடாது - பன்மையில் ஒருமை

மயக்கம். இடு - பகுதிப் பொருள் விகுதி. பொருவில் - துறவில் - இல் - இல்லாத என்னும் எதிர் மறைப் பெய ரெச்சத்தின் விகாரம். மேலிடவே - ஏ - அசை நிலை. விடயம் - எழுவாய். ஆம் - பய னிலை. அவை - எழுவாய். தோன்றிடாது - பய னிலை. பெரியோர் - எழுவாய். அறைகுவர் - பய னிலை. ஞானம் - செயப்படு பொருள். (96)

இல் லறத்தாரிடம் உள்ள ஞானம் இரும்பில் பதித்த ரத்நம் போல் ஒளி மழுங்கி விளங்கும் எனவும், துற வறத் தாரிடம் உள்ள ஞானம் தங்கத்தில் பதித்த ரத்நம் போல் ஒளி வீசி விளங்கும் எனவும், அதனல் ஞாநிகட்கு இல் லறம் சிறந்தது அன்று எனவும் கூறல்.

*இல்லற மதனி லுறைந்துளோ ரிடத்தி லிருப்பினு*
*ஞாநங்கீ ழிரும்பில், புல்லிய மாரத் திநமென விளங்கும்*
*போக்கியில் லினைத்துற வென்னும், நல்லற மடைந்தோ*
*ரிடத்துறை ஞாந நற்றங்க மிசையிரத் திநம்போல்,*
*எல்லையி லொளியாய் விளங்கிடு மாயி னில்சிறப் பன்றுஞா*
*நிகட்கே.* (97)

(இ—ள்) இல்லற மதனில் - இல் வாழ்க்கையில், உறைந் துளோர் இடத்தில் - இருப்பவர்க ளிடத்தில், ஞாநம் - (ஆத்ம) ஞாநம், இருப்பினும் - இருந்தாலும் (அது), கீழ் - தாழ் வான, இரும்பில் - அயத்தில், புல்லிய - பொருந்திய, மா - உயர்ந்த, இரத்திநம் - மணி, என - போல, விளங்கும் - (ஒளி மழுங்கித்) தோற்றிக் கொண்டிருக்கும், இல்லினை - கிரகத்தை, போக்கி - விட்டு, துறவு - சந்நியாசம், என்னும் - எனக் கூறப்படும், நல் அறம் - நல் வாழ்க்கையினை, அடைந்தோரிடத்து - அடைந்தவ

ரிடத்து, உறை - இருக்கின்ற, ஞாநம் - (ஆத்ம) ஞாநம், நல் - உயர்ந்த, தங்கம் - ஸ்வர்ணத்தின், மிசை - மேல் (பொருந்தி யுள்ள), இரத்திநம் - மா மணி, போல் - போல, எல்லையில் - அள வின்றிய, ஒளி ஆய் - பிரகாச மாய், விளங்கிடும் - தோற்றிக் கொண்டிருக்கும், ஆயின் - (ஆகவே) ஆராய்ந்து பார்க்கின், ஞாநி கட்கு - பிரஹ்ம வித்துக்கட்கு, இல் - இல் லறம், சிறப்பு - மேன்மை யது, அன்று - அன்றும், (எ-று).

இல்லற மதனில் - அது - பகுதிப் பொருள் விகுதி. உறைந் துளோர் - அடைந்தோர் - வினையா லணையும் பெயர்கள். இருப் பினும் - உம் - இழிவு சிறப்பு. விளங்கிடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. சிறப்பு - குறிப்பு வினையா லணையும் பெயர். ஞாநிகட்கே - ஏ - ஈற் றசை. அது - தோன்றா எழுவாய். விளங் கும் - பய னிலை. ஞாநம் - எழுவாய். விளங்கிடும் - பய னிலை. இல் - எழுவாய். சிறப் பன்று - பய னிலை. இதில் உவமை யணி யுண்டு. (97)

ஞாநி அஞ்ஞாநி யாவரும் இல் லறத்தி லிருப்பினும், ஞாநம் வந்த பின் இல் லறத்தி லிருக்கும் ஞாநியைச் சிலர், "ஏன் இன்னும் இல் லறத்தை விட வில்லை" என்று ஆக்ஷேபிக்கின்றனர். அது போல், துறவிகளைப் பார்த்து ஒருவரும் ஞாநம் வந்த பின், "ஏன் இனியும் இல் லறத்தை அடையாது இருக்கின்றீர்கள்" என்று கேட்ப தில்லை என, எதிர் மறை முகத்தால் துற வற உயர்வைக் கூறல்.

முனமனை வர்களு முறைவது மில்ல முத்தியை யுணர்ந் தறி ஞர்களும், பினமதி னின்ற படியினுற் சங்கை பேசுவர் துறவுடை யோரை, இனமதை விடுத்தில் லற மது வெய்த விலையென வியம்புவ துண்டோ, மநமதி னிதனை யூகிநீ யமைச்ச மகிமையன் றில்லஞா நிகட்கே. (98)

(இ—ள்) முனம் - (துறத்தற்கு) முன், அனைவர்களும் - யாவர்களும், உறைவது - வஸிப்பது, இல்லம் - இல்லாச்சிரமத்திலாம், முத்தியை - பிரஹ்மத்தை, உணர்ந்த - சாக்ஷாத்கரித்த, அறிஞர்களும் - ஞாநிகளும், பினம் உம் - (ஞாநம் வந்த) பின்னரும், அதில் - அந்தக் கிரகத்தில், நின்றபடியினால் - இருக்கின்ற காரணத்தினால், சங்கை பேசுவர் - (இல்லற ஞாநியை நோக்கிச் சிலர், என் துறவறத்தினை யடையவில்லை, ஞாநம் வந்தும் இல்லறத்திலிருத்தல் எற்றிற்கு எனச்) சங்கை செய்கின்றனர், துறவுடையோரை - (அப்படித்) துறவிகளைப் பார்த்து, இனம் - (ஞாநம் வந்த) பின்னரும், அதை - துறவறத்தை, விடுத்து - விட்டு, இல்லறமது - இல்லறத்தை, எய்த - (ஏன்) அடைய, இலை - இல்லை, என - என்று, இயம்புவது - (உலகத்தில் யாராவது) கூறுவது, உண்டோ - உளதா (அவ்வாறு உலகத்தின்கண் கூறுவதில்லை), இதனை - (ஆனதால்) இவ் விஷயத்தினை, அமைச்ச - மந்திரி, நீ - நீ, மநமதில் - மநத்தில், யூகி - விசாரித்துப் பார்ப்பாயாக, ஞாநிகட்கு - பிரஹ்ம வித்துக்களுக்கு, இல்லம் - இல்லறத் திருத்தல், மகிமை - சிரேஷ்டம், அன்று - ஆகாது, (எ-று).

முனம் - பினம் - இனம் - இவை காலத்தினைக் குறிக்குமிடைச் சொற்கள். அனைவர்களும் - உம் - முற்று. உறைவது - இயம்புவது - இரண்டும் தொழிற் பெயர்கள். உணர்ந்தறிஞர் - உணர்ந்த என்னும் பெயரெச்சத்தின் அகர விகுதி தொக்குப் புணர்ந்தது. அறிஞர் - உடையோர் - குறிப்பு வினையாலணையும் பெயர்கள். உறைவதும் - என்பதன் உம்மையினைப் பிரித்துப் பினம் என்பதனோடு சேர்த்து இறந்தது தழீஇய எச்சமாகக் கொள்க. இல்லற மது - மநமதனில் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். உண்டோ - ஓ - எதிர் மறை. அமைச்ச - அண்மை விளி. ஞாநிகட்கே - ஏ - அசை நிலை. உறைவது - எழு

வாய். ஆம் - பய னிலே (அவாய் நிலேயாற் பெறப்பட்டது). சிலர் - தோன்ரு எழுவாய். பேசுவர் - பய னிலே. சங்கை - செயப்படு பொருள். இயம்புவது - எழுவாய். உண்டோ - பய னிலே. நீ - எழுவாய். ஆகி - பய னிலே. இதனே - செயப்படு பொருள். இல்லம் - எழுவாய். அன்று - பய னிலே. (98)

அடைதற் கரியது துற வற மென்றும், அதனே விட்டு அரச ஞவது தாழ் வென்றும், ரத்நத்தினைக் கொடுத்துப் பிண் ணுக்கு வாங்கினதற்குச் சமாநம் என்னுந் திருஷ்டாந்த வாயி லாக, துற வற உயர்வையும், இல் லறத் தாழ்வையும் கூறல்.

அரியது துறவற மல்ல தில்லையான்
மருவிய துறவற மொருவி மன்னனுய்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலே மணியினேப் பிண்டிக் கீதலே. (99)

(இ—ள்) அரியது - (உலகத்தில்) இலகுவில் அடைய முடியாதது, துற வறம் - சந்நியாசமே, அல்லது - அன்றி (வே ருென்று), இல்லே - இன்ரும், மருவிய - (அங்ஙன மிருக்க அநந்த ஜென்ம புண்ணியத்திஞல்) அடைந் துள்ள, துற வறம் - சந்நியாசத்தை, ஒருவி - விட்டு நீங்கி, உரு - அழகு, கெழு - நிறைந்த, முடி - (நவ ரத்ந) கிரீடத்தை, கவித்து - (சிரஸில்) சூட்டிக்கொண்டு, மன்னன் ஆய் - (சிம்மாஸநத்தின் மீது) அரசனு யிருந்து, உலகம் - இவ் வையகத்தினே, ஆள்வது - அரசாக்ஷி செய்வது, பெரு - அதிக, விலே - விலே யுள்ள, மணியினே - இரத்திநத்தினே, பிண்டிக்கு - (சார மற்ற தாழ்ந்த) பிண்ணுக்கினேப் பெறும் பொருட்டு, ஈதல் - கொடுத்தலே ஒக்கும், (ஆனதால் துற வறத்தை விட்டு இல் லறத்தைச் சார்தல் தாழ் வாம்), (எ-று).

அரியது - குறிப்பு வினையா லணையும் பெயர். இல்லையால் - ஆல் - அசை நிலை. ஆள்வது - எழுவாய். ஒக்கும் - பய னிலை. (அவாய் நிலையாற் பெறப்பட்டது) ஈதல் - செயப்படு பொருள். இதில் உவமை யணி யுளது. (99)

பாலன், மருளுடையோன், பேய் பிடித்தோன், கூலியாள், ஆகியவர்களின் குணத்தைப் பொருந்தியவர் ஞாநிகள் என, ஞாநிகளின் தன்மை கூறல்.

ஆடிய சகல மடங்குகே வலமு மகற்றியே யொளிப் படை கொண்டு, மூடிய விருளை முழுதையும் வீசி முடிவில்வீ டதனையே யுணர்ந்தோர், நீடிய ஞால மிசையினிற் பால னிசமரு ளுடையன்பேய் பிடித்தோன், கூடிய குணத்தி னூரிற்போய்க் குடியின் கூலியா ளனினியல் படைவார். (100)

(இ—ள்) ஆடிய - (கர்ம வசத்தால் இந்திரியங்களும் மநமும்) சலித்துள்ள, சகலம் - சாக்ர சொப்பநங்களையும், அடங்கு - (அச் சகலம்) இலய மடைகின்ற, கேவலமும் - சுழுத்தியையும், அகற்றி - நீக்கி, ஒளி - (தத்துவ) ஞாந மாகிய, படை கொண்டு - ஆயுதத்தினல், மூடிய - (ஆத்மாவை) அநாதி யாய் மறைத்துக் கொண்டிருக்கின்ற, இருளை - (அஞ்ஞாந) அந்தகாரம், முழுதையும் - அனைத்தையும், வீசி - சேதித்து, முடிவு - அந்தம், இல் - இல்லாத, வீடதனை - மோக்ஷத்தினை, உணர்ந்தோர் - அறிந்த (டைந்த) பெரியோர்கள், நீடிய - விரிந்த, ஞால மிசையினில் - பிரபஞ்சத்தில், பாலன் - குழந்தை, நிச - உண்மை யான, மருளுடையன் - மயக்க முடையோன் (பைத்தியக்காரன்), பேய் பிடித்தோன் - பிசாசு பிடித்தோன் ஆகிய இவர்கள், கூடிய குணத்தின் - பொருந்திய பாகுபா டற்ற உதாசீந இயல்பினை யுடையவ

ராய், ஊரில் - (பிச்சையின் பொருட்டு) பட்டணங்களில், போய் - சென்று (அதனை ஏற் றருந்தி), குடியின் - கிரகங்களில் (உள்ள), கூலி ஆளனின் - (பொழுது எப் போது போகும்? எனக் கருதும்) கூலிக்கார னுடைய தன்மை போன்ற, இயல்பு - (பிராரப்த ஒழிவு காலத்தை எதிர் நோக்கும்) தன்மையினை, அடைவார் - பொருந்து வார்கள், (எ-று).

பிருஹத் வார்த்திகத்தில்,

बुद्धतत्त्वस्य लोकोऽयं जडोन्मत्तपिशाच वत् ।
बुद्धतत्त्वश्च लोकानां जडोन்मत्तपिशाच वत् ॥

குருந் திரட்டு, "பிள்ளை யாமுணச் சிந்தைசெ யாமையிற் பித்தன், கொள்ளு மார்வமுங் கோபமு மறுத்தலிற் கூளி, உள்ள தன்னுரு வொளித்தலி னுள துணர் முனிக்குப், பிள்ளை பித்தன்வன் பேய்நிக ருரைத்தனர் பெரியோர், என்று கூறுவதும் ஈண்டுக் கொண்டு உணரத் தக்கதாம்.

நாரத பரிவிராஜக உபநிஷத்,

बालोन्मत्त पिशाचवन्मरणं जीवितं वा न काङ्क्षेत ।
कालमेव प्रतीक्षेत निर्देशभृतकन्यायेन परिव्राडिति ॥ (५ - १)

"பால உன்மத்த பிசாசு போன்று மரணத்தினை யாவது ஜீவித் தலை யாவது விரும்பற்க. கட்டளையிடப்பட்ட வேலைக்கார நியாயத் தினால் சந்யாசி காலத்தினையே எதிர் நோக்குக." (5-1) என்று நாரத பரிவிராஜக உபநிஷத், ஐந்தாவது உபதேசம் முதல் மந்திரம், கூறுவதும் உணரற்பாற்று.

கேவலமும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். அகற்றியே - அதனையே - ஏ - இரண்டும் அசை நிலைகள். ஒளிப் படை - பண்புத்

தொகை. கொண்டு - மூன்றும் வேற்றுமையின் ஆல், ஆன் உருபு கட்குப் பதிலாக வரும் சொல் லுருபு. இருளை முழுதையும் - என்புழி. இருளை - ஐ - சாரியை. முழுதையும் - உம் - முற்று. முடிவில் - இல் - இல்லாத என்னும் எதிர் மறைப் பெயரெச்சத்தின் விகாரம். உணர்ந்தோர் - உடையன் - பிடித்தோன் - இவை வினையா லணையும் பெயர்கள். பேய் பிடித்தோன் - மூன்றும் வேற்றுமைத் தொகை. பிடித்தோன் என்னும் செய் வினையைப் (பேயால்) பிடிபட்டோன் எனச் செயப்பாட்டு வினை யாக்கிக் கொள்க. ஞால மிசையினில் - மிசை - இடப் பொருளில் வந்த மீமிசைச் சொல். குணத்தின் - இன் - சாரியை. குடியின் கூலி யாள் - ஏழ னுருபும் பயனும் உடன் தொக்க தொகை. கூலியாள னின் - இன் - சாரியை. உணர்ந்தோர் - எழுவாய். அடைவார் - பய னிலை. இயல்பு - செயப்படு பொருள். இதில் உருவகமும், உவமை யணியும் உண்டு. (100)

இரு வினைகளுஞ் சம மெனக் கொள்ளும் விவேக முடைய அப்பியாச காலத்திலே, விஷயாநந்தத்தினைக் கான்ற சோற்றிற் கண்டு வெறுக்க வருமாயின், சாத்தியம் கைகூடிய பின் ஞானிகள் விஷயாநந்தத்தினை விரும்புவர் என்ற வார்த்தை கூட உலகத்தில் வழங்காது என்று கூறல்.

வினைகளோ ரிரண்டுஞ் சமமதாய் ஞான மேவிடு காலையி னிந்த, மனையின்பங் கான்ற சோற்றிற்கண் டுவர்த்து மாற்றியே கைவிட வருமேல், தனையுள படியே யநுபவ மதனிற் றுணர்ந் தாநந்த மடைந்தோர், பினையு மவ் விடயம் பூண்பர்களெனவே பேசுதல் வழங்குமோ சொல்லாய். (101)

(இ—ள்) ஓர் - (பிறவிப் பயப்பதில்) ஒப் பற்ற, வினைகள் இரண்டும் - (புண்ணிய பாவ மாய) இரு கர்மங்களிலும், சமமது ஆய் — சம புத்தி யாய், ஞாநம் - (ஒருவனுக்கு) அறிவு (விவேகம்), மேலிடு காலையின் - அதிகரிக்கின்ற காலத்தில், இந்த - இப் பிரத்தியக்ஷமாக இருக்கின்ற, மனை - இல் லற, இன்பம் - சுகத்தை, கான்ற — வாந்தி பண்ணிய, சோற்றின் - அந்நத்தினைப் போல, கண்டு — பார்த்து, உவர்த்து - வெறுப் புற்று, மாற்றி - (அதி லுள்ள ஆசையை) நிவிர்த்தித்து, கை விட - உடனே விட்டு விடும்படியாக, வருமேல் - (வைராக்கியம்) உண்டாகுமாயின் (சம்பவிக்குமாயின்), தனை - (பிரஹ்மாபிந்ந பிரத்தியக் சொரூப மாய) தன்னை, உளபடியே - யதார்த்த மாக, அநுபவமதனில் - சுபா நுபவ ஞாநத்தினால், உணர்ந்து - சாக்ஷாத்கரித்து, ஆநந்தம் - நித்தியாநந்தத்தை, அடைந்தோர் - பெற்ற பெரியோர்கள், பினையும் - பின்னரும், அவ் விஷயம் - அந்த அற்ப ஸ்திரீ முதலிய இல் லற விஷயங்களை, பூண்பர்கள் - (விரும்பிப்) பொருந்துவார்கள், என - என்று, பேசுதல் - கூறுத லாகிய வசந மானது, வழங்குமோ - (லோகத்தில்) விவகரிக்கப்படுமோ? (விவகரிக்கப்படா என்பது கருத்தாம்), சொல்லாய் - (மந்திரி நீ இதற்குப் பதில்) கூறுவாயாக, (எ-று).

இதனை (வைராக்ய தீபம்), "கான்றசோ றதனிற் கண்டு பொய்ப் போக மனைத்தையுங் கைவிடுத் திடினும், தோன்றலகினைமெய் யெனக்கொடு மீக்கூற் றுறவிருப் படையினத் துறவோன், சான்றதா யுளதன் னுளமிலை யெனவுந் தற்பரா நந்தமுற்றவனைப், போன்றிரு விழிமேற் செருகியீண் டுரைக்கும் பொய்யையெவ் விதத்தினாற் போக்கும்." (61) எனக் கூறுவது கொண்டும் உணர்க.

இரண்டும் - உம் - முற்று. சமமதாய் - அநுபவமதனில் — அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். சோற்றில் - இல் —

ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. மாற்றியே - எனவே - ஏ - இரண்டும் அசை நிலைகள். உளபடியே - ஏ - தேற்றம். தா னுணர்ந்து - தான் - அசை நிலை. அடைந்தோர் - வினையா லணையும் பெயர். பினையும் - உம் - இறந்தது தழீஇயது. பின்னர் என்னும் காலப் பொருட் டாய இடைச் சொல், பினை என விகார மாயிற்று. வழங்குமோ - ஓ - எதிர் மறைப் பொருளது. பேசுதல் - எழுவாய். வழங்குமோ - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். சொல்லாய் - பய னிலை. பதில் - செயப்படு பொருள். (அவாய் நிலையாற் பெற்றது.) (101)

விஷயாநந்தத்தில் இச்சை யுள்ளவருக்கும், பிரஹ்மா நந்தத்தினை அடையும் கிரமத்தினைக் காதாற் கேட்ட போதே, விஷயாநந்தத்தினை விடும்படி யாக விருப்பம் உண்டாகு மாயின், பிரஹ்மாநந்தத்தினை அடைந்த பிரஹ்ம ஞாநிகளும் விஷயாநந்தத்தினை விரும்புவார்கள் என்று கூறினல், பார்த்த வர் சிரிப்பர் எனக் கூறல்.

விடயவின் பதனி னசையுளோர் தமக்கும் விரிவதாம் பேரின்பச் சுவையின், அடைவினைச் செவியிற் கேட்டவக் கணமே யவற்றினை யகற்றிட வருமேல், இடைமுத லீறின் ஞாநவா நந்த மெய்தினோர் களும்பினு மிந்தக், கடைமனை வாழ்வை நினைவர்க ளென்ருற் கண்டனர் நகையரோ சொல்லாய். (102)

(இ—ள்) விடய - விஷய, இன்பதனில் - சுகத்தில், நசை யுளோர் தமக்கும் - ஆசை யுள்ளவர்களுக்கும், விரிவது ஆம் - பூரண மான, பேர் இன்ப - பிரஹ்மாநந்த, சுவையின் - ரசத்தின், அடைவினை - தன்மையினை, செவியில் கேட்ட - காதில் கேட்ட (செவி

மடுத்த), அக் கணமே - அந்த க்ஷணமே, அவற்றினை - அந்த இல்லற விடய வின்பத்தினை, அகற்றிட - நீக்கும்படி யாக, வரு மேல் - (வைராக்கியம்) உண்டாகு மாயின், முதல் - ஆதியும், இடை - மத்தியும், ஈறு - அந்தமும், இல் - இல்லாத, ஞான ஆநந்தம் - சிதாநந்த ரூபப் பிரஹ்மத்தினை, எய்தினோர்களும் - அடைந்த பெரியோர்களும், பினும் - பின்னரும், இந்த - (பிரத்தியக்ஷமா யிருக்கின்ற) இவ் வித, கடை - தாழ் வான, மனை வாழ்வை - இல்லற (சுக) வாழ்க்கையை, நினைவர்கள் - விரும்புவார்கள், என்றால் - என (ஒருவன்) கூறினால், கண்டனர் - பார்ப்பவர்கள், நகையரோ - சிரிக்கமாட்டார்களோ? (சிரிப்பார்க ளென்பது கருத்தாம்), சொல்லாய் - (மந்திரி நீ இதற்குப் பதில்) கூறுவாயாக, (எ-று).

(பஞ்சதசி 4 துவித விவேகம் 28-வது கவி),

“ஞாநம் பெறுமுன் மநத்தீங்கா னலிவு பூண்டாய் பின்பிது நாள், ஆன வகில சுநநிந்தை யமைந்தா யகோநின் மதியகிமை, என முதலுக் கொப்பாத லெழிலார் மதிபோய் நீவேண்டேல், மான தத்தீங் கொழிந்துலகால் வணங்கப் பெறுதி தேவனென.” என்று, இங்குக் கூறியது போலவே, பஞ்ச தசியில், சகல சநங்களும் நிந்திப்பார்கள் எனக் கூறி யிருப்பதனை மேற்கோளாகக் கொள்ளல் வேண்டும்.

தத்வ ரத்நாகரம்:- “வாக்கொடு மநமு மிறந்ததி மதுர வாரியா யொழிவற நிறைந்து, போக்கொடு வரவு தின்றிய வமுதைப் பூரண மாகவுண் டவர்தாம், வீக்கிய கானல் நீரெனும் விடய் மேவுற முயல்வரோ முயலின், நோக்குறு மந்த ஞாநியு நாயு மொத்திடும் வாசியொன் றிலதே.” என்று ஞாநிக்கும், நாய்க்கும், சமத்துவம் வரும் எனக் கூறி யிருப்பதனையும் உணர வேண்டும்.

நகையுளோர் - எய்தினோர்கள் - வினையால் அணையும் பெயர் கள். இன்பதனில் - விரிவதாம் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். உளோர்தமக்கு - தம் - அ - இரண்டும் சாரி யைகள். உம் - இழிவு சிறப்பு. அக் கணமே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். ஈறில் - இல் - இல்லாத என்னும் பெய ரெச்சத் தின் விகாரம். எய்தினோர்களும் - கண்டனர் - இவை வினையா லணையும் பெயர்கள். களும் - பினும் - உம் - இரண்டும் இறந்தது தழீஇயன. கடை - கடைய என்னும் குறிப்புப் பெய ரெச்சத்தின் விகாரம். கண்டனர் - எழுவாய். நகையரோ - பய னிலை. நீ - தோன்று எழுவாய். சொல்லாய் - பய னிலை. இதனை - செயப்படு பொருள். **(102)**

ஊழ் வினையால் ஞாநிகள் பற் றின்றி இல் லறத்தி லிருப் பர் என மந்திரி கூற, ஆசையை உண்டாக்கி அல்லவா விஷயத்தை அநுபவிக்கச் செய்யும், ஞாநிகள் அற்ப விஷயா நந்தத்தில் விருப்பம் வையார்கள், பிரஹ்மாநந்தத்திலே இருப் பார்கள், சமாதியை விட்டு உத்திதர் ஆயின், கானல் ஜலம் போல, விஷயத்தைத் துச்ச மாகக் கருதி, மீண்டும் பிரஹ்மா நந்த சமாதியில் இருப்பர் என்று மஹா ராஜன் கூறினன் எனக் கூறல்.

பற்றிலே யாயி னவையினி லிருப்பேன் பழையவூழ் வினையெனி லாசை, சற்றெனு முதிப்பித் தல்லவோ வூட்டுஞ் சகவின்பி விறையெனு மிச்சை, முற்றுணர் ஞாநத் தோர்கள்பூண் பர்களோ முடிவிலா நந்தமே பருகி, நிற்றலே மீட்டும் விழிப்பினுங் கான னீரிற்கண் டுண்முக மடைவார். (103)

(இ—ள்) பற்று - (தத்துவ ஞாநிகட்கு அநாத்ம சமுசாரங்களில்) ஆசை, இலையாயின் - இல்லாதிருக்குமாயின், அவையினில் - (அப்பற் றற்றவர்) அந்தச் சமுசாரங்களில், இருப்பு என் - இருத்தல் எதற்காக? (இருத்தல் கூடா தென்ப தாம்), பழைய - பூர்வம் செய்த, ஊழ் வினை - பிராரப்த கர்ம வசத்தினுல், எனில் - (சமுசாரத்தில்) இருக்கை நேர்ந்த தெனின், ஆசை - (அப் பிராரப்த கர்ம மானது விஷயத்தில்) விருப்பத்தை, சற்று எனும் - கொஞ்சமேனும், உதிப்பித்து - உண்டு பண்ணி, அல்லவோ - அன்ருே, ஊட்டும் - (விஷயங்களை) அநுபவிக்கச் செய்யும், முற் றுணர் - (பிரத்திய கபிந்ந) பூரணப் பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்த, ஞாநத்தோர்கள் - (தத்துவ) ஞாநிகள், சக இன்பில் - உலக (விஷய) சுகத்தில், இறை யெனும் - கொஞ்ச மேனும், இச்சை - ஆசையை, பூண்பர்களோ - அடைவார்களா? (அடைய மாட்டார்கள் என்பதாம்), [விஷயத்தின்கண் ஆசை வையாமல் பின்னர் யாது செய்வார்கள் என்னும் மந்திரி கேள்விக்கு, மஹா ராஜன் மறுமொழி மலர்கின்றார்.] முடிவு இல் - பரிச்சிந்நம் இன்றிய, ஆநந்தமே - பிரஹ்மாநந்தத்தையே, பருகி - (ஞாநிகள் நிருவிகல்ப சமாதியில்) அநுபவித்துக் கொண்டு, நிற்றலே (அன்றி) - இருப்பார்களே அல்லாமல், மீட்டும் விழிப்பினும் - (சமாதியை விட்டுத்) திரும்பவும் (ஒருகால் அவர்கள்) பஹிர் முகத்தை அடையினும், கானல் நீரில் - (விஷயங்களையும், அவற்றின் சுகங்களையும்) கானல் ஜலத்தைப் போல் (பொய்யாக), கண்டு - உணர்ந்து (வெறுத்து), உள் முகம் - அந்தர் முக திருஷ்டியை, அடைவார் - பொருந்துவார்கள், (எ-று).

(வைராக்ய தீபம்),

"பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்னைப் பிறர்வழக் கினிற்கொடு போகக், கண்ணைவிட் டகலா தவள்வரல் போலுங் கண்டுகொண் டேகியாங் கஃதெவ், வண்ணமா யினுஞ்சீக் கிரத்தினின் முடித்தவ் வநிதைபான் மறிதரன் மானப், பண்ணிய சமாதி

விடுத்தறி ஞருந்தம் பசிதணித் ததையுறும் பரிசே." (83) என்று ஞானி உத்தித ஞங் கால் விஷயம் தோன்ருது என்று கூறி யிருப் பதைக் கூர்ந்து நோக்குக.

சற்றெனும் - இறையெனும் - எனும் - ஏனும் என்பதன் குறுக்கல் விகாரம். உம் - இரண்டும் இழிவு சிறப்பு. அல்லவோ - ஒருமையிற் பன்மை மயக்கம். ஓ - வினுப் பொருளது. ஞானத் தோர்கள் - குறிப்பு வினையா லணையும் பெயர். பூண்பர்களோ - ஓ - எதிர் மறை. முடிவில் - இல் - இல்லாத என்னும் குறிப்புப் பெய ரெச்சத்தின் விகாரம். நிற்றலே - (அன்றி) - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். அன்றி - என்பது அவாய் நிலையால் பெறப்பட்டது. மீட்டும் - மீண்டும் என்பதன் விகாரம். விழிப்பினும் - உம் - எதிர் மறை. நீரில் - இல் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. இருப்பு - எழுவாய். ஏன் - பய னிலை. அப் பிராரப்தம் - தோன்ரு எழுவாய். ஊட்டும் - பய னிலை. ஞானத்தோர்கள் - எழுவாய். பூண்பர்களோ - பய னிலை. இச்சை - செயப்படு பொருள். அவர்கள் - தோன்ரு எழுவாய். அடைவார் - பய னிலை. உண் முகம் - செயப்படு பொருள். (103)

சம்சாரத்தினைச் சுகம் எனக் கருதி யிருந்தவர்களே, சம்சாரம் சுகம் அன்று என்று கருதி, விஷய ஆசையை விட்டு, ஆசாரியரைச் சரணுகதியாக அடைந்து அவர தநுக்கிரகத் தினுல் சம்சாரத்தினைப் போக்கும் மார்க்கம் உணர்ந்து, பிரஹ்மாநந்தத்தை அடைந்திருப்பாராயின், அவர்கட்கு மீண் டும் சம்சாரம் சுகம் எனத் தோன்றின், விஷய சுகத்தை விரும்புவார்கள், சுகம் எனத் தோன்ருமையின், விஷய சுகத் தை விரும்பார் எனக் கூறல்.

பவமதை யினிமை யெனவெணி விடயம் பற்றிநின்
றுழன்றவர் தாமே, பவமதை யினிமை யலவெணி
விடயப் பற்றறுத் தருட்குரு வடைந்து, பவமதை யறுக்கு
நெறியுணர்ந் தருளிற் பரவின்ப மடைந்தவர் தாமும்,
பவமதை யினிமை யெனவெணி னலவோ பற்றுவர்
விடயவின் புரையாய். (104)

(இ—ள்) பவமதை - (முன்னர்ச்) சமுசாரத்தை, இனிமை - சுக சொரூபம், என - என்று, எணி - கருதி, விடயம் - விஷயத்தை, பற்றி - பொருந்தி, நின்று - இருந்து, உழன்றவர் தாமே - (ஆசை அஞ்ஞாநங்களோடு கூடிச்) சுழன்றவர்களே, பவமதை - (பின்னர்ச்) சமுசாரத்தை, இனிமை - சுக சொரூபம், அல - அன்று, எணி - எனக் கருதி, விடய - விஷயத்திலுள்ள, பற்று - ஆசையை, அறுத்து - நீக்கி, அருள் குரு - ஞாநாசாரியரை, அடைந்து - (சரணகதியாக) அடைந்து, அருளின் - (அவரது) அநுக்கிரகத்தினல், பவமதை - சமுசாரத்தை, அறுக்கும் - நிவிர்த்திக்கின்ற, நெறி - மார்க்கத்தினை, உணர்ந்து - அறிந்து, பர இன்பம் - பிரஹ்மாநந்தத்தினை, அடைந்தவர் - அடைந்தவர் ஆவர், பவமதை - (ஆதலால் மீண்டும் அவர்கள்) சமுசாரத்தை, இனிமை - சுக சொரூபம், என - என்று, எணின் - கருதினல், அலவோ, அல்லவா, விடய - விஷய, இன்பு - சுகத்தை, பற்றுவர் - பொருந்துவார்கள் (பொருந்தமாட்டார்கள் என்பது கருத்தாம்), உரையாய் - (மந்திரி நீ இதற்குப் பதில்) கூறுவாயாக, (எ-று).

**பவமதை** - நான்கிலுருள்ள - அது - பகுதிப் பொருள் விகுதி. **எணி** - எண்ணி என்னும் வினையெச்சத்தின் இடைக் குறை. உழன்றவர் தாமே - தாம் - அசை நிலை. ஏ - தேற்றம். அல - அல்ல என்னும் வினையெச்சத்தின் இடைக் குறை. அல -

ஈண்டு ஒருமையிற் பன்மை மயக்கம். அடைந்தவர் தாமும் - தாம் - உம் - இரண்டும் அசை நிலைகள். அடைந்தவர் - வினையா லணையும் பெயர். அலவோ - ஓ - எதிர் மறை. உழன்றவர் - எழுவாய். அடைந்தவ ராவர் - பய னிலை. (ஆவர் - அவாய் நிலையாற் பெறப் பட்டது.) (104)

காரண மாகிய வேரை அறுத்த பின், காரிய மாகிய செடி, கொடி, பூ, காய், பழம் உண்டாக்குகின்றது என்பது உலகில் ஆச்சரியம் ஆம். அது போல, பிரஹ்ம ரூப மான ஞாநிக ளின் பற் றற்ற மநம் விஷய சுகத்தை விரும்பிச் செல்லும் என்று கூறுதலும் ஆச்சரிய மாம் எனக் கூறல்.

கொடிமுதல் வாடும் வேர்முழு தினையுங் கோதறக் களைந்திடிற் களைந்தும், படிமிசை கொடிபூ காய்பழ மோங்கல் பகரதி சயமஃ தினைப்போல், அடிநடு வீறில் பிரமந்தா ஞகி யகப்பற்றை யறுத்தவ ரிடத்தும், மடிவுறு மனையில் விரும்பியே நெஞ்சம் வருத்தந மாதலென் றறைவார். (105)

(இ—ள்) படிமிசை - பூமியின்கண், வேர் முழுதினையும் - (ஒரு புஷ்பச் செடியின்) எல்லா வேர்களையும், கோது அற - குற்றம் இன்றி (நன்றாய்), களைந்திடின் - பறித்துவிடுவோமாயின், கொடி - லதை, முதல் - (இலை, காய், பழம்) முதலியவை, வாடும் - வாடிப் போம், களைந்தும் - (அவ் வாறு) பறித்த பின்ன ரும் (முன் போல), கொடி - கொடியும், பூ - (அதி லுள்ள) புஷ்ப மும், காய் - காயும், பழம் - பழமும், ஓங்கல் - விருத்தி அடைதல், பகர் - (யாவரும் விதந்து) கூறும்படி யான, அதிசயம் - ஆச்சரிய மாம், அஃதினைப் போல் - அது போல, அடி - முதலும், நடு - மத்தியும், ஈறு - முடிவும், இல் - இல்லாத, பிரமம் - பிரஹ்மம்,

தான் - தன் ஆத்ம ரூபம், ஆகி - (என அறிந்தவா) ஆய், அக - (தேகத்தி லுள்ள) நான் (என்னும்), பற்றை - அபிமானத்தை, அறுத்தவர் இடத்து - விட்டவர்கள்பா லுள்ள, நெஞ்சம் உம் - மனமும், மடிவு - குற்றம், உறு - பொருந்தி யிருக்கின்ற, மனையில் - கிரகத்தின்கண், விரும்பி - ஆசை வைத்து, வருத்தநம் ஆதல் - (கிரகத்தைக் குறித்து) விருத்தி யாகுதல், என்று - (ஆச்சரிய மாம்) என, அறைவார் - (பெரியோர்கள்) கூறுவார்கள், (எ-று).

முதல் - முதலான என்பதன் விகாரம். முழுதினையும் - உம் - முற்று. களைந்தும் - உம் - இறந்தது தழீஇயது. கொடி, பூ, காய், பழம் - இவற்றி னிறுதிகளில் எண் ணும்மைகள் தொக்கன. அஃதினைப் போல் - இன் - ஐ - இரண்டும் சாரியைகள். ஈறில் - இல்லாத என்னும் பெய ரெச்சத்தின் விகாரம். அறுத்தவர் - வினையா லணையும் பெயர். இடத்தும் - உம் - நெஞ்சம் என்பத னோடு பிரித்துக் கூட்டப்பட்டது. அது ஈண்டு இறந்தது தழீஇயது, அல்லது உயர்வு சிறப் பாம். விரும்பியே - ஏ - அசை நிலை. கொடி முதல் - எழுவாய். வாடும் - பய னிலை. ஓங்கல் - எழுவாய். அதிசயம் - பய னிலை. பெரியோர் - தோன்றா எழுவாய். அறைவர் - பய னிலை. வருத்தநமாதல் - செயப்படு பொருள். இதில் உவமை யணி யுளது. (105)

அஞ்ஞாநத்தினை உடையவ னாய், தேகாத்ம புத்தியோடு கூடி குய்ய அரிப்பையும், உதர அக்கிநியின் அழற்சியினையும், அவற்றிற் கேற்ற சாதநங் கொண்டு தணிப்பதையே ஆநந்தம் என்று கருதிய ஒருவன், பிரஹ்மாநந்தத்தில் விருப்பம் வைக்கவே, அவனுக்கு அஞ்ஞாநம் இல்லை யாம். அது போல, பிரஹ்ம ஞாநி யாய், பிரஹ்மாநந்தத்தில் மூழ்கி யிருப்பவருக்கு விஷய விருப்பம் உண்டாயின், பிரஹ்ம ஞாநமே இல்லை யாம் எனக் கூறல்.

ஆணவ மதனைத் தோய்ந்துட லினைநா னுமெனத் தினவெரி வவையைப், பேணலைச் சுகமென் றுண்மகிழ்ந் திடுவோன் பேரின்பத் தாசைய தாகிப், பூண்வஞ் ஞாந மிலையதின் ஞாநம் பொருந்தியச் சொருபந்தா னுகி, ஏணவா நந்தத் தழுந்துவோன் விடய மெய்திடின் ஞாநமே யிலையால். (106)

(இ—ள்) ஆணவமதனை - அஞ்ஞாநத்தினை, தோய்ந்து - பொருந்தி, உடலினை - தேகத்தினை, நான் ஆம் - தன் சொரூப மாம், என - என்று நிச்சயித்து, தினவு - (அந்தத் தேகாத்மா புத்தியினுல் குய்ய) அரிப்பு, எரிவு - (உதர) அக்கினியின் அழற்சி, அவையை - (ஆகிய) அவ் இரண்டினையும், பேணலை - (அவற்றிற் கேற்ற சாதநங் கொண்டு) விருப்பத்தோடு (சாந்தி செய்தலை), சுகம் - ஆநந்தம், என்று - என, உள் - மநத்தின்கண், மகிழ்ந்திடு வோன் - சந்தோஷத்தை அடைகின்ற ஒருவன், பேர் இன்பத்து - பிரஹ்மாநந்தத்தின்கண், ஆசையது ஆகி - விருப் புடையவ னய், பூண - (அதற் கேற்ற சாதந மாய தத்துவ ஞாநத்தைப்) பொருந்த, அஞ்ஞாநம் - (அதன் விரோதி யாகிய) அஞ்ஞாநம், இலை - (அவனுக்கு) இன்றும், அதின் - அது போல, ஞாநம் - (பிரம்மாநம) ஞாநத்தை, பொருந்தி - அடைந்து, அச் சொரூபம் - அந்த பிரம்ம சொரூபமே, தான் ஆகி - தனது சொரூப மாகி, ஏண ஆநந்தத்து - நிலைபெற்ற பூரணுநந்தத்தில், அழுந்துவோன் - மூழ்கி யிருக்கின்ற புருடன், விடயம் - (அதற்கு மாறுன நிலையற்ற) விஷய (சுகத்தினை), எய்திடில் - (விரும்பி) அடையில், ஞாநமே இலை - (அதற்கு மாறுன பிரம்ம) ஞாநம் என்பதே இல்லையாம், (எ-று).

ஆணவமது - ஆசையது - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். மகிழ்ந்திடுவோன் - அழுந்துவோன் - இவை வினையா லணையும் பெயர்கள். இரு - பகுதிப் பொருள் விகுதி. அதின் -

இல் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. ஞானமே - ஏ - தேற்றம். இலையால் - ஆல் - அசை நிலை. அஞ்ஞானம் - எழுவாய். இலை - பய னிலை. ஞானம் - எழுவாய். இலை - பய னிலை. இதில் உவமை யணி யுளது. (106)

சாக்கிர அவஸ்தையில், சொப்பநமும், சொப்பநப் பொருள்களும், பொய் என்று உணர்ந்தவருக்கு, அந்தச் சொப்பநத்திலும், சொப்பநப் பொருளிலும் ஆசை யில்லையோ, அது போல, தன் னுடைய யதார்த்த சொரூபத்தை உணர்ந்து, இந்தப் பிரபஞ்சம் எல்லாம் இந்திர ஜாலம் போற் பொய் என்று உணர்ந்தவருக்கு, உலகத்தில் உள்ள மித்தியா சுகத் தில் மோகம் நீங்கும் எனக் கூறல்.

*கனவதனி லுணர்விலது காணுந்தநு வாதிகளைக் கருதி யேநின், றுனுமவரி னிதுகனவென் றுணர்ந்தவர்க ணசையிலதி னுலகு தன்னில், தனதுசுய வுருவதனை யநுபவத்திற் குறுணர்ந்திச் சகம தெல்லாம், மநமத னிற் சாலமென உணர்ந்தவரிவ் வுலகின்பின் மையலை னீங்கும்.* (107)

(இ—ள்) உணர்வில் நின்று - (தெளி வஸ்தை யாகிய) சாக்கி ரத்தில் எழுந்திருந்து, அது - அச் சொப்பன சாக்ஷி, கனவதனில் - சொப்பநாவஸ்தையில், காணும் - பார்க்கின்ற, தநு ஆதிகளை - சரீர முதலியவற்றை, கருதி - அநுமாநித்து, உனுமவரின் - நினைக் கின்றவர்களுள், இது - இவ், ஸ்மிருதிக் கேது வான அநுபவ விடயம், கனவு - மயக்கம் (தோஷ ஜந்நிய மாகலின், சுத்தி ரஜதம் போல்), என்று - என, உணர்ந்தவர்கள் - (சந்தேக விபரீத மின்றித் திட மாய்) அறிந்தவர்களுக்கு, அதின் நசை - (அச் சொப்

பன விடயத்தில்) ஆசை, இல் - இருப்ப தில்லை (அது போல), உலகு தன்னில் - உலகத்தில், தனது - தன் னுடைய, சுய உருவ தனை - எதார்த்த சொரூபத்தினை, அநுபவத்தின்-(ஐயந் திரி வின்றிய திட) அநுபவத்தினால், உணர்ந்து - சாக்ஷாத்கரித்து, மநமதனில் - அந்தக் கரணத்தில் (தோன்றாநின்ற), இச் சகமது எல்லாம் - இப் பிரபஞ்ச முழுமையும், சாலம் - (இந்திர) சாலம், என - என்று, உணர்ந்தவர் - (ஐயந் திரி வின்றித் திட மாய்) அறிந்தவர்களுக்கு, இவ் வுலகு - இந்த லோகத்தில் உள்ள, இன்பில் - மித்தையா சுகத்தில் (உண்டாகின்ற), மையல் - மோகம், நீங்கும் - நிவிர்த்தி யாகும், (எ-று).

(அத்வைத உண்மை).

"கநவைக் கநவென் றுணர்ந்தவனைக் கநவி னீயா ரென வொருவன், வினவி லவனு நநவதனில் விளங்குந் தனையே யுரைப் பனதில், நநவை நினைவென் றுணர்ந்தவனை நநவி னீயா ரென வொருவன், வினவி லவனு மகண்டமதாய் விளங்கும் பிரம மே யென்பன்." (14) என்றும்,

(கைவல்ய நவநீதம்) "காண்ப வெல்லாஞ் சொற்பநம் போலு மென்றே துணிந்தவன் ஞாநியாவன்." (கவி 1—38) என்றும்,

(கைவல்ய நவநீதம்) "மநத்தினு லெண்ணித் தானே வந்த திவ் வுலக மாகும்" (கவி 2—167) என்றும், கூறி யிருப்பவை உணரத்தக்கன.

கனவதனில் - உருவதனை - சகமது - மனமதனில் - அது - நான்கும் பகுதிப் பொருள் விகுதிகள். கருதியே - ஏ - அசை நிலை. உனுமவரினிது - ஏழாம் வேற்றுமைத் தொகை. இன் - சாரியை. உணர்ந்தவர்க ளசை - நான்காம் வேற்றுமைத் தொகை. இல் - இல்லை என்னும் குறிப்பு முற்றின் விகாரம். உலகுதன்னில் -

தன் - சாரியை. அநுபவத்தில் தான் - தான் - அசை நிலை. உணர்ந்தவ ரிவ் வுலகு - நான்காம் வேற்றுமைத் தொகை. நசை - எழுவாய். இல் - பய னிலை. மையல் - எழுவாய். நீங்கும் - பய னிலை. இதில் உவமை யணி யுளது. (107)

சூரிய சந்நிதாநத்தில் இருள் இருக்கின்றது, மலர்ந்த கண் ணுடையவன் படு குழியில் வீழ்கின்றான், சூர புருஷன் யுத்த களத்துக்குப் போகப் பயப்படுகின்றான், நெய் தேன் சர்க்கரையோடு இனிமை யான பாயசத்தை உண்டவன் கூழை இச்சிப்பன், என்று கூறுவது, இந் நால் வகைக்கும் இழுக்காம். அது போல, பிரஹ்ம ஞாநி, விஷயாநந்தத்தை விரும்பினால், பிரஹ்ம ஞாநத்திற்கு குற்ற மாம் எனக் கூறல்.

கதிரவன்முன் னிருளிருக்கு நயநமுடை யொருவன்
குழிக் கண்ணே வீழும், அதிகவலிச் சூரனமர்க் களக்கு
வெரு வுவன்கிருத நறையக் காரம், இதமுளபா யசமு
நிரம் பருந்தினன்கூழ் தனிற்செய்வ னிச்சை யென்றால்,
விதமிவைநான் கினுக்குங்குறை யதின்ஞாநிக் கிழுக்
காகும் விடயஞ் சென்றால். (108)

(இ—ள்) கதிரவன் - சூரியனது, முன் - எதிரில், இருள் - அந்தகாரம், இருக்கும் - இருக்கின்றது, நயநம் - நேத்திரங்களை, உடை - உடைய, ஒருவன் - ஒரு புருடன், குழிக்கண் - குழியில், வீழும் - விழுகின்றனன், அதிக - மிகுந்த, வலி - சாமார்த்தியத் தினை உடைய, சூரன் - வீர புருஷன், அமர் - யுத்தம் செய்கின்ற, களக்கு - இடத்திற்குச் (செல்லுதற்கு), வெருவுவன் - பயப்படு கின்றான், கிருதம் - நெய், நறை - தேன், அக்காரம் - சர்க்கரை என்பவற்றோடு, இதம் உள - (விரும்பத் தகுந்த) இனிமையா

யுள்ள, பாயசமும் - பாயசத்தையும், நிரம்ப - (வயிறு) நிறைய, அருந்தினன் - புஜித்த புருஷன், கூழ்தனில் - கூழில், இச்சை செய்வன் - ஆசை வைக்கின்றான், என்றால் - என ஒருவன் கூறுவானாகில், இவை விதம் நான்கினுக்கும் - இந்த நான்கு வகைக்கும், குறை - குற்ற (முண்டு), அதின் - அதைப் போல, ஞாநி - (பிரம்ம) ஞாநி, விடயம் - விஷயத்தில், சென்றால் - செல்லுவான் என்று சொல்லில், இழுக்கு ஆகும் - (அவன் ஞாநத்திற்குத்) தோஷ முண்டாம், (எ-று).

உடை யொருவன் - உடை - ஈறு குறைந்த உடைய என்னும் பெய ரெச்சம். கண்ணே - ஏ - அசை நிலை. இருக்கும், வீழும், வெருவுவன், செய்வன் ஆகிய முற்றுக்களில் நிகழ் காலத்திற்கு எதிர் காலம் வந்தமை கால வழு வமைதி. களக்கு - களத்துக்கு என்பதன் விகாரம். பாயசமும் - உம் - இறந்தது தழீஇயது. நிரம்ப + அருந்தினன் = நிரம்பருந்தினன் என்புழி, நிரம்ப என்பதன் அகர வீறு தொக்குகது. கூழ்தனில் - தன் - சாரியை. என்றால் + என்னும் சொல் லெச்சம், என்று கூறினல் எனக் கூற்று என்னும் தன் னெச்சங் கொண்டது. நான்கினுக்கும் - உம் - முற்று. அதின் - இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. ஞாநிக்கு - கு சாரியை. குறை - எழுவாய். உண்டு - பய னிலை. (அவாய் நிலையாற் பெற்றது). இழுக்கு - எழுவாய். ஆகும் - பய னிலை. இதில் உவமை யணி யுளது. (108)

"பெருங் காயம் இருந்து நீங்கிய பாண்டத்தைப் போல" என்று கூறுவதன் பொருள், தூல மநம் போய் சூக்ஷ்ம மநம் இருக்கும், அந்தச் சூக்ஷ்ம சுத்த மநத்தால் இன்றியமையாத தொழிலைச் செய்து கொள்ளுவதற்காம். "அக்நி ஸ்தம்பநம் பண்ணியவனுக்கு அக்நி சுடாது போல, என்று கூறுவதன்

பொருள், பந்த மாக இருக்கும் ஆகாமிய வினைகட்குக் காரண மாய விஷய சுகத்தில் இச்சை யத்நம் முதலியன பொருந்தா எனக் கூறுதலையாம். எனக் கூறல்.

*இங்குறைந்த பாண்டமதின் வாதனையில் வாதனைக ளிருக்கு மென்றல், துங்கவறி வுடையோர்கட் கின்றி யமை யாததொழிற் றொடங்கி நிற்றல், அங்கியைத்தம் பநம்வல்லார்க் கனல்சுடா ததின்வினைக ளடுக்கா தென் றல், தங்கும்வினைக் கேதுவாம் விடயமதில் விருப்பாதி சாரா தென்றல்.* (109)

(இ—ள்) இங்கு - பெருங் காயம், உறைந்த - இருந்த, பாண்டமதின் - பாத்திரத்தில் (தூலப் பெருங் காயம் போயும் அதன் வாசனை இருப்பது) போல, துங்க - பரிசுத்த மான, அறிவுடையோர்கட்கு - ஞாநிக ளிடத்தில், வாதனை - (பந்த ஹேது வான ஸ்தூல பிரபஞ்ச) வாசனைகள், இல் - இல்லை (ஆயினும்), வாதனைகள் - (சூக்ஷ்ம மான) வாசனைகள், இருக்கும் - உண்டு, என்றல் - எனச் சாஸ்திரங்கள் கூறுவது, இன்றியமையாத - (ஞாநியின் தேக நிலைப்புக்கு) விடக்கூடாத, தொழில் - (நித்திரை, சௌசம், பிக்ஷை முதலிய) பந்த ரகித கிருத்தியங்களை, தொடங்கி நிற்றல் - செய்து கொண்டு இருத்தற் குரிய வாசனைகளை யாம் (இவை யன்றி அதிகப் பிரவிர்த்திக் குரியனவற்றை யன்றாம்), [அக்கிநி ஸ்தம்பநம் பண்ணக் கூடிய புருஷன் தம்பிக்கப்பட்ட அக்கிநி மீது இருக்கினும், அவ் வக்கிநி அவனைச் சுடாதது போல, பிரபஞ்சம் பொய் யென அறிந்த ஞாநி, பந்தத்திற் குரிய செயல்க ளோடு கூடி யிருக்கினும், அவனுக்கு அவை பந்தம் செய்யா வேனின், அது பொருந்தாது; ஜந்ம ஏது வாகலின் என்று சமா தாநங் கூறுகின்றார்.] அங்கியை - நெருப்பை, தம்பநம் - கட்டுதற்கு,

வல்லார்க்கு - சாமர்த்திய முடைய புருஷர்களை, அனல் - (அக் கட்டுப்பட்ட) வக்கிநியானது, சுடாது - தகிக்கமாட்டாது, அதின் - அதுபோல, வினைகள் - (ஞாநியைக்) கருமங்கள், அடுக்காது - (வந்து) பொருந்தா, என்றல் - எனச் சாத்திரங் கூறுதல், தங்கும் வினைக்கு - பந்த மாக இருக்கும் வினைகட்கு, ஏது ஆம் - காரண மாய, விடய மதில் - விஷய சுகத்தில், விருப்பு ஆதி - இச்சை யாதிகள், சாராது - பொருந்தா, என்றல் - எனக் கூறுதலையாம், (பின்னர் எப் பந்த ஹேது வான காரியங்களைச் செய்யினும் அவனை அவை பந்தப்படுத்தா என்பதன்று), (எ-று).

(வாசிட்டம் 5 உபசாந்திப் பிரகரணம், ஆகாச கமநாதி அபாவ நிரூபணத்தில்,) "சீவன் முத்தி தனிலுருவ நாசஞ் சித்தந் தனக்குள தாம், தாவி லுடறீர் முத்திதனிற் சாற்று மருவ நாசமுறும், மேவு சித்த முண்டாகி விடரா மிறக்கின் மிகுமின்பம், பாவி யுள்ள மெழாதபடி பண்ணி யதைநா சம்பயில்வாய்." (9) என்று, சீவன் முத்தியில் உருவ மந நாசம் என்றும், விதேக முத்தியில் அருவ மந நாசம் என்றும் கூறி யிருப்பதை உணர்க.

பாண்டமதின் - ஏழாம் வேற்றுமைத் தொகை. அது - பகுதிப் பொருள் விகுதி. இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. வாதனையில் - இல் - இல்லை என்பதன் விகாரம். உடையோர் கட்கு - என்புழி, உடையோர் என்னும் குறிப்பு வினையா லணையும் பெயர் கோடற் பொரு ளாகாது இடப் பொருளாய் நிற்றலால், குவ் வுருபைக் கண் ணுருபாகத் திரிந்து கொள்க. நிற்றற் குரிய வாசனை யை, நிற்றல் என உபசரித்தார். வல்லார்க்கு - வல்லார் - என்னும் குறிப்பு வினையா லணையும் பெயர் ஈண்டுக் கோடற் பொருளா காது செயப்படு பொருளாய் நிற்றலின், குவ் வுருபை ஐ உருபாகத் திரித்துக் கொள்க. அதின் - இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபு. அடுக்காது - சாராது - என்பன பன்மையில் ஒருமை மயக்கம். என்றல் - எழுவாய். ஆம் - பய னிலை (அவாய் நிலையாற் பெறப்பட்டது). இதில் உவமை யணி யுண்டு. (109)

ஞானி யாது செய்யினும் குற்ற மில்லை. ஒருவன், ஞானியை இழித்துக் கூறின், அவனை "மகா பாபி" என்று, யூகம் இல்லாமையினால் கூறுகின்றார்கள். "ஞானி யாது செய்யினும் குற்றம் இல்லை" என்று கூறுபவனே பாவி யாவன், ஞானத்திற்குத் தாழ்வு வருகிறபடியால். ஞானத்தை ஒருவன் அடைந்திருந்தால், அவனுக்கு ஞானி என்னும் பெயரும் பொருந்தும், ஞானத்தை அடையாத போது ஞானி என்னும் பெயரும் இன்று எனக் கூறல்.

*உணர்வுடைய ஞானியெவை புரிந்திடினு மிழிவிலிழி வுரைத்த தாயின், இணையிலிரு தீயனெனென்பர் யூகமில வதனுன்மற் றெவைகள் செய்தும், அணைவதிருழ் வெனு மவனே தீயன்மிக ஞானமதற் காகுந் தாழ்வா, னணுகி னன்றே ஞானமொரு வனைஞானி யெனப்பெயரு நண்ணி நிற்றல்.* (110)

(இ—ள்) யூகம் - விவேகம், இல அதனால் - இல்லாததினால், உணர்வு - (ஜீவப் பிரஹ்மங்களின் அபேத) உணர்வினை, உடைய - பொருந்திய, ஞானி - (தத்துவ) ஞானி, எவை புரிந்திடினும் - எவ்வித (கெட்ட) கிருத்தியங்கள் செய்யினும், இழிவு - (அவனுக்குத்) தாழ்வு, இல் - இல்லை, இழிவு - (அவனுக்குத்) தாழ்வை, உரைத்தது ஆயின் - (ஒருவன்) கூறினமை உளதாயின் (அவனே), இணையில் - (அவனைச் சிலர்) உவமை கூறுவதற்கு இல்லாத, இரு - பெரிய, தீயன் - பாவி, என்பர் - எனச் சிலர் கூறுவர் (இங்ஙனங் கூறுவதால்), ஞானமதற்கு - ஞானத்திற்கு, ஆகும் தாழ்வால் - தாழ்வு ஏற்படுமாதலின், எவைகள் செய்தும் - (ஞானி) எவ் வகைக் கெட்ட தொழில்கள் செய்யினும், தாழ்வு - இழிவு, அணைவது - (அவனை வந்து) பொருந்துவது, இல் - இல்லை,

எனுமவனே - என்று கூறுகின்றவனே, மிக - அதிக, தீயன் - கொடிய னுவன், [ஞாந மில்லாவிடின் ஞாநி என்னும் பெயரும் இல்லை என்கின்றார்.] ஒருவனை - ஒரு புருஷனை, ஞாநம் - (தத்துவ) ஞாநம், நணுகின் - பொருந்திஞல், அன்றே - அல்லவா (அவனுக்கு), ஞாநி - ஞாநி, என - என்பதாக, பெயரும் - நாமமும், நண்ணி - பொருந்தி, நிற்றல் - இருத்தல் தகும் (ஞாநம் இல்லாமையின் ஒருவனுக்கு ஞாநி யென்னும் பெயரும் பொருந்தி இருத்தல் தகாது), (எ-று).

புரிந்திடினும் - உம் - எதிர் மறைப் பொருளது. இல் - இல்லை என்பதன் விகாரம். உரைத்தது - உரைத்தற் றெழிலைக் குறித்து நின்றது. மற்று - அசை நிலை. செய்தும் - உம் - எதிர் மறை. அவனே - ஏ - தேற்றமும் பிரிநிலையு மாம். ஞாநமதற்கு - அது - பகுதிப் பொருள் விகுதி. நணுகினன்றே - ஓ - விஞ. பெயரும் - உம் - இறந்தது தழீஇயது. சிலர் - தோன்று எழுவாய். கூறுவர் - பய னிலை. அவனை - செயப்படு பொருள் (அவாய் நிலையாற் பெறப்பட்டது). அவனே - எழுவாய். தீயன் - பய னிலை. நிற்றல் - எழுவாய். தகும் - பய னிலை (அவாய் நிலையால் வந்தது). (110)

பெண்களின் அவயவங்களைக் குறிப்பாகப் பார்த்தால், இவள் கரு வயிற்றை உடையவள், இவள் மகோதர வியாதி யால், பெருத்த வயி றுடையவள் என்பது தோன்றுவது போல, ஞாநி என்பதும், டம்ப ஞாநி என்பதும், அவ ரவர் பால் உள்ள சில சிறப்பு இயல்புகளால், இவர் குருவை அடைந்து அவ ரருளால் ஞாநம் அடைந்து ஞாநி யானவர் என்பதும், இவர் குருவை அடைந்து, அவர் கிருபை பெறுது, பிறர்க் காக ஞாநி யாக நடிப்பவர் என்பதும், தோன்றும் எனக் கூறல்.

கருவயிற்றை யுடையதுவுங் கனவயிற்றை யுடையது
வுங் கருதிப் பெண்ணின், உருவதனைக் குறிப்பதினேக்
கிடிற்றேன்று முளபடியே யுலகு தன்னில், குருவை
யடைந் தவனருளிற் சொரூபத்தை யநுபவமாக் குறித்து
ளோரும், இருவையத் திடம்பமாய்த் தமைஞானி யென்
போரு மேதிற் றேன்றும். (111)

(இ—ள்) பெண்ணின் - ஸ்திரீகளின், உருவதனை - உடல்களை, கருதி - நிதானித்து, நோக்கிடின் - (உற்றுப்) பார்க்கில், குறிப்பதின் - (சில) அடையாளங்களினல் (சில சிறப் பியல்புகளினல்), கரு வயிற்றை உடையதுவும் - கெர்ப்ப முற்ற வயிற்றினை உடைத்தா யிருப்பதும், கன வயிற்றை உடையதுவும் - (மஹோதர வியாதியினல்) பருத்திருக்கின்ற வயிற்றினை உடைத்தாயிருப்பதும், தோன்றும் - (இன்னது என) விளங்கும் (அது போல), உலகு தன்னில் - உலகத்தில், குருவை - ஆசாரியரை, அடைந்து - (சரணகதியாக) அடைந்து, அவன் - அவரது, அருளின் - அநுக் கிரகத்தினல், சொரூபத்தை - (தமது) சொரூபத்தை, உளபடியே - யதார்த்த மாய், அநுபவம் ஆ(க) - பிரத்யக்ஷ மாக, குறித்துளோரும் - அறிந்திருப்பவரும், இரு - பெரிய, வையத்து - (இப்) பிரபஞ்சத்தில், இடம்பம் ஆய் - ஆடம்பர மாய், தமை - தம்மை, ஞானி - ஞானி, என்போரும் - என்று கூறுபவரும் (இன்னவர் என்பது), ஏதின் - (அவர்பா லுள சில சிறப் பியல்களாகிய) காரணங்களினல், தோன் றும் - விளங்கும், (எ-று).

(வைராக்ய தீபம்.)

"கான்றசோ றதனிற் கண்டுபொய்ப் போக மனைத்தையுங்
கைவிடுத் திடினும், தோன்றல கினைமெய் யெனக்கொடு மீக்கூற்
றுறவிருப் படையினத் துறவோன், சான்றதா யுளதன் னுளமிலை
யெனவுந் தற்பரா நந்தமுற் றவனைப், போன்றிரு விழிமேற்

செருகியீண் டுரைக்கும் பொய்யையெவ் விதத்தினுற் போக்கும்." (61) என்று, இவர் குரவ ராகிய, சாந்த லிங்க சுவாமிகள் வைராக்ய தீபத்தில், வஞ்சக ஞாநியைக் கூறியிருப்பது உணரற்பாற்று.

(பட்டினத்தார் பாடல்)

"பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந், தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவது போல், அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில், இருளறு சொல்லினுங் காணத்த குங்கச்சி யேகம்பனே." (திரு ஏகம்ப மாலை 15.) என்று, செயலினும், போர்க்களத்தும் முகத்தினும் என்று உவமை கூறி, ஞாநியை, தவத்தில், குணத்தில், அருளில், அன்பில், சொல்லில் என ஐந்து ஏதுக்கள் கொண்டு அறியலாம் என்று கூறியிருத்தலின், இவை பெறுதவர்களை அஞ்ஞாநி என்றே உணரலாம் என்பது வெள்ளிடை மலை விளக்காம்.

உடையதுவும் - உடையதுவும் - இவை குறிப்பு வினையாலணையும் பெயர்கள். உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. உருவதனை - குறிப்பதின் - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். உளபடியே - ஏ - பிரிநிலையும் தேற்றமு மாம். உலகு தன்னில் - தன் - சாரியை. குறித்துளோரும் - என்போரும் - இவை வினையா லணையும் பெயர்கள். உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. உடையதுவும் - உடையதுவும் - எழுவாய். தோன்றும் - பய னிலை. இன்னவர் - தோன்று எழுவாய். தோன்றும் - பய னிலை. இதில் உவமை யணி யுளது. (111)

புருடர்கள், உலக பாலாதி அதிகாரம் உடையவர், உலக பாலாதி அதிகாரம் இன்றியவர் என இரு திறப்படுவர். அர்ஜ்ஜுனர் இராமர் இருவரும் இராஜ்ய பாரம் வகிக்கும்

மா சற்ற மந முடையவர்கள். அவர்கள் இல் லறத்திருந்தே ஞாநியாவர், சாதாரண நம் போன்ற அதிகாரம் அற்ற மா சுற்ற மந முடையவர், துறந்தே ஞாநியாகவேண்டும். ஞாநம் யாவ ரும் கொள்ளத் தக்க தாகும். ஞாநிகள் சரிதம் நாநா வாகலின் கொள்ளத் தக்க தன்றும். ஞாந ஆசாரம் உடையோன் ஞாநி, ஞாந ஆசாரம் இன்றியவன் அஞ்ஞாநி என மகா ராஜன் மந்திரிக்குக் கூறி, உபதேசத்தினை முடித்தனன் எனக் கூறல்.

*அருச்சுநற்கு மிராமருக்கு மதிகார மவைபார்த்தே யறைந்த நூலின், கருத்தறியாய் ஞாநமொன்றே பிரமா ணஞ் சரிதையது கணக்கன் றாகும், விருத்தமறி வாசார முடையோனே ஞாநியில்லோன் விருத்த னாகும், திருத்த முட னமைச்சவிது துணிவென்றே யுட்கொள்வாய் தீர னாகி.* (112)

(இ—ள்) அருச்சுநற்கும் - அருச்சுநனுக்கும், இராமருக் கும் - இராகவருக்கும், அதிகாரம் - அதிகாரம் (உடைமையை), பார்த்தே - உத்தேசித்து, அறைந்த - (ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், ஸ்ரீ வசிஷ்ட பகவானாலும்) உபதேசிக்கப்பட்ட, நூல் அவையின் - (பகவற் கீதை, வாசிஷ்ட) சாஸ்திரங்க ளாய அவற்றின், கருத்து - (முக்கிய) தாற்பரியத்தை, அறியாய் - (நீ) உணர்ந்தா யில்லை, ஞாநம் ஒன்றே - (அவ் விருவர்களும் அடைந்த பிரம்ம) ஞாந மாத்திரமே, பிரமாணம் - (நமக்கு) அங்கீகார மாம், சரிதையது - (அவ் விருவர்களது விவகாரத்தைக் கூறும்) சரித்திரம், கணக்கு அன்று ஆகும் - கொள்ளத் தக்க தன்றாம், விருத்தம் - (அவ் விருவர் களும் அவதார புருஷர்க ளாதலின், யுத்தாதி விவகாரங்கள் மற்றை யோருக்குப் பொருந்தாமையின்) விரோத முடைய தாம், [இது வரைக் கூறிய விஷயங்களைச் சுருக்கித், துற வுடையோர் ஞாநீ

யாவர் என்றும், அஃதிலார் அஞ்ஞாநி யாவ ரென்றும், உபசம்மரிக்கின்றர்.] அறிவு ஆசார முடையோனே - ஞாநாசாரம் உடையவனே, ஞாநி - ஞாநி யாவன், இல்லோன் - (ஞாநாசாரம்) இல்லாதவன், விருத்தன் ஆகும் - அஞ்ஞாநி யாவன், இது - (யாம் கூறிய) யாவும், துணிவு - (சுருதி பெரியோர்க ளுடைய) சித்தாந்தமாம், என்று - என, அமைச்ச - மந்திரி (நீ), தீரன் ஆகி - தைரியவா னாய், திருத்தமுடன் - நன்ருக, உட் கொள்வாய் - கிரகித்துக் கொள்வாயாக, (எ-று).

அருச்சுநற்கும் - இராமருக்கும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. பார்த்தே - என்றே - ஏ - இரண்டும் அசை நிலைகள். ஒன்றே - உடையோனே - ஏ - இரண்டும் பிரிநிலையும், தேற்றமுமாம். சரிதையது - அது - பகுதிப் பொருள் விகுதி. உடையோன் - இல்லோன் - விருத்தன் - குறிப்பு வினையா லணையும் பெயர்கள். நீ - தோன்ருு எழுவாய். அறியாய் - பய னிலை. கருத்து - செயப்படு பொருள். ஞாந மொன்று - எழுவாய். பிரமாணம் - பய னிலை. சரிதை - எழுவாய். ஆகும் - பய னிலை. சரிதை - எழுவாய். விருத்தம் - பய னிலை. உடையோன் - எழுவாய். ஞாநி - பய னிலை. இல்லோன் - எழுவாய். ஆகும் - பய னிலை. நீ - தோன்ருு எழுவாய். உட் கொள்வாய் - பய னிலை. (112)

மஹா ராஜன் சமாதியில் இருந்ததனை மந்திரி பார்த்து ஆச்சரியம் அடைந்தனன் எனக் கவி நாயகர் கூறல்.

என்றங் கநேக மார்விரித்தே யிராச யோகி யுரை
செய்து, நின்று வாக்குத் தனையடக்கி நிமிடத் தகற்றி
மநத்தினையும், ஒன்று மில்லா வெறும்பாழா யொன்ருஞ்
சமாதி தனையடைந்தான், நின்றங் கமைச்ச னிதுகண்டிங்
நேர்மை புதிதென் றதிசயித்தான். (113)

(இ—ள்) என்று - என (இவ் வாறு), இராச யோகி - ஞாநி யான மஹா ராஜன் (மந்திரியைப் பார்த்து), அநேகம் ஆய் - அநேக திருஷ்டாந்தங்களோடு விஷயங்களை, விரித்து - விஸ்தரித்து, உரை செய்து - உபதேசித்து விட்டு, வாக்குத்தனை - வாக்கை, அடக்கி நின்று - மௌநஞ் செய்திருந்து, மநத்தினையும் - (தூல) மநதையும், நிமிடத்து - (ஒரு) நிமிஷத்தில், அகற்றி - (மௌநஞ் செய்து) போக்கி, ஒன்றும் இல்லா வெறும் பா ழாய் - (அத்தியஸ்தப் பிரபஞ்ச வஸ்துக்கள்) எதுவும் உண்மையில் இன்றிய முழுச் சூநிய மாய், ஒன்று ஆம் - ஏக ரச அதிஷ்டாநப் பிரம்ம வஸ்து வாக நிலைத்த லாகிய, சமாதிதனை (அத்வைத அவஸ்தாந ரூப நிருவிகற்ப) சமாதியை, அடைந்தான் - அடைந்தான், அமைச்சன் - மந்திரி, இது - (இவ் வாறு) சமாதி யடைந்ததனை, கண்டு - பார்த்து, நின்று - இருந்து, இந் நேர்மை - இந்தத் தன்மை, புதிது - நூதநமா யிருக்கின்றது, என்று - என, அதிசயித்தான் - ஆச்சரியத்தினை அடைந்தான், (எ-று).

என்றங்கு - அங்கு அசை நிலை. விரித்தே - ஏ - அசை நிலை. வாக்குத்தனை - சமாதிதனை - தன் - இரண்டும் சாரியைகள். மநத்தினையும் - உம் - இறந்தது தழீஇயது. இன் - சாரியை. நின்றங்கு - அங்கு - அசை நிலை. இராச யோகி - எழுவாய். அடைந்தான் - பய னிலை. சமாதி - செயப்படு பொருள். அமைச்சன் - எழுவாய். அதிசயித்தான் - பய னிலை. (113)

**மந்திரி மா புரிப் பட்டணம் சென்று, மஹா ராஜன் தன்மைகளை, நகரத்தாருக்குக் கூறினன் எனக் கூறல்.**

இந்த உணர்வு நமக்கின்ன மெய்த வில்லை நாமிங்கே,
எந்த உணர்வு கொடுநிற்பே மென்ன வமைச்சன் யூகித்து,
வந்த வழியே தான்றிரும்பி வளப்ப முடைய மாபுரிக்கே,

பந்த முடையோ ருடனிருந்து பகர்ந்தா னரச னியற்கை யெல்லாம். (114)

(இ—ள்) அமைச்சன் - மந்திரி யானவன், இந்த உணர்வு - இந்த ஞாநம், இன்னம் - இன்னும், நமக்கு - எமக்கு, எய்த இல்லை - (வந்து) பொருந்த இல்லை, நாம் - யாம், இங்கு - இவ் விடத்து, எந்த உணர்வு கொடு - எந்த விவேகத்தைக் கொண்டு, நிற்பேம் - இருக்கப் போகின்றோம் (இருக்க முடியாது என்றபடி), என்ன - என்று, யூகித்து - (விசாரஞ் செய்து) நிச்சயித்து, வந்த வழியே - வந்த மார்க்க மாகவே, வளப்பம் - (சகல) வளப்பங் களும், உடைய - பொருந்தி யிருக்கின்ற, மா புரிக்கே - மா புரிப் பட்டணத்திற்கே, திரும்பி - சென்று, பந்த முடையோருடன் - பந்துக்களோடு, இருந்து - வீற்றிருந்து கொண்டு, அரசன் - மஹா ராஜனின், இயற்கை - தன்மைகள், எல்லாம் - அனைத்தையும், பகர்ந்தான் - (அனைவருக்கும்) கூறினன், (எ-று).

இங்கே - வழியே - மாபுரிக்கே - ஏ - மூன்றும் அசை நிலை கள். வழியே தான் - தான் - அசை நிலை. உடையோர் - குறிப்பு வினையா லணையும் பெயர். அமைச்சன் - எழுவாய். பகர்ந்தான் - பய னிலை. இயற்கை யெல்லாம் - செயப்படு பொருள். (114)

நகரத்தார் அனைவரும், மாதா, பிதா, மனைவியும் வந்து, மஹா ராஜனைத் தெரிசித்தலையும், மஹா ராஜன் புன் னகை யுடன் இருந்ததனையும் கூறல்.

கேட்ட பேர்கள் மிகவியந்து கிட்டா தென்று மிம் முநிபோல், தேட்ட முடனே யவரவர்க டேடி வந்து பணிந்திடவும், வாட்ட முடனே தாய்தந்தை மனையாள் பதத்தில் வீழ்ந்திடவும், நாட்ட மாறு பாடின்றி நகை செய் திருந்தா னற்றவனே. (115)

(இ—ள்) கேட்ட பேர்கள் - (மஹா ராஜன் சரித்திரத் தினைக்) கேள்வி யுற்ற அனைவர்களும், மிக - அதிக மாக, வியந்து - ஆச்சரியத்தினை யடைந்து, இ - இந்த, முநி - முநிவனை, போல் - போன்ற (ஒரு முநிவனைத் தரிசித்தல்), என்றும் - எப் பொழுதும், கிட்டாது - (நமக்கு) கிடைக்கமாட்டாது எனக் கருதி, அவர் அவர்கள் - அவரவர்களும், தேட்ட முடன் -விருப்பத்தோடு கூட (பேரவாவுடன்), தேடி வந்து - (இருக்கு மிடத்தை) விசாரித்து வந்து, பணிந்திடவும் - (கீழே விழுந்து) நமஸ்கரிக்கவும், வாட்ட முடன் - மன வருத்தத்தோடு, தாய் - மாதாவும், தந்தை - பிதாவும் (நிற்கவும்), மனையாள் - மனைவியும், பதத்தில் - பாதத்தில், வீழ்ந்திடவும் - நமஸ்கரிக்கவும், நல் - உயர்ந்த, தவன் - தவ முடைய மஹா ராஜன், நாட்டம் - (பிரம்மாநுபவ) திருஷ்டி, மாறுபாடு இன்றி - வேற்றுமை யடையாது, நகை செய்திருந்தான் - புன் சிரிப்போடு கூடி யிருந்தான், (எ-று).

என்றும் - உம் - முற்றும்மை. உடனே - உடனே - நற்றவனே - ஏ - மூன்றும் அசை நிலைகள். பணிந்திடவும் - வீழ்ந்திடவும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. தாய், தந்தை, மனையாள் - இவைகளி னீற்றில் எண் ணும்மைகள் தொக்கன. நற்றவன் - எழுவாய். இருந்தான் - பய னிலை. (115)

நகரத்தாரோடும், மாதா, பிதா, மனைவியோடும், மஹா ராஜன் மறு மொழி கூருததனை அவர்கள் பார்த்து, நாம் அதிகாரம் இல்லாதவர்கள் எனக் கருதி, அவர்கள் தம் ஊருக்குத் திரும்பிச் செல்லுதலையும், மஹா ராஜன் விதேக முக்தி அடைதலையும், கூறல்.

வந்த பேர்க ளுடன்வார்த்தை மலரா திருப்ப தவ
ரறிந்து, பந்த முடையே நமக்கென்னை பகர்ந்தாற்

ரேன்று மெனத்திரும்பித், தந்த மிடத்திற் சென்ருர்க டவனுஞ் சிறிது நாட்கழித்துத், தொந்த மொன்று மில்லாத சுயமா முத்தி தானுனன். (116)

(இ—ள்) வந்த பேர்களுடன் - (மா புரியி லிருந்து) வந்த மாதா, பிதா, மனைவி, மற்றைய ஜநங்களோடு, வார்த்தை - (ஒரு) பேச்சையும், மலராது - பேசாது, இருப்பது - இருப்பதை, அவர் - அவர்கள், அறிந்து - உணர்ந்து, பந்தம் உடையேம் - (நாம்) அஞ்ஞாநிகளா யிருக்கின்ரேம், பகர்ந்தால் - (அவர் பிரம்ம ஞாநத்தைக்) கூறினுல், நமக்கு - நமக்கு, என்னே - யாது, தோன்றும் - விளங்கும் (ஒன்றும் விளங்கா தாம்), என - என்று நினைத்துக்கொண்டு, திரும்பி - (வந்த வழியே) மீண்டு, தம் தம் இடத்தில் - அவ ரவர் வீட்டிற்கு, சென்ருர்கள் - போனுர்கள், தவனும் - (பிரம்ம) தவத்தினை யுடைய மஹா ராஜனும், சிறிது நாள் கழித்து - சொற்ப கால மாகிய பிராரப்த கர்ம ஒழிவு பரியந்தம் (சரீரத்தோடு) இருந்து, தொந்தம் - துவந்துவங்கள், ஒன்றும் - கொஞ்சமும் (எதுவும்), இல்லாத - இன்றிய (விதேக கைவல்விய மென்னும்), சுயம் ஆம் முத்தி - (தனது) இயல் பான மோக்ஷ சொரூபம், ஆனுன் - ஆயினுன், (எ-று).

என்னே - எவன் என்னும் விஞ வினைக் குறிப்பின் விகாரம். தவனும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். ஒன்றும் - உம் - முற்றும்மை. தா னுனன் - தான் - அசை நிலை. அவர் - எழுவாய். சென்ருர்கள் - பய னிலை. தவன் - எழுவாய். ஆனுன் - பய னிலை.

(116)

இந் நூற் பயனும், இறைவி வணக்கமும், கூறல்.

இந்தமா ராஜன் சென்ற விதிகாசந் தனைப்ப டிப் போர், சிந்தனை யொன்று மின்றித் தீரவே துறவ ராகி,

அந்தமு மாதி யில்லா வமலமே வடிவ மாவர், எந்தமை யருளி ஞண்ட வெழிற்குரு பரையே வாழி. (117)

(இ—ள்) மஹா ராஜன் - மஹா ராஜன், சென்ற - துறந்து போன, இந்த இதிகாசந்தனை - இச் சரித்திர மாகிய (மஹா ராஜா துறவு என்னும்) நூலை, படிப்போர் - (குருவினிடத்தில்) சிரவணஞ் செய்வோர், சிந்தனை - வியாகூலம், ஒன்றும் - எதுவும், இன்றி - இல்லாதவ ராய், தீர - தைரிய மாக (முற்ற), துறவர் ஆகி - துறவினை உடையவ ராய் (துறந்தவ ராய்), அந்தமும் - முடிவும், ஆதி - முதலும், இல்லா - இன்றிய, அமலமே வடிவம் - பரிசுத்தப் பிரம்ம சொரூபமே, ஆவர் - ஆவார்கள், [கிரந்த சமாப்தியில் தனது இஷ்ட தெய்வத்தினை வணங்குகின்றார்.] எம் தமை - எம்மை, அருளின் - கிருபையினால், ஆண்ட - தடுத் தாட் கொண் டருளிய, எழில் - திரு வளர்கின்ற, குருபரையே - ஆசாரிய தேவியே, வாழி - (நீ) வாழ்க, (எ-று).

இதிகாசந் தனை - தன் - சாரியை. படிப்போர் - வினையாலணையும் பெயர். ஒன்றும் - உம் - முற் றும்மை. தீரவே - அமலமே - ஏ - இரண்டும் அசை நிலைகள். அந்தமும் - உம் - எண்ணும்மை. ஆதி - என்பத னீற்றில் எண் ணும்மை தொக்கது. எந்தமை - தம் - சாரியை. பரையே - ஏ - விளி யுருபு. படிப்போர் - எழுவாய். நீ - தோன்ரு எழுவாய். வாழி - பய னிலை. (117)

மஹா ராஜத் துறவு மூலமும்,
மாப் பிரசாதினி என்னும் உரையும் முற்றுப் பெற்றது.

---

# மஹா ராஜத் துறவு.

## முதல் நினைப்புக் கவி 128.

பன் னிரு சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

திருஅமரர் கள்தொய்யின் இருள்திங்க ளார்அருள் செக்கர்கடி வண்டுசகார் —
திங்களொண் சிவன்தருக் குழைமஞ்ச தருநிழல் அரசர்வந் திடுஅரசர்தம்,
குருகவரி இந்திரன் தூம்புடை கங்கையே ஆலதவ வேதநீதி —
கொடிமடங் கவடிகத வில்மூவு இலங்கிய அருந்ததிக சோகமேயின்,
அருமனைவி தனிஇருவர் மனைதனில் வேதவா சீவர்இரு வகைஅந்நெறி —
அரசர்கள் ஆண்டா(டா)தி அலதுசீ இவ்வாசி என்றுமற் (றுஅ) றவர்வினையுள,
அருஎன்று நல்உற தந்தைஅறி வைநோக்கி அரிவைநின் ஞானமான —
ஆகவிரி வேந்தஅர நகர்பொருந் தோன்றிடுமு தோன்றிகடி முத்தி புதிதே. (1)

புதிதன்னை உலகினை எகசக் காபந்த குறைஎங்கு சீவந்இத்த —
பூவணை ரதகரிர அவபதத் தினைஅமைவு பதமதை மநமிருதென்,
ததிபாச அந்ததோ பாலகரு பஞ்சபூ தோல்அரந் தைவிருத்த —
தந்தைபொரு ளுண்டாகி மாகர்தே வர்இந்த பொய்யென்றி பொய்யைதுன்பம்,
அதிஇழிவை பேதஇருந் தவிமுனம் ஒருமனையின் தீதுஇல்ல முனமனைவ —
அரிஆடி வினைகளோர் விடப்பற்றி பவகொடி ஆணவம கரவகதிர,
இதிஇங்கு உணர்கரு அருக்சுநற்கு என்றங்க இந்தவுணர் கேட்டவந்த —
இந்தஅரு மாராஜ துறவுநு வின்பெருமை யாவர்க்கு மெளிதாகுமே. (2)

ஆக விருத்தம் 2-க்கு செய்யுள் 128.